
அடிவாழை
ரமணிசந்திரன்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அடிவாழை |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : அக்டோபர், 1997 |
| இரண்டாம் பதிப்பு | : ஜூன், 1999 |
| மூன்றாம் பதிப்பு | : டிசம்பர், 2000 |
| நான்காம் பதிப்பு | : ஜூலை, 2002 |
| ஐந்தாம் பதிப்பு | : மே, 2004 |
| ஆறாம் பதிப்பு | : அக்டோபர், 2005 |
| ஏழாம் பதிப்பு | : மே, 2007 |
| எட்டாம் பதிப்பு | : நவம்பர், 2008 |
| ஒன்பதாம் பதிப்பு | : ஜனவரி, 2010 |
| பத்தாம் பதிப்பு | : நவம்பர், 2012 |
| பதினொன்றாம் பதிப்பு | : அக்டோபர், 2014 |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 256 |
| நூல் கட்டுமானம் | : சாதா அட்டை |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.120.00**

அச்சிட்டோர் : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14.


## பாராட்டுரை

அன்பு மனம் கொண்ட என் அபிமான எழுத்தாளர் திருமதி. ரமணிச்சந்திரன் அவர்கட்கு அன்பு வணக்கங்களும் கோடி முத்தங்களும் உரித்தாகட்டும் என இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

உங்கள் அன்பையும் அபிமானத்தையும் வென்ற ரசிகைகளில் நானும் ஒருத்தி. இந்தச் சிறிய இலங்கை நாட்டில் பல்லாயிரக்கணக்கான வாசகிகளில் நானும் ஒருத்தி என்பதை நினைக்கும் போது எவ்வளவு சந்தோஷமாக இருக்குது தெரியுமா? உங்களது நாவல்களில் 30 போல் படித்திருக்கிறேன். இதுவரை நீங்கள் எத்தனை நாவல்கள் எழுதியிருக்கிறீர்கள்? உங்களுடைய நாவல்கள் எத்தனை அற்புதமானது. உங்கள் கதைகள் வாசிப்பதென்றால் எவ்வளவு சுவை தெரியுமா? ஒவ்வொரு கதையிலும் அறுசுவையும் உள்ளடங்கியதாகவுள்ளது.

நான் உங்கள் கதைகளில் முதன் முதல் வாசித்தது "தீபஒளி". உண்மையிலேயே இந்த 'தீபஒளி'யில் பிரகாசம் உண்டு. வாசிக்கும் போது விறுவிறுப்பாக இருந்திச்சு. எத்தனை முறை வாசிச்சிருப்பேனோ தெரியாது. அப்படி 'தீபஒளி' என்னைக் கவர்ந்துள்ளது. 'ஜோடிப் புறாக்கள்', 'வளை ஓசை', 'விடியலைத் தேடி', 'லாவண்யா' இவையெல்லாம் என்னால் பலமுறை திருப்பி திருப்பிப் படிக்கப்பட்டவை. எத்தனை முறை

திரும்ப வாசித்தாலும் சலித்துப் போவதில்லை. என் உயிர் உள்ளவரை உங்களுடைய நாவல்களைப் பாதுகாப்பேன். என்னுடைய பொழுதுபோக்கு உங்களுடைய நாவல்களை வாசிப்பது மட்டுமே.

எப்படித்தான் இப்படியெல்லாம் எழுதுகிறீர்கள் என்று ஒரே வியப்பு. இந்தியாவுக்கு வரமுடிந்தால் உங்களைச் சந்திக்க முடியுமா? சந்தித்து கோடிக்கணக்கான நன்றிகள் சொல்ல வேண்டும். உங்களுடைய பேனாவுக்கும் கைக்கும் கோடி முத்தம் கொடுக்க வேண்டும். ப்ளீஸ் கட்டாயம் பதில் போடுங்கள். உங்களுடைய பதிலையாவது எழுதி என் ஆசையை நிறைவேற்றுங்கள் என பணிவுடன் வேண்டுகிறேன்.

அன்பு வாசகி,

**இர்பான் அப்தீன்**



# அடி வாழை

## 1

''அம்மா!'' என்று அழைத்தபடி அவசரமாக உள்ளே வந்த மகளை எச்சரிக்கையோடு நோக்கினாள் சரளா.

கைவேலையாக இருந்த தாயைக் கண்டதும், ''அம்மா, இந்த அண்...'' என்றவாறே ஓடிவந்து, அருகே அமர்ந்த கலைவாணி, அன்னையின் முகத்திலிருந்த எச்சரிக்கையைக் கண்டதும், 'கப்'பென அடங்கி, என்ன என்பது போலக் கண்ணாலேயே கேட்டாள்.

சரளாவின் பார்வை, பக்கத்து அறைப்பக்கம் பாய்ந்து மீண்டது ''சொல்லு'' என்றாள் மெல்லிய குரலில் அவள்.

குரல் வெகுவாகத் தணிந்துவிட, ''அண்ணன் நாளை மறுநாள்தான் வருவாராம். ஏதோ புதுவேலை வந்து விட்டதாம். அங்கே சென்று அந்த ஆளை சந்திக்காமல் வர முடியாதாம். இப்போதுதான் டெலிஃபோன் செய்தார்'' என்றாள் மகள்.

''அப்பாவுக்குத் தெரியுமா?'' என்றாள் தாயும், மெல்லிய குரலிலேயே.

'எங்கே?'' என்று உதட்டைப் பிதுக்கினாள் பெண்.

''போன் வந்ததும் உங்களிடம் தான் ஓடிவந்தேன். நாளன்று அண்ணன் வந்தால், அதற்கு அடுத்தநாள் திருமணம். இந்த அண்ணன் இன்னமும் பெண்ணைப் பார்க்கக்கூட இல்லை. நாம்பாட்டில் முடிவு பண்ணிவிட்டோமே. அண்ணனுக்குப் பிடிக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்று எனக்கு ஒரே பயமாக இருக்கிறது!'' என்று கவலைப்பட்டாள்.

''எனக்கு அது கவலையில்லை'' என்றாள் பெற்றவள். ''அபியை அவனுக்குப் பிடிக்காமல் போக வாய்ப்பில்லை. ஆனால் அப்பா ஏதாவது கத்தக் கூடாதே என்று பார்க்கிறேன். ஒன்று தொடங்கினால் அப்புறம் அது வளர்ந்து கொண்டே போகும். அதுவும்...'' என்று முடிக்காமல் பெருமூச்சு விட்டாள்.

''ஆ.. மாம். ஊதி, ஊதி, விசிறி விசிறி நன்றாக எரியவைக்காமல் விடமாட்டார்களே?'' என்றாள் கலைவாணியும் குரலில் சிறுவெறுப்புடன்.

''அது யாருடி ஊ...தி, ஊதி விசிறி, விசிறி எரிய வைக்கிறவர்கள்?'' என்ற குரலில் அம்மா, பெண் இருவருமே அதிர்ந்து போயினர். துள்ளி விழுந்துவிடாத குறைதான்.

கலைவாணி நடுநடுங்கிப் போனாள் என்றால், அது சற்றும் மிகை அல்ல. இந்த அத்தை வசந்தா அவளுடைய அன்னையின் வாழ்வில் எத்தனை துன்பங்களை ஏற்படுத்தியிருக்கிறாள் என்பதை அவள் அறியாதவள் அல்ல. முழுக்க முழுக்க அறிந்திராதபோதும் அறிந்து கொண்ட அளவில், அத்தை என்கிற வார்த்தையே அவளுக்கு அச்சமூட்டுவதாகவே ஆகிவிட்டது.

அம்மாவை வதைப்பது மட்டுமா? அவளுக்கும் தான் அப்பாவிடம் எவ்வளவு திட்டு வாங்கி வைத்திருக்



கிறாள்? அவள் அடுத்த அறையில் இருக்கிறாள் என்று அம்மா ஜாடை காட்டித் தெரிவித்தபிறகும், அவள் பேச்செடுத்தது எவ்வளவு மடத்தனம்? இந்த மடத்தனத்திற்காக அவளும், அவளுடைய தாயாரும் எவ்வளவு தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும்?

வாயிலில் கேட்ட தந்தையின் குரல் வேறு அவளது தளிர் உடலை நடுங்கச் செய்தது.

ஆனால், அந்தக் குரலே எழுப்பி விட்டாற்போல, சரளா மகளை நோக்கி, ''சீக்கிரம் வேலையை முடி, வாணி, ஒவ்வோர் வேளைக்கும் துணிகளைப் பிரித்து அடுக்கினால்தான், அந்தந்த வேளையில் எடுக்கக் கொள்ள வசதியாக இருக்கும்...'' என்று மகளை ஏவி விட்டு, ''நீங்கள் என்ன அண்ணி, கேட்டீர்கள்?'' என்று நாத்தனாரிடம் விசாரித்தாள்.

''ஏதோ, நான் கேட்டது நினைவாவது இருக்கிறதே! அந்தமட்டுக்கும் நான் கொடுத்து வைத்தவள். நாத்தனார் கேட்டதற்கு, கேட்டு, அரைமணி கழித்தாவது பதில் சொல்லலாம் என்கிற அளவு இறங்கி வந்திருக்கிறாயே!'' என்று நொடித்துக் கொண்டாள் வசந்தா.

அதற்குள், ''என்ன சத்தம், இங்கே?'' என்று கேட்டபடி உலகநாதன் உள்ளே வந்துவிடவும், பட்டுப் பாவாடையோடு அதற்குரிய ஜாக்கெட்டை எடுத்து வைத்துக் கொண்டிருந்த கலைவாணியின் கை நடுங்கியது.

''சத்தம் என்ன அண்ணா? என்னமோ யாரோ மூட்டி விசிறிக் கொடுப்பதாக உன் மகள் சொல்லிக் கொண்டு இருந்தாள். யாரம்மா அது என்று கனிவாகத் தான் கேட்டேன். கேட்டு அரைமணி நேரம் கழித்து, என்ன கேட்டேன் என்று சாவதானமாக விசாரிக்கிறாள் உன் அருமைப் பெண்டாட்டி! நாத்தனார் மரியாதை

எந்தமட்டில் இருக்கிறது, பாருங்கள், அண்ணா!'' என்று நெடிதாகப் பெருமூச்சு விட்டுக் காட்டினாள் வசந்தா!'' ''எனக்கும் நல்லபடியாகப் புருஷன் அமைந்திருந்தால், இந்த அவமரியாதை நடக்குமா?'' என்று கண்களையும் கசக்கினாள்.

''உன் அண்ணி ஒரு சரியான அசமந்தம் என்பது நீ அறியாததா, வசந்தாம்மா?'' என்ற உலகநாதன், அவரைக் கண்டதும் மரியாதையாக எழுந்து நின்ற மனைவி, மக்களிடம் தன் கோபப் பார்வையைத் திருப்பினார். ''அவள் ஒன்று கேட்டால், உடனே பதில் சொல்லுவதுதானே? ம்? வாயில் என்ன கொழுக்கட்டையா அடைத்து வைத்துக் கொண்டிருந்தாய்?'' என்று கட்டியவளை அதட்டினார்.

தொண்டையில் அடைத்ததை அவசரமாக விழுங்கிக் கொண்டு, ''இ...இ... அப்படி இல்லைங்க, வாணியும், நானும், கல்யாணம், வரவேற்பு என்று அவ்வப்போது அணியவேண்டிய துணிமணிகளைப் பிரித்து எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது சும்மா ஏதோ பேசிக் கொண்டு இருந்தோம்...'' என்று இழுத்தாள் சரளா.

ஏதோ வேலை நடுவில் நடந்த, முக்கியமில்லாத பேச்சு என்று கொண்டு வர அன்னை முயல்வதை உணர்ந்து, ''ஆ... ஆமாம், அப்பா. முக்கியமாய் ஒன்றும் பேசவில்லை என்பதால் அத்தை என்ன கேட்கிறார்கள் என்று தெரியாமல் போய்விட்டது!'' என்று கலைவாணி ஒத்து ஊதினாள்.

ஆனால், அவள் அஞ்சியதுபோலவே, வசந்தா அத்தோடு பேச்சை விட்டு விடவில்லை. மாறாக, ''உங்கள் மகன் திருமண வேலையால், ஒரு வாரமாய்



அலைச்சலும், வேலையுமாக உடம்பு ஓய்ந்து போயிற்று. ஐந்து நிமிடம் கண்ணயர்ந்திருப்பேன். அதற்குள் ஊதி, ஊதி, விசிறி, விசிறி எரிய வைப்பதாகப் பேச்சு கேட்டது. இந்த வீட்டில் யாரை அப்படி உங்கள் மகளும் மனைவியும் பேசுவார்கள் என்று உங்களுக்கே தெரியும்...'' என்று, இல்லாத கண்ணீரை வசந்தா, சேலைத்தலைப்பால் துடைக்கவும், உலகநாதன் ருத்திரமூர்த்தியானார்.

''தொலைந்தோம்'' என்று உள்ளூர முடிவுகட்டி விட்ட கலைவாணி, ''முருகா காப்பாற்று' என்று உள்ளூர உருப்போடலானாள்.

கண்களில் தீயெழ உறுத்து விழித்த கணவன், பேசத் தொடங்குமுன் சரளா முந்திக் கொண்டு ''ஐயையோ, அண்ணி, இதென்ன பேச்சு? உங்களைப் போய் அப்படி ஒருவர் - அதுவும் நாங்கள் சொல்வோமா? நாங்கள் இந்த... இந்த ஓமம் - அதுதான், கல்யாணத்தின்போது, வளர்ப்பார்களே, அதைப்பற்றி அல்லவா பேசிக் கொண்டு இருந்தோம். அந்த ஓமத்தீயை மந்திரம் ஓதுகிறவர், ஊதி ஊதி, விசிறி, விசிறி நன்றாக எரிய வைப்பார் என்று சொல்லி... சொல்லிக் கொண்டிருந்தோம். அதைப் போய் நீங்கள் தப்பாக... தப்பாய் நினைத்து விட்டீர்களே! நானோ, கலைவாணியோ அப்படிப்பட்டவர்களா? பாருங்கள், பாருங்கள் கல்யாணத்திற்கு உங்களுக்கு எவ்வளவு நல்லதாய்ச் சேலைகள் - எல்லோரும் போல் உங்களுக்கும் பூரணிக்கும் கூட இரண்டிரண்டு சேலைகள் எடுத்து வைத்திருக்கிறோம்!'' என்று சரளா, நாத்தனாரிடம் சேலைகளைக் காட்டினாள்.

ஆடப்போகிறாளே என்று, தன் சேலையை விடவும் தன் நாத்தனாருக்கு ஜரிகையும் விலையும் அதிகமானதாகவே சரளா வாங்கியிருந்ததால், அதற்குமேல் அங்கே அமைதி நிலவியது.

ஆனால், இந்த அமைதி நிலையானது அல்ல. தனஞ்சயன் தெரிவித்த தகவலை கணவரிடம் சொல்லியே ஆகவேண்டும். அதேநேரம் எப்படி மாறுவாரோ?

ஆனால், அதற்காகச் சொல்லாதிருக்கவும் முடியாது. மனதைத் திடப்படுத்திக் கொண்டு சரளா, தொடங்கியபோது, உலகநாதனே, ''உன் மகனிடமிருந்து சேதி ஏதாவது உண்டா?'' கல்யாணத்துக்கு முன்னால் வர போகிறானாமா அல்லது வேறு யாராவது தாலி கட்டி முடிக்கும் வரை அங்கேயே படுத்துத் தூங்கப் போகிறானாமா?'' என்று ஏளனக் குரலில் கேட்டு ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

விட் அடித்துவிட்டாராம்! கூடச் சேர்ந்து சிரிக்காவிட்டால் கோபம் வரும்!

அண்ணனை நைச்சியம் பண்ண வசந்தா **உடன்** சேர்ந்து சிரித்தாலும் சரளாவின் தாய்மனது முரண்டியது. ''என்ன இப்படி ஒருவார்த்தை சொல்லி விட்டீர்கள்? அவன் அங்கே சும்மாவா இருக்கிறான்? லட்சக்கணக்கான ரூபாய்க்கான ஆர்டர்கள் என்று நீங்களே சொன்னதுதானே? தொழிலைக் கருத்தாய்ப் பார்க்கிறவனைப் போய் கண்... என்னென்னமோ சொல்கிறீர்களே!'' என்று மகனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசினாள்.

உண்மையை ஒத்துக்கொள்ள மனமின்றி, ''பெரிய தொழில்! இங்கே மூன்று நாளில் திருமணத்தை வைத்துக் கொண்டு அங்கேயே உட்கார்ந்திருந்தால் எப்படி? எப்போது வருகிறான் என்று ஒரு வார்த்தை தெரிவிக்கப் புத்தியில்லையா?'' என்று உலகநாதன் எரிச்சல்பட்டார்.

அண்ணன் அப்படி ஒன்றும் பொறுப்பற்றவன் அல்ல என்று காட்ட தன் வருகை பற்றித் தனஞ்சயன் கூறியதைக் கலைவாணி தெரிவிக்கவும், தந்தை வேறுவிதமாய்ப் பாய்ந்தார்.



''ஒருவார்த்தை விவரம் கேட்டால், என்னமோ பிள்ளை மேல் கொலைக் குற்றம் சாட்டிவிட்ட மாதிரி ஊளையிட்டாயே! துரை நாளன்று வருகிறானாமா? ஏதோ காரணம், விமானங்கள் ஓடவில்லை என்று வை; அட, தாமதமாகவே வந்தது என்று வையேன்! என்ன செய்வானாம்? சவூதி அரேபியா என்ன பக்கத்திலேயா இருக்கிறது, விமானம் இல்லாவிட்டால் காரிலாவது வந்து தாலி கட்டுவதற்கு? சொன்னால் பேய் மாதிரி அலறுகிறாயே தவிர, ஒன்றைப் புரிந்து கொள்ளவோ, செயல்படவோ புத்தி வேண்டாம்? அது உனக்கும் கிடையாது; உன் பிள்ளைகளுக்கும் கிடையாது. எல்லாம் என் தலையெழுத்து! போன் போட்டு என்னவென்று கேட்டுத் தொலைக்கிறேன்'' என்று தலையில் அடித்துக் கொண்டபடியே வீட்டுத்தலைவர் திரும்பி நடந்தார்.

''என்ன செய்வது அண்ணா? உங்களுக்குப் பெண்டாட்டியும் சரியில்லை! பிள்ளைகளும் சரியில்லை! நீங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்! பாருங்களேன், முன்னேகூட இந்த சவூதி அரேபியா விமானம்தானே நடுவானத்தில் முட்டிக்கொண்டு எரிந்து விழுந்தது? அதுபோல ஏதேனும் நடந்தால் கூடக் கடைசி நேரத்தில் தான் தெரிய முடியும்? இதுகூட யோசிக்கத் தெரியவில்லையே...'' என்று மூட்டிக் கொடுத்தபடியே தங்கை உடன்செல்ல, உடன் பிறந்தோர் இருவரும் அங்கிருந்து அகன்றனர்.

''நெஞ்சில் ஈரம், நாக்கில் நரம்பு என்று ஒன்றும் இல்லாமல் என்னவெல்லாம் பேசுகிறார்கள், பாருங்கள் அம்மா?'' என்று கலைவாணி குமுற, ''கடவுளே! இதில் ஒரு வார்த்தையும் பலித்துவிடாமல் என் பிள்ளையை, அவன்கூடவே இருந்து காப்பாற்றித்தர வேணும், அய்யோ!'' என்று வேதனையோடு சரளா வேண்டிக் கொண்டாள்.

இன்னோரன்ன பல சம்பவங்களின்பின், தனஞ் சயன், அவன் தங்கையிடம் தெரிவித்தபடியே, திருமணத் துக்கு முந்திய நாள் வீடுவந்து சேர்ந்து, அவரவர் தன்மைக்கேற்ப, மற்றவர் மனங்களைக் குளிரவோ, எரி யவோ செய்தான்.

தந்தையிடம் தன் பயணம் பற்றிய தொழில் விவரங் களைத் தெரிவித்து முடித்து, 'என்ன வாங்கி வந்தாய்' என்று துருவிய அத்தையைச் சமாளித்து, தங்கைக்கும் தாயாருக்கும் என்று தனிப்பட வாங்கி வந்தவற்றைப் பிறர் அறியாமல் கொடுத்துவிட்டு, தனஞ்சயன் தன் திருமண சம்பந்தமான முக்கியமான வேலையைப் பார்க் கத் தொடங்கினான். அவனுக்கென்று தைத்து வைக்கப் பட்டிருந்த துணிமணிகளை அணிந்து அளவு சரிபார்த் தான்.

சரியில்லாதவற்றுடன் அவன் கிளம்பியபோது அரு கில் வந்து, ''வருகிறீர்களா, அண்ணா? நாம் நைசாக நழுவிச் சென்று அண்ணியைப் பார்த்துவிட்டு வர லாமா?'' என்று காதோரம் கிசுகிசுத்தாள் கலைவாணி.

''நேரமில்லையே, கண்ணம்மா, பார், நாளை திரு மணத்தின்போது அணிய வேண்டிய பட்டுச் சட்டையை என்னை மாதிரி இரண்டு ஆட்களுக்குச் சேர்த்துத் தைத்து விட்டான். வரவேற்பு பாண்டும் சரியில்லை. பக்கத்தி லேயே இருந்து சரிசெய்து வாங்கி வரவேண்டும். இல்லா விட்டால் நாளைக்குப் பார்க்கச் சகிக்காது, யாராவது கேட்டால், சேச்சே, இது என் அண்ணன் இல்லை என்று நீயே ஓடிப்போய் விடுவாய்'' என்று, தங்கையின் கூந்தல் சுருள் ஒன்றைப் பிடித்து இழுத்து விட்டான் அண்ணன்.

''போட்டோவையாவது எடுத்து வந்து தரட்டுமா? நீங்கள் பார்க்கவே இல்லையே!'' என்றவளிடம், ''நாளை



நேரிலேயே பார்த்துக்கொள்கிறேன்...'' என்றபடி நடந்த தனஞ்சயனோடு கூடவே நடந்தபடி, ''அண்ணி படத் தைப் பார்த்து 'நன்றாயிருக்கிறார்கள்' என்று நீங்கள் சொல்லிவிட்டால் எனக்கு நிம்மதியாய் இருக்கும்!'' என்றாள் கலைவாணி.

நின்று, தங்கையின் கன்னத்தை லேசாகத் தட்டி முறுவலித்தான் தனஞ்சயன். ''பாராமலே சொல்லுவேன், என் வருங்கால மனைவி பிரமாதமாய் இருப்பாள் என்று! நானே பார்த்தால் கூட ஒன்றிரண்டு விஷயத்தில் ஓட்டை விடக் கூடும்; ஆனால் அம்மாவும் நீயுமாக எனக்கென்று பார்த்திருக்கும் பெண் பிரமாதமாய் இருப் பாள் என்பது எனக்குச் சர்வ நிச்சயம்' அதனால்தான் அந்த வேலையை உங்களிடம் ஒப்படைத்தேன்!'' என்று சிரித்தபடியே கிளம்பிச் சென்றான்.

அவன் கூறியது மெய்தான்.

தன் வருங்கால மனைவியைத் தேர்ந்தெடுத்து முடிவு செய்யும் பொறுப்பைத் தனஞ்சயன், நூறு சதவீத மாய்த் தன் தாயார், தங்கையிடம்தான் ஒப்படைத்திருந் தான்.

ஆனால், அதன் காரணம் என்று அவன் சொன்னது தான் பொய்.. அவனது அடிமனதில் இருந்த காரணம் முழுக்க முழுக்க வேறு.

வசந்தா அத்தையின் குணத்தை அவளுடன் கூடப் பிறந்த உலகநாதன் அறிந்திராதபோதும், அந்த உலகநா தன் பெற்றெடுத்த மைந்தன், தனஞ்சயன் நன்றாகவே அறிந்து வைத்திருந்தான். அத்தையாலும், அத்தையை நம்பியிருந்த அப்பாவாலும், தன் அன்னைபட்ட சிறுமை களையும் வேதனைகளையும் கண்டு அவன் பெரிதும் மனம் குமுறியது உண்டு.

அப்படித் துன்புற்றுக் கொண்டே இருக்கும் தன் தாயார், வரும் மருமகளாலும் வேதனைப்பட்டு விடக் கூடாது என்பது ஒன்றுதான், அவனது திருமணத்தைப் பொறுத்தவரையில் அவனது முக்கிய நோக்கமாக இருந் தது.

அதே காரணத்தினாலேயே அவனுக்கு தன் மகளை மணமுடிக்க விரும்பி வசந்தா போட்ட திட்டத்தை, 'ஒன்றுக்குள் ஒன்று திருமணம் செய்தால் வருங்காலச் சந்ததிக்கு நல்லது அல்ல' என்று மருத்துவத் துறையின் கண்டுபிடிப்பை எடுத்துச் சொல்லி தந்தை மூலமாகவே முறியடித்தான்.

''பெண்கள் அடுக்களையில் நாள் முழுவதும் ஒன் றாய் இருக்க வேண்டியவர்கள். ஒத்துப் போகாவிட்டால் வீண் வேதனை. அவர்களே பார்க்கட்டும், அப்பா என்று தந்தையிடம் அதற்கும் சம்மதம் பெற்றான்.

அவனது அன்றைய மனநிலையில், தாயாருக்கு மகிழ்ச்சி தரக்கூடும் என்றால், ஒரு வாழை மரத்துக்குத் தாலிகட்டவும் தயாராய் இருந்தான். ஆனால், பெற்ற வள், தங்கையை அறிந்தவன் என்பதால், வருங்கால மனைவி எப்படி இருப்பாளோ என்ற கவலையும் அவ னுக்குச் சிறிதும் இல்லாதிருந்தது.

மகன் தன்னை ஒரு மனுஷியாக மதித்து இவ்வளவு பெரும்பொறுப்பைத் தந்ததில் சரளாவுக்கு மிகுந்த மகிழ்ச் சியே. ஆயினும் அவள் எதையும் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. பெரிதாக, மகனுக்குப் பெண் தேடுவ தாகக் காட்டிக் கொள்ளவும் இல்லை. அப்படிக் காட்டிக் கொண்டால், அவளது தேர்வு பல தடைகளை எதிர் கொள்ள நேரிடும் என்பது அவளுக்குத் தெரியும்.



ஆனால், வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும், எங்கே சென்றாலும் அவளது ஒரு கண் மருமகளைத் தேடியவாறேதான் இருந்தது.

தொழில் நிமித்தமாக, ஒரு நாலுவாரப் பயணமாகத் தனஞ்சயன் வெளிநாடு சென்றிருந்த சமயம் உறவில் ஒரு நிச்சயதார்த்த விழாவுக்காகச் சென்றிருந்த போது சரளா அபரஞ்சியைக் கண்டாள்.

மகனோடு நிறுத்தி மனக்கண்ணால் பார்த்தவளுக்கு அபரஞ்சிதான் மருமகள் என்று தோன்றிவிட்டது.

விசாரித்தபோது நல்ல பெண், பண்பும் அன்பும் உடையவள் என்றார்கள். குடும்ப நிலையும் நல்லதாக இருக்கவே உலகநாதனும் ஒப்பினார்.

பையன் பெண்ணைப் பார்க்கத் தேவையில்லை என்று கூறிவிட்ட போதும், பெண் பையனைப் பார்க்க வேண்டும் அல்லவா?

தனஞ்சயனின் படத்தைப் பார்த்ததும் ஏதோ பலகா லம் பழகிய உணர்வு அவளுக்கு ஏற்படவே அபரஞ்சி யும் சம்மதமாய்த் தலையாட்டி விட்டாள்.

கல்யாண மண்டபம் கிடைப்பதைக் கொண்டு திரு மணத் தேதி முடிவு செய்வது என்று தேடினார்கள். ஏதோ ஒரு கட்சிக் கூட்டத்துக்காக 'புக்' செய்தது. கூட்டம் ரத்தாகிவிட்டதால் மூன்று வாரங்களில் ஒரு முகூர்த்த நாளன்று நல்ல மண்டபம் ஒன்று காலியாகக் கிடைத்தது.

அனைத்து தரப்புகளும் ஒத்துக்கொண்டு விட்ட தால், அன்றே, மூன்றே வாரங்களிலேயே திருமணத்தை நடத்த நிச்சயித்து, அன்றே பெண்ணுக்குப் பூவைத்து, பட்டுடுத்தி, முறைப்படி வெற்றிலை பாக்கும் மாற்றிக் கொண்டனர்.

காலில் சக்கரம் கட்டினாற்போல் அரபு நாடுகளில் சுற்றிக் கொண்டிருந்த தனஞ்சயனும் டெலிஃபோனி லேயே திருமணத்துக்குச் சம்மதித்ததோடு எப்படியும் திருமணத்துக்கு மூன்று நாள் முன்னதாகச் சென்னை வந்து விடுவதாகக் கூறவும் கல்யாண ஏற்பாடுகள் ஜரூ ராக நடைபெற்றன.

சவூதியில் இரண்டு நாட்கள் அதிகப்படியாகத் தங்க நேர்ந்தபோதும், திருமணத்துக்கு முன்தினம் தனஞ்சயன் வந்து சேர்ந்துவிட, அந்தக் கவலையும் அகன்றது.

தையல்காரர் செய்திருந்த குளறுபடி, ஒரு சின்ன பதட்டத்தை ஏற்படுத்திய போதும், கல்யாணப் பையனே வந்துவிட்டான் என்பதால், தையல்காரரும் மற்ற வேலை களை ஒதுக்கிவிட்டு, தானே உட்கார்ந்து, தனஞ்சயன் திருப்தி அடையும்படி துணிகளைத் தைத்துக் கொடுத்து விட, நிம்மதியுடனேயே வீடு திரும்பினான் அவன்.

அன்று செவ்வாய்க்கிழமை என்பதால், மறுநாள் புதனன்று அதிகாலையிலேயே மாப்பிள்ளை அழைப்பு, அடுத்து ஒன்பது மணிக்குமேல் திருமணம் என்று ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.

விடிகாலையிலேயே கிளம்ப வேண்டும் என்பதால், எல்லோரையும் விரட்டி, சீக்கிரமாகப் படுத்து உறங்கும் படி செய்தார் உலகநாதன்.

நல்லபடியாக உரிய நேரத்தில் திருமண மண்ட பத்தை அடைந்து, மாமனார் கையால் பூமாலையோடு பொன்மாலையும் பெற்றுக்கொண்டு மணமேடையில் அமர்ந்த தனஞ்சயனின் உள்ளம் வருங்கால மனைவி யின் தரிசனத்தை ஆவலோடு எதிர்பார்த்தது.

சே, இந்தத் தையல்காரர் முதலிலேயே ஒழுங்காகத் தைத்திருந்தால், முன்தினமே ஏதாவது சாக்கிட்டுச்



சென்று அவளைப் பார்த்துவிட்டு வந்திருக்கலாம். குறைந்தபட்சமாய், சற்று நின்று, கலைவாணியிடம் அவ ளது புகைப்படத்தையாவது வாங்கிக் கொண்டு தையல் காரரிடம் சென்றிருக்கலாம். கெடுபிடியில் ஒன்றும் முடி யாது போயிற்று!

உடன்வந்த பெண்களும், வீடியோ, புகைப்படக்கா ரர்களுமாக மறைத்து விட, அருகில் வந்து அமர்ந்த பிறகுதான் தனஞ்சயனால் மணப்பெண்ணை நன்றாகப் பார்க்க முடிந்தது.

பார்த்த அளவில் அவன் பிரமித்துப் போனான்?

''பாதகி, நீயா?'' என்று ஆத்திரமும் திகைப்புமாக அவனது உதடுகள் முணுமுணுத்தன.

## 2

**ச**ற்று நேரம் தனஞ்சயனுக்கு ஒன்றுமே ஓடவில்லை! இவளா அவனுடைய் மனைவியாகப் போகிறவள்?! கடவுளே!

'அபரஞ்சி!' அழகான பெயர் என்று ஆனந்தப்பட் டானே? 'அபி'யின் விரிவாக்கம் என்று அவன் கற்பனை யில் கூடக் கண்டுகொள்ளவில்லையே!

என்னென்ன கனவுகள்! எத்தனைவிதமான ஆசை கள்!? அத்தனையையும் நாசமாக்கிய பாவி! இவளையா மணப்பது?

கழுத்து மாலையைப் பிய்த்து எறிந்துவிட்டு ஓடி விடலாமா என்றுகூட அவனுக்குத் தோன்றியது.

ஆனால், இவள்? இந்த 'அபி' என்கிற அபரஞ்சி, எந்தத் தைரியத்தில் மணப்பந்தலில் அவன் அருகே அமர்ந்திருக்கிறாள்!

தனஞ்சயன்தான் வெளிநாட்டில் சுற்றிக் கொண்டிருந்தான்; தபால் - வழியே தொடர்பு கொள்ள முடியாது என்று அபரஞ்சியின் புகைப்படத்தை அவனுக்கு அனுப்பவில்லை - அனுப்பும்படி அவன் கேட்கவும் இல்லை. ஒரு பெண்ணைத் தாயாருக்குப் பிடித்திருந்தால், அவளுக்கு அது ஒன்றே அவனுடைய மனைவியாவதற்குப் போதுமான தகுதி என்று அவன் நிச்சயமாக நினைத்திருந்தான்!

ஆனால், உலகத்தில் உள்ள கோடானு கோடிப் பெண்களில், இந்த ஒருத்தியைப் போய் அன்னை தேர்ந்தெடுக்கக் கூடும் என்று அவன் கனவில் கூடக் கருதவில்லையே!

எப்படியோ, உள் விஷயம் தெரியாததால், மகனுக்கு ஏற்ற மனைவியாய் இவளை நிச்சயித்து விட்டார்கள்! அறியாமல் செய்த தவறு. அது வேறு விஷயம்!

ஆனால் இவள்? இந்த அபரஞ்சி? அவளுக்குத் தனஞ்சயனின் போட்டோவைக் காட்டியிருப்பார்கள் தானே? அதுவும், தனஞ்சயன் என்ற முழுப்பெயருடனேயே?!

தனஞ்சயன் ஒன்றும் அவள் 'அபி' என்று வைத்துக் கொண்டதுபோலச் சுருக்கி தனா, கினா என்று வைத்துக் கொள்ளவில்லையே! எப்படி அடையாளம் தெரியாமல் இருந்திருக்கும்?

ஆனால், இந்த மூன்று ஆண்டுகளில் அவனைப் போல எத்தனை ஏமாளிகளோ? ஏமாந்து போனவர்களைப் பட்டியல் போட்டு வைப்பது சிரமம்தான்... அவசியமும் இல்லையே!

அபி பாண்டியன்! பாவி, பாவீ! அவள் பெயரை மட்டுமா சுருக்கினாள்? அவளுடைய அப்பா ஜெயபாண்டியன் என்ற பெயரையும் அல்லவோ வெறும் 'பாண்டியன்' ஆக்கி விட்டிருந்தாள். மற்றபடி, இந்த அபரஞ்சி, ஜெயபாண்டியன் என்ற பெயர்களிலேயே தனஞ்சயன் இவளை இனம் கண்டு விட்டிருப்பானே!



இப்போது - லெவன்த் அவர் என்பார்களே, இந்தக் கடைசி நேரத்தில் என்ன செய்வது?

அவனுக்கு ஒருபுறமாய் யாரோ மண்டியிட்டார்கள். வேறு யாருமல்ல. கலைவாணிதான். மண்டியிட்டு, அவனது தோளில் கிடந்த சரிகை அங்கவஸ்திரத்தைச் சீர்செய்வது போல, அவன் காதுகளில் கிசுகிசுத்தாள். ''அண்ணா, இப்படிக் காணாததைக் கண்ட மாதிரி அண்ணியை வெறித்துப் பார்க்கக் கூடாதாம். மற்றவர்கள் உன்... நம்மை மட்டமாக எண்ணுவார்களாம்... அப்பா சொல்லச் சொன்னார்கள்... ஆனால், அண்ணா அண்ணியை நீங்கள் இப்படி வைத்த கண் வாங்காமல் பிரமித்துப் போய் நோக்குவது அம்மாவுக்கும் எனக்கும் எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா? அவ்வளவுக்கு எங்கள் தேர்வில் நீங்கள் மயங்கி விட்டீர்கள்! அப்படித்தானே? நீங்கள் அண்ணியை நேரில் பார்த்ததும் என்ன சொல்வீர்களோ என்று இதுவரை எங்களுக்கு உள்ளூர உதைப்பு தான்!'' என்றுரைத்து கன்னம்குழிய, அரிசிப்பல் தெரியச் சிரித்தாள் தங்கை.

தங்கையின் முகத்தைப் பார்த்த தனஞ்சயனுக்கு மனம் கனிந்தது. சட்டெனத் தாயிடம் அவனது பார்வை திரும்பியது.

விழியோரம் லேசாக அரும்பிய கண்ணீரை - அது ஆனந்தக் கண்ணீரேயானாலும் - உள்ளுக்கிழுக்க முயன்றபடி, முகம் மலர்ந்து விகசிக்க, சரளா நின்றிருந்தாள்!

அந்தக்கணத்தில், தனஞ்சயன் முடிவு செய்தான். இந்தத் திருமணத்தில் எந்தவிதக் களேபரமும் வேண் டாம். இறைவன் கருத்து இதுவானரல் அப்படியே நடக் கட்டும்!

இவ்வளவுக்குமேல் - ஒரு திருமணத்தை நிறுத்து வது அநாகரிகம் என்பதோடு, இந்தப் பெண், அபரஞ்சி அம்மாவின் தேர்வு; இவளிடம் குறையென்று திருமணம் நிறுத்தினால், அப்பா, அம்மாவைக் குதறி விடுவார்!

அத்தோடு, இந்த அபரஞ்சிக்கும் ஏதாவது காரணம் - நியாயமானதாக ஒன்று இருக்கக்கூடும், அல்லவா? அதை விளக்கும் வாய்ப்பை அவளுக்கு அளிக்க வேண் டும் அல்லவா?

மேலும், திருமண மேடைவரை ஏறிவந்து, ஒருவன் அருகில் அமர்ந்தபின் கல்யாணம் நின்று போனால், அந்தப் பெண்ணுக்கு மறுபடி திருமணம் கூடுவது அரிது - அநேகமாக நடக்காது என்று கேள்வியுற்று இருக் கிறானே? அப்படி ஒரு பெண்ணின் வாழ்வு நாசமாக அவன் காரணமாக இருக்கலாமா?

ஏதேதோ காரணங்களை மனம் அடுக்கும்போதே தனஞ்சயன் மீண்டும் திடுக்கிட்டான்.

இந்தக் காரணங்கள் அனைத்துமே அவனது எதிர் கால வாழ்வு முழுமையையும் பாதிக்கக் கூடியதான அவனது திருமணம் என்கிற விஷயத்தின் அளவு வலு வானவை அல்ல. அதிலும் பல; வெறும் சாக்குப் போக்குகளே!

இத்தனை சாக்குப் போக்குகளை அவனது மூளை அவசர அவசரமாகக் கண்டுபிடிக்க வேண்டுமானால்... அவனுக்கே இந்தத் திருமணம் நிற்பதில் விருப்பம் இல்லை!



ஏன்?

திரும்பி மீண்டும் ஒருதரம் அருகில் அமர்ந்திருந்த வளைத் தனஞ்சயன் ஆராய்ந்தான்.

நல்ல அழகிதான். ஆனால், உலகில் எத்தனை பேரழகிகள் இல்லை? வெறும் வெளி அழகில் தலைசுற் றிப் போய்விட, இந்தத் தனஞ்சயன் அசடனோ பலவீ னனோ அல்லவே!

பின்னே?

மீண்டும் தனஞ்சயனின் பார்வை அபரஞ்சியிடம் பதிந்தது.

கன்னக் கதுப்புகளில் லேசான செம்மையுடன் - அ.து வெறும் ஒப்பனை என்று தோன்றவில்லை - செவ்விதழ்களில் சிறு முறுவலுடன் அமர்ந்திருந்தவளின் முகத்தில் கள்ளத்தனம் கடுகளவுகூட இல்லையே!

ஒருவேளை... நான்கு ஆண்டுகளுக்கு முன்பு என் றால் அபரஞ்சிக்கு பதினெட்டே வயதுதான். சின்...னப் பெண்! வேறு யாருடைய கட்டாயத்தின் பேரிலும் அப்ப டிச் செய்திருப்பாளோ! இருக்கலாம்.

எதற்கும், விளக்குவதற்கு, விளக்கி மன்னிப்புக் கேட்பதற்கு ஒரு வாய்ப்பு அவளுக்கு அளித்தே தீர வேண்டும் என்கிற முடிவுடன் அபரஞ்சியின் கழுத்தில் தனஞ்சயன் தாலி கட்டினான்.

தாலிகட்டி, மாலைமாற்றி, கைபிடித்து மூன்று முறை அக்கினி வலம் வந்து மணமக்கள் இருவரும் அருகருகே நிற்க உற்றமும் சுற்றமும் வந்து வாழ்த்திப் பரிசளித்துச் சென்றனர்.

பெரியவர்கள் விருந்துண்ணச் சென்றதும், உறவும், நட்புமாய் இளைஞர் கூட்டம் மணமக்களைச் சுற்றிக் கொண்டது.

அவரவரை உரிய வகையில் வரவேற்று தன் வகை ஆட்களைக் கணவனுக்கு அறிமுகம் செய்வித்து கணவன் வழி மனிதர்களுக்கு மரியாதை தெரிவித்து... தனஞ்சய னின் ஆய்வுக் கண்ணால் அபரஞ்சியிடம் குற்றமேதும் காணக் கூடவில்லை.

பழைய காலப் பெண்மணி போல அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நால்வகைக் குணங்களைக் காட்டி அவள் ஒதுங்கவில்லைதான், அதே சமயம், 'நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் உள்ள புதுமைப் பெண்ணாகவும் அவள் காட்டிக் கொள்ளவில்லை.

அவன் யாரையேனும் அறிமுகம் செய்து வைத் தால், கவனத்துடன் கேட்டு, அவர்களை அறிந்து கொள் வதில் மெய்யான மகிழ்ச்சி காட்டினாள். சாப்பிட்டுச் செல்லும்படி அவள் கூறியபோது, அவர்கள் உண்ணா மல் சென்று விடக் கூடாதே என்ற உண்மையான அக்கறை அவளது குரலில் தொனித்தது.

இவள் கைதேர்ந்த நடிகையா அல்லது நிஜமாகவே உணர்வதைத்தான் காட்டுகிறாளா?

''ஏய் அபி, உன் பெயரிலும் 'ஞ்சி' இருக்கிறது; அத்தான் பெயரிலும் 'ஞ்ச்' இருக்கிறது. படுபொருத்தம்'' என்று யாரோ உறவுப் பெண் எடுத்துச் சொன்னபோது, புருவம் உயர்த்தி, ''அதனால்தானே நான் இவரைத் தேர்ந்து எடுத்ததே!'' என்று அவள் குறும்புடன் ஒரு போடு போட, எல்லோருமே சிரித்தனர்.

கூச்சலோடு, 'இஞ்சி இடுப்பழகி, மஞ்ச நிறத்தழகா' என்று யாரோ கீச்சுக் குரலில் பாட, மீண்டும் சிரிப்பு மலர்ந்தது.



கூடச் சேர்ந்து சிரித்தவள், ''ஏன் ரஞ்சி, உன் இஞ்சி இடுப்பும், அவரோடு மஞ்ச நிறமும் இரவில்...'' என்று ஏதோ விரசமாகக் கூறியபோது முகம் கன்றிய போதும், காது கேட்டதுபோலவே அவள் காட்டிக் கொள்ள வில்லை.

சும்மா என்றால், அபரஞ்சியின் நடத்தை, தனஞ்சய னுக்கு மிக மிகப் பிடித்துப் போயிருக்கும். ஆனால்... அங்கே ஒரு பெரிய 'ஆனால்' ரத்தக் காட்டேறி போலக் கண்ணை உருட்டிக் கொண்டு நின்றதால் அவனால் மகிழக்கூட முடியவில்லை.

ஆயினும், கலைவாணி, தான் பெரிய முக்கியமான ஆள்போல் ''அண்ணி, அண்ணி'' என்று அபரஞ்சியை, உரிமையோடு சுற்றி வந்ததும் பெரிய மனுஷி போல, நகையை, பூவை எனச் சீர்படுத்தியதும், யாரேனும் ஆசீர்வதிக்க வந்தவர்கள் அதிகப்படியாக அபரஞ்சிக்குப் பூசிவிட்டுப் போன திருநீறு, குங்குமத்தை அளவாகத் துடைத்துவிட்டதும், அவனுக்குச் சிரிப்பை வரவழைத் தது. அடிக்கடி ''அண்ணா, அண்ணா'' என்று அந்தப் பெருமை வேறு! அவள் மணமகனின் தங்கையாம்!

தங்கையின் பெருமையும் மகிழ்ச்சியும் அவனது குழப்பங்களைப் பின்னே தள்ள, தனஞ்சயனும் மண மகனாக உணரத் தொடங்கினான்.

அந்த மனநிலையில் இருக்கும்போது, அத்தை வசந்தா, ''அபரஞ்சி என்று என்னடா பெயர் இது? கண்ணராவி! பழைய காலத்தில் தாசிகளுக்கு வைக்கிற பெயர். நல்ல குடும்பத்துப் பெண்ணுக்குப் போய் எப்ப டித்தான் இப்படி ஓர் அசிங்கப் பெயரை வைத்தார் களோ? அதற்குச் சரியாகக் கூச்ச நாச்சமே இல்லாமல் சிரிப்பது வேறு சகிக்கவில்லை. நம் வீட்டுக்கு வந்ததும்

முதலில், இந்தப் பெயரை மாற்றி விடுங்கள் அண்ணா'' என்றபோது தனஞ்சயனால் பொறுத்து போக முடியாமல், ''அபரஞ்சி என்றால் புடம்வைத்த சுத்தமான பொன் என்று அர்த்தம். அதைப்போய் அசிங்கம் என்று சொல் லாதீர்கள்'' என்று திருப்பிக் கொடுத்துவிட்டான்.

''அப்படியாடா, அர்த்தம்? பிரமாதமாய் இருக் கிறதே! வீட்டுப் பெண்கள் புடம் வைத்த பொன்னாகத் தான் இருக்கவேண்டும். நீயும் கேட்டுக்கொள்!'' என்று மனைவியிடம் உலகநாதன் கூற, சமயம் உணர்ந்து அவருடைய சகோதரி, அதற்கு மேல் பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.

அன்னையின் முகத்தில் பாராட்டோடு, வியப்பை யும் காணவும், தனஞ்சயனுக்குப் பெருமையோடு சிறு கூச்சமும் உண்டாயிற்று!

மாலை வரவேற்பில் அபரஞ்சி இன்னொரு வித மான எழில் தேவதையாக மிளிர்ந்தாள். வைத்த கண் வாங்காமல் மனைவியையே பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும் போலத் தோன்றிய உணர்ச்சியைத் தனஞ் சயன் பெருமுயற்சி செய்து கட்டுப்படுத்திக் கொண்டான்.

அவனை அடையாளம் கண்டு கொண்டது போலவோ, குற்ற உணர்ச்சியோ எதுவும் அபரஞ்சியின் முகத்தில் தெரியவில்லை - ஒரு வினாடி கூடத் தோன்ற வில்லை என்பதை விடாப்பிடியாக நினைவுபடுத்திக் கொண்டான்.

குற்ற உணர்ச்சி இல்லாமல் இருப்பதையாவது, ஒருவேளை அவள் அதைக் குற்றமென்று கருதவில்லை என்று ஒரு சமாதானம் சொல்ல முடியும்.

ஆனால், முன்பின் பார்த்தே அறியாதவள் போலக் காட்டிக் கொள்வதை எந்த வகையில் ஒப்புவது?



எல்லாம் நடிப்பு? கைதேர்ந்த நடிகை இவள்! இருக்கட்டும்; உன்க்கு நான் சளைத்தவன் அல்லடி! உள்ளூரச் சொல்லிக் கொண்டான் தனஞ்சயன்.

அதற்கேற்ப, விளையாட்டு வேடிக்கைப் பேச்சு களில், ஒரு மணமகனின் கம்பீரம் குறையாமல், அவனும் கலந்து கொண்டான். இளவட்டங்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமானான்.

அதுபோலவே, மருமகனிடம் மரியாதையும், பிரிய முமாகப் பக்கத்தில் அமர்ந்து பேச்சுக் கொடுத்த மாமனா ரிடமும் மனதை மறைத்தே நடந்து கொண்டான்.

ஆனால், அவர், கடந்த ஓர் ஆண்டுகாலம் தவிர, அதற்குமுன் நாலைந்து ஆண்டுகளாக - அவளுடைய தாயார் இறந்ததிலிருந்து - அபரஞ்சி சென்னையில், அவளுடைய பெரிய -தந்தை பாண்டியனின் வீட்டி லேயே இருந்ததாகக் கூறவும், அவரிடம் தனஞ்சயன் மனநிலை சற்று மாறியது.

''அவர் பெயர் என்ன சொன்னீர்கள்?'' என்று மாமனாரிடம் வினவினான்.

''பாண்டியன், பாண்டியன் ஆஃப் பாண்டியன் கம்ப் யூட்டர்ஸ்.'' என்று பதிலிறுத்தார் அவர். ''என் பெயர் ஜெயபாண்டியன். கர்நாடகாவில் ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை வைத்திருக்கிறேன்... அண்ணன் அளவு இல்லை என்றாலும் ஓரளவு நல்ல நிலைமைதான். தம்பி விஜயபாண்டியன் பாரீசில் இருக்கிறான். அங்கே கூட அபி ஓர் ஆண்டு இருந்தாள்.'' என்று அவர் விவரம் தரத்தர, அவனுக்கு மாமனார் மீதிருந்த வெறுப்பு மறைந் தது.

ஆனால், மேலே பேசிக் கொண்டிருக்க வழியின்றி, 'வரவேற்பு' வேலையாக யாரோ ஜெயபாண்டியனைக்

கூப்பிட, அவர் மருமகனிடம் சொல்லிக் கொண்டு எழுந்து போனபோது அதில் அவன் வருத்தப்படவும் இல்லை.

இரவு அபரஞ்சியின் வருகைக்காகத் தனஞ்சயன் சற்று நேரம் காத்திருக்க நேர்ந்தது.

அவனுக்கு, இப்போது, பல குழப்பங்கள், வெளிப் படையாகக் கேட்டு அறியும் காலம் சற்று அதிகமாகவே கடந்து போயிற்று. இப்போது போய் விசாரித்தால், இதை முன்பே கேட்டிருக்க வேண்டாமா என்பார்கள். கேட்டு ஆகப் போவதும் இல்லை; நன்கு ஆராயாமல் போய் விழுந்தான் என்று அசட்டுப்பட்டம் கட்டிக் கொள்வது தவிர! கேட்டுக் கிடைக்கப்போகும் லாபமும் எதுவும் இல்லை.

ஆனால் இவள்? அவனது எதிர்காலம் அவள். அவள் விஷயத்தை ஒதுக்க முடியாது!

மனைவியை அணுகும் முறை பற்றித் தனஞ்சயன் ஒரு முடிவுக்கு வரு முன்னதாகவே கதவு திறந்து, அபரஞ்சி உள்ளே வந்ததும், மீண்டும் மூடிக்கொண்டது.

முற்றிலும் வேறு அலங்காரம்! இப்போது ரதியாகத் தான் தோன்றினாள். கேட்க நினைத்ததெல்லாம் தனஞ் சயனுக்கு மறந்துவிடும் போல் இருந்தது.

அன்றைய அளவில், அபரஞ்சி நடந்துகொண்ட முறையினால், அவள் நேரே வந்து தன் காலில் விழுந்து வணங்குவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அப் படி விழவும் இல்லை.

அதற்காக, அவள் ஓடிவந்து அவன் கைகளில் விழுந்து விடவும் இல்லை.



சலுகையும், சிறு வெட்கமுமான பார்வையுடன், கணவனை நோக்கியபடி அபரஞ்சி கதவருகிலேயே நின்றிருந்தாள். அவன் அழைக்க வேண்டும் என்றோ?

அழைத்தான்!

பிகு பண்ணாமல் வந்தவள், பட்டர்ஃப்ளை ஸ்டீல் ஃப்ளாஸ்க்கில் ஊற்றி வைக்கப்பட்டிருந்த பாலை, அருகி லிருந்த கப்பில் ஊற்றியபடி, ''இதை வீணாக விட்டு விடக் கூடாதாம், குடித்து முடித்து விடவேண்டும் என்று உங்கள் அம்மா திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். உங்களுக்குச் சூடு எவ்வளவு இருக்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''பால் மிதச் சூடுதான். காஃபிதான் சூடாக இருக்க வேண்டும்'' என்று அவன் தகவல் தரவும், ''அப்படி யானால் இப்படியே சற்று நேரம் இருந்து ஆறட்டும். அதற்குள் நீங்கள் பழம் ஏதாவது சாப்பிடுகிறீர்களா? அல்லது ஸ்வீட் ஏதாவது? எதெது பிடிக்கும், சொல்லுங் கள்?'' என்று அவள் விசாரிக்க, அவன் பதில் தருவ தோடு, தன் பங்குக்கு விசாரிக்க, அதற்குள் பால் அவ னுக்கு விருப்பமான சூட்டுக்கு ஆறிவிட, இருவருமே பாலைக் குடித்தனர். பாலைக் குடித்து முடிக்கும்போது, இருவரும் ஒருவருக்கொருவர், 'தனா'வும், 'ரஞ்சி'யும் ஆகிவிட்டிருந்தனர்.

''பால் இருந்தது; அப்படியே வைத்தால் நாற்றம் அடிக்கும். கழுவி வைத்து விட்டு வருகிறேன்'' என்று ரைத்தபடி, ஃப்ளாஸ்க்கையும், கப்புகளையும் எடுத்துக் கொண்டு அபரஞ்சி குளியல் அறைக்குள் செல்லவும், திடுமென தனஞ்சயன் விழிப்பு வந்தாற் போலத் தன் னைத்தானே உலுக்கி விட்டுக் கொண்டான்.

அவள் பேச்சில் ஈடுபட்டு, தான் நினைத்திருந்ததை அவன் மறந்தே விட்டானே! நல்லவேளை! இப்போ தாவது நினைவு வந்தது!

குளியல் அறையிலிருந்து திரும்பி வந்து, கழுவி வைத்தவற்றை ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டு, அப ரஞ்சி கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

அனாவசியமான நாணல், கோணல் இல்லாமல் அவள் பழகியது, தனஞ்சயனுக்கு ஆச்சரியமாக இருந்த போதும் பிடித்தமாகவும் இருந்தது. ஆனால், அவள் அவனுக்கு முழுமையாகப் பிடித்தமானவள் ஆவாளா?

யோசனையோடு, ''என்னை இதற்குமுன் பார்த் திருக்கிறாயா, அபரஞ்சி?'' என்று மெல்லத் தொடங்கி னான் தனஞ்சயன்.

''ஓ, பார்த்திருக்கிறேனே!'' என்ற பதிலில், இவ்வ ளவு எளிதாக ஒத்துக் கொள் கிறாளே என்று அவன் திகைத்துவிட, ''ஃபோட்டோவில்!'' என்றுரைத்துச் சிரித் தாள் அவள்.

இவளுக்கு வேடிக்கையாக இருக்கிறதா என்று அவன் புகையுமுன், ''ஆனால், அதற்கு முன்னும் பல முறை பார்த்திருக்கிறேன்'' என்றாள் அவள் சீரியசான குரலில்.

இவள் இப்போது சொல்லப்போகிறாள், விவரம் கூறி, அவனிடம் மன்னிப்புக் கேட்கப் போகிறாள்... என்று தனஞ்சயன் ஆவலாகக் காத்திருக்க, ''எத்... தனையோ பிறவிகளில்! நான் பிறவி எடுக்கத் தொடங் கியதிலிருந்தே நீங்களும் நானும்தான் இணையாக இருந் திருப்போம் என்று நினைக்கிறேன். இம்மைக்கும் ஏழேழு பிறவிக்கும் மறுமைக்கும் பற்றாவான்' என்று கடவுளைப் பற்றிச் சொல்லுவார்களே! அதுபோல, எத்தனையோ



பிறவிகளில் உங்களோடு ஒன்றிப் பழகிய உணர்வு, உங்கள் புகைப்படத்தைப் பார்த்ததுமே எனக்கு உண்டா யிற்று'' என்று கூறியபோது அபரஞ்சியின் விழிகளில் லேசாக நீர்த்திரையிட்டிருந்தது.

இந்தப் பேச்சில் மயங்கி, எதையும் தூண்டித் துருவா மல், தனஞ்சயன் விட்டுவிட வேண்டுமாக்கும்! என்ன திண்ணக்கம்! கண்ணில் நீரைக்கூடக் கொண்டு வருவ தானால் இவள் எவ்வளவு பெரிய ஜாலக்காரியாக இருக்க வேண்டும்?

அவளது அருகாமையில் மூச்சு முட்டுவது போல உணர்ந்து, தனஞ்சயன் எழுந்து, ஜன்னல் அருகே சென்று நின்று, வெளியே இருளை வெறித்தான்.

குற்றத்தை ஒப்புக்கொண்டு அவனிடம் மன்னிப்புக் கேட்கும் பண்பாடு கூட அவளுக்கு இல்லையே! அவள் வெறுமனே வருத்தப்படுவதாகக் கூறியிருந்தால் கூடப் போதுமே. அவன் மனதார அவளை மன்னித்து விட்டி ருப்பானே! ஆனால், இந்த மாய்மாலக்காரி...

''உங்களுக்கு?'' என்று கீதமாய் அவள் கேட்ட போது 'திமிரா' என்று ஒரு கணம் தனஞ்சயன் திகைத்துத் திணறி போனான். பிறகே அவள் பேச்சு புரிந்து, ''நான் தான் உன் புகைப்படம் கூடப் பார்க்கவே இல்லையே!'' என்று தோளைக் குலுக்கினான்.

''ஆமாமில்லையா?'' என்றாள். அவள் அதைச் சாதாரணமாகவே ஏற்று, ''அப்போது நீங்கள் மேற்காசி யாவில் நாடு விட்டு நாடு, ஊர்விட்டு ஊர் சுற்றிக் கொண்டே இருந்ததால் தபால் ஏதும் போய்ச் சேராது; டெலிஃபோனில் சொல்வது மட்டும்தான் முடியும் என் றார்களே! உங்கள் அம்மா பார்த்தால் போதும் என்று விட்டீர்களாம்? 'சுத்த அம்மா கோண்டு' என்றாள்

ஆனால் அவள் கூட அத்தையை நேரில் பார்த்தபின் வாயை மூடிக் கொண்டாள். இவ்வளவு நல்ல மாமியாரைத் தந்ததற்கு நான் உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் இல்லையா?'' என்று அபரஞ்சி தானும் எழுந்து கணவன் அருகே வந்து நின்றாள்.

தலையை அவன் தோளில் சலுகையுடன் லேசாகச் சாய்த்து, ''மணப்பந்தலில் என்னை ஏன் அப்...படிப் பார்த்தீர்கள், தனா? என் 'செட்' எல்லோரும் என்னை ரொம்பவும் கேலி செய்தார்கள், உங்களுக்கு 'ஷாக்' அடித்துவிட்டதாம். நான்தான் அந்த 'ஷாக்'காம்.'' என்று இனிய குரலில் வெட்கமும் மகிழ்ச்சியுமாக மிழற்றினாள்.

''மகத்தான உண்மை!'' என்றான் அவன் ஒரு மாதிரிக்குரலில்.

மெய்தானே!

நெஞ்சழுத்தக்காரி! ஒன்றுமே நடந்திராதது போல என்ன நாடகம் போடுகிறாள்? இவளுக்குச் சரியான தண்டனை கொடுத்தே ஆகவேண்டும்! எப்படி?

கதைகளில் வருகிற மாதிரி, இவளைத் தொடாமல் தூர நிறுத்தி, 'வெளியேதான் கணவன் மனைவி; உள்ளே நீ யாரோ நான் யாரோ' என்று ஒதுக்கி வைக்கலாமா என்று யோசிக்கும்போதே அபரஞ்சியின் தலையில் சூடிக்கொண்டதும், உடம்பில் பூசிக் கொண்டதும் கலந்த ஓர் இனிய மணம் தனஞ்சயனின் நாசியைத் தாக்கியது.

இவளது உள்ளம் எவ்வளவோ கடினமானதாக இருக்கலாம். ஆனால் பட்டின் மிருதுவும் மென்மையுமாகத் தோளில் சாய்ந்திருக்கும் இவளை எப்படி விலக்குவது?

அத்தோடு, தப்பு செய்தவள் அவள் மட்டுமே! அதற்காகத் திருமணமாகியும் பிரம்மச்சாரியாக அவன் ஏன் சன்னியாச வாழ்க்கை வாழ்ந்து சங்கடப்பட வேண்டும்?



இல்லை. இவளைத் தண்டிக்க வேறு வழி கண்டுபிடிக்க வேண்டும்... படித்த கதைகள் சில நினைவுக்கு வந்தன. ஆனால், படுக்கையில் ஒரு பெண்ணைப் பழி வாங்குவது என்றால்... அது மிகவும் கேவலமாக அவனுக்குத் தோன்றியது.

வேறென்ன என்று முயன்று யோசித்தபோது, தனஞ்சயனுக்கு அவனுடைய பெற்றோரின் நினைவு வந்தது.

நல்ல இல்லறம் இந்தப் பரம்பரைக்கே ராசியில்லை போலும்! அம்மா எவ்வளவோ நல்லவர்களாக இருந்தும், தங்கை சொல் கேட்டுப் பழகிப்போன அப்பா, அம்மாவை நல்லபடியாக நடத்தவில்லை. அவருடைய மகனுக்கோ மனைவியே சரியில்லை!

விடை தெரிந்துவிட்டது! வழி கிடைத்து விட்டது!

உரிமையோடு தோளில் சாய்ந்து நின்றவளிடம் தனஞ்சயன் மெல்லத் திரும்பினான்.

''அதிக நேரம் பேச்சில் கழித்துவிட்டோம் என்று நினைக்கிறேன்'' என்றான் கம்மிய குரலில்.

## 3

''அபரஞ்சியின் உள்ளம் உற்சாக வானில் சிறகடித்துப் பறந்து கொண்டு இருந்தது.

கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக - அவளுடைய அன்னை இறந்ததிலிருந்து அவள் மனதில் இருந்த வெறுமை மாறி, முதன்முதலாக அங்கே மகிழ்ச்சி நிரம்பியிருந்தது.

ஆனாலும் என்ன மாதிரி வயது அது தாயை இழப்பதற்கு? அன்னையை இழப்பது எந்த வயதிலும் துன்பம்தான் என்றாலும், கன்னிப்பருவத்தில் அடியெடுத்து வைக்கும் அந்தச் சமயத்தில் அது நேர்வது பெரும் கொடுமை! அந்தக் கொடிய இழப்புக்கு முன் சுமதி - அபரஞ்சியுடைய தாய் - நடத்திய ஜீவமரணப் போராட்டம்! அம்மா இல்லாமல் போய் விடுவாளோ என்ற அச்சத்திலேயே அப்போது அபரஞ்சிக்குக் கை கால்களெல்லாம் சில்லிட்டுப் போகுமே!

அவள் இல்லையென்று முடிந்தபிறகு, இல்லாத தாயிடம் கேட்க எத்தனை எத்தனை கேள்விகள் அந்த இளநெஞ்சுக் கூட்டினுள் முட்டி மோதின?! எதையும் கேட்க அவள் இல்லாததால், உள்ளேயே முடங்கி... சே...வேண்டாம். அதை நினைத்து நினைத்து, மீண்டும் துன்புறுவது கூடாது.

ஆனால் அந்தச் சமயத்தில் உதவிபுரிந்த பெரியப்பா, சித்தப்பா, அவர்களுடைய குடும்பத்தினரை எல்லாம் அபரஞ்சி நன்றியோடு எண்ணிப் பார்த்தாள்

பெரியப்பாவும், சித்தப்பாவும்கூட ரத்த உறவு என்று சொல்லி விடலாம். ஆனால் அவர்களுடைய மனைவிமார்! இருவருமே அவளுக்காக எவ்வளவு பாடுபட்டார்கள்? அவர்களும், அவரவர் கணவரின் விருப்பம் என்று மட்டுமின்றி உண்மை அன்புடனேயே அவளுக்கு எவ்வளவோ உதவி செய்தார்களே?

இப்போதுகூட, இவ்வளவு அவசரமாகத் திருமணத்தை நடத்தியிரா விட்டால் இப்போதும் பெரியம்மாவும் சித்தியுமாகச் சேர்ந்து தூள் கிளப்பியிருப்பார்கள்.

பாரீசில், ஒரு இந்தியக் கலைநிகழ்ச்சியை நடத்தும் பொறுப்பை ஏற்றிருந்ததால் சித்திக்கு இங்கே வரமுடியவில்லை. 'தேனிலவுக்கு இங்கே வாடி!' என்று அன்பாக அழைத்தாளே.



பெரியம்மா பெரியப்பாதான் ரொம்ப அநியாயம்!

திருமணத்துக்கு இரண்டே நாட்கள் இருக்கும் போது, பெரியம்மாவுடைய தகப்பனாரின் நிலைமை கவலைக்கிடமாகி இருவரும் அங்கே தான் இருக்கிறார்கள்.

நல்லவேளையாக இரு வீட்டுப் பிள்ளைகளும் கலந்து கொண்டதால் வீடும் மண்டபமும் கலகலப்பாய் இருந்தது. இனி எல்லோரும் அவரவர் படிப்பு, கல்வி என்று பறந்து விடுவார்கள். பெரியப்பா பிள்ளைகள், முதலில் அவர்களுடைய தாத்தா வீட்டுக்கு வருவார்கள்... அந்தத் தாத்தாவுக்கு நல்லபடியாகக் குணமாகி விடவேண்டும் என்று அபரஞ்சி மனதார வேண்டிக் கொண்டாள்.

சென்னையில் திருமணம் முடிந்தபிறகு, மகளைக் கணவன் வீட்டில் கொண்டுவிட ஜெயபாண்டியன் வந்தார். விடைபெறுமுன், ''அபி, தாயில்லாப் பெண் நீங்கள் அவளுடைய இன்னொரு தாயாக இருப்பீர்கள் என்று மனதில் உறுதியாக பட்டதால்தானம்மா, மாப்பிள்ளையை நேரில் பாராமலேகூட நான் இந்தத் திருமணத்தை நிச்சயித்து நடத்தி வைத்ததே. நானாவது தொழிலில் இறங்கி மற்றதை மறந்து விடுவேன்; ஆனால், அவள் அம்மா போனபிறகு என் மகள் மிகவும் கஷ்டப்பட்டு விட்டாளம்மா. இப்படி, அப்படி என்று குடும்ப முறைகள் பற்றிக் கற்றுக் கொடுக்க தாய் இல்லாத பெண்; ஏதேனும் தப்புத்தவறு செய்தாலும், நீங்கள் ஒரு தாயாக இருந்து அவளை மன்னித்து...'' என்று தந்தை கலங்கியதை எண்ணுகையில் அபரஞ்சிக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

தந்தைகூட இவ்வளவு உணர்வாரா? விழித்திருக்கும் பதினாலு மணிநேரமும் அவருக்குத் தொழில் தவிர வேறு எண்ணமே இராது என்று எண்ணுவாளே! அவரா, மகளுக்காக இப்படிக் கவலைப்படுகிறார்?

ஆனால், அவர் கலங்கியபோது அவளுக்கும் தாங்க முடியாமல் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது!

சும்மா என்றால், தந்தையும் மகளுமாக ஒரு மூச்சு அழுதிருப்பார்களோ, என்னவோ? ஆனால் அவளுடைய அன்பான மாமியார் அப்படி ஏதும் நடக்கவிடவில்லை.

''என்ன அண்ணா, நீங்கள் சின்னப்பிள்ளை மாதிரி? முதலில் கண்ணைத் துடையுங்கள். உங்களைப் பார்த்து அபியும் அழப் போகிறாள்! பாருங்கள் அண்ணா என்னைப் பொறுத்தவரையில் கலைவாணி போல அபியும் எனக்கு ஒரு மகள்தான். அந்த பங்களூர்க் கல்யாணத்தில் எப்போது அபியை முதல் முதலாக நான் பார்த்தேனோ, அப்போதே எனக்கு அப்படி ஒரு பிடிப்பு வந்து விட்டது. அதனால்தானே மருமகளாக்கிக் கொள்ளவே நான் ஆசைப்பட்டேன்! மகளானால் என்ன, மருமகளானால் என்ன? இருவரும் என் மக்களே. அவளைப் பற்றி நீங்கள் கொஞ்சம்கூடக் கவலைப் படவே வேண்டாம்.'' என்று சரளா கூறியது அப்பா, பெண் இருவருக்குமே ஆற்றும் மருந்தாக அமைந்தது.

சரளா வெறும் பேச்சுக்காகச் சொன்ன வார்த்தைகள் அல்ல அவை. மெய்யாகவே மருமகளிடம் அவள் பாசத்தைக் கொட்டினாள். எப்படி, மகளை 'வாணிம்மா' என்பாளோ, அதைப்போலவே மருமகளையும் 'அபிம்மா' என்று அதே கனிவுடனேயேதான் அழைத்தாள்.



சத்துள்ளது பார்த்துச் சாப்பிடச் சொல்வது, இரு வேளை பாலைக் குடிக்க வைப்பது, தலைக்கு ஊற்றினால் சாம்பிராணிப் புகைபோட்டுக் கூந்தலைக் காயவைப்பது... கலைவாணிக்குச் செய்யும் அத்தனையும் அதே பாசமும் உரிமையுமாக அபரஞ்சிக்கும் அவள் செய்யவே, அபரஞ்சியும் அவளை 'அத்தை' என்று அழைத்தாலும் அன்னையாகவே எண்ணத் தொடங்கி விட்டாள்.

அதேபோல, அபரஞ்சிக்குத் தன் நாத்தனாரையும் மிகவும் பிடித்துப் போயிற்று. 'அண்ணி, அண்ணி' என்று அவள் ஆசையாகப் பழகியதும், வேறு வீடு வந்திருக்கிறோம் என்ற எண்ணத்தை அபரஞ்சிக்கு அடியோடு போக்கியது. ''எங்கள் அண்ணியின் கூந்தல்தான், இங்கே இருக்கும் எல்லோரையும் விட அதிக அடர்த்தி, அதிக நீளமானது'' என்று பெருமையாகத் தம்பட்டம் அடிப்பதைக் கேட்கவே அபரஞ்சிக்கு ஆனந்தமாகவும், கூடவே ஆச்சரியமாகவும் இருக்கும்... கொஞ்சம்கூடப் பொறாமை உணர்ச்சியே இல்லாமல் பெருமை மட்டுமே படுவது என்றால், அவள் மனதில் எவ்வளவு அன்பு இருக்க வேண்டும்? தாயைப் போலப் பெண்!

ஒற்றை மகளாய் வளர்ந்திருந்த அபரஞ்சிக்குத் தாயோடு தங்கையும் கிடைத்த உணர்வுதான்.

புகுந்த வீடு சொந்த வீடாக அவளுக்குத் தோன்ற மூன்றாவது காரணம் தனஞ்சயன்.

இந்தப் பட்டியலில் முதலில் இருக்க வேண்டியது அவன் பெயர் தான். ஆனால், மாமியாரும், நாத்தனாரும் கிட்டத்தட்ட ஒரு மாதமாகப் பழகி விட்டவர்கள். ஆனால் தனஞ்சயனை நேரில் பார்த்து இரண்டே நாட்கள் தானே ஆகின்றன?

ஆனால், மெய்யாகவே அவனை அறிந்து இரண்டே நாட்கள்தான் ஆகின்றனவா? நம்ப முடிய வில்லை அவளால். தனஞ்சயனிடமே சொன்னது போல இது ஜன்மாந்திரத் தொடர்பு என்றேதான் அபரஞ்சி உணர்ந்தாள். வாய்விட்டுச் சொல்லா விட்டாலும், தனஞ் சயனுக்கும் அதே உணர்வு இருக்கிறது என்றுதான் அவளுக்குத் தோன்றியது. மற்றபடி...

முகம் சிவக்கத் திரும்பியவளின் முகம் சட்டென மாறியது. ஏனெனில் அங்கே நின்று கொண்டிருந்தவர் கள், அவளுடைய மாமனார் உலகநாதனும், அவரு டைய தங்கை வசந்தாவும்.

மனைவி, மகள் அபரஞ்சியிடம் காட்டியது போல முழுமையான பிரியம் காட்டாவிட்டாலும், உலகநாதன் வீட்டுக்கு வந்த மருமகளிடம் வெறுப்பு, கோபம் என்று விலக்கி வைக்கவும் இல்லை. வீட்டின் ஓர் அங்கமாக மருமகளை ஏற்றுக்கொண்ட அவர், அதற்குமேல் அவ ளுக்கு முக்கியத்துவம் எதுவும் கொடுக்கவும் இல்லை.

தாயாராக ஒரு மாமியாரும், தங்கையாக ஒரு நாத்தனாரும் கிடைத்தது தனது அதிருஷ்டம் என்று எண்ணிய அபரஞ்சி, மாமனாரும், அதேபோல உருக வேண்டும் என்று பெரிதாக எதிர்பார்க்கவில்லை; ஆகவே, அவள் அவரது விஷயமாகக் குறைப்படவும் இல்லை.

ஆனால், மாமனார், தன் மாமியாரை நடத்தும் விதம் மட்டும் அபரஞ்சிக்குக் கொஞ்சமும் சரியாகப் படவில்லை.

அதுவும், மாமியாருடைய நாத்தனாரை அவளுக் குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அண்ணன் மனைவி



யைப் பற்றி, இல்லாததையும், பொல்லாததையும் தன் அண்ணனிடம் சொல்லி, வீட்டில் கலகமூட்டுவதற்கா கவே அவள் அங்கே வந்திருப்பது போல அபரஞ்சிக்குத் தோன்றியது.

அவளது குறிக்கோள், அதுமட்டுமல்ல என்பதை அப்போது வசந்தா நிரூபித்துக் கொண்டிருந்தாள்.

''அண்ணா, பரணில், நான் சின்ன வயதில் வென் னீர் வைத்துக் குளித்த அண்டா இருக்கிறது. அம்மா அதை எனக்குத் தருவதாகச் சொல்லியிருந்தார்கள். இந்த வீட்டில் எது எதுவோ எப்படியோ கிடந்து அழிகிறது! இந்த அண்டாவை மட்டும் அண்ணி பத்திரமாய்த் தூக் கிப் பரணில் போட்டு விட்டாள். இப்போது ஆள்காரன் எல்லாம் புதுத் துணிக்காக வந்திருக்கிறார்களே; ஒருவ னைப் பரணில் ஏறி எடுத்துத் தரச் சொல்லுங்களேன்?'' என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்.

உடனேயே உலகநாதனும், ''ஏய், யாரங்கே... சுட லையா? பரணில் ஏறி அம்மா கேட்கிறதை எடுத்துக் கொடடா'' என்று கூறித் திரும்பினார்.

பின்னோடு சென்று, ''அப்புறம் என் வெள்ளித் தட்டு? இரட்டைத் தட்டு அண்ணா. அதைச் சரளா அண்ணி அறை வீட்டில் அவள் பீரோவிலேயே வைத் துப் பூட்டியிருக்கிறாளே?... எப்படியோ, அவர்கள் வீட் டில் சரியாகத்தான் உன் பெண்டாட்டிக்குப் பெயர் வைத் திருக்கிறார்கள். சரளைக் கல்லுமாதிரி என்னைக் குத்திக் கொண்டே தான் இருக்கிறாள்! இல்லையானால் நான் சாப்பிட்ட தட்டுகளை எடுத்துப் பீரோவில் வைத்துப் பூட்டுவாளா?'' என்று வசந்தா, மிக வருத்தமாகச் சத்த மாக ஒரு பெருமூச்சு விட்டாள்.

தார்க்கோலிட்டது போல ஆயிற்று உலகநாதனுக்கு. புதியவளாக வீட்டுக்கு வந்திருக்கும் மருமகள் ஒருத்தி பார்த்துக்கொண்டு இருக்கிறாளே, இவள் நாளை நம் மனைவியை மதிப்பாளா என்ற எண்ணமே இல்லாமல், ''ஏய் சரளா, கழுதை, எங்கே போய்த் தொலைந்தாய்?'' என்று கூச்சலிட்டார்.

''இருந்து கொண்டு உனக்கு ஏன் இந்த கெட்ட புத்தி? முதலில் அந்த வெள்ளித்தட்டு இரண்டையும் எடுத்து வந்து என் கண்முன்னால் அவளிடம் கொடு. ஓடு, ஜல்தி'' என்று விரட்டினார்.

உடல் பதற ஓடிவந்த மனைவியிடம், ''போய் பீரோவில் வைத்திருக்கும் இரண்டு வெள்ளித் தட்டுகளை யும் எடுத்து வந்து வசந்தாவிடம் கொடு'' என்றார் அதட்டலாக.

''அது..'' என்று சரளா சற்றுத் தயங்கவும் அவருக்கு ஒரேயடியாய்க் கோபம் வந்துவிட்டது. ''ஏண்டி.. இது என்ன, உன் அப்பன் வீடு மாதிரி, ''எண்ணிச் சுட்டேன் பணியாரம்; பேணித் தின்னும் மாப்பிள்ளை என்று ஒன்றும் இல்லாத இடமா? எல்லாம் ஒன்றுக்குப் பத்தாக வாங்கிப் போடுகிறேன். ஒழுங்காகப் பத்திரப்படுத்தாமல் நீ சீரழிப்பதற்கும் சேர்த்தே சம்பாதித்துப் போடுகிறேன். இங்கே இருந்து கொண்டு உனக்கு ஏண்டி, இந்தக் கெட்டபுத்தி? இதற்கு மேல் ஒரு நிமிடம் இங்கே நீ நின்றாயானால் எனக்குக் கெட்ட கோபம் வரும். போ... நடக்காதே ஓடு. ஓடிப்போய்த் தட்டுகளை எடுத்து வா...'' என்றார் கோபமும் இளக்காரமுமாக.

இரு பெரிய வெள்ளித் தட்டுகளை எடுத்து வந்து, ஒருபுறமாய்த் திருப்பி, உலகநாதனிடம் நீட்டினாள் சரளா.



அதை வாங்காமல், ''மூடம்! நிர் மூடம்! வசந்தாவி டம் கொடு என்றால் என்னிடம் நீட்டுகிறாயே! இப்போது எனக்கு எதற்கு இந்தத் தட்டு? போ போய் அவளிடம் கொடு!'' என்று உறுமினார் அவர்.

பரணில் அண்டா எடுக்க வந்த வேலையாள் நிற்கி றான்; துவைக்க எடுத்து வந்த துணியோடு வேலைக்காரி நிற்கிறாள்; அவர்களைத் தாண்டிச் செல்ல முடியாமல், புது மருமகள் நிற்கிறாள்!

இவர்கள் அத்தனை பேருமே, சரளாவை மதித்து, அவள் பேச்சு கேட்டு நடக்க வேண்டியவர்கள், அவர்கள் முன்னிலையில் வீட்டுத்தலைவர் அவளை இவ்வளவு அவமதித்தால், மற்றவர்களின் மதிப்பு அவளுக்கு எப்ப டிக் கிட்டும்? அதைப்பற்றிய அக்கறையே இல்லாமல் என்ன பேச்சு பேசுகிறார்!

அபரஞ்சிக்கு மனம் சுணங்கியது.

பேராசை, கண்களில் மின்ன, தட்டுகளை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்த வசந்தாவின் விழிகள் அகன் றன. தன்னிச்சையாய் அவளது கைகள் தட்டுகளை மற்றவர் பார்வை படாமல் மறைக்கும் முயற்சியாய் பின்னே கொண்டு சென்றன. ஆனால் வேகமாக யோசித்து, ஒரு விடையும் கண்டு, தட்டுகளை மீண்டும் முன்னே கொணர்ந்து, அண்ணனின் முன் நீட்டினாள். ''பாருங்கள் அண்ணா, என் தட்டுகள்! இந்த அண்ணி எவ்வளவு கள்ளத்தனமாய் அவள் பெயரைப் பொறித்து வைத்திருக்கிறாள். நீங்களே பாருங்கள். அதை மாற்றி அடிக்காமல் வைத்திருந்தால் பார்க்கிறவர்கள், அண்ணி யின் தட்டை நான் எடுத்துக் கொண்டேன் என்று என்னையல்லவா தப்பாக நினைப்பார்கள்!'' என்று கண் ணைக் கசக்கினாள்.

அடடா! அழாதே வசந்தம் அவள் கிடக்கிறாள் பேராசைப் பிண்டம்! கால் வயிற்றுக் கஞ்சிக்குச் சிங்கியடித்துக் கொண்டிருந்தவர்களை வீட்டுக்குள் கொண்டு வந்தால் இப்படித்தான் கேவலப்பட வேண்டியிருக்கும். தட்டுகளை நகைக் கடையில் கொடுத்துத் தேய்த்து சரிபண்ணிக் கொள். போ, இப்போது தட்டுகளை உள்ளே எடுத்து வை... வேறு ஏதேனும் வேண்டுமானாலும் தயங்காமல் கேள்'' என்று தங்கையைச் சமாதானம் செய்தார் உலகநாதன்.

''என்னத்தை அண்ணா, கேட்பது? இரண்டு தட்டுகளுக்கே இந்தப் பாடாக இருக்கிறது! பூரணியைத் தனத்துக்குத்தான் கட்டவில்லை...'' என்று வசந்தா தொடங்கவும் அபரஞ்சி சற்றே திடுக்கிட்டாள். இப்படி ஒரு முயற்சி நடந்ததாமா?

''...அப்போது என்ன சொன்னீர்கள்? நினைவிருக்கிறதா? கலை மாதிரி பூரணியும் உங்களுக்குப் பெண் மாதிரிதான்; அவள் திருமணம் உங்கள் பொறுப்பு என்றீர்களே! இந்தத் தட்டுகளைத் தரவே மனமில்லை இன்னமும் நகை, ரொக்கம், கொடுக்க எப்படி மனம் வரும்?'' என்று வருத்தமாய் மூக்கை உறிஞ்சினாள் தங்கைக்காரி. ''எனக்கு வாய்த்த புருஷன் சரியாக இருந்திருந்தால் நான் ஏன் அடுத்தவளிடம் கையேந்துகிறேன்?'' என்று முகத்தை மூடியிருந்த சேலைத்தலைப்பினுள் விசும்பினாள்.

''ச்சு.. இதுதானே இந்தப் பெண் பிள்ளைகளிடம்? ஒரு வார்த்தை சொல்லுமுன் படிப்படியாய்க் கண்ணில் வடியவிடுவது? இப்போது பூரணிக்குச் செய்வதாகச் சொன்னது நானா உன் அண்ணியா? நான் முடியாது என்று சொன்னால் தானே நீ ஊளையிட வேண்டும்? முதலில் அழுகையை நிறுத்து!'' என்று எரிந்து விழவும்



சட்டென 'ஸ்விட்ச்' போட்ட மாதிரி வசந்தாவின் அழுகை நின்றது.

''அண்ணியை எண்ணிக் கொஞ்சம் பயந்துவிட்டேன் அண்ணா. அந்தப் பயத்தில் நீங்கள் பெண்டாட்டி சொல்படி ஆடுகிறவர் இல்லை என்பதை மறந்து விட்டேன். தயவுசெய்து அதை மன்னித்துக் கொள்ளுங்கள் அண்ணா'' என்றுரைத்து, அண்ணனின் கால்களில் விழுந்து எழுந்து, ''நீங்கள் இருக்கும் போது எனக்கு என்ன கவலை?'' என்று பல்லைக் காட்டினாள்.

நாலுபேர் பார்த்திருக்க, தங்கை தன் காலில் விழுந்தது உலகநாதனுக்கு சொல்லொணாத பெருமைதான். ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல், ''ம்... அந்த நினைப்பு இருந்தால் போதும்'' என்று அமர்த்தலாக மொழிந்து விட்டுத் திரும்பியவர், சற்று நின்று, ''இதோ பார், மரியாதை எல்லாம் மனதில் இருந்தால் போதும். இப்படிக் காலில் விழுவதெல்லாம் எதற்கு'' என்று சுற்றிலும் ஒரு பெருமிதப் பார்வை பார்த்துவிட்டு அங்கிருந்து அகன்றார்.

'காலில் விழாதே' என்று அவர் ஒரு வார்த்தை கூறவில்லை என்பதை வியப்புடன் அபரஞ்சி உணர்ந்தாள். அவருடைய தங்கை உண்மையாகவே மரியாதையுடன் காலில் விழுந்ததாகவா மாமனார் எண்ணுகிறார்! என்ன ஏமாளித்தனம்!

கள்ளப்பார்வையுடன் வசந்தாவும், சங்கடத்துடன் வேலையாட்களும் அகன்றுவிட, ஓய்ந்து நின்ற மாமியாரை அபரஞ்சி மெல்ல அணுகினாள்.

''அத்தை..'' என்று மென்மையாக அழைத்தாள் ''என் முன்னிலையில் மாமா திட்டிவிட்டார் என்று அவமானமாக... வருத்தமாக இருக்கிறதா, அத்தை?

எனக்குத் தாண்டிக் கொண்டு செல்ல முடியவில்லை, அத்தை! சாரி!'' என்றாள் இதமான குரலில்.

திரும்பி, மருமகளின் தலையை வருடிவிட்டாள் சரளா. ஒரு வருத்தமான முறுவலுடன், ''யார் யார் முன்னெல்லாமோ சிறுமைப்பட்டு விட்டேன் அம்மா. கலை பார்க்க உன் மாமாவிடம் திட்டு வாங்கவில்லையா? அவள் போலத்தானே நீயும்? அது ஒன்றும் இல்லை... ஆனால்...'' என்று பெருமூச்சு விட்டாள்.

''பின்னே? இந்த இரண்டு வெள்ளித் தட்டுக்காகவா இந்த வருத்தம்?'' என்ற கேள்வியை அவள் முகத்தில் படித்து, ''இந்த இரண்டு வெள்ளித் தட்டுகளும் என் பெற்றோர் எனக்குச் சீதனமாகக் கொடுத்தவை. உன் மாமா சொன்னது போல கஞ்சிக்குச் சிங்கியடித்தவர்கள் அல்ல என்றாலும், என் அப்பா அதிக வசதியுடையவர் அல்லதான். வளமான இடத்தில் வாழப்போகிற பெண்ணை யாரும் குறைவாகப் பேசிவிடக் கூடாது என்று வீட்டில் இருந்தவற்றை எல்லாம் உருக்கி விளக்கு, தட்டு என்று செய்து கொடுத்தார்... இலக்கு மாதிரி மெலிசாக இருக்கிறதாக இந்த அண்ணி மூட்டிக் கொடுத்ததால் அன்றைக்கே என் மாமியார் தட்டுகளை என்முன் வீசி எறிந்து விட்டார்கள். எடுத்து பீரோவில் வைத்திருந்தேன்...'' என்றாள் சரளா வேதனையுடன்.

''விளக்கு?''

''இரண்டு. இரண்டு விளக்குகளுமே எப்போதோ போய்விட்டன.''

''மாமாவிடம் சொல்லியிருக்கலாமே, அத்தை!'' என்றாள் மருமகள்.

நிராசையுடன் பெருமூச்செறிந்தாள் மாமியார். ''வாய் திறந்து ஒரு வார்த்தை நம்மைப் பேசவிடமாட்டா



ரம்மா. அதனால் தான் தட்டில் பொறித்த எழுத்துகள் தெரியும்படி வைத்து அவரிடம் தட்டை நீட்டினேன். என்ன ஆயிற்று பார்த்தாயல்லவா?''

''ஆனாலும் உங்களிடம் ஒரு வார்த்தை என்னவென்று கேளாமல் இப்படித் தங்கை சொல்லே வேதம் என்று நடந்து கொண்டது ரொம்பவும் அநியாயம், அத்தை!'' என்று அபரஞ்சி மனதில் பட்டதை ஒளியாமல் உரைத்தாள்.

''ஒரேயடியாய் அவரையும் குற்றம் கூறுவதற்கு இல்லை, அபி. முதலிலேயே மனைவி என்பவள், கணவனைப் புகுந்த வீட்டாரிடமிருந்து பிரிப்பதற்காகவே வந்திருப்பவள்; சற்றும் நம்பத்தகாதவள் என்று பலமாக உருவேற்றியிருந்தார்கள்; நம்மிடையே உதாரணங்களுக்கா பஞ்சம்? 'பொம்பளை சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு!' என்று தாராளமாய்ச் சொல்லி விடுவார்கள். நாம் வாய் திறந்து சிரிப்பதே தப்பாகி விடும்! ஒரு வார்த்தை பரிந்து பேசுவது போலத் தோன்றினால் கூடத் 'தலையணை மந்திரம்' வேலை செய்யத் தொடங்கி விட்டதாகி விடும்! அண்ணி தொடங்கி வைக்க, என் மாமியார், மாமனார் - இன்னும் யார் யாரோ இச்சகம் பேசிப் பிழைக்கும் எத்தனையோ பேர் சேர்ந்து கொள்ள அவருக்கும் தலைநிமிர முடியாது! பெண்டாட்டி சொல் கேட்கிறாள் என்று யாரேனும் சொல்லி விடுவார்களோ என்ற பயத்திலேயே உன் மாமா இரண்டு மடங்கு எகிறுவார்.''

யாரிடம் கொட்டுவோம் என்று சரளாவுக்கு இருந்ததோ என்னவோ! கன்னிப் பெண்ணான சின்ன மகளிடம் சொல்ல மனமின்றி வைத்திருந்தனவற்றைக் கூட சரளா மருமகளிடம் - அவளும் ஒரு காலத்தில் இந்த வீட்டு மருமகளாக வந்தவள்தானே? அந்த 'சக' உணர்ச்

சிபில் எதையும் மறைக்கத் தோன்றாமல் வெளிப்படை யாகக் கூறினாள்.

''ஆனால் அத்தை, இந்த வசந்தாப் பெரியம்மாவும் - தப்பு; சித்தி என்று கூப்பிடச் சொன்னார்களே! - அவர்களும் ஒரு பெண்தானே? இன்னொரு வீட்டில் இதேபோல மருமகளாகச் சென்று வாழ வேண்டியவர்கள் - வாழ்கிறவர்கள் எப்படி அத்தை உங்களை இந்தப்பாடு படுத்துகிறார்கள்? முதலிலிருந்தே இப்படித்தான் போலி ருக்கிறது? எப்படி முடிந்தது?'' என்று மருமகள் விசாரித் தாள்.

''அதுவும் என் தலைவிதிதான்!'' என்றாள் சரளா ஒரு வருத்தமான முறுவலுடன். ''முதலிலேயே வசந்தா அண்ணி கொஞ்சம் வக்கிரம்தான். எங்கள் திருமணத்தின் போது அவர்களுக்கும் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. அப்போதெல்லாம் இவ்வளவு கிடையாது. அவ்வப் போது, லேசாகத் தகராறு கிளப்புவதோடு சரி, எப்ப டியோ அந்தத் திருமணப் பேச்சு முறிந்து போய் விட்டது, அவ்வளவுதான். புதுப் பெண்ணாக வீட்டில் வளைய வந்த நான் விரோதியாகிப் போனேன். அதன்பிறகு ஐந்து ஆண்டுகள் அவர்கள் திருமணம் தள்ளிக் கொண்டே போய் விட்டது... கேட்க வேண்டுமா? பிறகு அவர்கள் மகளைத் தனாவுக்குப் பண்ண வேண்டும் என்று வந்தார் கள். எனக்கு ஒரே பயம்! ஆனால் என் மனம் புரிந்து தனா எப்படியோ சமாளித்து விட்டான். அதுவும் கோபம் தான்.''

''உங்கள் பிறந்த வீட்டில் யாரும் ஒன்றும் சொல்ல வில்லையா, அத்தை? அவர்கள் முன்னிலையிலாவது ஒழுங்காக நடப்பார்களா?... அல்லது...''



''சொன்னேனேம்மா! எங்கள் வீட்டார் வசதியில் குறைந்தவர்கள். உரக்கப் பேசும் திடம் கிடையாது. அத்தோடு... அத்தோடு, முதலில் ஒருதரம் என் பெற் றோர் வந்தபோது, 'பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தால் அதன்பிறகு அவள் வீட்டில் நடக்கும் நல்லது கெட்டதுக்குத்தான் அங்கே போகலாமே தவிர சும்மா சும்மா போய்ச் சாப்பாட்டுக்கு நிற்கக் கூடாது' என்று என் மாமனார் அவர்களிடம் சொன்னாராம்! பணம் குறைவு என்றாலும் அவர்களுக்குத் தன்மானம் அதிகம்! அப்புறம் அவர்கள்... போகாமல் தீராது என் றால் ஒழிய இந்த பக்கம் வந்தது இல்லை! இப்போது அவர்கள் இல்லவும் இல்லை!'' என்று பெருமூச்செறிந் தாள் மாமியார்.

''ஆனால் மாமா? தன் மாமனார் வீடு என்று ஒரு பாசம் பற்று இருக்குமல்லவா? அவர் ஒன்றும் சொல்ல வில்லையா?''

''உன் மாமாவா?'' என்றாள் சரளா கசப்புடன். ''திருமணமாகி மறுவீடு செல்வது அப்போதெல்லாம் ஒரு முக்கியச் சடங்கு மாதிரி. அப்படிப் போயிருந்தபோது கூடுதலாக ஒருநாள் தங்கி விட்டு வந்தோம். அவ்வளவு தான். பெண்டாட்டி வீட்டில் இவர்கள் குடும்ப மானத்தை அடகு வைத்து விட்டதாக எல்லோர் முன்னிலையிலும் என் மாமனார் என்னமாய்க் கத்தினார் தெரியுமா? எங்கள் இருவருக்கும் தலை நிமிர முடியாமல் போய்விட் டது!''

'அதுதான் அத்தை, நான் சொல்வதும், அப்போது உங்களோடு கூடச் சேர்ந்து கஷ்டப்பட்டிருப்பார்தானே? அத்தை, அநியாயம் என்று அன்று சேர்ந்து அவமானப் பட்டார். இப்போது, அதேபோல உங்களை அவமானப் பட வைப்பது என்ன நியாயம்?''

''முன்னோர் சென்ற வழி அம்மா. தடம் பிசகாமல், அவருடைய அப்பா போலவே நடந்து கொள்கிறார்! ஆனால், நல்லவேளையாக, தனா அப்படியில்லை. அவன் இதுபோல நடந்து கொள்ள மாட்டான் என்பதே எனக்குப் பெரிய நிம்மதி!'' என்று, தலையை உலுக்கிப் பழைய நினைவுகளை விலக்கிக் கொள்ள முயன்றபடி சரளா முறுவலித்தாள்.

அவளும், அவளோடுகூடச் சேர்ந்து புன்னகை புரிந்து அவளுடைய மருமகளும் அதிர்ந்துபோகிற விதமாய், அபரஞ்சியின் முகத்தில் மோதிச் சிதறிச் சில துணிகள் கீழே விழுந்தன.

பிரமிப்புடன் பார்த்தபோது, அங்கே தனஞ்சயன் நின்று கொண்டிருந்தான். ''திருமணம் என்பது, சும்மா உட்கார்ந்து தின்னும் சொகுசு வாழ்க்கைக்கு உரிய 'லைசன்ஸ்' அல்ல. நாலு நாட்களாக என் நல்ல துணிமணிகள் அப்படியே கிடந்து நாறுகின்றன! அவைகளைத் துவைத்துக்கூடப் போடாமல், மகாராணி இங்கே என்ன வெட்டி முறிக்கிறாய்?''

தங்கள் காதுகளையே நம்ப மாட்டாதவர்களாய் பெண்கள் இருவரும் திகைத்து விழிக்க, திரும்பி நடந்தபடி, ''நீயே இவைகளைத் துவைத்து, அயர்ன் செய்து எடுத்து வை!'' என்று தொண்டை செருமி, ஓர் உத்தரவிட்டுச் சென்றான் அவன்.

## 4

**அபரஞ்சியும்** சரளாவும் பேசிக் கொண்டிருந்த இடம் வீட்டினுள் எந்த அறையும் அல்ல. வசந்தாவின் குணத்துக்கும் பெரும்பாலும், தாயையே கொண்டிருந்த அவளுடைய மகள் பூரணியின் தன்மைக்கும் இருவரும் சாவித் துவாரத்திலேயே காதை வைத்து ஒட்டுக் கேட்கக் கூடியவர்களே! மனம் விட்டுப் பேசுகிற இந்தப் பேச்சைக் கேட்டால் அப்புறம் வாழ்வை நரகமாக்க வேறு ஒன்றுமே தேவையிராது என்று அறிந்திருந்தமையால், சரளா, தன் மனதைக் கொட்டுவதற்கு மருமகளைக் கூட்டிக்கொண்டு வீட்டின் பின்புறத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்றிருந்தாள்.



வீட்டுக்கும் கிணற்றுக்கும் இடையே இருந்த - மாமரத்து நிழலில் போடப்பட்டிருந்த கல் பெஞ்சியில் அமர்ந்து இருவரும் பேசிக் கொண்டு இருந்தனர். மெல்லிய குரலில்தான். ஐந்தடி தூரத்துக்கு வந்துவிட்டவர்களுக்குக் கூட அவர்கள் பேச்சைத் தெளிவாகக் கேட்க முடியாது.

ஆனால், அவர்களது உரையாடலைக் கேட்க முடியாவிட்டாலும், ஆங்காங்கே தோட்டப் பணிகளில் ஈடுபட்டிருந்த வேலையாட்கள், மாமியார் - மருமகள் நெருக்கத்தைப் பெருமையும் சிரிப்புமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். மருமகள், புது மணமகள் என்பதால் வந்த குறுகுறுப்பு வேறு!

அந்தச் சமயத்தில்தான் தனஞ்சயன் வீட்டினுள்ளிருந்து வந்து, அழுக்குத் துணிகளை மனைவியின் முகத்தில் விசிறியடித்து விட்டுத் தீயையும் உமிழ்ந்து விட்டுச் சென்றான்.

அவனது தீ மொழி சரளா தவிர வேறு யார் காதிலும் விழுந்திராதுதான். ஆனால் செய்கை அந்த அவமதிப்பு? எல்லோர் கண்ணிலும் பட்டிருக்கும்தானே?

முகம் கன்றி ரத்தமெனச் சிவக்க, அருகில் நின்ற மாமியாரைக் கூட ஏறிட்டுப் பார்க்க முடியாமல், அபரஞ்சி, குன்றிக் குறுகிப் போனாள்.

மருமகளின் நிலைமைக்கு, மாமியாரின் நிலை ஒரு சிறிதும் கூட உயர்வானது அல்ல. சொல்லப்போனால், அவமானம் சற்று அதிகம் என்றே கூறலாம். அவள் அப்போதுதான் தன் மகனின் சிறப்பு பற்றி பெருமைப் பட்டுக் கொண்டு இருந்தாள். அதற்குள், அந்த அருமை மகன் அவன் கையாலேயே அன்னையின் முகத்தில் கரியைத் தீற்றி விட்டதால், சரளாவும் அவமானம் மிகக் குன்றிப் போனாள்.

இருவரில், முதலில் சமாளித்தவள் அபரஞ்சிதான். சிறுவயதின் மீள் சக்தி காரணமாக இருக்கலாம். அதென்ன, என்னை ஒரு பணிப்பெண் போல நடத்துவது என்ற கோபமும், அவனை அறிந்த இந்தச் சிலதினங் களில், இது கணவனின் இயல்பல்ல; இயல்பு மாறி அவன் இப்படி நடந்து கொள்ள வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும்; அது என்ன என்ற ஆராய்வுமாக விழி உயர்த்தி மாமியாரை நோக்கியவள், அவள் முகத்தி லிருந்த வேதனையைக் காணவும் இளகிப் போனாள்.

சரளாவின் மனதைச் சரியாக ஊகித்து, அவளது கரங்களைப் பற்றித் தட்டிக் கொடுத்தாள். ''அவருக்கு வேறு என்ன எரிச்சலோ - கோபமோ! வெளிவாழ்வின் கோபதாபங்களை மனைவியிடம் காட்டுவது ஆண் களின் இயல்பு தானே, அத்தை? இதைப் பெரிதாக எண்ண வேண்டாம்'' என்ற தேறுதலாகப் பேசியபடியே குனிந்து கீழே கிடந்த துணிகளை எடுக்கலானாள்.

அவைகளை அப்படியே விட்டுவிட்டுப் போனால் என்ன என்று அவள் மனம் முரண்டத்தான் செய்தது. ஆனால், இந்த மாமியார் இன்னமும் மனம் நொந்து போகக் கூடும் என்றே கணவனுக்குப் பணிந்து, துணி களைப் பொறுக்கி எடுத்தாள்.



ஆனால், கணவனிடம் இதுபற்றிப் பேசி விடவேண் டும் என்ற உறுதியும் உள்ளூர வலுத்தது. அவளுக்குப் பணிந்து நடக்க வேண்டிய வேலையாட்கள் முன்னிலை யில் தனஞ்சயன் இன்னொரு தரம் இப்படி நடந்து கொள்ளும்படி விட்டு விடக் கூடாது என்று அவள் எண்ணினாள்.

ஆனால், பேசும் எண்ணம் அவளுக்கு மட்டும் இருந்து பயன் என்ன? அன்று பகல் முழுவதும் அதற்கு அவன் இடம் தரவே இல்லை; மதிய உணவுக்கு நண்பன் ஒருவனை அழைத்து வந்தவன், உண்டு முடித்ததும் அந்த நண்பனுடனேயே வெளியே சென்றுவிட்டான்.

தனஞ்சயனின் விவசாயக் கூட்டாளி பரஞ்சோதி என்று விவரம் தந்தாள் சரளா.

வேறு தொழில் சரிவரவில்லை என்று திரும்பி வந்து குடும்பத் தொழிலில் ஈடுபட்ட தனஞ்சயன், அவர்களது 'மாடர்ன் ரைஸ் மில்'லைக் கண்காணிப்பதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. சிறுவயதிலிருந்தே சேர்ந்து வளர்ந்த நண்பர் பரஞ்சோதியோடு சேர்ந்து புதுவித நெல் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண் டான். சின்னஞ்சிறு சீரகச் சம்பாவையும் வாசனைமிக்க பாசுமதியையும் மகரந்தச் சேர்க்கை செய்து, கறி வாசனை யோடு கூடிய சீரகச் சம்பாவைத் தோழர்கள் இருவரு மாகச் சேர்ந்து உருவாக்கினார்கள்...

''மறு விருந்து வைத்தபோது சமைத்த அரிசியா, அத்தை? ரொம்பவும் ருசியாக இருந்தது என்று எங்கள் வீட்டில் எல்லோரும் சொன்னார்கள். சோறு சின்னதாக வும் இருந்ததால் தொண்டையுள் வழுக்கிக் கொண்டு போவதுபோல இருந்தது என்றார்கள்!''

''அதேதான் அம்மா'' என்றாள் சரளா பெருமிதமாய். மூன்று ஆண்டு முயற்சி. பரஞ்சோதி குடும்பத்தில் நிறைய நிலம். தாத்தாக்கள், பெரியப்பாக்கள், சித்தப்பாக்கள் என்று குடும்பமும் பெரிது. படித்த பையன் என்று இவனிடம், நம் தனாவிடமும் அங்கே மிகுந்த மதிப்பு. அவர்கள் நிலம், நம் நிலம் என்று விதைத்து, நிறைய விளைவித்து விட்டார்கள். மாமா எப்பொழுதுமே, தனஞ்சயனுக்குத் தொழில் தெரியாது என்று அவ்வப்போது ஒரு மாதிரிப் பேசுவார். இவனுக்கு எப்படியாவது தன்னை நிரூபித்துக் காட்டிவிடும் வேகம். கஷ்டப்பட்டு விதை தயாரித்து நெல்லையும் விளைவித்தால் 'இதை எவன் வாங்குவான்', என்றார். ஏனென்றால், அரசாங்கம் சில தினுசு நெல்தான் வாங்கும். தனிப்பட விற்க விளம்பரம் தேவை. விளம்பரம் செய்தாலும் அந்தச் செலவுக்கு விலை கட்டி வராது என்றாரா, இவன் நல்ல விலைக்கே விற்றுக் காட்டுவதாக, அரபு நாடுகளுக்குப் போய், மாதிரி காட்டி 'ஆர்டர்' பிடித்து வந்து விட்டான். உங்கள் கல்யாணத்துக்கு இரண்டு நாள் இருக்கும்போதுதானே திரும்பி வந்தான். இப்போதுகூட அந்த நெல்லை எப்படிப் பதமாய்ப் பத்திரப்படுத்தி பாக்கெட் போடுவது என்பது பற்றிப் பேசத்தான் பரஞ்சோதி வந்திருக்கிறான்'' என்றாள் சரளா.

அபரஞ்சி சிறு வியப்புடன் நோக்கவும், ''என்னம்மா?'' என்று வினவினாள் மாமியார்.

''இங்குள்ள வெளி விவரமும் உங்களுக்கு இவ்வளவு தெரிகிறதே என்று நினைத்தேன், அத்தை. மாமா உங்களிடம் ஒன்றுமே சொல்ல மாட்டார் என்று நினைத்திருந்தேன்'' என்று மனதை மறையாமல் பதில் உரைத்தவள், அந்தப் பதிலில் மாமியார் வருந்தி விடாதிருப்பதற்காக லேசாகப் பல்லையும் காட்டினாள்.



''உன் மாமாவா? அவரா சொல்வார்?'' என்று அதே முறுவலோடு கையை விரித்தாள் சரளா. ''அவர் என்னிடம் பண விவகாரம் கூறியதே கிடையாது. ஆனால், வீட்டுப் பெண்களுக்கும் விவரம் தெரிய வேண்டும் என்று தனா தான் எல்லாம் சொல்வான். உன்னிடம் சொல்லவில்லை?''

சொல்லவில்லையே என்று சற்றே துணுக்குற்றவளுக்கு உடனேயே முகம் சிவந்தது. சொல்வதற்கு நேரம் எங்கே இருந்தது?

மருமகளைப் புரிந்து கொண்டவளாக, மகிழ்ச்சியும் கேலியுமாகச் சிரித்தாள் மாமியார்.

வெட்கித் தலைகுனியும்போதே அபரஞ்சிக்கு ஒரு சந்தேகம் - ஒரு வேளை, இந்த ஏற்றுமதி நெல் விஷயமாக உலகநாதன் மகனை ஏதாவது மட்டம் தட்டி, முட்டுக்கட்டை போட்டு அந்தக் கோபத்தைத்தான் காலையில் தன்னிடம் காட்டினானோ?

ஆனால், பெற்றவர் செய்த பிழைக்கு மனைவியை முறைப்பது என்ன நியாயம் என்று மனம் முரண்டியபோதே வேறு ஒன்று அவளுக்கு நினைவு வந்தது. அவளுடைய அன்னை இறந்த சமயம், அதைத் தொடர்ந்து எவ்வளவு காலம் அவளுக்கு யாரையும் பார்க்கவோ, பேசவோ பிடிக்காமல் இருந்தது? பல முறை மற்றவர்களிடம் முகம் திருப்பியது அவளுக்கு ஓரளவு நன்றாகவே நினைவு இருந்தது. அதெல்லாம் அவர்கள் மீதுள்ள வெறுப்பினாலா? இல்லையே? ஒன்றிலிருந்து மற்றொன்று. அன்னையை இழந்த வேதனையை அகப்பட்டவர்களிடம் காட்டினாள். அதுதானே உண்மை! அவளது மனநிலை தேறுவதற்காகப் பெரிய பதவி கொடுத்து, கார் கொடுத்து வைத்திருந்த பெரிய தந்தை பேசும்போதுகூட இடையில் எழுந்து சென்றிருக்கிறாளே!

இங்கே அபரஞ்சி புது மருமகள். இனித்தான் மற்றவரின் - வேலையாட்கள் உள்பட எல்லோருடைய மதிப்பையும் பிரியத்தையும் சம்பாதித்தாக வேண்டும் என்ற நிலையில் இதுபோலெல்லாம் நடந்து கொள்ள வேண்டாம் என்று தனஞ்சயனிடம் மெல்லச் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தாள்கள்.

ஆனால், இரவில் மிகவும் தாமதமாக வீடு திரும் பிய தனஞ்சயன், தனிமை கிட்டியபோது, அவனாக எதையும் சொல்வதாகவும் இல்லை; அவளைச் சொல்லு மாறு விட்வும் இல்லை.

''இன்று காலையில் நடந்தது பற்றி...'' என்று அவள் தொடங்கியபோது ''பேசுவதற்கு இதுவா நேரம்?'' என்று அவளை, அணைத்தவன், பேசும் நினைவை அவளுக் கும் மறக்கடித்து விட்டான்.

மறுநாள், அந்தப் பரஞ்சோதி காலையிலேயே வீட்டுக்கு வந்துவிட நண்பர்கள் இருவரும் விரைந்து கிளம்பிச் சென்று விட்டனர்.

கணவன் ஒன்றும் கூறியிராதபோதும், தானாகவே அவன் களைந்து போட்டிருந்த துணிமணிகளை எடுத்து அகற்றியபோது, அபரஞ்சிக்கு முன்தினம் நினைவு வந் தது.

போகட்டும். என்ன நடந்ததோ என்னவோ? விடாப்பிடியாக இப்போதைக்கு இதைக் கிளற வேண் டாம்; இன்னொரு தரம் தனஞ்சயன் இப்படி நடந்தால்... அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய் தாள் அவள்.



மெல்லப் புகுந்த வீட்டோடு அபரஞ்சி பொருந்தலா னாள். பங்களூரில் தந்தை வீடு, சென்னையில் பெரிய தந்தை வீடு, பாரீசில் சித்தப்பா வீடு என்று மூன்று இல்லங்களிலும் அவள் பலகாலம் வசித்தே இருக்கிறாள்.

அந்த மூன்றுமே மூன்று விதம்தான். ஆனால் அவற்றிலிருந்து அவளது புகுந்த வீடு முற்றிலும் மாறுபட் டிருந்தது.

திருமணமாகுமுன் அவள் வசித்த மூன்று இல்லங் களிலுமே, குடும்பத் தலைவர் மூடிசூடா மன்னனாகவே கருதப்பட்டதில்லை. பேச்சு எதிர்ப் பேச்சு உண்டு. எல்லோருமே நன்கு படித்தவர்கள். நியாயம் என்று பட்டதைத் தைரியமாக எடுத்துச் சொல்வார்கள். இங்கே உலகநாதன் சொல் வேதமாக மதிக்கப்படுவது போல அங்கே யார் வீட்டிலும் நடவாது. இங்குபோல அதிக வேலையாட்கள் கிடையாது. ஆனால் இருந்த வேலை யாட்கள், சமையல் உட்பட, எல்லா வேலையுமே - செய்வார்கள். இங்குபோல, எவ்வளவு பேர் இருந்தாலும் வீட்டினருக்குத் தேவையான உணவை வீட்டுப் பெண் கள் தான் சமைக்க வேண்டும் என்று கிடையாது. மற்றபடி வசதிகளைப் பொறுத்தவரை இங்கு எல்லாம் இருந்தன. கார், ஏசி, காஸ் அடுப்பு, மிக்சி, கிரைண்டர்... எல்லாமே!

அபரஞ்சிக்கு மாமியார் நல்லவளாக இருந்ததால், ''என் மகன் உன் கழுத்தில் தாலி கட்டிவிட்டானில் லையா? இனி இந்த வீட்டுக் கொத்தடிமை நீ. வேலை யைத் தொடங்கு!'' என்று அபரஞ்சி விரட்டப்பட வில்லை. அறியாமையாலும், பயத்தினாலும் செய்யப் பட்ட தவறுகள் பகிரங்கப்பட்டு அவமானப்படுத்தவும் இல்லை.

மாறாக, சரளா மருமகளுக்குக் கற்றுக் கொடுத்தாள்.

''உன் மாமாவுக்கு, முறுக்கு மட்டும் வீட்டில் எப் போதும் இருக்க வேண்டும். யார் வந்தாலும், ஏய், நாலு முறுக்கு கொணர்ந்து வை! என்று ஏவுவார். அந்த நேரம் முறுக்கு இல்லை என்று வேறு எதையாவது கொண்டு வைத்தால் ரொம்பவும் கோபம் வரும். அதனால், வீட் டில் முறுக்கு எப்போதும் இருக்கும்படி செய்து வைத்துக் கொண்டே இருப்பேன்'' என்று கூறியபடி முறுக்கு மாவில் பெருங்காயம், எள் கலந்து விரசிக் கொண்டி ருந்த சரளாவின் முகம் சட்டென வாடியது.

''என்ன அத்தை?''

சட்டென உலுக்கிக் கொண்டு, தன்னைத்தானே நடப்புக்குக் கொண்டு வந்தாள் சரளா. ''ஒ.. ஒன்றும் இல்லைம்மா... முன்னே நடந்தது... முன்னே என்றால் ரொம்ப காலம் முன்பு என்றுகூடச் சொல்ல முடியாது... ஆனால்... அபி, உன் மாமா பற்றி... பாரம்மா, அப்பா விடம் அடியோடு மரியாதை போய்விடக் கூடாது என்று நானாக வாணியிடம் ஒன்றும் சொல்வது இல்லை. அவள் முன்னிலையில் கண்டபடி பேசி அவராகக் கெடுத்துக் கொள்வது தவிர, அவளுக்கு வேறு ஒன்றும் தெரியாது. ஆனால், வடிகால் கிடைத்த மாதிரி, உன்னிடம் எல்லாம் கொட்டுகிறேனே; நீயும் மாமாவை வெறுத்து விடக் கூடாது தானே...'' என்றாள் கலக்கத்துடன்.

''அய்யோ, என்ன அத்தை நீங்கள்! இதற்காகவெல் லாம் நான் மாமாவை வெறுத்து விடுவேனா? தனாவு டைய அப்பா அல்லவா அவர்! அத்தோடு, கல்லுக்குள் ஈரம் மாதிரி அவர் மனதிலும் பாசம் உண்டு என்பது எனக்கும் தெரியும் அத்தை. அன்று காஞ்சிப் பட்டுக் காரன் வந்தபோது, கலைவாணிக்கும், எனக்கும் ஒரே மாதிரி நல்லதாக எடுத்துக் கொள்ளச் சொன்னாரே! மகளையும் மருமகளையும் ஒரே மாதிரி நடத்துகிற குணம் உங்கள் போலவேதானே அவருக்கும் இருக் கிறது... அதேபோல மனைவியையும் தங்கையையும் கூட ஒரே மாதிரி சமமாகவேனும் நடத்தியிருக்கலாம்... ஆனால் அவருக்கு நடந்த மூளைச் சலவை பற்றி தான் நீங்களே சொன்னீர்களே!



''உங்களுக்கு மன ஆறுதல் கிடைக்குமானால், வேறு எந்தப் பயமும் இல்லாமல் நீங்கள் என்னிடம் எது வேண்டுமானாலும் சொல்லலாம் அத்தை!'' என்று சினே கமாய் முறுவலித்தாள் மருமகள்.

''கொஞ்ச நஞ்ச ஆறுதலா, அபிம்மா?'' என்று அபரஞ்சியை நன்றியுடன் நோக்கினாள் சரளா. ''மேலே மேலே போட்டு அடுக்கி மூச்சு முட்டிப் போயிருந்தேன். கண்ணு. உன்னிடம் சொல்லச் சொல்ல எவ்வளவு பாரம் இறங்கிப் போகிறது தெரியுமா?... இன்னும் கொஞ்சம் நீர் சேர்க்க வேண்டும் அம்மா பார். இதுதான் மாவுப் பக்குவம்... உப்பு பார்த்துக் கொள்... அன்று அந்த உப்பில் வந்தது வேதனை!'' என்று மருமகளுக்குப் பக்குவம் காட்டி விட்டு மீண்டும் சொல்லத் தொடங்கி னாள்.

''அப்போது தனா தொழில் சரியில்லை என்று திரும்பி வந்த சமயம். எனக்கு அன்று விரத நாள். வாயில் போட்டு உப்புப் பார்க்க முடியாது. ஆனாலும், முறுக்கு டப்பா காலி என்று கண்டதும் அவசரமாக மாவு இடிக்க, திரிக்கச் சொல்லி, செய்து வைத்தேன். எப்ப டியோ உப்பு கொஞ்சம் குறைந்து போய் விட்டது...''

என்றவள், பழைய நினைவில் அப்போதும் அடைத்த தொண்டையைச் செருமி, சீர்செய்து சொன்னாள். ''அப் போது வீட்டில், எல்லோரும் இருந்தார்கள். யாரோ இரண்டு விருந்தாளிகள் வேறு. முறுக்கை வாயில் போட் டுச் சுவைத்தவர், 'தூ' என்று என் பக்கமாய்த் துப்பினார்.. துப்பிவிட்டு... ''இந்த மாதிரி முறுக்கைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்லுவதை விடச் சும்மா என் இரண்டு கன்னத்திலும், நீ ஓங்கி இரண்டு அறை அறைந்திருக்க லாம்'' என்றார்... பெரிய 'விட்' அடித்துவிட்ட மாதிரி இளக்காரமாய் ஒரு சிரிப்பு வேறு. எல்லாரும் அவரைப் பின்தொடர்ந்து சிரித்தார்கள். அதிலும் வசந்தா அண்ணி விழுந்துவிழுந்து சிரித்தார்கள். சிரித்துவிட்டு, 'என் னண்ணா செய்வது? உங்களுக்குப் பெண்டாட்டியும் சரியில்லை, பிள்ளைகளும் கூர் இல்லை' என்றாள்! எனக்குத் தாங்க முடியவில்லை. அங்கிருந்து சென்றுவிட் டேன். அதற்கு வேறு திட்டு வாங்கினேன். கேலியும் கிண்டலுமாகப் பேசியதை ரசிக்கத் தெரியவில்லையாம். அவர்களை அவமதிப்பது போலத் திரும்பி வந்து விட் டேனாம்!''

''இன்றைக்கு நானே முறுக்கு பிழிகிறேன், அபி. நீ வெந்தது பார்த்துத் திருப்பிப் போட்டு மட்டும் எடு'' என்று ஒரு சுற்று பிழிந்து விட்டு மேலே தொடர்ந்தாள். ''கலைக்கு அப்போது பதினாலு வயதுதான். ரொம்பவும் அழுதாள். 'என்னம்மா அப்பா உங்களை இப்படிக் கேவலமாகப் பேசுகிறார்கள்? அதுவும், எல்லார் நடுவி லும்?' என்று புலம்பல். தனத்துக்கும் ரொம்பவும் கோபம். ''அவர் சொன்ன மாதிரி அடித்து விடமாட்டீர் கள் என்கிற திமிர்தானே, அம்மா? அப்படி அறை - அறைகூட வேண்டாம்; அறைகிற மாதிரி நீங்கள் கையை



ஓங்கினால்கூட அப்புறம் அவரால் வாழ்நாள் முழுவதும் தலைநிமிர முடியுமா? என்று குதித்தான். 'அப்பா அமெ ரிக்காவிலாவது ஆஃப்ரிக்காவிலாவது பிறந்திருக்க வேண்டும்' என்பான்... வெந்து விட்டது, எடுத்து விடம்மா. அப்படியே குச்சியில் கோர்த்து எடுத்து வடி கட்டியில் சாய்வாக வை. எண்ணை வடிந்து விடும். அடுத்த ஈடு எடுக்குமுன் டப்பாவில் வைத்து மூடி விடு.''

மாமியார் சொன்னது போலச் செய்துவிட்டு, ''எனக் கென்னவோ, நாலு பேர் நடுவில், நான் பெண்டாட்டி தாசன் அல்ல என்று காட்டுவதற்காகவே மாமா உங்களை மட்டம் தட்டிப் பேசினாரோ என்று இருக்கிறது, அத்தை. மனைவி மயக்கத்தில் உடன் பிறந்தவளை விட்டுவிட வில்லை என்று காட்டுகிற வேகம், வேறு தூபம் போட ஆளும் இருந்ததால், 'அவுட் ஆஃப் பிரப்போஷ்'னாக அளவு மீறிவிட்டார் என்று நினைக்கிறேன். ஆனால், என்ன பைத்தியகாரத்தனம் பாருங்கள்! காலமெல்லாம் கூட இருந்து தேவைகளைக் கவனிக்கிறவள் மனைவி; அவளை நன்றாக வைத்துக் கொண்டால் இருமடங்கு ஆசையாகச் செய்வாள் என்பதுகூடத் தெரியவில்லை? உதட்டளவில் பாராட்டி காரியம் சாதிக்கிறவர்களுக்காக, அவருக்காக, அவரையே நம்பி வாழவந்த மனைவியின் மனதை நோகடித்து விட்டாரே!'' என்று பரிதாபப்பட்டுப் பேசினாள் அபரஞ்சி.

''ச்சு... ஆமாம்மா...'' என்று யோசித்தவள், அப ரஞ்சி எண்ணையிலிருந்து எடுத்து வைத்துக் கொண்டி ருந்த முறுக்குகளை பார்த்ததும், ''அபி, இன்னும் சரியாக வேகவில்லையம்மா, ஊகும், திரும்பவும் எண்ணையில் போட்டாலும் அவ்வளவு சரியாக வராது. மொறுமொறுப்

பாய் இராமல், ஒரு மாதிரி கடுக்மொடுக்கென்று இருக்கும். அந்த ஈடு முழுவதையும் தனியாக வைத்துவிடு. மாமா, அத்தை என்று யாருக்கும் போய்விடாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்று எச்சரித்தாள்.

விதியோ, விதியின் சதியோ என்னவோ? அந்த முறுக்குகளில் ஒன்று எப்படியோ தனஞ்சயன் கைக்குப் போய்ச் சேர்ந்தது!

அன்று மாலை பரஞ்சோதி வேறு எங்கோ செல்ல வேண்டியிருந்ததால் ரைஸ்மில் வேலை முடிந்ததும் தனஞ்சயன் வீட்டுக்கு வந்துவிட்டான்.

அவர்கள் அறையில், அந்தியில் விளக்கேற்று முன்பாக, முகம் கழுவி, தன் எளிய அலங்காரத்தை முடித்துக் கொண்டிருந்தாள் அபரஞ்சி. அவளது எழிலை அதிகப்படுத்திக் காட்டும் இளம்சிவப்பு வண்ணச் சேலை வேறு

கணவன் பார்வையுடன் நெருங்கியவனிடமிருந்து விலகி, ''விளக்கேற்றுகிற நேரம்!'' என்று கூறி அபரஞ்சி, வெளியே சென்று விட்டாள்.

சிறு துணுக்கத்துடன் நோக்கியவன் தோளைக் குலுக்கிவிட்டு, தானும் முகம் கைகால் கழுவிக் கொண்டு கூடத்துக்குச் சென்றான்.

மகனைக் கண்டதும் மகிழ்ச்சியுற்று, ''இன்று அபி, முறுக்கு செய்தாளடா'' என்று முழுக்க மருமகளே செய்தது போலப் பாராட்டிவிட்டு, ''அபி, தனாவுக்கு முறுக்கு எடுத்து வாம்மா'' என்றாள் சரளா.

அலமாரியில், ஒரு சிற்றுண்டித் தட்டில் கொஞ்சம் முறுக்குகள் எடுத்து வைக்கப்பட்டிருந்தன. மாமியார்தான் மகனுக்காக எடுத்து வைத்துவிட்டு, இப்போது



மனைவியின் உரிமையில் குறுக்கிடாமல் அவளையே அவளுடைய கணவனுக்குக் கொடுக்கச் சொல்லுகிறாள் என்று உள்ளூர ஆனந்தித்தபடி முறுக்குத்தட்டை எடுத்துச் சென்று கணவனிடம் கொடுத்தாள் அபரஞ்சி.

சரியாக வராத முறுக்குகள் அவை. சிறிய டப்பா ஒன்றில் வைக்கப்பட்டிருந்த அந்த முறுக்குகளில் சிலதைத் தனக்காக எடுத்த கலைவாணி, மொறு மொறுப்பாய் இல்லை என்று அப்படியே வைத்து விட்டுப் போயிருந்தாள்.

கையில் தரப்பட்ட முறுக்கில் கொஞ்சம் நொறுக்கி, வாயிலிட்ட தனஞ்சயன், ஒரு வினாடி யோசித்து, 'தூ' வென்று வாயிலிருந்ததை துப்பினான்.

பெண்கள் மூவரும் திகைத்து நோக்க, 'முறுக்கா... இது?'' என்று முகம் சுளித்தான். ''இந்த மாதிரி முறுக்கைக் கொடுத்துத் தின்னச் சொல்லுவதற்குப் பதிலாக, இரண்டு கன்னங்களிலும் ஓங்கி இரண்டு அறை கொடுத்து விட்டிருக்கலாம் நீ. அவ்வளவு பெரிய கொடுமை இது!'' என்று ஏளனமாய் உரைத்தவன் எழுந்து சென்று வாயைக் கொப்புளித்து விட்டு வெளியேயும் சென்று விட்டான்.

''என்னம்மா, இது? முறுக்கு நன்றாக இல்லைதான். அதற்காக, அப்பா மாதிரியே அண்ணன் பேச வேண்டுமா?'' என்று அழுகையும் ஆத்திரமுமாகக் குமுறினாள் கலைவாணி.

''நன்றாயில்லையா? ஓர் ஈடுதவிர எல்லாம் நன்றாக இருந்ததே!'' என்று சரளா கூற, தட்டில் இருந்தவை, கடுமுடுத்துப் போன முறுக்குகள் என்ற விவரம் தெரிய வந்தது.

ஆனால், தனஞ்சயனின் தரம்கெட்ட பேச்சுக்கு அது சரியான- சமாதானம் ஆகாதே!

மருமகளின் வாடிய முகத்தைக் கண்ட சரளா, மகனிடம் பேச முடிவு செய்தாள்.

அவ்வப்போது மகன் நடந்து கொள்ளும் விதம் உள்ளூர ஒரு நிச்சயமற்ற நிலையை உண்டுபண்ணிய தால், மருமகள் மனம் இன்னமும் அதிகமாக நோகும்படி மகன் ஏதேனும் கூறிவிடக் கூடாதே என்ற பயத்தில், அபரஞ்சி அருகில் இல்லாத நேரம் பார்த்து, சரளா மகனிடம் பேச்சைத் தொடங்கினாள்.

''அப்பா மாதிரியே பேசுகிறாயே, கண்ணா!'' என்று வருத்தத்துடன் உரைத்த தாய்க்குத் தனஞ்சயன் உடனே பதில் சொல்லவில்லை.

ஒருகணம் தாமதித்தவன் நிமிர்ந்து, ''தாத்தா, அப் பாவின் ரத்தம்தானே அம்மா, என் உடம்பிலும் ஓடு கிறது? நான் மட்டும் வித்தியாசமாக இருப்பேன் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள்?'' என்று நிதானமாகக் கேட் டான்.

''இப்படிச் சொன்னால் எப்படி, தனா? அபி இந்த வீட்டுக்கு வாழவந்தவள். சின்னப் பெண். அவள் மனம்...'' என்றவளைச் சட்டென இடைமறித்தான் மகன்.

''ஏன் உங்கள் அழகான மருமகளின் அனிச்சம்பூ மனம் இதனால் வாடி வதங்கிப்போய் விடும் என்று எண்ணி விட்டீர்களா? அவள், உங்கள் மாதிரி இல்லை, அம்மா. இந்தக் காலத்துப் பெண்... அவள் எவ்வளவு பெரிய வேலை எல்லாம் பார்த்தவள் என்று தெரிந்தால் நீங்கள் அசந்தே போவீர்கள். அவள் ஒன்றும் ஒரு



வார்த்தையில் ஒடிந்துபோய் விடமாட்டாள். துணிந்த கட்டை அவள். அவளை எல்லாம் அவ்வப்போது, இப்படி ஒரு தட்டுத் தட்டி வைக்காவிட்டால் ஒரேயடி யாக எகிறத் தொடங்கி விடுவாள்; தெரிந்து கொள்ளுங் கள்!'' என்றான் குரலில் ஓர் உதாசீனத்துடன்.

''சேச்சே. அபி. நீ நினைக்கிற மாதிரி இல்லை யடா... ரொம்ப நல்ல...''

மீண்டும் தாயின் பேச்சில் குறுக்கிட்டான் தனஞ் சயன். ''அம்மா, இந்தப் பேச்சு இத்தோடு போதும்'' என்றான் கடுமையான குரலில். ''அபரஞ்சியின் கழுத் தில் தாலி கட்டிய கணவன் நான். என் மனைவியை எப்படி நடத்த வேண்டும் என்று எனக்குத் தெரியும் இதில் நீங்கள் தலையிட வேண்டாம்'' என்று அதே குரலிலேயே அவன் முடித்துவிட, உரத்த குரலுக்கு அடங்கியே பழக்கப்பட்டுப் போன சரளாவும் அதற்கு மேல் பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்.

அறைக்குள் வந்ததும் ஆசையாக அணைக்க முற் பட்ட கணவன், அடுத்த பத்து நிமிடங்களில் பேசிய விதம் அபரஞ்சியின் மனதை மிகவும் பாதித்து விட்டிருந் தது.

பெற்றவளைப் போன்றே பரிவும் பாசமும் காட்டும் சரளாவின் முகத்தைப் பார்த்துப் பேசக் கூட அவளது மனநிலை இடம்தரவில்லை. நல்லவேளையாகப் படிக்க வேண்டியது இருந்ததால், கலைவாணி பாடத்தில் இறங்கி விட மெல்ல வெளியே வந்து வீட்டைச் சுற்றிலும் இருந்த பரந்த தோட்டத்தில் ஆங்காங்கே போடப்பட்டிருந்த கல் பெஞ்சுகளில் ஒன்றில் சோர்ந்த மனதுடன் அமர்ந்திருந் தாள் அவள்.

தனஞ்சயன் ஏன் அப்படிப் பேசினான்? அதுவும், இதேமாதிரியான தந்தையின் பேச்சுக்கு அவ்வளவு ஆத்திரப்பட்டவன்?

அவளுக்குப் பதிலே போலத் தாயும் மகனும் பேசிய பேச்சு முழுமையும் அவள் காதுகளில் தெளிவாக விழுந்தது. விழுந்த அளவில் அவள் இன்னமும் அதிகமாக இடிந்து போனாள்.

சரளா கூறியதை வைத்து, பரிவும் பிரியமுமாக ஒரு கணவனையல்லவா அபரஞ்சி சித்தரித்து வைத்திருந்தாள்! அவனது பரிவெல்லாம் அவனுடைய தாயாருக்கு மட்டுமேதானா?

தந்தை, பாட்டனுடைய வாரிசு என்றானே! இது போலப் பேச்சுகள், எத்தனை அவளால் தாங்க முடியும்?

மனைவியைப் பற்றிப் பேசும்போது, தனஞ்சயனின் குரலில் இருந்த உதாசீனம் அபரஞ்சியை ரொம்பவுமே நோகச் செய்தது.

இந்தக் காலப் பெண் என்றால் அவளிடம் மென்மையே இராதா? மோப்பக் குழையும் அனிச்சமாக அவள் இல்லாதிருக்கலாம். ஆனால் அவள் மனம் கல்லால் வடித்ததும் அல்லவே! இதுபோன்ற வார்த்தைகள் எத்தனை தாங்க முடியும்?

என்ன என்ன என்று தவித்தவளுக்கு ஆறுதலாக ஒன்று தென்பட்டது. உலகநாதனை உசுப்பிவிடும் வசந்தா போலத் தனஞ்சயனுக்கு யாரும் இல்லை. சரளா, கலைவாணி இருவருமே அபரஞ்சியிடம் அன்புள்ளவர்கள்!

மூட்டிக் கொடுக்க ஆள் இல்லாத நிலையில், அபரஞ்சி அன்பு காட்டினால், அன்பு காட்ட முயன்றால்,



தனஞ்சயனின் இந்த ‘வாரிசு புத்தி’யை விரட்டிவிட முடியாதா?

முயன்று பார்க்க முடிவு செய்தாள் அபரஞ்சி.

## 5

இல்லறம் என்பது ஜோடிக் காளைப்பூட்டிய வண்டி மாதிரி என்பார்கள். வண்டி நல்லபடியாக ஓடவேண்டுமானால், இரண்டு காளைகளுமேதான் வண்டியை இழுத்துச் சென்றாக வேண்டும், மாறாக, ஒரு மாடு மட்டும் முயன்றால் என்ன நடக்கும்?

அபரஞ்சியின் முயற்சிகளும், அப்படித்தான் பயனற்றுப் போயின. சுருக்சுருக்கென்று குத்திய எத்தனையோ வேதனைகளை உள்ளேயே மறைத்து, இன்முகத்தோடு அவள் ஓடி ஓடி உழைத்ததெல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போல வீணாகித்தான் போயின.

தனஞ்சயனுக்குப் பிடித்தமான உணவுப் பதார்த்தங்களைச் சரளாவிடம் கேட்டறிந்து, அவற்றின் செய்முறைகளையும் அவளிடமே பயின்று அபரஞ்சி ஆர்வத்தோடு செய்து வைப்பாள். வீட்டில் உள்ள அத்தனை பேரும் பாராட்டி இரு மடங்கு உண்டாலும், அவன் வாயிலிருந்து மட்டும் நன்றாயிருக்கிறது என்று ஒரு முத்துகூட உதிராது. குறைந்தபட்சமாய்த் ‘தாளிப்பில் கடுகு கொஞ்சம் அதிகம்’ என்ற குற்றச்சாட்டு மட்டுமே கேட்கும். சிறுவாய்ப்பு கிடைத்தாலும் ‘‘செய்யத் தெரியாது என்றால் சும்மா இருப்பதுதானே? வழக்கம் போல அம்மாவே பண்ணிவிட்டுப் போகிறார்கள். நாங்களும்

கொஞ்சம் நிம்மதியாகச் சாப்பிடுவோம்'' என்பான். கடுமையான குரலில்.

சுற்றுவேலை தவிர, அடுப்படியில் தானாக எதை யும் செய்யும் துணிவே அபரஞ்சிக்கு அற்றுப் போயிற்று.

இரவில் ஆசையாகத்தானே இருக்கிறான் என்று சற்று அலங்காரம் பண்ணிக் கொண்டு நின்றால், கண் ணில் பட்ட மாதிரியே இராது. நிமிர்ந்து அவளைப் பார்ப்பதுகூட இல்லாது போய்விடும். அந்த அலட்சி யத்தை விழுங்கி கொண்டு, ''திருச்சிக்குப் போனால், கொண்டைச் சரமாகக் கட்டிய மல்லிகை வாங்கி வருகிறீர் களா?'' என்று கொஞ்சலாகக் கேட்டுப் புன்னகை காட்டு வாள் அவள்.

''போகிற இடத்தில் எல்லாம் பெண்டாட்டிக்குப் பூ, காய், பழம் என்று வாங்கிவர நான் என்ன பெண்டாட்டி தாசனா? முடியாது. போ'' என்று முகத்தில் அடித்தாற் போலப் பதில் வரும்.

அல்லது, ''இந்த மாதிரி தளுக்காக டிரஸ் பண்ணிக் கொண்டு, பூவையும் வைத்துக் கொண்டால் என்னை மயக்கி விடலாம் என்று நினைத்தாயா? அதற்கெல்லாம் நீ வேறு ஆள் பிடித்திருக்க வேண்டும்'' என்று தனஞ் சயன் கூறும் போது, அபரஞ்சிக்கு மனம் செத்துவிடும்.

இவன் என்ன, புரிந்துதான் சொல்கிறானா? வேறு ஆள் பிடித்திருக்க வேண்டும் என்று மனைவியிடம் சொல்வது எவ்வளவு அசிங்கம் - அவனுக்குமே தான் அது எவ்வளவு கேவலம் என்று அவனுக்குத் தெரியவே இல்லையா என்று உள்ளூரக் குமுறுவாள். கணவன் முகம் பார்க்கவே வெறுத்துப் போகும்.



பெரும்பாலும் தாயாரைப் பெண்கள் பின்பற்றுவது போல, இவன் அப்பாவைப் பின்பற்றும் ஆசையில் கொஞ்சம் அசட்டுத்தனமாகப் பேசுகிறான். அவ்வளவு தான் என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொள் வாள்.

'ராபர்ட் ப்ரூசும் சிலந்திப் பூச்சியும்' கதையை நினைத்துக் கொள்வாள். பல முறை தோற்று ஓடிய கஜினி முகம்மது விடாமல் முயன்று வெற்றி பெற்ற சரித்திரத்தை எண்ணிப் பார்ப்பாள். தோல்வியின் கசப்பை ஒதுக்கி விட்டு மீண்டும் கணவனை அணுக முயற்சி செய்வாள்

தனிப்பட்ட விஷயங்களை விட்டுவிட்டு, ஏதாவது பொது விஷயம் பற்றிப் பேச்சுக் கொடுத்தால் இருவருக் கும் இடையே நட்பு மலரக் கூடுமே என்று பறவை, மரம், செடி, கொடி என்று பேசுவாள். ஆனால் குத்த வேண்டும் என்று நினைத்துவிட்டால் எதில்தான் அதற்கு வழி கண்டுபிடிக்க முடியாது?

ஏதோ ஒரு செடியைப் பற்றிச் சொல்லும்போது ''அதன் மொட்டு விரியும் போது ஒவ்வொரு நாளும் வண்ணம் மாறுவதைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு நிறமுமே அழகாக இருக்கும். அடர் சிவப்பு, சிவப்பு, இளம் சிவப்பு என்று மூன்று நிறங்களுமே எனக்கு மிகவும் பிடிக்கும்'' என்று அவள் உற்சாகமாக வர்ணித்தாள்.

கூடச் சேர்ந்து அவனும் சற்றுநேரம் இலகுவாகப் பேசிக் கொண்டிருந்த சந்தோஷம் அவளுக்கு. ஆனால் திடுமென தனஞ்சயன் ''என்ன பேராசை!'' என்று இளக் காரமாக உரைக்கவும் திகைத்து விழித்தாள்.

தொடர்ந்து, ''புரிகிறது, நன்றாகப் புரிகிறது. இதைப் புரிந்து கொள்ளக் கூடத் தெரியாத மட்டி அல்லவே,

நான். நீங்கள், இன்னின்ன நிறம் அழகாக இருக்கும் என ஜாடையாய்ச் சொல்லுவீர்கள்! உடனே நாங்கள், குறிப்பு உணர்ந்து, அந்தந்த நிறங்களில் சேலை, சுரிதார் வாங்கிக் கொடுக்க வேண்டுமாக்கும்; இந்தக் கள்ளத்தனம்தானே எனக்கு அறவே பிடிப்பது இல்லை! சே! இந்தப் பெண் களே இப்படித்தான்! எந்நேரமும் சேலை, நகை என்று அதிலேயே குறி!'' என்று அவன் அநியாயமாய்க் குற்றம் சாட்டியபோது அபரஞ்சியால் தாங்க முடியாது போயிற்று.

''உங்கள் அம்மாவும் ஒரு பெண்தான் என்பதை மறந்து போகிறீர்கள்!'' என்றாள் அவள் பதிலுக்கு.

''எல்லாப் பொது விதிகளுக்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. என் அம்மா அப்படிப்பட்ட விதிவிலக்கு'' என்று அவன் திருப்பிக் கொடுக்கவும் அபரஞ்சி கணவனை வெறித்து நோக்கினாள்.

கேட்கலாம். 'உன் தங்கை பெண்ணில்லையா' என்று இன்னொரு கேள்வி கேட்கலாம். அவள் என் அம்மாவின் அச்சுப் பிரதி என்பான். கஸ்தூரிபாய், இந்திரா காந்தி, அன்னை தெரசா என்று அடுக்கலாம். அடுக்க, அடுக்க, அவனும் அவர்கள் ஒவ்வொருவருக் கும் ஒவ்வோர் இலக்கணம் கூறுவான். என்ன சொல்லி என்ன? எல்லாம் கூட்டிக் கழித்தால், 'நீ மட்டம், நான் உன்னை மதிக்கவில்லை' என்கிற ஒரே விடைதான் வரும்.

அலுத்துப் போயிற்று அவளுக்கும்.

என்ன செய்தாலும் தப்பு என்றால் வேறு என்ன ஆகும்? அலங்கரித்துக் கொண்டால் மயக்கப் பார்க் கிறாள்; சும்மா இருந்தால் கைகேயி வேஷம்! வாயைத்



திறந்தால் ஒவ்வொரு வார்த்தைக்கும் விபரீதமான ஓர் அர்த்தம்.

குத்துப்பட்டுக் குத்துப்பட்டு நெஞ்சம் பொத்துப் போய்விட, அலுத்து சலித்துப் போன அபரஞ்சி, முடிந்த அளவு கணவனை விட்டு ஒதுங்கிப் போகத் தொடங்கி னாள்.

இந்த வீட்டை விட்டே போய்விடலாமா என்று கூடப் பலமுறை சிந்தித்தாள்.

ஆனால் எங்கே போவது?

தந்தை வீட்டுக்குப் போனால், அங்கே அவளை அணைத்து ஆறுதல் தர அன்னையா இருக்கிறாள்? பழைய மாதிரி, வேலைக்காரி துணையுடன், மொட்டு மொட்டென்று தனியாக இருக்கவேண்டும். தொழில் தொழில் என்று காலையில் சீக்கிரமாகச் சென்று, இரவு தாமதமாகத் திரும்பிவரும் தந்தையை எதிர்பார்த்துக் காத்திருந்து கொண்டு ''ஏனம்மா எனக்காக விழித்திருக் கிறாய், போய்ப்படு, எனக்குக் கொஞ்சம் பேப்பர் வேலை இருக்கிறது'' என்று அப்போதும் ஃபைலில் மூழ்கி விடும் தந்தையோடு நாலு வார்த்தை தொடர்ந்து பேசக்கூட முடியாமல்... பெரியப்பா வீடு, சித்தப்பா வீடெல்லாம் அன்றைய இழப்புக்கு மருந்தாகவும், உற் சாகமாகக் கலந்து உரையாடி விளையாட விருந்தாகவும் மட்டுமே பயன்பட வேண்டியவை. பிரியமானவர்கள் தான், ஆனால், மணவாழ்வு சரியில்லை என்று கண வனைப் பிரிந்து சென்று அங்கே இருப்பது சரியாகாது!

இங்கேனும் மாமியார், நாத்தனார் என்று அன்புள்ள - அவளிடம் மிகுந்த அன்புள்ள இருவர் இருக்கிறார்கள்.

அவர்களின் அன்பு, அவளது புண்ணுக்குத் தடவும் புனுகாகி விட, முடிந்த அளவு அபரஞ்சி அவர்களுட னேயே நேரத்தைக் கழித்தாள். இரவில், உறங்குவதற்கு அறைக்குள் செல்லும் சமயம் தவிர தனஞ்சயன் கண்ணில் படும் தூரத்தில் கூட அவள் நிற்பதில்லை. அப்படி ஒதுங்கிப் போனாள்.

ஆனால், அவன், அப்போதும் அவளைத் தேடி வந்து கொத்தினான்.

உலகநாதனோ, அவ்வப்போது நினைத்தால் வந்து உட்காரும் வசந்தாவோ, உலகநாதனைச் சேர்ந்த மற்ற உறவினர்களோ யாராயினும் அவரவர்கள் உண்ண வரும் நேரத்தில் சரளா சமையல் கட்டுக்கு ஓடிச்சென்று, இட்லி, தோசை, சப்பாத்தி போன்ற காலைச் சிற்றுண்டி களையும், வடை, பஜ்ஜி, பக்கோடா போன்ற மாலைப் பலகார வகைகளையும் இரவுச் சிற்றுண்டிகளையும் அவ் வப்போது செய்து சூடாகப் பரிமாறுவதைப் பலமுறை பார்த்துவிட்டு அபரஞ்சி மாமியாரிடம் அதுபற்றி விசா ரித்தாள்.

''இங்கே எல்லோருக்கும் சூடாக இருந்தால்தான் பிடிக்கும். என் மாமனார், உன் மாமனார் மற்றவர்களுக் கும் கூட அடுப்பிலிருந்து எடுத்து அப்படியே வைக்க வேண்டும். 'சுடச் சுடப் போடப் போட' என்பார் உன் மாமா. கொஞ்சம் ஆறிவிட்டாலும் பயங்கரக் கோபம் வரும்'' என்றாள் சரளா.

''ஆளாளாகக் கண்ட கண்ட நேரத்தில் வரும்போ தெல்லாம் அடுப்பைப் பற்ற வைத்துக்கொண்டு நிற்பது கஷ்டமாக இல்லையா, அத்தை?'' என்று பரிவுடன் அபரஞ்சி வினவினாள்.



''இப்போது பழகிவிட்டது. ஆனால் முதலில்தான் மிகவும் சிரமப்பட்டேன். ஒன்று சொல்லட்டுமா, அபி? இப்போது அதை நினைத்தால் சிரிப்புகூட வருகிறது. ஆனால் அப்போது மிகவும் வேதனையாக இருந்தது! எனக்குத் திருமணமான புதிது. மூன்றாவது நாள் என்று நினைக்கிறேன். இப்படி எல்லோருக்கும் அவரவர் வர வர - தோசை சுட்டுச் சுட்டுப் போட்டுக் கொண்டு இருந்தேன். மாமியார், மாமனார், ஒரு மைத்துனர், உன் மாமா, இன்னும் யாரோ சில விருந்தினர், வசந்தா அண்ணி.. எல்லோரும் 'சுடச் சுடப் போடப் போட' நன்றாகச் சப்புக் கொட்டிச் சாப்பிட்டார்கள். சரி, எல்லோ ருக்கும் சுட்டுப்போட்டால், கடைசியில் நமக்கும் யாரா வது - அண்ணியோ, அத்தையோ சுட்டுத் தருவார்கள் என்று பார்த்தால், கடைசியாகச் சமையல் அறையில் நான் மட்டுமாய்த் தன்னந்தனியே நிற்கிறேன்!

''உண்டு முடித்தவர்கள் எல்லோரும் முன் அறை யில் ஒரே கும்மாளம்! நம் வீட்டு அடுப்படிக்கோ வேலையாள் வரக்கூடாது.

''என்ன அர்த்தம் சொல்லு? சுவையாகச் சாப்பிடும் உரிமை அவர்களுக்கு மட்டும்தான். 'சுடச் சுடப் போடப் போட' என்று அதற்கு அவ்வளவு முக்கியம் கொடுப்பார் கள். வீட்டுக்கு வந்த புது மருமகள் - அவ்வளவு நேரம் அவர்கள் எல்லோருக்கும் அப்படிச் சுட்டுக் கொடுத்த வள் - நானும் அப்படிச் சாப்பிட வேண்டும் என்று அவர்களில் ஒருவர்கூட நினைக்கவில்லை. பார்! 'நீயும் சாப்பிடு' என்று கூட யாரும் சொல்லவில்லை. உன் மாமாகூட, முதல் முதலாக எனக்குக் கசப்பு தோன்றியது அன்றுதான். நான் மட்டும் என்ன, இந்த வீட்டில் இரண்

டாம் தரக் குடிமகளா, என்ற ஆத்திரத்தில் அன்றைக்கு நான் சாப்பிடவே இல்லை. ஆனால். 'கும்பி காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்' என்பதற்கிணங்க, நாளாவட்டத்தில், இதுபோன்ற அலட்சியங்களைச் சகித் துச் சாப்பிடத் தொடங்கிவிட்டேன்... ஆனால், இப் போது, நீ வந்த பிறகுதானம்மா நானும் சூடாகத் தோசை யெல்லாம் சாப்பிடுகிறேன்...'' என்ற மாமியாரைப் பார்க்க அபரஞ்சிக்குப் பாவமாக இருந்தது.

''எப்போதும் உங்களுக்கு மட்டும் நானே எப்போ தும், எல்லாம் சூடாகச் செய்து தருவேன், அத்தை'' என்றவள், ஆனால் இப்படி ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக ஓடி ஓடிச் செய்து கொண்டு இருப்பதற்குப் பதிலாக, மொத்தமாய் செய்து 'ஹாட் பேக்' எதிலாவது வைத்துவிட்டால் என்ன அத்தை? வீண் அலைச்சலும் வேலையும் மிச்சமாகுமே'' என்று யோசனை தெரிவித் தாள்.

அதையே செயலாக்குவதற்காகத் திருமணப் பரி சாக வந்த பெரிய 'ஹாட்பேக்' ஒன்றை எடுத்து, அதில் சப்பாத்திகளைச் செய்து வைத்து, சூடாகப் பரிமாறவும் செய்தாள்.

ஆனால், சப்பாத்திகள் தட்டில் விழுந்த வேகத்தைக் கண்டு ஐயத்துடன் விசாரித்து, விவரம் அறிந்த தனஞ் சயன், ''இந்தச் சிறுவேலை கூடச் செய்யாமல்... பிறகு நீ எதற்கு இங்கே இருக்கிறாயாம்?'' என்று ஏளனமாகக் கேட்டான். ''இப்படிச் சுருக்கு வழியில் வேலையை முடித்து விட்டால், பிறகு தின்ற சோறு செரிக்க நீ என்ன செய்வாய்? மலைப்பாம்பு போல் தரையில் கிடந்து புரளுவாயா?''



என்னவோ பெரிய நகைச்சுவையைக் கண்டு விட் டாற்போல், மற்ற அனைவரும் நகைக்க, அதிலும், வசந்தா விழுந்துவிழுந்து சிரிக்க, மூன்று பெண்களும் முகம் கன்றிப்போயினர்.

அபரஞ்சிக்கு அடியோடு மனம் கைத்துப் போனது அன்றுதான்.

பகலில் எல்லோர் முன்னிலையிலும் அவமானப் படுத்திவிட்டு, இரவில் மட்டும் அணைக்க முன்வந்தால், அபரஞ்சியால் - அதை ஏற்க முடியாது போயிற்று.

வெறுப்புடன் விலகியவளை ஆத்திரமாக நோக்கி அவள் கணவன் சொன்னான். ''இதோபார், இந்த வீட் டில், நீ எதற்காக இருக்கிறாய் என்று நினைத்தாய்? வீட்டில் நீங்கள் நுழைவதே இதை வைத்துத்தான், முரண் டினால் உன் காலடியில் விழுந்து கெஞ்சுவேன் என்று நினைத்தாயா? இந்த சுகம் தருவதற்கென்று உங்கள் இனத்தில் ஒரு கூட்டமே இருக்கிறது, தெரியுமா? அங்கே போய்க் கொள்ளுவேன்; போகட்டுமா? என்ன சொல்லு கிறாய்?'' என்று தனஞ்சயன் கேட்கவும் அபரஞ்சி முழுமையாக நொறுங்கிப் போனாள்.

மேலே அவள் மறுக்கவில்லைதான். ஆனால், கண வனின் அருகாமை அவளுக்கு அருவருத்துப் போயிற்று. முன்பு அவனது அணைப்பில் பாதுகாப்பாக உணர்ந்தது அடியோடு மாறி, அவள் மனம் அமைதி அழிந்து தவித்தது. ஆழ்ந்து உறங்கக் கூட அவளால் இப்போது முடியாது போயிற்று.

நிம்மதியற்ற தூக்கமும் அடிக்கடி கலைந்தது. மீண் டும் துயில் கொள்ள முடியாமல் வெகுநேரம் விழித்தே கிடப்பதும் வழமை ஆயிற்று.

அப்படி விழித்துக் கிடக்கும்போது, பல முறை, தனஞ்சயன் எழுந்துசென்று, வெளிப்புறமாய் நின்று, புகைப்பிடித்து விட்டு வந்து படுப்பதையும் காண நேர்ந் தது.

அப்போதெல்லாம், 'எனக்குத்தான் வேதனை! உனக்கென்ன, வெற்றிக் களிப்பில் உறக்கம் பிடிக்கவில் லையாக்கும்?' என்று வெறுப்புடன் எண்ணியபடி அசை யாமல் கிடப்பாள் அபரஞ்சி.

இந்த மனநிலையில் இருக்கும்போதுதான் அபரஞ்சி கருவுற்றாள்.

சரளாவுக்கு மனம் கொள்ளாத மகிழ்ச்சி! கலை வாணிக்கும் அப்படியே! ''நான் அத்தையாகி விடுவேன்; இல்லையாம்மா?'' என்று ஆனந்தப்பட்டாள். உலகநாத னும் ''நம் வீட்டு வழக்கப்படி முதலாவது ஆண் குழந்தை யாகப் பெற வேண்டும்' என்றார். என்னவோ அது அவள் கையில்தான் இருப்பதுபோல. ''ஒரே இடத்தில் உட்கார்ந்து இராதே, ஓடியாடி வேலை செய்தால் தான் பிரசவம் எளிதாக இருக்கும்!'' என்று இதுசம்பந்தமாகத் தன் அறிவுப் புலமையையும் காட்டிக் கொண்டார்.

''குழந்தை பிறக்கிற சமயம் எனக்குத் தகவல் தெரிவியுங்கள், அண்ணா, பேறு காலம் பார்க்க வந்து சேருகிறேன். அங்கேதான் அவள் வீட்டில் பெற்றவள் என்று ஒரு நாதியும் இல்லையே! இங்கும் உங்கள் பெண்டாட்டிக்கும் ஓர் இழவும் தெரியாது... ஊர் உலகம் எப்படியோ, உங்களோடு பிறந்த கடன் எனக்கு விடுமா? புருஷன் சரியில்லாதவள் நான்; காசு பணமா கொடுக்க முடியும்? அல்லது அப்படித் தேவை உங்களுக்குத்தான் உண்டா? ஏதோ, என்னால் உடம்பால்தான் உழைக்க



முடியும்! என்னண்ணா நான் சொல்வது சரிதானே?... அண்ணா, அங்கே என் வீட்டுப் பக்கம் திருட்டுப் பயம் ரொம்பவும் அதிகமாகிவிட்டது. வீட்டுக்கு முன்னும் பின்னும் இரும்பில் 'கிரில்' கதவு போட்டு விடலாம் என்று பார்க்கிறேன்... பணம்தான் ஓர் ஐயாயிரம் ரூபாய் வேண்டும் அண்ணா! அவசரத்துக்குத் தந்தால் பிறகு எப்படியாவது திருப்பி விடுகிறேன்'' என்று சந்தடி சாக்கில் பணத்துக்கு அடிபோட்டு அண்ணனிடம் அதைப் பெற்றுக் கொண்டு போனாள்.

இப்படி ஆளாளுக்கு ஓரோர்விதமாய் ஏற்க, முக்கி யமாக உற்சாகக் கூத்தாட வேண்டிய சதிபதிகள் இரு வருக்கும் அப்படி ஓர் உணர்வு இருந்ததாகவே தெரிய வில்லை.

ஓர் ஆராய்ச்சிப் பார்வையோடு தனஞ்சயன் வில கிப் போனான். வேறு எதற்கும் அவனுக்கு நேரமும் இல்லை. அவனது ஏற்றுமதி வேலை மிகவும் நெருங்கி வந்து கொண்டிருந்தது. அதே வேலையாக அலைந்து கொண்டிருந்த அவனுக்கு வேறு எதுவும் - பிள்ளைகூடப் பெரிதாகத் தோன்றவில்லைபோலும். அபரஞ்சியோ ஒன் றையும் உணரமாட்டாதவளாக இருந்தாள்.

## 6

அபரஞ்சிக்குத் தான் கருவுற்று இருப்பது பற்றி முதலில் ஒன்றுமே தோன்றவில்லை.

இல்லறம் இனிமையான நல்லறமாக இருந்திருக்கு மானால், அதன் வெற்றிக்கனி என்று இந்தக் குழந்தை

யைக் கொண்டாடத் தோன்றியிருக்கும் அவளுக்கு. ஆனால், மனம் கசந்துவிட்டபடியால், அவளுக்கு அந்த மாதிரி மகிழ்ச்சி ஏதும் ஏற்படவில்லை.

'திருமணம் ஆகிவிட்டால் குழந்தை பிறப்பது இயற்கை அதுபோல, இந்த வீட்டில், நானும் குழந்தை பெறப் போகிறேன்; அவ்வளவுதானே?' என்று அலுப்பு டன் தான் நினைத்தாள்.

ஏனெனில், அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போவதால் தன் வாழ்வில் பெரிய மாற்றம் எதுவும் நிகழக்கூடும் என்று அபரஞ்சிக்குத் தோன்றவில்லை. அதேவீட்டில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றவள்தான் அவளுடைய மாமியார் சரளா! தாயானதால் அப்படி அவளுக்கு என்ன பெரிய மதிப்பு, மரியாதை கிடைத்து விட்டது? கணவன், நாத்தனார் இருவருக்குமே அவள் கிள்ளுக்கீரை தான். இப்படித்தானே தன் நிலைமையும் இருக்கப் போகிறது? இதில் மகிழ்ச்சி அடைய என்ன இருக்கிறது? என்று வெறும் சலிப்பு மட்டும் தான் அவளுக்கு உண்டாயிற்று.

நான்கு மூலைகளிலும் மஞ்சள் தடவிய கடிதத்தைப் படித்துவிட்டு, ஜெயபாண்டியன் வந்து மகளைப் பார்த்து விட்டுப் போனார். ஐயாயிரம் ரூபாயைக் கொடுத்து, வேண்டியதை வாங்கிக் கொள்ளும்படி கூறிச் சென்றார். என்ன வாங்குவது என்று யோசிக்கக் கூடப் பிடிக்காமல் அதையும் அலுப்புடனேயே அலமாரியுள் போட்டு வைத் தாள் அபரஞ்சி.

சும்மாவே உற்சாகமற்று இருந்தவளுக்குத் தலை சுற்றல், வாந்தி என்ற இயற்கை உபாதைகள் தோன்றித் தாக்கவும், இது வேறு தேவைதானா என்று வெறுப்புதான் உண்டாயிற்று.



தனஞ்சயனின் ஏற்றுமதி விவகாரத்தைக் கவனிக்க வசதியாக, வீட்டில் ஒரு கம்ப்யூட்டரும், ஃபேக்ஸ் மிஷி னும் குடியேறின.

டன் கணக்கில், ஏற்றுமதிக்கான அரிசியைப் பதப் படுத்தி, அரைத்து, உமி பிரித்து, சிறு சிறு அறைகளில் பாக்கெட் போட்டு... என்று பார்ப்பதற்கு தனஞ்சயனுக்கு வெளி வேலையே சரியாக இருந்தது.

கூடவே, ஃபேக்ஸ் சேதிகளைப் பெறுவது, பதில் தருவது, கம்ப்யூட்டர் ஃபீட் பண்ணுவது, தகவல் அறி வது என்று வீட்டிலும் பல வேலைகள் இருந்தன.

அபரஞ்சி கம்ப்யூட்டர் கல்வி கற்றவள்; அவளே கம்ப்யூட்டரையும், ஃபேக்சையும் கையாள முடியும் என் பதால்தான், தனஞ்சயன் அவற்றை வீட்டில் வைத்ததே. எனவே, ''இதைக் கொஞ்சம் பார்த்து வைப்பதற் கென்ன? வீட்டில் மூன்று வேளை மொக்கிக் கொண்டு சும்மாதானே கிடக்கிறாய்?'' என்று அவளிடம் எரிந்து விழுந்தான். அவள் தானாக வந்து செய்யவில்லை என்கிற கோபம் அவனுக்கு.

தலைசுற்றித் தரையில் அமர்ந்திருந்த அபரஞ்சி உதடோரம் பற்களை அழுத்தியபடி சிரமத்துடன் எழவும் பொறுக்கமாட்டாமல், சரளா மகனை அழைத்தாள்.

''சும்மா கிடக்கிறாளா? என்னடா உளறுகிறாய்? அவள் உண்டாகி இருப்பது நினைவில்லை?'' என்று அதட்டினாள்.

''ஏன் இல்லாமல்? திவ்வியமாய் நினைவு இருக் கிறது. மறக்க விட்டால் தானே?'' என்று அலட்சியமாக மொழிந்தான் மகன்.

''உங்கள் மருமகள் கருவுற்று இருப்பது என்னம்மா, உலக மகா சாதனையா? அல்லது அதனால் அவளுக்குக் கைகால் முடங்கி நடக்கக் கொள்ள முடியாமல் போய் விட்டதா?''

''என்னடா, இப்படிப் பேசுகிறாய்?'' என்றாள் தாயார் அயர்ந்து போய், வருத்தத்துடன்.

''என்னம்மா பின்னே? இவள் என்ன, குழந்தை தானே உண்டாகியிருக்கிறாள்? என்னமோ பெரிய நோய் வந்து, நடக்கத் திராணியற்றுப் போய்விட்ட மாதிரியல்லவா நடத்துகிறீர்கள்?''

''அவளுக்கு மசக்கை, கண்ணா, பாவம்! தலை சுற்றல், வாந்தி என்று...''

''என்ன தலைசுற்றல்? என்ன வாந்தி?'' என்று தனஞ்சயன் சிடுசிடுத்தான். ''ஆடு குட்டி போடுகிறது; மாடு கன்று போடுகிறது; அதெல்லாம் இப்படியா தலை சுற்றல் வாந்தி என்று விழுந்தடித்துப் படுத்துக் கொள்கின் றன? இல்லையே? அது போலவே, ஒரு பெண் கருவுறுத லும் ஓர் இயற்கை நிகழ்ச்சிதான் அம்மா. அதுபாட்டில் அது என்று சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும், வாயால் பேசத் தெரிந்ததாலேயோ, என்னவோ பெரிய மலையைத் தூக்கிக் கொண்டு இருப்பதுபோல, 'ஹா ஹூ' என்று அலட்டிக்கொள்வதும், கிடைத்தது சாக்கு என்று சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்துக் கொள்வதும் பார்க்க சகிக்கவில்லையே!'' என்று பெரிதாகப் பேசி தாயின் வாயை அடைத்தான் மைந்தன்.

அப்போதுதான் வயிற்றிலிருந்து குடலே வெளி வந்து விடும்போல வாந்தி எடுத்து விட்டு வந்து சோர்ந்து போய் வந்து உட்கார்ந்திருந்தாள், அபரஞ்சி. கணவன், அவனுடைய தாயிடம் கூறுவது போல் தன்னை இகழ் வதை உணர்ந்து ரோஷத்துடன், எழுந்து நடந்தாள். நடக்கையில் அவளது கால்கள் வெடவெடத்தன. தலை எங்கோ பறந்தது. பிடிவாதமாய் நடந்து சென்று கம்ப்யூட டரின் முன் அமர்ந்து கீபோர்டைக் கையாளத் தொடங்கி னாள்.



என்றைக்கு ஆடு மாடுகள் ஈனுதலையும், மனைவி கருவுற்றதையும் சேர்த்து எல்லாம் ஒன்றுதான் என்று தனஞ்சயன் சொன்னானோ, அன்றிலிருந்து மனதின் உறுதியினாலேயே, அபரஞ்சி வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள். முதலில் அவன் ஏவிய, துணி துவைத்தலைக் கூட விடவில்லை. சரளா எவ்வ ளவோ தடுத்தும், அபரஞ்சி அவள் பேச்சைக் கேட்பதா கவே இல்லை.

உடல் உபாதைகளையும், உண்ண முடியாமல் வந்த பலவீனத்தையும் பல்லைக் கடித்து சமாளித்தபடி, அவள் வேலைகளைச் செய்து முடித்தபோது, அவள் மனதில் வெறுப்பும் வேதனையும் தவிர வேறு எந்த உணர்வுக்கும் இடமில்லாது போயிற்று. அவை வளர்ந்து கொண்டும் போயின.

அவளுக்கு ரொம்பவும் சோர்வாயிருக்கும்போது கைகளில் தலையைத் தாங்கிச் சற்றுநேரம் கண்மூடி அமர்ந்திருப்பாள். சோர்வு மாறியதும் மீண்டும் வேலை யைத் தொடங்குவாள்.

அப்படி அவள் உட்கார்ந்திருந்ததை ஒருதரம் தற் செயலாகக் காண நேரிட்ட தனஞ்சயனுக்குத் தன்னை மீறி நெஞ்சைச் சுட்டது. மெய்யாகவே இவளுக்கு முடிய வில்லையோ?!

பாவம்தான் என்று அவன் உருகிக் கொண்டிருந்த போது, கையில் ஹார்லிக்சுடன் அவனுடைய தாயார் வந்தாள். ''இந்தாடா, செல்லம், இதைக் குடித்துவிட்டு வேலையைப் பார், கண்ணு! அவனுக்கென்ன, வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று கண்டபடி உளறிக் கொட்டி விட்டான்! அதற்காக நீயும் உடம்பு நோக இவ்வளவு செய்ய வேண்டுமா? வேண்டாம் என்று சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறாயே!'' என்று பரிந்து வருந்தினாள்.

தாயாரின் பாசப்பராமரிப்பைக் காணவும் சட்டெனத் தனஞ்சயினின் மனம் வக்கரித்துக்கொண்டது.

செய்யட்டும், கொஞ்சம் கஷ்டப்பட்டால் அப்படி என்ன பெரிய பாவமாகி விடும்? ஏன்? அன்று, அவள் செய்த அநியாயம்? அதற்குத் தண்டனையும் தேவை தானே? கொஞ்சமாவது படட்டும்!

வந்த சுவடு தெரியாமல், வெளியேறிச் சென்று விட்டான் தனஞ்சயன்.

சரளாவைப் போலவே, அபரஞ்சி இதுபோல அதிக வேலை செய்வது வசந்தாவுக்கும் பிடித்தமாக இருக்கவில்லை. ஆனால், பிடிக்காததன் காரணம் தான் வேறு.

வசந்தாவுக்கு தன் மகள் இருந்து கோலோச்ச வேண்டிய இடத்தில் வந்து, அழுத்தமாக அமர்ந்து கொண்ட அபரஞ்சியை முதலில் இருந்தே பிடிக்கவில்லை. தன் பூரணியைவிட அபரஞ்சி அழகு, படிப்பில் சிறந்திருந்ததும் அவளுக்கு மிகுந்த வெறுப்புதான். அண்ணன் மகன், மனைவியை அவ்வப்போது மட்டம் தட்டிப் பேசுவது அவள் காதுகளில் தேனாகப் பாய்ந்தபோதும், அவள் கருவுற்றதும் பேரக் குழந்தை ஆவலில் அண்ணன் உலகநாதன் மருமகளிடம் பாசம் காட்டத் தொடங்கியதும் அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.



ஒருவேளை, மசக்கை வாந்தி அது இது என்று, சுருண்டு படுத்துக் கொண்டு, மாமனாருக்கு வழக்கமாகச் செய்யும் வேலைகளை அபரஞ்சி செய்யாமல் விட்டிருந்தால், தன் சுகத்தை மற்ற எல்லாவற்றையும் விடப் பெரிதாகக் கருதும் வழக்கமுள்ள உலகநாதன் மருமகளிடம் கோபமே கொண்டிருக்கக் கூடும். ஆனால், அவளோ முன்னிலும் அதிக வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்யவும் அந்தக் கோபத்துக்கு வாய்ப்பில்லாது போயிற்று.

காலையில் அவர் பல்துலக்கி வரும்போதே சூடாக நுரைபொங்கக் காபி கொணர்ந்து கொடுப்பதிலிருந்து, குளித்து முடிக்குமுன் பூஜை அறை சுத்தம் செய்து விளக்கேற்றி வைப்பது, பூஜை முடித்து வரும்போது இலை போட்டு வியஞ்சனங்களைப் பரிமாறிவிட்டு, சரளா சுட்டுத்தரத்தர சிற்றுண்டி வகைகளைச் சூடாகக் கொணர்ந்து கொடுப்பது, தோல் சீவிப் பழங்கள் வெட்டி வைப்பது, கூடுதல் வேலையாகக் கணவன் துணியோடு, மாமனாரின் சட்டை வேட்டிகளையும் இஸ்திரி போட்டுக் கொடுப்பது என்று அவருக்கு வேண்டியது எல்லாம் அவள் செய்யவும், வசந்தாவுடைய அசட்டு அண்ணனுக்கு உச்சி குளிர்ந்து போய்விட்டது.

அதற்குமேல் அந்த மாய்மாலக்காரி காலையிலேயே குளித்து முழுகி அழகாகப் பொட்டிட்டு, சிங்காரம் செய்துகொண்டு வந்ததும் - முடியுமா ஒருத்தியால்? இதுபோன்ற சமயத்தில் வசந்தா பதினோரு மணிக்குமுன் படுக்கையை விட்டு எழுந்ததே கிடையாது. இந்த அப

ரஞ்சி ஆறு மணிக்குள் குளித்துவிட்டே வந்து நின்றாள் என்றால் அவள் நடிக்கிறாள் என்பதற்கு வேறு ருசு எதற்கு? இந்த அண்ணனுக்கு உச்சந்தலையில் ஐஸ் மழையே பெய்ததுபோல மூளை மரத்துப் போய்விட்டது.

''மகாலட்சுமி போல இருக்கிறாய். இந்தா இதைக் காதில் அணிந்து கொள். எங்கள் அம்மாவுடையது. ஆகிவந்தது. அதன் ராசி, உனக்குப் பேறு காலம் கூட எளிதாக இருக்கும்'' என்று விள்ளாமல் விரியாமல் உனக்கு எனக்கு என்று பங்கு கூடப் பிரிக்காமல், அவர்களுடைய தாயார் அணிந்திருந்த பெரிய வைரத் தோட்டை எடுத்து மருமகள் கையில் கொடுத்து விட்டார்.

குறைத்துப் போட்டாலும் இரண்டு காரட் எடையுள்ள பழைய 'புளூ ஜாகர்' வைரம். அவளது திருமணத் தின்போது கிட்டத்தட்ட அதைப் போலவே ஒரு வைரத் தோடு போட்ட போதும், இதுவும் தனக்கு அல்லது தன் மகளுக்கு என்று ஆக்கிவிட வேண்டும் என்று வசந்தா குறிவைத்துக் காத்திருந்த நகை எங்கே மனைவிக்குக் கொடுத்து விடுவாரோ அண்ணன் என்று பயத்தில், எவ்வளவோ சிரமப்பட்டு கற்பனை செய்து, இல்லாத பொல்லாத பழியெல்லாம் சரளா மேல் சுமத்தி 'அம்மாவுக்கு அண்ணி சரியாக ஏதும் செய்ததே இல்லை; இந்தத் தோட்டை அவள் அணிந்தால் அம்மாவின் ஆத்மா சாந்தி அடையாது' என்று முத்தாய்ப்பு வைத்து, தோடு அண்ணிக்குப் போய்விடாமல் தடுத்து வைத்திருந்தாளே! கடைசியாக, இலவு காத்த கிளிபோல இவள் ஏமாந்து நிற்க, பொசுக்கென்று அந்தப் புதுச் சிறுக்கி அடித்துக் கொண்டு போய் விட்டாளே என்று எண்ண எண்ண வசந்தாவால் தாங்கவே முடியவில்லை.



இது ஒன்றுமட்டுமல்ல, இன்னமும்கூட இந்த அண்ணனின் தலையைத் தடவிப் பிடுங்க வேண்டியது நிறைய உண்டு. எல்லாவற்றையும் இந்த மருமகள் பிசாசு அடித்துக் கொண்டு போய்விடக் கூடாதே என்று அதுவேறு கவலை வசந்தாவுக்கு மலையாய் வளர்ந்து கொண்டே போயிற்று.

எனவே, இதையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. மருமகளைப் பற்றி உலகநாதனின் நல்ல அபிப்பிராயம் மாற வேண்டும்.

உலகநாதன் ஒன்று நினைத்துவிட்டால் அதை மாற்றுவது கடினம்; முடியாது என்றே சொல்லலாம்.

அவருடைய திருமணத்தின்போது, வரப்போகும் மனைவி மீது ஒரு கெட்ட அபிப்பிராயத்தை உருவாக்க வசந்தாவுக்கு நிறைய அவகாசம் இருந்தது. அவகாசத்தோடு அவர்களுடைய அன்னையின் துணையும் இருந்தது. அன்று சரளாமீது உருவாக்கி வைத்த அவநம்பிக்கை இன்றளவும் நிலைத்து இருக்கிறது!

ஆனால், அபரஞ்சி விஷயத்தில் தனி ஆளாய் வசந்தாவால் பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை. செய்வதற்கு அவளுக்குத் தோன்றவும் இல்லை. சரளாவைப் பற்றி மூட்டிக் கொடுப்பதிலேயே குறியாய் இருந்தவள், இது என்ன, வெறும் கொசுறு என்று கொஞ்சம் அலட்சியமாக இருந்து விட்டாள்.

அதன் விளைவு, அந்த விஷச் செடி வளர்ந்து மரமாகி, அவளுக்கு வர வேண்டிய வைரத்தோட்டையே பறித்து விட்டது!

அண்ணன் திசைமாறித் தன் மேல் பாய்ந்து விடாமல், அபரஞ்சி மேல் தப்பு எண்ணம் கொள்ளும்படி என்ன ஓதுவது என்று நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நாயாய் அலைந்த வசந்தாவுக்கு கடைசியாக ஒரு வழி தென்பட்டது.

தனஞ்சயனின் ஏற்றுமதி விஷயமாகப் பேச என்று சில வெளிநாட்டுக்காரர்கள் வந்தார்கள். மனைவியை அழைத்துத் தனஞ்சயன் அறிமுகப்படுத்தி வைத்தான். அவன் கூட இருந்தபோதும், பிறகு அவர்களில் இருவரை தனஞ்சயன் அரிசிக் கிடங்கிற்கு அழைத்துச் சென்று விட்ட பிறகும் அவன் பணித்தபடி மற்றவர்களுக்குக் கம்ப்யூட்டரில் பதிவு செய்ததிலிருந்து விவரம் கொடுத்த போதும் அவர்களோடு அருகமர்ந்துதான் அபரஞ்சி அளவளாவ நேர்ந்தது. அதேபோலக் கம்ப்யூட்டர் சர்வீசுக்கு வந்தவரிடமும் சாதாரணமாகப் பேசி, காபி கொடுத்து உபசரித்து அனுப்பினாள்.

இதில் எதையும் தவறாகத் தனஞ்சயனோ, அபரஞ்சியோ எண்ணவில்லை.

ஆனால் வெறும் வாயை மென்றபடி அவலுக்காக ஏங்கிக் கொண்டிருந்த வசந்தா இதை மூட்டை கட்டி எடுத்துப்போய் அண்ணனிடம் சேர்த்தாள். ''அந்த நாளில் நான் தற்செயலாக வாசல்பக்கம் வந்தால்கூடக் கோபப்படுவீர்கள். உங்கள் மருமகளானால், கால் மேல் கால் போட்டு பக்...கத்திலே உட்கார்ந்து அவனுகளோடு அரட்டை அடிக்கிறாள். என்னாச் சிரிப்பு, என்னாப் பேச்சு! வீட்டிலே பூனை மாதிரி இருக்கிறவள் இவளே தானா என்று எனக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று. அண்ணா! அடுத்த ஆண்பிள்ளைகளிடம் குடும்பப் பெண் - அதுவும் நம் குடும்பத்துப் பெண் இப்படியா இளிப்பது? பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? நாம் என்றால், குடும்பம் எப்படி, பெண்ணுடைய தாயார் எப்படி என்று பார்த்துப் பெண் எடுப்போம் . எல்லாம் இவர்கள் பார்த்த பெண்தானே? வேறு எப்படி இருப்பாள்? ...நாலுபேர் நடுவில் நீங்கள் தலை குனியும்படி ஆகிவிடக் கூடாதே என்பதுதான் அண்ணா, எனக்கு!'' என்று கன்னத்தில் கைவைத்துக் கண்ணை உருட்டிப் பேசினாள்.



சற்றுநேரம் யோசித்துவிட்டு, ''வீணாகப் போட்டு மனதை அலட்டிக் கொள்ளாதே, வசந்தம். நம் தலைமுறை வேறு. இவர்கள் விஷயம் வேறு. தொழில் தொடர்பாகத் தனம் அழைத்து வந்தவர்களிடம் இவள் பேசாமல் இருந்திருந்தால் அதுதான் இப்போது தப்பாகப் போயிருக்குமோ என்னமோ? எதற்கும் நான் அபரஞ்சியிடம் எச்சரித்து வைக்கிறேன். அவள் நல்ல பெண். ஒரு வார்த்தை சொன்னால் அப்படியே பிடித்து கொள்வாள்.'' என்ற அண்ணனுக்கு ஓங்கி ஒரு குட்டு வைக்கலாமா என்று இருந்தது வசந்தாவுக்கு.

ஆனால் காட்டிக் கொள்ள முடியாமல், ''செய்யுங்கள் அண்ணா, என்னவோ, நம் குடும்ப கவுரவம் கெட்டுவிடக் கூடாதே என்ற கவலைதான் எனக்கு, வேறென்ன?'' என்று சோகமாகப் பெருமூச்சு விட்டாள்.

''உன்னை எனக்குத் தெரியாதாம்மா? ஆனால் நான் ஒருவன் இருக்கும் போது, நீ கவலைப்படத் தேவையே இராது'' என்றார் உலகநாதன் அவளிடம்.

ஒருவருக்கு அறிவுரை கொடுக்க வாய்ப்புக் கிடைத்தால் அதைச் சும்மா விடுகிறவர் அல்ல உலகநாதன்.

இல்லாத வாய்ப்பைக் கூட உண்டுபண்ணிக் கொண்டு, சம்பந்தமே இல்லாதவர்களுக்குக்கூடப் பெரிதாகப் புத்தி சொல்வார். இப்போது விடுவாரா? மருமகள் மீது குற்ற மில்லை என்று தெரிந்தபோதும், அவளை அழைத்து ஒரு சிற்றுரை ஆற்றினார்.

''பாரம்மா, 'பொம்பளை சிரித்தால் போச்சு; புகை யிலை விரிச்சால் போச்சு' என்று அந்தக் காலத்திலேயே சொல்லி வைத்திருக்கிறார்கள். அது தெரியாமல் யார், எவன், என்று இல்லாமல் பேசிச் சிரித்து விட்டுப் பெண்கள் மாட்டிக் கொள்ளுகிறார்கள். அன்றைக்குப் பாஞ்சாலி சிரித்ததால் பாரதப் போரே வந்துவிட்டது. நான் உன்னைச் சொல்லுகிறேன் என்று நினைக்காதே. ஆனால் பெண்கள் ஆண்களிடம் சிரித்துப் பேசுவது தப்பு. அவளுடைய புருஷனிடம்கூட ஒரு பெண் அதிகம சிரிக்கக் கூடாது. நினைவு வைத்துக்கொள். அப்புறம், இன்றைக்கு மாதுளை முத்து உதிர்த்து வைத்ததில் ஒரு சின்னத்தோல் இருந்தது. இனிமேல் அப்படி இல்லாமல் பார்த்துக்கொள், புரிகிறதா'' என்றார்.

என்னமோ தனக்குத்தான் தெரிந்த மாதிரி உலகநா தன் எதையாவது சொல்வது வழமையே என்பதை அவ்வளவு நாட்களில் அறிந்து வைத்திருந்த அபரஞ்சி, அவரது பேச்சில் தலைகால் எதுவும் புரியாதபோதும் சும்மாவேனும் தலையாட்டி வைத்தாள்.

இப்படியும் அப்படியுமாக நத்தையின் வேகத்தோடு நாட்கள் மெல்ல நகர்ந்தன.

ஒவ்வொருநாள் செல்வதும் ஒரு யுகம்போல அப ரஞ்சிக்குத் தோன்றியது.



ஆடுமாடோடு அவளது கர்ப்பத்தை ஒப்பிட்டுத் தனஞ்சயன் பேசிய பேச்சு அவளை மிகவும் நோகச் செய்திருந்தது.

அதற்காகவே, தன் சக்திக்கு மீறிய வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்து கொண்டே இருந்தாள்.

காலையில் குளித்தும், முகத்தில் குளிர்நீர் அடித்தும் காலை மசக்கையைச் சமாளித்தபடி ஏதாவது வேலை செய்து கொண்டே இருந்தாள். இதைத்தான் வசந்தா மாய்மாலம் என்று நினைத்தாள். சரளா எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அபரஞ்சி எந்த வேலையையும் குறைத்துக் கொள்வதாக இல்லை. தன்னைத்தானே வருத் திக் கொள்கிறோம் என்பது அவளுக்கு நன்றாகவே புரியத்தான் செய்தது. ஆனால், கருவுற்றிருப்பதைச் சாக் கிட்டு இந்த வேலை பாக்கி வைத்தாய் என்று கணவன் சொல்லும்படி விட்டுவிடக் கூடாது என்ற வெறியோடு, அபரஞ்சி பிடிவாதமாக, இல்லாத பொல்லாத வேலை களையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள்.

தாய்க்குத் தாயாய் சரளாவின் பராமரிப்பு மட்டும் இல்லையென்றால் பலவீனத்தால் ஏதேனும் நோய்கூட அவளைப் பற்றியிருக்கக் கூடும்.

மருமகள் பிடிவாதமாக வேலை செய்வதை அவ ளால் தடுக்க முடியாத போதும், அபரஞ்சியின் ஆரோக்கி யம் கெட்டுவிடாமல், சத்தான பானங்களையும் உணவை யும் கொடுத்து, வற்புறுத்தி, உட்கொள்ள வைத்தாள் அந்தத்தாய்.

பட்டுப்பட்டு மரத்துப் போகுமுன் தனக்கிருந்த மன நிலையை நினைத்துப்பார்த்த சரளாவுக்கு மருமகளின் போக்கில், வியப்போ, கோபமோ உண்டாகவில்லை

-மாறாக, இந்த வீட்டில் இன்னொரு பெண்ணும் இதே துன்பம் அனுபவிக்கும்படி ஆயிற்றே என்று மிகவும் வருத்தம்தான் அவளுக்கு உண்டாயிற்று.

தோட்டத்தில் பெரிய வாழை மரத்தை அடுத்துப் புதிதாக வெடித்த வாழைக் கன்று ஒன்றைக் காட்டி, ''அந்த அடிவாழைக் கன்றின் முதல் இலைகளைப் பார்த்தாயாம்மா? இலைகள் கூராக நேராக உறுதியோடு நிற்பதைப் பார். இலை அமைப்பே, தலைவாழையி லிருந்து எவ்வளவு வேறுபட்டு இருக்கிறது! இதைப் பார்த்துதான் நானும் ஏமாந்து போனேனம்மா. வளர, வளர இந்தக் கன்றும் அச்சாய் அந்தப் பெரிய வாழை போலவேதான் வளரும் என்று நான் நினைக்கவே இல்லை!'' என்று கண்கலங்கி வேதனைப்பட்டவளை அபரஞ்சிதான், தேற்றி உள்ளே அழைத்து வரும்படி ஆயிற்று.

எப்படியோ, ஒருவருக்கொருவர் ஆறுதலும் தேறு தலுமாகக் காலம் சென்றது. தனஞ்சயனின் ஏற்றுமதி 'ஆர்டர்' படி அனுப்பி, மறு ஆர்டர் கைக்கு வந்தது.

அபரஞ்சியின் வயிற்றுப் பிள்ளை நல்லபடியாக வளர்ந்தது. ஏழாம் மாதம் வளைகாப்புக்கு நாள் குறித் தார்கள். இப்போது உள்ளூர ஓர் எண்ணம் தோன்றி, அபரஞ்சிக்கு முதல் முறையாக உற்சாகத்தை அளித்தது.

வளைகாப்பு நடத்தினால், அப்புறம் பிரசவத்துக் கென்று பிறந்த வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள். பங்களூருக்குச் சென்றுவிட்டால் கொஞ்ச காலம், குறைந் தபட்சமாய்ச் சில மாதங்கள் அவளுடைய கணவன் முகத்தைப் பாராமல் நிம்மதியாய் இருக்கலாம்.



விடுதலை! கணவனின் விஷ நாவிலிருந்து விடப் படும் கூர் அம்புகளில் இருந்து விடுதலை! உடல் வலிக்க வலிக்க இழுத்துப் போட்டுக்கொண்டு செய்யும் வேலைக ளில் இருந்து விடுதலை! கடவுளே! என்ன சுகமாய் இருக்கும்!

கணவனைப் பிரிந்து செல்வதற்காக, அபரஞ்சி ஆவலாகக் காத்திருந்தாள்... ஆனால்...

## 7

**வ**ளைகாப்பு வைபவத்தில் பெண்ணுடைய தந்தை யாகத் தான் என்னென்ன செய்யவேண்டும் என்று கேட்டுப் போவதற்காகச் சிலநாட்கள் முன்னதாக ஜெய பாண்டியன் மகள் வீட்டுக்கு வந்திருந்தார்.

வந்தவர், சூல்காப்புகள், சேலை, பலகாரங்கள் பற்றிய விவரங்களை எல்லாம் கேட்டு, ஒரு காகிதத்தில் குறித்து வைத்துக் கொண்டார்.

பிறகு, தொண்டையைச் செறுமிக் கொண்டு, ''இதை யெல்லாம் கடித மூலமாகக் கூட எழுதிக் கேட்டிருப் பேன். அத்தான், ஆனால், உங்களிடமும் தங்கையிடமும் முக்கியமாய் ஓர் உதவி வேண்டுவதற்காகவே, இப் போது நான் நேரில் வந்தேன்'' என்று ஜெயபாண்டியன் தொடங்கினார்.

தந்தை கொணர்ந்திருந்த உயர்ரக ஆப்பிள்களை வெட்டி ஒன்றுபோல் அழகாகத் தட்டுகளில் அடுக்கி எடுத்து வந்து கொண்டிருந்த அபரஞ்சி, பெற்றவரின் இந்தப் பேச்சு காதில் விழவும் திகைத்து பாதி வழியில் அப்படியே நின்று விட்டாள்.

என்ன உதவி? இவர்களிடம் உதவி வேண்டும் நிலைமை அப்பாவுக்கு ஏன் வந்தது? இந்தச் சீர் செய்யு மளவு பணம் இல்லையா... சேச்சே. அவருக்கு இது ஒன்றும் பெரிய காரியமும் அல்ல. பின்னே என்ன உதவி... என்று ஏதோ கெடுதலைக் கேட்கப் போவது போல அவள் மனம் தவியாய்த் தவித்தது.

''பாருங்கள்...அத்தான் என் மகள் தாயில்லாக் குழந்தை. இப்போது வளைகாப்பு முடிந்து அவளைக் கூட்டிப் போனால், வாய்க்கு ருசியாகப் பண்ணிப் போட என்று அங்கே யாரும் கிடையாது. பேச்சுத்துணைக்குக் கூட அங்கே யாரும் கிடையாது...'' தந்தை என்ன சொல்ல வருகிறார் என்பதை ஊகித்து அவசரமாக எட்டு எடுத்து வைத்து அபரஞ்சி வருமுன், ஜெயபாண்டியன், அவர் நினைத்ததைக் கேட்டே விட்டார்... ''அதனால், பெற்ற தாய்போலவே அபியைக் கவனிக்கும் நீங்களே, இந்தப் பேறு காலத்தையும் பார்த்துக் கொள்ள முடியுமா?''

இனி அபரஞ்சி, ஒன்றும் சொல்ல முடியாது! மறுப்பு மாமியாரை அவமானப்படுத்துவது போல ஆகும். அவள் அன்பு காட்டவில்லை என்று சொல்லாமல் சொல் வதுபோல ஆகும்.

அந்த வீட்டின் முன்னொரு காலத்து மருமகளாய் தன் மருமகளின் மனநிலையைக் கொஞ்சம் ஊகித்து வைத்திருந்ததால், சரளா சட்டெனப் பதிலொன்றும் கூற வில்லை. கூறினாலும், அவளது அபிப்பிராயத்துக்கு அந்த வீட்டில் மதிப்பேது?

உலகநாதன் மகாப் பெருந்தன்மையான குரலில், ''முடியுமாவா? சரளாவே தான் அபரஞ்சிக்குப் பிரசவம்



பார்த்தாகவேண்டும் என்று நான் முன்பே முடிவு செய்து விட்டேனே! நீங்கள், உங்கள் மகளை அழைத்துச் சென்றி ருந்தாலும், பேறுகால சமயத்துக்கு நான் இவளை அனுப் புவதாகத்தான் இருந்தேன். அதைவிட, மருமகள் இங் கேயே இருந்தால் இரண்டு மடங்கு நன்மை. வீடு, அதுபாட்டில் வழக்கம்போல நடக்கும். அபரஞ்சியையும் பார்த்துக் கொள்ளலாம்'' என்று உன்னால் முடியுமா? என்று ஒரு வார்த்தை கூட மனைவியைக் கேளாமலே தன்னிச்சையாக முடிவு சொன்னார். தன் சாப்பாடு, பிற வசதிகளுக்குக் குறை வராது என்ற சந்தோஷம் அவ ருக்கு.

குனிந்த தலை நிமிராமல், பழத்தட்டுகளை டீபாயில் வைத்துவிட்டு உள்ளே சென்றாள் அபரஞ்சி.

அவளுக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு ''ஹோ' 'வென்று வந்தது. கொஞ்...ச காலம்! மிஞ்சிமிஞ்சி நாலைந்து மாதங்களைத்தானே அவள் ஆசைப்பட்டது! அந்த விடுதலை கூட அவளுக்கு கிடைக்கவில்லையே!

இப்படி ஓர் எண்ணம் இருப்பதாக இந்த அப்பா ஒருதரம் கூட அவளிடம் சொல்லவில்லையே! இங் கேயே இருக்கிறாயா என்று அவளிடம் ஒருவார்த்தை கேட்கவில்லையே! என்று அவள் மனம் பொறுமியது.

ஆனால், எப்படிக் கேட்பார்? அவர்தான் மகள் பூலோக சொர்க்கத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டு இருக்கிறாரே! வேலைகளின் இடையே அவர் இங்கே வந்து தங்கும் சில மணி நேரங்களில், தான் மகிழ்ச்சியில் திளைப்பதாகத்தானே அபரஞ்சியும் காட்டிக் கொண் டாள். மகளின் துன்பம் தெரிந்தால் வருத்தப்படுவாரே; கூடச் சேர்ந்து சுமையைப் பகிர்ந்து கொள்ள அம்மாவும்

இல்லாததால் தனியே கிடந்து தவிப்பாரே என்று உண்மை நிலையை மறைத்து வேடம் போட்டது அவள் தலையிலேயே இடியாக இறங்கி விட்டதே!

தனியே நின்று தவித்துக் கொண்டிருந்தவளின் காது களில், ''அதுமட்டும் இல்லை அத்தான். பிரசவ காலம் நெருங்க நெருங்க கணவன் அருகில் இருக்க வேண்டும் என்று ஏக்கமாக இருக்குமாம். அபி அம்மா என்னிடம் சொல்லியிருக்கிறாள். அதற்காகவும் தான் உங்களிடம் கேட்டேன்'' என்று ஜெயபாண்டியன் கூறியது விழவும் அவளால் தாங்க முடியாது போயிற்று.

அய்யோ, அப்பா! அது அம்மாவுக்கு ஒரு நல்ல கணவராக நீங்கள் கிடைத்ததால் அம்மா சொன்ன பேச்சு உங்கள் மகளுக்கு அந்தப் பாக்கியம் கிட்டவில்லையே அப்பா! என்று உள்ளூரப் புலம்பியவளுக்குத் தன் ஆசை அழிந்த விதத்தில் அடக்க மாட்டாமல் கண்ணீர் பெருகி யது.

இந்தக் கண்ணீரைக் கூட அவளால் மற்றவர்கள் முன் காட்ட முடியாது. என்ன, ஏது என்று விசாரணை தொடங்கி, பாவம், அந்த வாயில்லாப் பூச்சி, அவளு டைய மாமியார் தலையில் போய் விடியக் கூடும். அதுதானே உலகநாதனின் வழக்கம்! இங்கே சுற்றி, அங்கே சுற்றிக் கடைசியாக மனைவியைக் குற்றவாளி யாக்கித் திட்டுவது!

கண்ணீரை அடக்க முயன்றபடி, அபரஞ்சி குளியல றையை நாடிப் போனாள். குளிர்ந்த நீர் அடித்து முகம் கழுவினால், கண்ணீரும் நிற்கும்; கண்ணீர் வடிந்த சுவ டும் மறையும்.



பார்வையை மறைத்து கண்ணீரோடு விரைந்தவள், எதிரே கணவன் வருவதை அறியாமல், அவன்மீது முட்டிக் கொண்டாள்.

பிடித்து நிறுத்தி, ''பார்த்து வருவதில்லை? கண் இருக்கிறதா இல்லையா?'' என்று எரிச்சலுடன் வினவிய வன், அவளது கண்ணீரைக் கண்டதும், ''ஏன், என்ன ஆயிற்று?... எங்கேனும் வலிக்கிறதா?'' என்றான் குர லில் பதட்டம் தோன்ற.

''இல்லை'' என்று தெளிவற்ற குரலில் உரைத்தவள, அவனது கையை அவசரமாக விலக்கித் தன்னை விடு வித்துக் கொண்டு குளியலறைக்குள் சென்று விட்டாள்.

சற்றுப் பொறுத்து, லேசாகச் சிவந்த கண்கள் தவிர மற்றபடி சாதாரணமாக அவள் வெளிவருவதைப் பார்த்து விட்டு அங்கிருந்து அகன்று, மற்றவர்கள் இருந்த இடம் சென்றான் தனஞ்சயன்.

அங்கே, விவரம் அறிந்ததும் அவனுக்குப் புரிந்து விட்டது. இங்கேயே இருக்க நேர்ந்ததற்காகவா இந்த அழுகை?

உள்ளூர ஆத்திரமும், கூடவே முணுக்கென்று ஒரு வலியும் அவனுக்கு உண்டாயின.

திருமணமான புதிதில், அவளைக் கொண்டுவிட வந்தவர்களுக்கு உற்சாகமாகக் கையாட்டி அவள் விடை கொடுத்த காட்சி; தன்னை மீறி அவன் மனதில் தோன்றி யது.

மணவாழ்வு என்பது வண்ண மயில்களும் மான் களும் உலவும் பூங்கா என்று எண்ணியிருந்திருப்பாள்! பாவம் என்று எண்ணும்போதே கோபமும் வந்தது.

பட்டும் இப்படி எத்தனை பேரை அழ வைத்திருப்பாள்? அவனாவது பரவாயில்லை. சமாளித்துக் கொண்டான்! வேறு எத்தனை பேர் அந்த வலையில் சிக்கி அடியோடு அழிந்து போனார்களோ? அதற்கெல்லாம் தண்டனை அனுபவித்துத்தானே தீரவேண்டும்?

சற்றே இளகிய மனம் உடனே கடினமாகிவிட, தனஞ்சயனின் போக்கு மாற்றமின்றி அப்படியே இருந்தது. சுடுமொழிகளும் கடுகடுப்புமாக.

வளைகாப்பு விழாவுக்கு அபரஞ்சியுடைய பெரிய தந்தை, அத்தை, சித்தி, தாய்மாமா, அவர்களுடைய பிள்ளைகள் எல்லோரும் வந்திருந்தார்கள். பேச்சும் சிரிப்புமாக வீடு கலகலத்தது. வளையல்களைப் பிரித்து ஆறுஆறாகக் கட்டி வைப்பது, நலுங்கு சுற்றியவர்களுக்குக் கொடுப்பதற்காக வாங்கி வைத்திருந்த கிண்ணங்களில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பழம், வளையல் இட்டு எடுத்து வைப்பது என்று பேச்சினூடே வேலையும் நடந்தது.

''ஏய் அபி, உன் வீடு பரவாயில்லைடி, பரவாயில்லை. என்ன? நன்றாகவே இருக்கிறது. நானும் என்னமோ பழங்காட்டூர் என்ற பெயரைப் பார்த்து மாமா, பெண்ணைப் பட்டிக்காட்டில் கொடுத்து விட்டாரே என்று நினைத்தேன். சும்மாவே காட்டூர், அதிலும் பழைய காட்டூர்! இனி அபியைப் பார்ப்பது அவ்வளவுதான் என்று நினைத்தேன்'' என்றாள் மாமன் மகள் மல்லிகை.

''அது பழைய காட்டூர் இல்லை. மல்லி. பழங்கள் நிறைந்த காடு உள்ள ஊர் என்று அர்த்தம். காடு என்றாலும் கொடிய மிருகங்கள் வாழுமே அந்தக் காடு என்று அர்த்தம் அல்ல. பழமரங்கள் நிறைந்த தோப்புதான். இது தெரியாமல்... கொஞ்சம் தமிழையும் படிடி... இங்கிலீஷ் மீடியத்தில் படித்தாலும் தமிழச்சி என்பதை மறக்கக் கூடாதடி'' என்று அவளுக்குச் சின்னதாக ஒரு குட்டு வைத்தாள் அபரஞ்சி.



''அடேயப்பா! அவளுடைய ஊரைக் கேலி செய்தால் வரிந்து கட்டிக் கொண்டு வருவதைப் பாரேன்! அப்படியா உன்னை இந்த ஊர் மயக்கி வைத்திருக்கிறது?'' என்றாள் பெரியப்பா மகள்.

''ஊர் இல்லையடி மக்கு. மயக்கியது இந்த ஊர்க்காரரான அத்தான்! அவர் மயக்கத்தில்தான் அம்மாள் இந்தப் போடு போடுகிறாள்!'' என்றான் அத்தை பையன்.

''ஓ'' என்று சிரிப்பு அலைமோதியது.

புன்னகைத்துவிட்டு, ''ஊர் பற்றிய விவரம் சொன்னது எங்கள் அத்தை!'' என்றாள் அபரஞ்சி கிண்டல் குரலில்.

''விவரம் யார் வேண்டுமானாலும் தரட்டும். அதை அவிழ்த்து விடுகிற வேகம் தந்தது அத்தான் மயக்கம்தானே?'' என்று மீண்டும் எல்லோரும் சிரித்தனர்.

சிரிப்பு ஒலியைக் கேட்டபடி உள்ளே வந்த தனஞ்சயன் முகத்திலும் புன்னகை இருந்தது.

எல்லாம் இருபதுகளில் தொடங்கி, அதற்கும் கீழ் உள்ள, கால்கட்டு விழாத சிறுசுகள்! சிரிப்புக்கும் கேலிக்கும் கேட்பானேன்?

''யார்யாருக்கு மாம்பழம் போட்ட பதநீர் வேண்டும்?'' என்று கேட்டபடி அபரஞ்சி எழுந்து, உள்ளே சென்றாள்.

சிரிப்பைக் கேட்டபடியே உள்ள வந்த தனஞ்சயனுக்கு சிலகாலமாக மனைவி தன்னைப் பார்த்து இணைந்து நகைப்பதில்லை என்பது உறுத்தியது. சிரிப்பு என்ன, சாதாரணமாகப் பேசுவதே கிடையாது. ஏன், முடிந்த அளவு அவன் இருக்கும் இடத்தில் அவள் இருப்பதுகூடக் கிடையாது! முன்பெல்லாம் தொழில் விஷயமான விவரங்களையேனும் அவனிடம் நேரே சொல்லுவாள். இப்போதெல்லாம் ஃபாக்ஸ் மூலம் வரும் தகவல்கள், விசாரணைகளை உரியவிதமாய்க் கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி, பிரிண்ட் அவுட் எடுத்து அழகாக வரிசைப் படுத்தி வைத்து விடுவாள்.

கணவனோடு பேச்சைத் தவிர்க்கிறாளாம்! போகட்டுமே! எத்தனை நாள் இது நடக்கும் என்று தனஞ்சயன் அலட்சியமாக எண்ணினான்.

முன்பாவது, பிரசவத்துக்காகப் பிறந்த வீடு செல்வாள் என்று இருந்தது. இப்போது அதற்கும் வழியில்லாமல் இங்கேயேதான் இருக்கப் போகிறாள்.

மனைவி பிரிந்து செல்லாமல் இங்கேயே இருக்கப் போகும் சேதி தனக்கு மிகவும் குதூகலமாய் இருப்பதைத் தனஞ்சயன் ஓர் ஆச்சரியத்தோடு உணர்ந்தான், பிடிக்காத மனைவி என்றாலும் அவள் இல்லாத தனிமை கஷ்டம் தான் போலும்!

ஆனால், ஒரேயடியாக அபரஞ்சி தனக்குப் பிடிக்காத மனைவி என்று உறுதியாக எண்ணவும் தனஞ்சயனால் முடியவில்லை. பெரிதாகிவிட்ட வயிற்றைத் தள்ளிக்கொண்டு சிரமத்துடன் அவள் குனிந்து நிமிர்ந்து வேலை செய்யும்போது, அவனுக்கும் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது. அதிலும் அபரஞ்சியின் நெற்றியில்



முத்துமுத்தாக அரும்பியிருக்கும் வியர்வைத் துளிகளைக் காணும்போது, என்ன களைப்போ என்று வேதனையாகவும் இருந்தது.

இந்தச் சங்கடமும், வேதனையும் வெறுப்பின் அறிகுறி அல்லவே!

இன்னும் அவர்களை இணைக்கும் சங்கிலியாகக் குழந்தை வேறு பிறக்கப் போகிறது என்று எண்ணிய போது அவன் மனம் தானாக உற்சாகமே அடைந்தது.

வளைகாப்பு வைபவம் விமரிசையாக நடைபெற்றது.

வளைகாப்புப் பெண்ணை மட்டும் போட்டோ, வீடியோவுக்காக அடிக்கடி சிரிக்கச் சொல்ல வேண்டியிருந்தது.

'அவளுக்கு களைப்பு; வயிற்று சுமையோடு சுற்றிச் சுற்றி எவ்வளவு வேலை பார்த்திருக்கிறாள்; அவள் உட்கார்ந்து பார்க்கவில்லையே; சோர்வில், சிரிப்பு எப்படி வரும்?' என்றார்கள் சிலர்.

இவர்களுக்கு என்ன தெரியும்? என் மருமகள் என் புத்திமதியைக் கடைப்பிடிக்கிறாள் என்று மகனிடம் பெருமைப்பட்டுக் கொண்டார் உலகநாதன்.

சின்ன வயதில் இருந்ததுபோல அபி இப்போதெல்லாம் சிரிப்பதே இல்லை என்று அவள் வகை உறவினர்களிடையே பரவலாகப் பேசப்பட்டது.

ஆனால் நடுவில் இருந்த சில ஆண்டுகளுக்கு, இப்போது அவள் எவ்வளவோ பரவாயில்லை என்று அவர்கள் பேசிக் கொண்டதும் தனஞ்சயன் காதுகளில் நன்றாகவே விழுந்தது.

மனைவியை ஓரளவு - முழுமையாக என்பது அவனது அபிப்பிராயம் அறிந்து வைத்திருந்த தனஞ்சய னுக்கு அபரஞ்சியின் சோர்வின் காரணம் மட்டும் நன்றா கவே தெரிந்திருந்தது. தன் சொல் அவளைப் பாதிக்கும் விதம் குறித்து ஓரளவு கர்வமும், கூடவே சிறு கழிவிரக்க முமாக ஒரு விசித்திரமான உணர்ச்சிக் கலவையோடு நடமாடிக் கொண்டிருந்தான் அவன்.

மதிய உணவின் பின் சற்று நேரம் அங்கங்கே நீட்டி நிமிர்ந்து விட்டு, வெளியூர்க்காரர்கள் எல்லோரும் இடம் சுற்றிப் பார்க்கவென்று கிளம்பினார்கள்.

உலகநாதனுடைய குடும்பம் வசித்து வந்த பழங் காட்டூரிலிருந்து இருபதே நிமிடக் கார்ப்பயண தூரம்தான் திருச்சியும், தஞ்சாவூரும். இவ்வளவு தூரம் வந்ததற்கு திருச்சி மலைக்கோட்டையையும் தஞ்சைப் பெரிய கோவிலையும் பார்த்துவிட்டுப் போக எல்லோரும் திட்ட மிட்டனர்.

மலைக்கோட்டையில் இருட்டியபின் ஏறவிட மாட் டார்கள்; அதனால் முதலில் திருச்சி செல்லுங்கள் என்று தனஞ்சயன் சொன்னதன்படி எல்லோரும் கிளம்பிச் சென்றுவிட வீட்டில் அமைதி நிலவியது.

''கொஞ்ச நேரம் படுத்து ஓய்வெடு'' என்று மாமி யார் சரளா கூறியதைக் கேளாமல் அங்கிங்கென்று கிடந்தவற்றை ஒதுக்கிவிட்டு, வந்தவர்களின் துவைத்துக் காய்ந்த துணிமணிகளை மடித்து வைத்தாள் அபரஞ்சி.

''ஏனம்மா, இப்படி உடம்பை வருத்திக் கொள் கிறாய்?'' என்று வருத்தப்பட்ட மாமியாரிடம், ''வருத்திக் கொள்வது என்று இல்லை, அத்தை, நன்றாக வேலை செய்தால்தான் இரவு நன்றாக உறங்க முடிகிறது'' என்று லேசாக முறுவலித்தாள் அவள்.



மனம் நன்றாக இல்லாத நிலையில், உடல் களைத்து இருந்தால்தான் தூங்க முடியும் என்பது அந்த மாமி யாரும் அறிந்த தந்திரம்தானே? ஆனால் அடுத்து வாழ வந்த மருமகளும் அதையே பின்பற்ற நேர்ந்தது சரளா வுக்கு மிகுந்த வருத்தம் தந்தது. ''தினமும் இதையேதான் சொல்கிறாய். இன்றைக்குமா இப்படி? சும்மாவே உடம்பு அலண்டு போயிருக்கும்...''

''அதெல்லாம் ஒன்றுமில்லை அத்தை. வேலை செய்துகொண்டே இருந்தால் மனதுக்கு நன்றாக இருக் கிறது'' என்று முடித்தாள் மருமகள்.

மகள் வீட்டில் முடிந்த அளவு நேரத்தைக் கழிக்க விரும்பிய ஜெயபாண்டியன் மட்டும் மற்றவர்களோடு சுற்றுலா மையங்களுக்குச் செல்லாமல் வீட்டிலேயே தங்கிவிட்டார்.

மகள் பொறுப்பாய் வீட்டைக் கவனிப்பதையும், மாமியாரோடு ஒட்டிக் கொண்டு சுற்றுவதைக் காண அவருக்கு ஆறுதலாக இருந்தது. பெற்ற தாய் இறந்து விட்டாலும், மகளுக்கு திருமணத்தின் மூலம் ஒரு தாய் கிடைத்தாளே!

அவருடைய கம்பீரமான தோற்றமுடைய மருமகன் ஒரே ஏற்றுமதி ஒப்பந்தத்தில் எவ்வளவு சம்பாதிக்கிறான், என்பதைச் சொல்லி, இன்னமும் எவ்வளவு சம்பாதிக்கப் போகிறான் என்பதை உலகநாதன் பெருமையாகக் கோடி காட்டவும் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி. மருமகனை ஒட்டிக் கொண்டு அலைந்து அவனோடு அமர்ந்து அவனது தொழில் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தார்.

மடித்த துணிகளைப் பிரித்து அறைக்குள் கொண்டு சென்று, அவரவர் பெட்டியின் மீது வைத்துவிட்டு அப ரஞ்சி மீண்டும் திரும்பிச் சென்றாள்.

மகள் வந்து செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த ஜெயபாண்டியன், திடுமென, ''அபியை இப்படிப் பார்க்கும் நாள் வரும் என்று ஒருகாலத்தில் நான் எதிர்பார்க்கவே இல்லை, மாப்பிள்ளை!'' என்றார் மருமகனிடம்.

அபரஞ்சியின் கருவுற்ற நிலையைச் சொல்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு தனஞ்சயன் ஆச்சரியப்பட்டான். திருமணமான பெண் தாயானதை எதிர்பார்க்கவே இல்லை என்கிறாரே!

அவன் முகத்தைப் பார்த்துவிட்டு ஜெயபாண்டியன் லேசாகத் தலையசைத்துச் சொன்னார். ''மெய்தான் மாப்பிள்ளை. நாலைந்து ஆண்டுகளுக்கு முன்னால், பிற்பாடு இவளுக்கு இப்படி ஒரு தாயாகிற நிலை, வளைகாப்பு வைபவம் எல்லாம் நடக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. ஏன், இவ்வளவு காலம் அவள் உயிரோடு இருப்பாள் என்றுகூட எண்ணவில்லை'' என்றார்.

ஏதாவது உடம்பு லேசாகச் சரியில்லாமல் போயிருக்கும். அதைப் பெரிதாகச் சொல்கிறார் என்று எண்ணி, ''ஏன் அப்படி?'' என்று ஏதாவது கேட்க வேண்டுமே என்பதற்காக மட்டுமாய் தனஞ்சயன் வினவினான்.

''அன்றைக்கு அபி அப்படித்தான் இருந்தாள் மாப்பிள்ளை. ஆறு ஆண்டுகள் முன்பு - இவளுக்கு அப்போது பதினாறு வயது. இவள் அம்மா எங்களை விட்டுப் பிரிந்து கடவுளிடம் போய்ச் சேர்ந்து விட்டாள். அம்மாவும் மகளும் மகா ஒட்டுதல்... ஒரே குழந்தை அல்லவா? இவளால் தாங்க முடியவில்லை. ஒருமாதிரி இறுகிப்போய், நாளுக்கு நாள் உள்ளுக்குள்ளேயே நத்தை மாதிரி சுருட்டிக் கொண்டாளே தவிரத் தேறுவதாகவே தெரியவில்லை. சாப்பிடுவதற்குச் சொல்ல



வேண்டும். சாப்பிட்டால் கைகழுவச் சொல்ல வேண்டும். தானாக ஒன்று நினைத்துச் செய்தாள் என்று ஒன்றும் இராது. வயது வந்த பெண், என்ன பாடுபட்டிருப்பேன், பாருங்கள். இதற்கு நடுவில் சோறு போடும் தொழிலையும் பார்த்தாக வேண்டும். ஆறு மாதம் சமாளித்துப் பார்த்தேன். முடியாது, பேசாமல் எதையாவது இவளுக்கும் கொடுத்து, நாமும் தின்று உயிரை விட்டு விடலாமா என்றுகூட நினைத்தேன்...''

ஜெயபாண்டியன் பழைய நினைவுகளில் ஆழ்ந்து பேசப் பேசத் தனஞ்சயனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு வேதனைப்பட்டிருக்கிறாளா அவனுடைய மனைவி! அவனிடம் ஒன்றுமே சொன்னதில்லையே என்று எண்ணும்போதே, சொல்லுமளவு நெருக்கத்தை அவன் அனுமதித்ததில்லை என்ற உண்மை அவனைக் கொஞ்சம் குன்ற வைத்தது.

ஆனால் இந்த நிலையைத் தாண்டிவந்து அவள் செய்தது?

அதற்கு இவரால் என்ன சமாதானம் சொல்ல முடியும் என்று ஆத்திரத்துடன் நினைத்தான் தனஞ்சயன்.

## 8

**நா**லு ஆண்டுகள்! முழுமையாக நாலு ஆண்டுகள் முடிந்து விட்டன! ஆனால் இன்றளவும் அவனது அந்தத் தோல்வி தனஞ்சயனின் மனதில் அப்படியே தெளிவாக இருக்கிறது.

குன்றிக் குறுகித் திரும்பி வந்தானே! தன் தோல்வி பற்றித் தந்தையிடம் கூறியபோது எவ்வளவு அவமான

மாக இருந்தது! தந்தை முன் தலை நிமிரவே முடியவில்லையே! அதற்குக் காரணம் அபரஞ்சிதானே!

என்னவோ புண்ணியம்! அப்போது உலகநாதன் மகனைக் குத்திக் காட்டி ஒன்றும் பேசவில்லை. மூன்று லட்சத்தையாவது மிச்சம் கொணர்ந்தானே என்று எண்ணினாரோ? அதைவிட, ஒப்புக்கொண்டபடி மகன் தன்னிடமே வந்து சேர்ந்து விட்டதே அவருக்கு திருப்தி என்றுதான் தனஞ்சயனுக்குத் தோன்றியது. அதனால் தான் அவர் மகனை அதிகம் குத்திக் குதறவில்லை.

ஆனால், தானாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வேகம் அவனுக்கு அடங்கவே இல்லை. இனி இந்த வட்டத்தை விட்டு வெளியே செல்ல வழியில்லை என்று ஆகிவிட்டதால், இதிலேயே முயன்றான்; வெற்றியும் கண்டான் என்றாலும் அது வேறு விஷயம் அல்லவா? இவள்... அவனுடைய மனைவி செய்தது இல்லையென்று ஆகாதே?

''பிறகு என்ன நடந்தது? எப்படித் தேறினாள்?'' என்று முறைப்படி மாமனாரிடம் தனஞ்சயன் விசாரித்தான்.

ஒரு பெருமூச்சுடன் ஜெயபாண்டியன் மீண்டும் தொடர்ந்தார். ''அப்படி ரொம்பவும் நொந்துபோய் இருந்த சமயம் என் அண்ணனும் அண்ணியும் வேறு காரியமாய் அந்தப் பக்கம் வந்தவர்கள் அபியின் நிலையைப் பார்த்துவிட்டு அவர்களோடு அழைத்துப் போய் விட்டார்கள். ஒத்த வயதுப் பிள்ளைகளோடு சேர்ந்திருந்தால் அபி விரைவாகத் தேறக்கூடும் என்றார்கள் அண்ணி. அபியுடைய அம்மா வழியிலும் மாமா, சித்தி என்று சென்னையில் இருந்தார்கள். அவர்களோடும்



பழகலாம் என்றார்கள். எங்கள் வீடு, என் மனைவி வீடு இரு வகையிலும் எல்லோருக்குமே அபி அருமை மாப்பிள்ளை! ஒரு காரணம் எங்களுக்குக் கொஞ்சம் தாமதமாகக் குழந்தை பிறந்தது. அத்தோடு, அதுவரை இரு வகையிலும் பிறந்ததெல்லாம் ஆண் குழந்தைகள் தான். இவள் தான் முதல் பெண்குழந்தை. பிறந்ததிலிருந்தே மிக அழகாக இருப்பாள். வளர வளர, பிரியமாகவும் பழகுவாள். அங்கே அண்ணன் வீட்டில் ஓர் இரண்டு ஆண்டுகள் இருந்தாள். அண்ணன் தொடங்கிய ஒரு கம்பெனிக்கு இவளையே எம்.டி.யாக போட்டு வெளியே போய் வரும்படிக் கூடச் செய்து பார்த்திருக்கிறார்கள். ஆனால் அந்த பொம்மைத்தனம் அவளுக்குப் போகவில்லை. அண்ணன் வீட்டில் சென்னையில் போய்ப் பார்த்துவிட்டு எனக்கு மீண்டும் மனது மிகவும் சங்கடப்பட்டுப் போயிற்று... அவள் தேறவில்லை என்பதோடு... அது வேறு விஷயம். ஆனால் அண்ணி படாதபாடுபட்டு, குளித்துத் துணிமணி உடுத்துவது, சாப்பிடுவது எல்லாம் தானாகச் செய்யும் அளவுக்குக் கொண்டு வந்திருந்தார்கள். இப்போதுகூட பிறந்த வீட்டுப் பெண்மணியாக அவர்கள் இருந்து, பிரியமாய் அபிக்குப் பேறுகாலம் பார்த்து அனுப்பத்தான் செய்வார்கள். ஆனால்...

''ஆனால் எனக்குத்தான் அங்கே அவளைவிட விருப்பம் இல்லை, மாப்பிள்ளை!... உங்களிடம் சொல்வதற்கு என்ன? ஒருவகையில் நீங்களும் தெரிந்து கொள்வது கூட நல்லதுதான். ஒரு காலத்தில் ஏமாந்து விடாமல் எச்சரிக்கையோடு இருப்பீர்கள். பாருங்கள் மாப்பிள்ளை, என் அண்ணா தொழில் விஷயத்தில் அவ்வளவு சுத்தம் இல்லை. புத்தி கலங்கி நின்ற பெண்ணை

எம்.டி.யாகப் போட்டு, வரி ஏய்ப்புக்காக முழுகுகிற கம்பெனி தொடங்கி மூடி விட்டார். எனக்கு ரொம்பவும் வேதனை. என் பெண்ணல்லவா பணம் சுருட்டியதாக இருக்கும்? என்ன மாப்பிள்ளை?'' மருமகனிடம் அசைவு உணர்ந்து கேட்டார் அவர்.

மாமனாரின் பேச்சில் மூழ்கியிருந்த தனஞ்சயன், ''ஒன்றுமில்லை, சொல்லுங்கள்'' என்று தூண்டினான்.

''அதேசமயம் தம்பி குடும்பம் இந்தியா வந்திருந் தது. இவளைக் கூடவே கூட்டிப் போய்விட்டார்கள். முழுக்க இடம் மாறினால் சரியாகிவிடும் என்று அங்கே தான், இவள் கொஞ்சம் மாறிவந்தது... நிறையவே மாறி விட்டாள்தான். கிட்டத்தட்ட பழைய மாதிரி வந்தாள். ஆனால், முகத்தில் அந்தப் பழைய துறுதுறுப்புதான் வரவே இல்லை...''

வந்தது! அபரஞ்சி மணமாகி வந்த முதல், சில நாட்களில் அவளிடம் அந்த உற்சாகம் பீறிட்டு எழத்தான் செய்தது. ஆனால் அவள் கணவன்தான் அதை உள் ளேயே அடக்கி மூடி முத்திரையே வைத்துவிட்டானே!

ஆனால் எவ்வளவு பெரிய பிசகு நேர்ந்துவிட்டது!

தனஞ்சயனுக்குத் தன்னைச் சமாளித்துக் கொள்ளச் சற்று அவகாசம் தேவைப்பட்டது. ''நீங்கள் சற்று தூரம் அபியுடன் பேசிக் கொண்டு இருங்கள் மாமா. நான் ஒரு வேலையாகக் கோடவுன் வரை போய் வருகிறேன்'' என்று கூறிவிட்டுத் தன் ஜீப்பை எடுத்துக் கொண்டு கிளம்பினான். சற்று தூரம் ஓட்டிச் சென்றவன், பாதையை விட்டு விலகி ஒதுக்கி ஜீப்பை நிறுத்திவிட்டு அசையாமல் உட்கார்ந்திருந்தான்.



விசாரிப்பது தனக்குத்தானே அசட்டுப் பட்டம் கட் டிக் கொள்வது போல ஆகும் என்று எண்ணியிருந் தானே! ஒரு வார்த்தை விசாரித்திருந்தால் இந்த அநியா யம் நேர்ந்திராதே!

அப்போது தனஞ்சயன் படித்து முடித்த சமயம். என்னவோ, இந்த ரைஸ் மில், விவசாயத்தில் அவன் மனம் செல்லவில்லை. வேறு தொழிலில் இறங்கப் போவ தாக அவன் பிடிவாதமாகச் சொன்னபோது, உலகநாதன் முதலில் கோபப்பட்டார். இதுவே மனைவி என்றால், தன்னைக் தட்டிப் பேசியதற்காகச் சொல்லாலேயே சுட்டி ருப்பார். ஆனால் தன் வாரிசான ஆண் மகவிடம் எப்போதுமே அவருக்கு ஓர் இளக்கம் உண்டு. எனவே அவனுக்கு ஐந்து லட்சம் ரூபாயைக் கொடுத்தார். மகன் விரும்புகிற மாதிரித் தொழிலில் இறங்க அனுமதியும் கொடுத்தார். ஒரு நிபந்தனையும் விதித்தார்.

இந்தப் பணத்தைப் பயன்படுத்தித் தனஞ்சயன் என்ன தொழில் வேண்டுமானாலும் செய்யலாம். ஓர் ஆண்டு காலத்தில், அவன் கொஞ்சமேனும் லாபம் கண்டு விட்டான் என்றால், தொடர்ந்து அந்தத் தொழி லையே செய்யலாம். அப்படியின்றித் தோல்வி நேரு மானால், தந்தையின் விவசாயம், ரைஸ் மில்லுக்குத் திரும்பிவிட வேண்டும்.

தனஞ்சயனும் இதற்கு ஒத்துக்கொண்டான்.

அபரஞ்சியுடைய பெரியப்பாவின் 'பாண்டியன் கம்ப்யூட்டர்ஸ்'க்கு அப்போது மிக நல்ல பெயர். அவர் களது கிளை நிறுவனமாகக் கீபோர்ட் காம்போனன்ட் தயாரிக்கப் போவதாகவும் பங்குதாரர் தேவை என்றும் ஒரு விளம்பரம் - ஒரு சிறு விளம்பரம் வந்தபோது,

குடும்பத்தினரே பங்குகளை வைத்துக் கொள்வதற்காக, இப்படி அரைகுறையாக, அடுத்தவர் கவனத்தை ஈர்க்கா தபடி விளம்பரம் செய்திருக்கிறார்கள் என்று தனஞ்சயன் எண்ணினான். சும்மாவே கம்ப்யூட்டர் தொடர்பான எல்லாமே பணம் கொட்டுகிற தொழில்தான் என்பது அவனது எண்ணம். இது பிரைவேட் கம்பெனி என்பதை அலட்சியம் செய்து ஐந்து லட்சத்தையும் அதில் முதலீடு செய்துவிட்டான். லாப நஷ்டங்களில் பங்கு என்றது ஒப்பந்தம்.

வேலை தொடங்கும்போது அறிவிக்கப்படும் என் றதை நம்பி, ஊருக்குத் திரும்பி வந்து தந்தைக்கு உதவி செய்து கொண்டிருந்தான் தனஞ்சயன்.

ஆறேழு மாதங்கள் சென்ற பின்னரும் ஒரு தகவ லும் இல்லாது போகவே மீண்டும் சென்னை சென்று கேட்டான். எம்.டி.யாக அழகாக ஆடைதரித்து 'சீயல் லோ' காரில் வந்து சென்ற அபரஞ்சி ஒருதரம்கூட அவனைப் பார்த்துப் பேசவில்லை. பிடிவாதமாகச் சந் திப்பு மறுக்கப்பட்டு விட்டது.

ஆண்டு முடிந்தபோது பயங்கர நட்டக் கணக்கு கையில் தரப்பட்டது. அதன் அளவுமீறிய செலவுக் கணக்குகளைப் பார்த்தபோதுதான் இது நஷ்டப்பட்டு, இழுத்து மூடப்படுவதற்காகவே தொடங்கப்பட்ட நிறுவ னம்; நிறுவன டைரக்டர்களின் தனிப்பட்ட வருமானத் திற்கு இந்த இழப்பை ஈடுகட்டி வரி கட்டாமல் ஏய்ப்பது தான் நிறுவனம் தொடங்கியதின் நோக்கம் என்பது காலம் கடந்து அவனுக்குப் புரிபட, தன் பங்கில் மீதமிருந் ததைக் கேட்டு, அவர்கள் தந்த மூன்று லட்சத்தை வாங்கி கொண்டு திரும்பி விட்டான்.



இன்னும் கொஞ்ச காலம் கடந்தால் இந்தப் பணம் கூடக் கிடைக்காது என்று அவன் எண்ணியதற்குச் சரியாக, அடுத்த ஆண்டில் கம்பெனி திவாலாகி விட்டதா கக் கேள்விப்பட்டான்.

என்ன ஏது என்று எதுவும் புரியாத நிலையில் அபரஞ்சி அப்போது இருந்தது தெரியாததால், எல்லாம் அபரஞ்சியின் ஒப்புதலோடு நடந்ததாகவே தனஞ்சயன் நினைத்திருந்தான். அத்தோடு, என்னதான் நேரில் பார்த் துப் பேசியிராத போதும், பங்குதாரர், விண்ணப்பப் படிவத்தில் ஒட்டியிருந்த புகைப்படத்திலும், பிற்பாடு அலுவலகத்தில் போக வர இருக்கும்போது அபரஞ்சி தன்னைப் பார்த்தே இருக்கவேண்டும் என்றும் அவன் தீர்மானித்திருந்தான். அவன் அவளை அப்படித்தானே பார்த்தான்? அவள் கண்டுகொள்ளவில்லையா? எனவே, அவனை அறிந்தே இராதவள் போல அவள் நடந்து கொண்டது வெறும் நடிப்பு. கைதேர்ந்த சாகசம் என்பதே அவன் ஆய்ந்து அறிந்த முடிவாக இருந்தது.

அதே எண்ணத்தில் என்னென்ன செய்துவிட்டான்?

இப்போது பார்த்தால், அந்தச் சமயத்தில் நேரில் பார்த்துப் பேசியிருந்தால் கூட அவளுக்கு இப்போது அவனை அடையாளம் தெரிந்திராது என்றல்லவா தோன்றுகிறது?

எப்பேர்ப்பட்ட இமாலயத் தவறு நேர்ந்து விட்டது? கழிவிரக்கத்தில் தனஞ்சயன் கொஞ்சநேரம் துடித்துப் போனான்?

பாவம்! கர்ப்பிணிப் பெண்! அவளுக்கு அது இது என்று எதுவும் வாங்கிக் கொடுக்கக்கூட இல்லையே

என்று மறுகினான். இப்போது ஏதாவது வாங்கிக் கொடுப்பது என்றாலும் அவள் என்ன ஆசைப்படுகிறாள் என்பதைக்கூட அவன் அறிந்து கொள்ளவில்லையே!

முதலில் அந்தத் தவறைத் திருத்தவேண்டும். அபரஞ்சி - அவனுடைய அருமை ரஞ்சிக்கு என்னென்ன வேண்டும் என்று கேட்டு அறிந்து அத்தனையும் வாங்கிக் கொடுக்க வேண்டும். அவள் எதை விரும்பினாலும் வாங்கித் தர இப்போது அவனிடம் அவனது சொந்தப் பணமே இருக்கிறதே! இத்தனை நாள் படுத்தியதற்கு, இருமடங்காக ஈடு செய்வதுபோல அவளை ஒரு ராணி போல வைத்துக் கொள்ள வேண்டும்! என்னென்ன வழிகளில் முடியுமோ, அத்தனை விதத்திலும் அபரஞ்சியைச் சந்தோஷப்படுத்த வேண்டும்!

ஒரு முடிவுக்கு வந்துவிட்டபின் ஒருவாறு நிம்மதி அடைந்தவனாகத் தனஞ்சயன் வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தான்.

ஆனால் அவனது தீர்மானம் தெரியாமல், முன் போலவே அபரஞ்சி கணவனின் முன்னிலையிலிருந்து விலகி, விலகிப் போனாள்.

காரணம் புரிந்து உள்ளூர வேதனைப்பட்டபோதும், எல்லாம் இன்னும் கொஞ்ச நேரம்தானே? இன்றிரவு என் கண்மணி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கும்படி செய்துவிடுகிறேன் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் தனஞ்யன்.

ஆனால், அபரஞ்சியைத் தனியாக சந்திப்பதற்கே இரவு உணவு முடிந்த பின்னரும் அவன் வெகுநேரம் காத்திருக்க நேர்ந்தது.



இந்த வீட்டில் உள்ளவர்களுக்குப் போலவே, வந்தவர்களுக்கும் அவரவர் விருப்பப்படி, பால், காம்ப்ளான், மைலோ என்று தனித்தனியாகக் கலந்து, சூடு பதமாக ஆற்றிக் கொடுத்துவிட்டு, எல்லோருடனும் சேர்ந்து சற்று நேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு, ஒரு வழியாக அபரஞ்சி உறங்குவதற்கென்று அவர்களது அறைக்கு வந்தபோது மணி பன்னிரெண்டைத் தொட்டு விட்டது.

அப்படி வந்தபிறகும், கணவனின் எந்தப் பேச்சையும் கேட்கும் மனநிலையில் அவள் இருக்கவில்லை.

லேசாகத் தளர்ந்த நடையுடன் அறையினுள் வந்தவள், நேராக டிரஸ்சிங் டேபிள் மோடாவின் மீது அமர்ந்து, பெரியவர்களின் சொல்லுக்கிணங்க அன்று முழுவதுமே, அணிந்து கொண்டிருந்த சில அதிகப்படி நகைகளைக் கழற்றலானாள்.

''உன்னிடம் ஒன்று கேட்க வேண்டுமே...'' என்று தொடங்கிய தனஞ்சயனுக்கு அவள் பதிலே சொல்லாமல் தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

அருகில் வந்து நின்று, ''இது மாதிரி நிலையில் பெண்களுக்கு ஏதேதோ ஆசை தோன்றுமாமே. அப்படி நீ ஏதாவது ஆசைப்படுகிறாயா, அபரஞ்சி? இருந்தால் சொல்லு, வாங்கித் தருகிறேன்.'' என்றான் அவன்.

''ஆடு மாடெல்லாம் அப்படியா ஆசைப்படுகிறது'' என்று சுள்ளென்று கேட்கத் துடித்த நாவை அடக்கி, ''ஒன்றும் இல்லை'' என்று சுருக்கமாகப் பதிலிறுத்து விட்டு கழற்றிய நகைகளை அததற்கு உரிய டப்பாக்களில் எடுத்து வைத்தாள் அபரஞ்சி.

கணவன் மனம் மாறி விட்டது புரியாமல் பேசுகிறாள் என்பதை உணர்ந்திருந்த தனஞ்சயன் சாந்தமா

கவே பேசினான். 'டிரஸ்சிங் டேபிள்' மேல் லேசாகச் சாய்ந்தபடி நின்று, ''உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும், அபி'' என்றான்.

நகைகள் அடங்கிய டப்பாக்களை எடுத்து அலமாரியில் வைத்துப் பூட்டியபடி அபரஞ்சி சொன்னாள், ''எனக்கு இப்போது களைப்பாக இருக்கிறது.'' என்று தொடங்கியவள், மேடிட்ட வயிற்றைக் காட்டி, ''இதனால் களைத்து விட்டதாகச் சொல்லவில்லை. ஆடுமாடு குட்டி போடுவது போலத்தான் இதுவும். பெரிதுபடுத்த ஒன்றும் இல்லை என்பது எனக்கு நீங்கள் நினைவுபடுத்தாமலே நன்றாகத் தெரியும். ஆனால் பாருங்கள் வழக்கமான வேலைகள் மட்டும் இல்லாதபடி, இந்த விழாவுக்காக நாலைந்து நாட்களாகவே அத்தைக்கும் எனக்கும் அதிகமான வேலை. வீடு ஒதுக்கி, விருந்தினரை உபசரித்து, விழா நடத்தி, மீண்டும் சாமான் ஒதுக்கி, விருந்து சமைத்து... இதெல்லாம் ஆடும் மாடும் செய்வதில்லை என்று நினைக்கிறேன். வேலை மிகுதியில் சாப்பிடக்கூட பிடிக்காது போயிற்று. எல்லாமாகச் சேர்ந்தே களைப்பு என்று தோன்றுகிறது. உடம்பு கழுவிவிட்டு படுத்துத் தூங்கினால் நல்லது என்று தோன்றுகிறது'' என்றாள் வரண்ட குரலில் ஒப்பிப்பது போல.

அவன் சொன்ன வார்த்தைகள் தான். உள்ளூர வருந்தியபடி, ''உனக்கு என் மேல் கோபம் இருக்கும்!'' என்று மீண்டும் தொடங்கினான் தனஞ்சயன்.

''கோபமா!? நானா? அதுவும் உங்கள் மீதா?'' என்று அபரஞ்சி உதட்டைப் பிதுக்கினாள். ''இந்த வீட்டு மருமகள்களுக்கு யார் மீதும் - அதுவும் முக்கியமாக கணவனிடம் கோபப்பட உரிமை கிடையாது என்று



எனக்கு நன்றாகவே தெரியுமே!'' என்று ஏளனமாக உரைத்தபடி நைட்டியையும் டவலையும் எடுத்தாள் அவள்.

''கோபம்தான் இல்லையா? ஆனால் எனக்கு ஒரு காரணம் இருந்தது, ரஞ்சி.'' என்றான் அவன் கனிவாகவே.

அந்த 'ரஞ்சியி'ல் கண் கலங்கியது அவளுக்கு. இன்னமுமா இந்தப் பைத்தியக்காரத்தனம் என்று தன் மீதே ஆத்திரம் கொண்டவளாய், ''நிச்சயமாய்!'' என்றாள் அவள். ''இந்த வீட்டு ஆண் என்பதே போதுமான, வெகு நியாயமான காரணம்தானே?'' என்றபடி குளியலறையை நோக்கி நடந்தாள்.

''ஒரு நிமிடம்'' என்று அவசரமாக அவளுக்கு முன் உள்ளே சென்று 'கீசரை' ஆன் செய்து விட்டு வந்தான். ''இவ்வளவு நேரத்துக்குப் பிறகு குளிர் நீரில் குளிப்பது நல்லதல்ல... வெந்நீரில் குளி.'' என்றான் தனஞ்சயன்.

'ரொம்பவும் கரிசனம்தான்' என்று ஆத்திரமாக எண்ணியவளுக்கு, உடல் தளர்வினாலோ என்னவோ அழுகை வந்து விட்டது.

அபரஞ்சி குளித்து முடித்து வருவதற்காகத் தனஞ்சயன் காத்துக் கொண்டு நின்றான்.

அவன் நினைத்து வந்தது போல விஷயம் இலகுவாக முடியும் போல இப்போது அவனுக்குத் தோன்றவில்லை.

அவன் பார்த்த அளவில், தந்தை தாயாரை எவ்வளவோ மோசமாக நடத்தியபோதும், அப்போதைக்கு

அழுதாலும் கூட 'பாவம்' என்று கணவரின் செயலுக்கு ஏதாவது காரணம் சொல்லுவாள் சரளா. அத்தோடு, உலகநாதன் அத்திபூத்தாற்போலப் பிரியமாய் இரண்டு வார்த்தை பேசிவிட்டாலோ ஒரேயடியாக உச்சி குளிர்ந்து அவள் மகிழ்ந்து போவதும் உண்டு.

ஆனால், அபரஞ்சி அவ்வளவு எளிதாக இளகு வாள் போலத் தனஞ்சயனுக்குத் தோன்றவில்லை.

ஒருவேளை... உலகநாதனின் நடத்தைக்குத் தங்கை யின் மூட்டிக் கொடுத்தல் என்று ஒரு காரணம் இருந்த தால் சரளாவால், சமாளித்துப் போக முடிந்ததோ?

தனக்கு அது இல்லை என்பதுதான் அபரஞ்சியின் கோபத்துக்குக் காரணமோ?

வென்னீர் குளியலும், உடம்பு அலுப்புமாக, அப ரஞ்சிக்குக் குளியல் அறையிலேயே படுத்து உறங்கி விடலாம் போல இருந்தது. தளர்ந்த நடையுடன் அவள் குளியலறையை விட்டு வெளியேறியபோது, அவளுக் காக காத்திருந்தாற்போலத் தனஞ்சயன் நின்றது அவ ளுக்கு எரிச்சலையே தந்தது.

அவனைக் கவனியாதது போலச் சென்று படுக்கை யில் அமர்ந்தாள்.

அவள் படுப்பதற்கு ஆயத்தங்கள் செய்யவும், ''சற் றுப் பொறு, அபி'' என்று அவள் அருகே வந்து அமர்ந்தான் தனஞ்சயன். தளர்ந்து கிடந்த அவளது கையைப் பற்றி ''ஏதாவது ஆசை இருக்கிறதா, என்று கேட்டேனே?'' என்று சிறு வற்புறுத்தலோடு கனிவான குரலில் வினவினான்.



ஏதாவது ஆசையைச் சொல்லாமல் அவள் படுக்க முடியாதாக்கும்?

உள்ளூர மூண்ட சினத்துடன் அபரஞ்சி அவளு டைய கணவனை ஏறிட்டாள். ''இத்தனை நாளில் ஒரே ஓர் ஆசைதான் தணியாத தாகமாய் இருந்து கொண்டே இருக்கிறது. ஆனால் நான் ஆசைப்படுவது ஒரு நாளும் நடக்காது.'' என்றாள் கசந்த குரலில். ''எனவே அதைச் சொல்வதில் பயனில்லை.''

உற்சாகத்தோடு, ''அது என்னவென்று சொல்லு'' என்று விரட்டினான் தனஞ்சயன்.

ஒரு ஆத்திரப் பார்வையுடன், ''தினமும் எனக்கு உங்கள் முகத்தைப் பார்க்கத் தேவை இல்லாத நிலைமை வேண்டும். அவ்வளவுதான். போதுமா?'' என்று எரிந்து விழுந்தாள் அவள்.

அவன் சற்றுத் திகைத்து நோக்கவும், ''முடியாதல் லவா? அதற்குத்தான் சொன்னேன். தொண தொணத்தீர் களே!'' என்று மீண்டும் வெடுவெடுத்தாள்.

''அபி, நான் கொஞ்சம் மோசமாக நடந்து கொள்ள ஒரு காரணம் இருக்கிறதம்மா..'' என்று தொடங்கி ரத்தினச் சுருக்கமாக முன்பு தவறாக நினைத்தது பற்றி விளக்கினான். ''இப்போது உன் கோபம் தீர்ந்ததா?'' என்று சற்று சரசமாக வினவினான். தனக்கு ஒரு காரணம் இருந்ததே தன் நடத்தைக்குப் போதுமான சமாதானம் என்று நினைத்தான் போலும்!

ஆனால், கண்களில் கோபமும் வெறுப்பும் கனலாய் எரியக் கணவனை வெறித்து நோக்கினாள் அபரஞ்சி. ''தீரவில்லை அதிகமாகி விட்டது'' என்றாள் கொதிப்

புடன். ''எத்தனை நாட்கள்! எத்தனை மணிநேரங்கள்! எத்தனை சம்பவங்கள்! விடிவே இல்லையே என்று எவ்வளவு வேதனைப் பட்டிருப்பேன்! இந்த நாட்களில் வாழ்வையே முடித்துக் கொண்டால் என்ன என்று நான் எத்தனை தடவை...''

''அபரஞ்சி!'' என்று அதிர்ந்தான் தனஞ்சயன்.

''ஆமாம், பலமுறை அப்படி நான் நினைத்தது உண்மைதான். ஆனால் என் அப்பா? அம்மாவை இழந்து ஏற்கனவே மனம் நொந்து கிடப்பவர். அவருக்காகவே அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். ஐயோ! எவ்வளவு பெரிய கொலைக் குற்றவாளிக்குக் கூடத் தன்னை விளக்க ஒரு வாய்ப்பு கொடுப்பார்களே! கோர்ட்டில் வக்கீல் கூட வைத்துக் கொடுப்பார்களே! ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்! மனிதத்தன்மையே இல்லாத அரக்கனாக அல்லவோ நடந்த கொண்டீர்கள்! செய்த குற்றம், செய்யாத குற்றம் என்பதை விடுங்கள். எதற்கும் விளக்கம் தர ஒரு வாய்ப்பு நீங்கள் தரவில்லையே! தராமல் என்னென்ன கொடுமை! அடித்து உதைத்தால்தானா கொடுமை? என் மனதை எப்படியெப்படிக் காயப்படுத்தினீர்கள்? முன்பேனும், உங்கள் வீட்டு வழக்கம் இது; மனைவியைக் கிள்ளுக் கீரையாக நினைத்து, மதியாது நடத்துவது உங்கள் வீட்டு மரபு என்று நினைத்துக் கொஞ்சம் மனதைச் சமாதானம் செய்துகொண்டேன். கடைசியில் பார்த்தால்... நீங்கள் எனக்குத் தண்டனையா கொடுத்தீர்கள்? சொல்லுங்கள், என்னைத் தண்டிக்க நீங்கள் யார்? கழுத்தில் தாலி கட்டியதினாலேயே நீங்கள் எனக்கு நீதிபதி ஆகிவிட முடியுமா? சே! முன்பானாலும் சில மாதங்கள் உங்களைப் பிரிந்து இருந்தாலே போதும் என்று எண்ணினேன். இப்போது வாழ்க்கை முழுமைக்குமே உங்கள் முகத்தில் விழிக்க எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை! அய்யோ அப்பா, அந்தச் சிலமாத நிம்மதியைக் கூட அசட்டுத்தனமாகக் கெடுத்து விட்டீர்களே!'' என்று தன் கொதிப்பையெல்லாம் பொழிந்து கொட்டி விட்டு, முகத்தை மூடிக் கொண்டு அழுதாள் அவள்.



செய்வது அறியாமல் தனஞ்சயன் திகைத்துப் போனான். சற்று நேரம் அழுது விட்டு, ''சின்ன அளவிலேயே என் ஆசை நிறைவேறவில்லை. வாழ்க்கை முழுவதற்கும் என்றால் நடக்குமா என்ன? ஆசை! மண்ணாங்கட்டி!'' என்றாள் அபரஞ்சி குரலில் வெறுப்பும் நிராசையுமாக.

சிறு அமைதிக்குப் பின் ''நடக்கும்!'' என்றான் தனஞ்சயன். ''நீ நினைத்தது நடக்கும் அபரஞ்சி, ஒரு சில நாட்கள் பொறுத்துக் கொள். அதன் பிறகு உன் ஆசை நிச்சயமாக நிறைவேறும்'' என்றான் அவன், தணிவான, ஆனால் மிக உறுதியான குரலில்.

## 9

**த**னஞ்சயன் என்னதான் உறுதியான குரலில் வாக்களித்த போதும், அதை அவன் நிறைவேற்றுவான் என்று அபரஞ்சி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

எப்படி எதிர்பார்ப்பாள்? பிரசவம் இங்கேதான் என்று அவளைப் பெற்ற தந்தையே ஏற்பாடு செய்து முடித்து விட்டார். தஞ்சையில் புகழ்பெற்ற மருத்துவ மனை ஒன்றில் பேறுகாலத்திற்காக அறைக்கு இப்போதே

முன்பணம் கட்டியாயிற்று. ஒன்பது மாதங்கள் முடியும் வரையும் வீட்டில் இருந்து மாதாந்திரப் பரிசோதனைக்காக டாக்டரிடம் சென்று வருவதாகவும், ஒன்பது முடிந்த பின், டாக்டரம்மாளின் ஆலோசனைக்கிணங்க, பிரசவம் நடக்கக்கூடும் என்று அவர்கள் எதிர்பார்க்கும் நாளைக்கு நாலைந்து நாள் முன்னதாகவே மருத்துவ மனையில் போய்ச் சேர்ந்து விடவேண்டும் என்றும் சரளா கூடவே இருப்பது என்றும் எல்லாமே திட்டமிட்டு முடித்து விட்டார்கள்.

எனவே அபரஞ்சி, இந்த வீட்டிலேயேதான் மருத்துவ மனையில் சேர்வதற்காகச் செல்லும் வரை, இருக்கப் போகிறாள்.

அவளைப் போலவே, தனஞ்சயனும் இதே வீட்டில் தான் வசிக்கப் போகிறான். ஏற்றுமதி 'ஆர்டர்' பிடிக்க முன்போல அரபு நாடுகளுக்குச் செல்லும் அவசியம்கூட இல்லை. 'ஆர்டர்'கள் எல்லாம் 'ஃபேக்சி'லேயே வந்து விடுகின்றன. தேவை அதிகமாகிறதே தவிர, விற்பனையில் தேக்கமும் கிடையாது. எனவே விற்பனைப் பெருக்கத்துக்காக யாரும் அங்கு செல்லும் திட்டமும் இல்லை. உற்பத்தியை இன்னமும் பெருமளவு பெருக்கும் வரை புதிதாக எங்கும் செல்லவும் வழியில்லை. ஆக, இந்த வீட்டில்தானே அவனும் இருந்தாக வேண்டும்.

அப்படி இருவரும் ஒரே வீட்டில் இருக்கும்போது ஒருவர் முகத்தை ஒருவர் முக்கியமாக அவன் முகத்தை அபரஞ்சி பார்க்க நேராமல் எப்படி இருக்க முடியும்? ஒருவேளை, உத்தமபுத்திரன் சினிமா மாதிரி முகமூடி ஏதும் போட்டுக் கொள்ளப் போகிறானாமா என்று ஏளனமாக எண்ணியபடி, படுக்கையில் கணவனுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு அபரஞ்சி படுத்தாள்.



எல்லாம் சும்மா. அந்த நேரத்துப் பீற்றலுக்காகச் சொல்லப்பட்ட பொய்! ச்சு! என்று எண்ணமிட்டவள், தன்னை மீறிய களைப்பில் உடனேயே கண்ணயர்ந்து, ஆழ்ந்து உறங்கிவிட்டாள்.

அருகே கிடந்த நாற்காலியில் அமர்ந்து, இருளில் அரைகுறையாகத் தெரிந்த மனைவியின் வரிவடிவத்தை வெகு நேரம் தனஞ்சயன் பார்த்துக் கொண்டிருந்தான் என்பது அவளுக்குத் தெரியாது.

மறுநாள் காலை உணவின்போது, தந்தைக்கும் மகனுக்கும் இடையே சிறுவாக்குவாதம் ஒன்று நடைபெற்றது. ''நம் வீட்டில் அது எப்படி முடியும்? ஊகூம். கொஞ்சமும் சரிப்படாதுடா. ஊகூம். இப்படி ஒரு மடத்தனமான யோசனை உனக்கு எப்படித்தான் வந்ததோ? விட்டுவிடு'' என்று உலகநாதன் சற்று உரக்கவே மறுத்தது பெண்களின் காதுகளில் விழுந்தது.

''விடமுடியாதப்பா. ஒன்று மனதில் அழுத்தமாகப் பட்டு விட்டால் அதைச் செய்து விடவேண்டும். செய்யாமல் விட்டு ஏடாகூடமாக ஏதேனும் நடந்து விட்டால் பிறகு தாங்க முடியாது என்பீர்களே. எனக்கு இப்போது ரொம்பவும் அப்படித் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் ஏடாகூடமாக ஏதாவது நடந்தால் நம்மால் தாங்க முடியுமா, சொல்லுங்கள்?'' என்று தனஞ்சயன் வற்புறுத்திப் பேசினான்.

சரி; அவர்களுக்குள் ஏதோ; நமக்குச் சம்பந்தம் இல்லை என்று அபரஞ்சி தன் வேலையைப் பார்க்கப் போனாள்.

ஆனால், அன்றிரவில், ''உன் சாமான், துணிமணி எல்லாம் எடுத்து வைத்துக் கொள், அபரஞ்சி. நாளன்று சென்னைக்குச் செல்ல ரயிலில் டிக்கட் வாங்கிவிட்டேன்.

இப்போதைக்குக் குழந்தை பிறக்கும்வரை சென்னையில் இருக்கட்டும் என்று அப்பாவிடம் சொல்லியிருக்கிறேன். அதற்கு மேல் வேறு ஏதாவது வழி தேடலாம்'' என்று, தனஞ்சயன் சொன்னபோது அபரஞ்சிக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை.

''ஆனால் தஞ்சை மருத்துவமனையில்தானே...'' என்று தொடங்கியவளை அவன் இடைமறித்துப் பேசினான். ''இல்லை. சென்னையில் வைத்துக் கொள்ள முடிவு செய்தாயிற்று. அம்மா உன்கூட இருப்பார்கள். வடிணியும்தான். அவளுக்கும்தான் விடுமுறை தொடங்கி விட்டதே. சென்னையில் நமக்கு ஒரு வீடு இருக்கிறது. அரசாங்கத்துக்கு நெல் அரைத்துக் கொடுத்ததற்குப் பணம் வாங்க, ஏதாவது கேஸ் என்றால் பார்க்க, என்று சென்னை செல்லும்போது தங்குவதற்காக வாங்கியது. அங்கே தங்கிக் கொள்ளுங்கள். டாக்டர், மருத்துவ மனை எல்லாம் உன் பெரியம்மா அத்தை யாரிடமாவது கேட்டு ஏற்பாடு செய்து கொள்ளலாம்... வேறு விவரம் ஏதாவது தெரிய வேண்டுமா?'' என்று கணவன் கூறவும் அபரஞ்சி திகைத்துப் போனாள்.

அவளது முன்தினப் பேச்சிற்கு அவனது எதிரொலிதான் இது! ஒன்றும் செய்யமாட்டான் என்று நினைத்தாளே! எப்படியோ நடத்திக் காட்டி விட்டானே!

இந்தப் பிரிவு அவள் ஆசைப்பட்ட ஒன்றுதான். ஆனால் ஆசைப்பட்டது கிட்டியது என்று மனம் துள்ளவில்லை. மாறாக, என்னவோ நெஞ்சுக்குள் பிசைவது போல ஓர் உணர்ச்சி உண்டாயிற்று.

புறப்பட்ட இடத்துக்கே வந்து சேரும் செக்கு மாடு போலக் குழந்தை பிறந்ததும் மீண்டும் இங்கே வந்துதானே ஆக வேண்டும் என்பதால் இந்தச் சிறு ஆசை



நிறைவேறலில் உற்சாகம் ஏற்படவில்லையோ என்று நினைத்தாள் அபரஞ்சி.

ஆனால், இந்தச் சிறுபிரிவைச் சாதித்ததுபோல, அவளுடைய கணவன், அவர்களது நிரந்தரப் பிரிவுக்கும் ஏற்பாடு செய்துவிடக் கூடும் என்று எண்ணிப் பார்த்த போதும்கூட ஏனோ அவளுக்கு உற்சாகம் உண்டாக மறுத்துவிட்டது.

ஒருவேளை அவனுக்கும் அவள் மீதான வெறுப்பு ரொம்பவும் வேரோடிப் போயிற்றோ. அதனால்தான் இந்தப் பிரிவுக்கு ஏற்பாடு செய்தானோ என்று யோசனை ஓடியது.

இவன் இப்போது என்ன கேட்கச் சொல்லுகிறான்; இவனிடம் என்ன கேட்பது என்று ஒன்றும் தோன்றாமல் அபரஞ்சி வாயடைத்து நிற்கையில் தனஞ்சயனாகவே சில விவரங்களைத் தந்தான்.

அங்கே வீட்டில் டிரைவரோடு ஒரு கார் எப்போதும் நிற்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். டிரைவருடைய மனைவி வீட்டு வேலை செய்வாள். நம்பகமான குடும்பம். தைரியமாக, ஆறுமுகத்தை அழைத்துக் கொண்டு எங்கே வேண்டுமானாலும் போய் வரலாம்; அவன் மனைவி முத்தம்மாவிடம் வீட்டை விட்டுவிட்டு, எங்கு வேண்டுமானாலும் வெளியே போகலாம். இங்கே மாதிரி வேலை வேலை என்று உடலை வருத்த வேண்டாம். மாறாக, கடற்கரை, பூங்கா, ஷாப்பிங் என்று வெளியே போய் வந்தால் அதுவே உன் மனதுக்கும் உடம்புக்கும் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்... அதனால் அனாவசியமாக வேலை எதையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்ய வேண்டாம். என்ன?''

ஆகா! என் புருஷனுக்கு என் மீது என்ன கரிசனம்! என்று அகமகிழ்ந்து போய் மனைவி நன்றி சொல்லுவாள் என்று தனஞ்சயன் எதிர் பார்க்கவில்லைதான்.

அப்போதைய அவளது மனநிலையில் அது நடவாத காரியம் என்று அவன் ஊகித்தும் இருந்தான்தான்.

ஆனால், அவன் சொன்னதை ஏற்றுக் கொண்டதன் அறிகுறியாக 'இம்' என்ற சிறு ஒலிக்குறிப்பேனும் கிடைக்கக்கூடும் என்ற நப்பாசையில், சற்றுத் தாமதித்துப் பார்த்தான்.

ஆனால் அவள் பேச்சு மறந்தவள் போல் பேசாமல் நிற்கவும், தன்னையறியாமல் எழுந்த பெருமூச்சை ஓசையற்று வெளியேற்றி விட்டு, "சென்னைக்கு, உங்களை அங்கே கொண்டுவிட அப்பாதான் வருவார். அங்கே உன் பெயரில், அருகில் உள்ள பாங்கில் கணக்குத் தொடங்கச் சொல்லியிருக்கிறேன். ஓரளவு பணம் போடுவார். மேல் செலவுக்கு இங்கிருந்து பணம் அனுப்புகிறேன். சரி. உனக்கு அசதியாய் இருக்கும். படுத்துத் தூங்கு. நான் அப்பாவிடம் சற்றுப் பேசி விட்டு வருகிறேன்..." என்று கூறி, கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று விட்டான்.

தந்தையிடம் பேசப் போவதாகச் சொன்னவன், அவர் இருக்கும் முன்புறம் செல்லாமல் பின்புறமாய்ச் சென்று தோட்டத்திற்குச் செல்வதை ஜன்னலின் வழியே, அபரஞ்சி சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள்.

இவளுக்காக மலையைப் புரட்டியிருக்கிறோம்; இவளுக்கு நன்றியே இல்லையே என்ற கோபமோ?

இருக்கட்டுமே என்றது அவள் மனது. இவனுக்காக எத்தனை தடவைகள் அவள் மலையைப் புரட்டியிருக்கிறாள், செய்தறியாத எத்தனை எத்தனை வேலைகளை



முயன்று, சரியாகச் செய்து விட்டு ஒரு பாராட்டுக்காக எத்தனை முறை காத்திருக்கிறாள். ஒரே ஒருமுறை கண்ணாலாவது - முகபாவத்தினாலாவது அவன் அவளைப் பாராட்டியது உண்டா?

மாறாக எத்தனை குத்தல்கள், ஏளனங்கள்! எவ்வளவு வேலை செய்கிறாள் என்று கண்ணால் பார்த்த பிறகும், 'உண்டது செரிக்க மலைப்பாம்பு போல தரையில் கிடந்து உருளுவாயா' என்று கேட்டானே!

இன்று இவன் அவளுக்காக ஒரு விரலை அசைத்து விட்டான் என்று ஓடிவந்து காலில் விழுந்து விட வேண்டுமா?

அவனே முன்பு சொன்னதுபோல, அதற்கு அவன் வேறு ஆளைப் பிடித்திருக்க வேண்டும்!

அலட்சியமாகத் தோளைக் குலுக்கிவிட்டு, தன் வழமையான பல் தேய்த்தல், குளித்தல் எல்லாம் முடித்துக் கொண்டு அயர்வோடு வந்து படுத்த அபரஞ்சி, இன்னமும் தனஞ்சயன் படுக்கவரவில்லையே என்று எண்ணியபடியே மெல்லக் கண்ணயர்ந்தாள்.

மறுநாள் காலையில் அபரஞ்சி விழித்து எழுமுன், தனஞ்சயன் எழுந்து சென்றுவிட்டிருந்தான்.

முகத்தைப் பார்க்கத் தேவை இல்லாத நிலை வேண்டும் என்ற அவளது ஆசையை துரை அச்சுப் பிசகாமல் நிறைவேற்றுகிறாராக்கும் என்று ஏளனமாக எண்ணியபடி தன் காலை வேலைகளை முடித்துக் கொண்டு மாமியாரிடம் அபரஞ்சி சென்றாள்.

சரளாவும் மருமகளின் வரவுக்காகத் துடித்துக் கொண்டு இருந்தது போல, "தனா சொன்னான். அபி என்ன இது திடீரென்று? நீ ஏதும் சென்னைக்குப் போக

வேண்டும் என்று ஆசைப்பட்டாயா?'' என்று விசாரித்தாள்.

அவளது ஆசைக்காகத்தான். ஆனால், அந்த ஆசை இன்னது என்று தெரிந்தால் இந்த அன்பான அத்தை மிகவும் வருத்தப்படுவாள் என்பதால், ''சென்னைக்குப் போக வேண்டும் என்று நான் கேட்கவே இல்லை, அத்தை. அங்கே போயே ஆக வேண்டும் என்று எனக்கு ஆசையும் கிடையாது!'' என்று ஒருவகையில் முழுமையான உண்மையை உரைத்தாள் மருமகள்.

''பின்னே ஏன்... அதுவும் இங்கே எல்லாம் போட்டுவிட்டு...'' என்று சரளா குழம்பினாள்.

''மாமா என்ன சொன்னார்கள் அத்தை?'' என்று அபரஞ்சி விசாரித்தாள்.

''என்ன சொல்லுவார். நாளை சென்னைக்குக் கிளம்ப வேண்டும் என்று உத்திரவு போட்டார். குழந்தை பிறக்கும் வரையும் மூன்று பெண்களுமாக அங்கேதான் இருக்கப் போகிறீர்கள்; பிறந்து நீ பயணம் செய்யலாம் என்று டாக்டர் அனுமதி கொடுத்ததும் இங்கே திரும்பி வந்து விடலாம் என்றார்.''

''கலைவாணியின் படிப்பு?''

''இப்போது லீவுதானே? பிறகு தேவைப்பட்டால் ஒரு மாதமோ இரண்டு மாதமோ லீவு போட்டுக் கொள்ளலாம் என்கிறார். என்ன படித்துவிட்டு உன் பெண் கலெக்டர் உத்தியோகமா பார்க்கப் போகிறாள்? வேண்டுமானால் அடுத்த ஆண்டு சேர்த்துப் படித்துக் கொள்ளட்டும் என்றார்...'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருக்கும்போது, கலைவாணியே இங்கு வந்து சேர்ந்தாள்



பரபரப்பும், கவலையும், மகிழ்ச்சியுமாக விசித்திரக் கலவையாக இருந்தது அவள் முகம். ''அண்ணி, உங்களுக்கு நேரம் இருந்தால் என் துணிமணிகளை எடுத்து வைப்பதில் கொஞ்சம் உதவி செய்கிறீர்களா? என்னுடையதில் எதெது சென்னையில் அணியப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. 'அங்கே உங்கள் உறவினர் முன் பட்டிக்காடாய்த் தோன்றிவிடக் கூடாதே என்று இருக்கிறது. சும்மாவே பழங்காட்டூர் என்று கிண்டல் செய்தார்களே!'' என்றாள் அவள்.

''இதோ, இப்போதே போகலாம். அத்தை, ஏதேனும் செய்ய வேண்டியிருந்தால் என்னைக் கூப்பிடுங்கள்'' என்று மாமியாரிடம் உரைத்துவிட்டு நாத்தனாருடன் நடந்தாள் அபரஞ்சி.

''உனக்கு ஒன்றும் கஷ்டமாக இல்லையே, வாணி?'' என்று மெல்லக் கேட்டாள்.

''எது...? ஓ. சென்னை செல்வதா? படிப்பை நினைத்தால் கொஞ்சம் கவலைதான், அண்ணி. ஆனால் உங்கள் உறவில் நம் 'செட்' எல்லோரையும் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அங்கே போனால் அவர்களைப் பார்த்துப் பழகலாம். அப்புறம்...'' என்று திரும்பி அன்னை இருக்கும் இடத்தை நோட்டம் விட்டு, திருப்தியுற்றவளாய், ''இதைச் சொன்னால் அம்மாவுக்குப் பிடிக்காது. ஆனால் அண்ணி, அப்பாவோ, அண்ணனோ யார் எதற்காக எப்போது அதட்டுவார்களோ என்று கவலைப்பட்டுக் கொண்டே இராமல், நாம் மூவரும் தனியாக இருக்கப் போவது எவ்வளவோ நன்றாகத்தான் இருக்கிறது, அண்ணி'' என்று உரைத்து ஒரு கண்ணால் அண்ணிக்காரியை நோக்கினாள் வாணி.

நாத்தனாரை, லேசான குறும்புன்னகையுடன் நோக்கி, ''நான் நினைத்ததை எல்லாம் நீ சொல்லும் போது...'' என்று இழுத்தவள், ''போகட்டும் விடு. அத்தை சொல்வது போலக் 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை'' என்று அபரஞ்சி சொல்லிக் கொண்டிருக்கும் போதே கலைவாணியின் அறை வந்துவிட, இருவரும் உள்ளே சென்றபடி, ''அது அப்பா, அண்ணனுக்கும் பொருந்தும்தானே.'' என்றாள்.

ஆனால் கணவனுக்கு மட்டும் அது பொருந்தாது என்றும் உள்ளூரக் கூறிக் கொண்டாள் அபரஞ்சி.

## 10

மறுநாள் சென்னைக்குப் பெண்கள் மூவரும் உலக நாதனோடு கிளம்புகிற நாளில் தந்தைக்கும் மகனுக்கும் ஒரு சிறு உரசல் நிகழ்ந்தது. அதன்மூலம், இந்தக் காரியத் தைத் தனஞ்சயன் எப்படிச் சாதித்தான் என்பதும் பெண் கள் மூவருக்கும் புலனாயிற்று.

காலை உணவு அன்று இட்டிலியும், சாம்பார் சட்னி யும். குக்கர் இட்டிலி உலகநாதனுக்குப் பிடிக்காது. பழைய நாள்போல, இட்டிலித் தட்டில் துணி விரித்து, மாவு ஊற்றி, இட்டிலிப் பானையில்தான் வேகவைத்தாக வேண்டும். அதுவும் ஆவி பறக்க முதலில் மூன்று இட்டிலி வைத்து விட்டு அதை அவர் உண்டு முடிக்கும் போது அடுத்த ஈடு வேக வைத்து, மீண்டும் ஆவி பறக்கப் புதிதாக எடுத்த இட்டிலிதான் வந்தாக வேண்டும்.

இரண்டாவதாக வந்த இட்லிகளை உண்ணத் தொடங்கியபோதே அவர் முகம் மாறிவிட்டது. ''என்



னடா மடத்தனம்! இவர்கள் மூவரும் சென்னைக்குப் போய் விட்டால் நாம் என்னத்தைச் சாப்பிடுவது? ஊற வைத்த பிண்ணாக்கையா? என்னமோ மனதில் தீவிரமா கப் பட்டு விட்டதாம். செய்தே ஆக வேண்டுமாம்! மண்ணாங்கட்டி! முன்னேயும் இப்படித் தீவிரமாகத் தோன்றித் தானே தொழில் கிழில் என்று இரண்டு லட்சம் ரூபாயைத் தொலைத்து விட்டு வந்தாய்? இப்போது மட்டும் உன் மனம் சொல்வது சரியாய் இருக்கும் என்று என்ன நிச்சயம்?'' என்று எரிந்து விழுந்தார் அவர்.

இலையில் குறைந்திருந்த சட்டினியை ஊற்றி விட்டு அபரஞ்சி அகன்றாள். நேற்று முன்தினம் கணவன் சொன்ன தொழில் தோல்வி அவளுக்கு நினைவு வந்தது. தனஞ்சயனின் லேசாகக் கன்றிய முகம், அந்தத் தோல்வி பற்றிய பேச்சு அவனை இன்னமும் கூட மனம் குன்ற வைப்பதை உணர்த்த நில்லாமல் நகர்ந்து விட்டாள்.

ஒரு சிறு மவுனத்தின் பின், தனஞ்சயன் பேசுவது கேட்டது. ''அப்பா! ஒருதரம் நான் தப்பு முடிவு எடுத்தது உண்மைதான். ஆனால் பெரும்பாலும் என் முடிவுகள் சரியாகத்தானே இருக்கின்றன? அத்தோடு இந்த விஷ யத்தில் நாம் ரிஸ்க் எடுக்க முடியுமா அப்பா? ஒரு வேளை, ஏதாவது சிக்கல் என்றால், சென்னையில் உள்ள வசதி இங்கே உண்டா? நினைத்தும் செய்யாமல் விட் டோமே என்று வேதனைப்படும்படி ஆகிவிடக் கூடாதில் லையா? உங்கள் முதல் பேரக் குழந்தை...''

''பேரன் என்று சொல்லு''

''சரி, அப்படியே வைத்துக் கொள்ளுவோம். அவன் நன்றாகப் பிறந்து, நல்லபடியாக நம் வீடு வந்து சேர வேண்டும் அல்லவா அப்பா? என்னவோ எனக்கு மனதில், சென்னையில் இருந்தால் நல்லது என்று தோன்

றிவிடடது. அப்படித் தோன்றிய பிறகு அதை அலட்சியப் படுத்தி, ஏதாவது ஏடாகூடம் ஆகிவிட்டால்? சொல்லுங் கள்.''

''அதில்லையடா. நம் சாப்பாடு? அதுதான் கவலை யாக இருக்கிறது. நான் ஒன்றும் வக்கணையாக அது இது என்று பத்து பதார்த்தம் கேட்கவில்லை. இப்படி இரண்டு இட்டிலி, ஒரு தயிர்ச்சாதம் போதும்தான். ஆனால் அதை வீட்டுச் சாப்பாடாகச் சாப்பிட்டுப் பழகி விட்டேனே... ஏன் தனா, அபரஞ்சியை அவள் பெரி யப்பா வீட்டுக்கு அனுப்பி விட்டால் என்ன? முன்னே கூட அங்கே ஓர் ஆண்டோ ஒன்றரை வருடமோ இருந்தாளாமே?'' என்று இன்னொரு வழி கண்டுபிடித் தார் உலகநாதன்.

வளைகாப்பன்று மாமனார் சொன்னது தனஞ்சயன் மனதில் அழுந்தப் பதிந்திருந்தது. ஆனால் அபரஞ்சி யுடைய பெரியப்பாவைப் பற்றித் தந்தையிடம் கூறுவதும் தவறாக முடியக்கூடும். யாரையும் மட்டம் தட்டிப் பேச வாய்ப்புக் கிடைத்தால் உலகநாதன் விடமாட்டார். தன் வழக்கம் போல பாண்டியனைப் பற்றி அவர் ஏதேனும் நக்கலாகக் கூறிவிட அபரஞ்சியின் மனம் புண்படக் கூடும். அப்போது மட்டும் அல்ல; மீண்டும் மீண்டும் அவ்வப்போது இதை எடுத்து அவர் இளப்பமாகப் பேசுவார் என்பதை உணர்ந்திருந்த தனஞ்சயன் வேறு மாதிரி இந்தப் பிரச்னையைச் சமாளித்தான்.

''என்னப்பா இது! நீங்கள்தானா இப்படி ஒரு யோசனை சொல்கிறீர்கள் என்று ஆச்சரியமாக இருக் கிறது. அப்பா, முன்பு அபரஞ்சியுடைய அப்பா, அப ரஞ்சி அவருடைய மகளாக மட்டும் இருந்தபோது, அவளை அவருடைய அண்ணன் வீட்டிலோ, தம்பி



வீட்டிலோ எங்கே விட்டு வைப்பதும் அவர்கள் விஷ யம். ஆனால், அபரஞ்சி இப்போது நம் வீட்டுப் பெண். நம் வீட்டு மருமகளைப் போய் நம்மால் பார்த்துக் கொள்ள முடியவில்லை என்று அடுத்தவர் - அவளு டைய பெரியப்பா நமக்கு அன்னியர்தானேப்பா? - அவர்கள் வீட்டில் விட்டால் உங்கள் கவுரவம் என்ன ஆவது அப்பா?

''அத்தோடு, அம்மா அபிக்குப் பிரசவம் பார்ப்பார் கள் என்று வேறு மெப்பாகச் சொல்லி விட்டீர்கள். இப் போது அந்த வாக்கு மாற முடியுமா? நம் பொறுப்பை அடுத்தவர் தலையில் கட்டுவது போல ஆகாதா? அத் தோடு நீங்களோ, நானோ அபியைப் பார்க்கப் போகும் போது அன்னியராய், வரவேற்பு அறையில் இருந்து பேசிவிட்டு வர நேரிடும். இதுவானால் நம் வீடு. நம் விருப்பம் போல ராஜா போலப் போய் சுகமாகத் தங்கிவிட்டு வரலாம்!''

''அது சரிதான்...'' என்று திருப்தியற்று இழுத்தபடி உலகநாதன் கைகழுவ எழுந்தார். ''இவர்கள் திரும்பி வருமுன் நாக்கு செத்துவிடும்.''

சென்னைக்குக் கிளம்புமுன் மில்லைப் பார்த்து விட்டு வருவதாகச் சொல்லி உலகநாதன் கிளம்பியபின், சரளா மகனை அருகே அழைத்துப் பேசினாள். ''தனா, நான் இருக்கும்போதே உன் அத்தை அடிக்கிற கொள்ளை உனக்கே தெரியும். நாங்கள் இங்கே வீட்டி லேயே இல்லாவிட்டால் இன்னும் என்னென்ன போய் விடுமோ! அதை யோசித்தாயா?'' என்று தன் கவலை யைத் தெரிவித்தாள்.

''அம்மா, நீங்கள் இங்கே இருந்து மட்டும் எந்தக் கொள்ளையைத் தடுக்க முடிந்தது? தாத்தா வீட்டில் -

உங்கள் அப்பா கொடுத்த வெள்ளித் தட்டுகளைக் கூட உங்கள் கையாலேயே தூக்கிக் கொடுத்தீர்கள்! இங்கேயே இருந்து இன்னும் என்ன சாதிக்கப் போகிறீர்கள்? பேசாமல் சென்னைக்குப் போங்கள், அம்மா. அங்கே நிம்மதியாகச் சில மாதங்கள் இருந்து விட்டு வாருங்கள். இங்கே, அத்தை வந்து வீட்டைத் தூக்கிப் போய்விடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். ஆனால்... அத்தை இப்போதைக்கு இந்தப் பக்கம் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன்'' என்றான் மகன் ஒரு மர்மப் புன்னகையோடு.

திகைப்புற்று, ''என்னடா சொல்கிறாய்? நாங்கள் இல்லாத போது சமையல் யார்? அதற்காக அண்ணியை அப்பா வரச் சொல்லியிருப்பாரே என்று எண்ணித்தானே இவ்வளவு கவலைப்பட்டேன்!'' என்றாள் தாயார்.

''அப்பா அப்படித்தான் கூப்பிடச் சொன்னார். ஆனால், அத்தை இந்தப் பக்கம் வரவே பயப்படும்படி நான் ஒரு போடு போட்டு வைத்தேன்.''

''எப்படிப்பா?''

''இப்படிப் பேறு காலத்துக்காகப் பெண்கள் எல்லோரும் சென்னைக்குப் போகிறார்கள்; அம்மா திரும்பி வரும்வரை நீங்கள் வீட்டுப் பொறுப்பைப் பார்த்துக் கொள்ள முடியுமா என்று அத்தையிடம்...''

''அய்யோ!''

''முழுவதையும் கேட்டு விட்டு 'அய்யோ' எங்கள் அம்மா. வீட்டைக் கவனிப்பது கூட முக்கியம் இல்லை. அப்பாவுக்கு வேளா வேளைக்கு விதம்விதமாய் வக்கணையாகச் சாப்பிட வேண்டும். நம் வீட்டில் சமையல் வேலை வீட்டுப் பெண்கள்தான் செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா அத்தை? எப்போது வருகிறீர்கள் என்றேனோ, பதில் சொல்லுமுன் அத்தைக்



குக் காய்ச்சலே வந்துவிட்டது!'' என்று சிரித்தான் மைந்தன்.

சரளா புரியாமல் விழிக்கவும், ''அவர்கள் வேலைக்குப் பயந்துவிட்டார்கள் அத்தை. அதனால் காய்ச்சல் என்று கதை விட்டிருக்கிறார்கள்'' என்று சற்றே ஒதுங்கி நின்று கேட்டுக் கொண்டிருந்த அபரஞ்சி மெல்லிய குரலில் உரைத்தாள்.

''ஆ...மாம். வசந்தா அண்ணி இங்கே வந்தால், உட்கார்ந்திருந்து ஏவித் தானே பழக்கம்? அவர்களே வேலை செய்வது என்றால்... ஊகூம். அவர்களுக்குப் பழக்கமே கிடையாதே. ஊரில் அவர்கள் வீட்டில்கூட முக்கால்வாசி வேலைக்காரி செய்து வைப்பதுதானே? அண்ணிக்கு வேலை செய்வது கொஞ்சமும் பிடிக்காது தானே?'' என்றாள் சரளா.

''முழுச் சோம்பேறி என்று வெளிப்படையாகச் சொல்லுங்களேன். அத்தோடு, அப்பாவைத் தெரியாதா அத்தை, வாய்க்கு ருசியாகச் சாப்பாடு இல்லாவிட்டால் ஒரேயடியாகக் கோபப்படுவார்களே, அதனால்தான் உங்களைக் கூப்பிடுகிறேன் என்றேனா, நடுங்கிப் போய் விட்டார்கள் என்று நினைக்கிறேன்...''

''வரமாட்டேன் என்று விட்டார்களா?''

''அப்படி நேரடியாகச் சொல்லி, அப்பாவின் கோபத்தைச் சம்பாதித்துக் கொள்வார்களா? குளிர் காய்ச்சலாம். 'பிரஷர்' வேறு இருக்கிறதாம். நின்றாலே தலை சுற்றுகிறதாம். காய்ச்சலுக்கு மாத்திரை போட்டால் 'பிரஷர்' அதிகமாகி விடும் என்று தலையில் பற்றுப் போட்டிருக்கிறார்களாம். டெலிஃபோனில் பார்க்க முடியாது என்று ஏகத்துக்குக் கதை விட்டார்கள். அப்படியா அத்தை? முதலில் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

நாங்கள் எப்படியோ சமாளித்துக் கொள்கிறோம்! என்று நானும் உருகி வழிந்து விட்டேன்'' என்றான் மைந்தன்.

''அதுசரி. ஆனால் வீட்டில் சமையல்'' என்றாள், இப்படிச் சில மாதங்களுக்கு என்று வந்து செய்யக்கூடிய உறவினர்களை உள்ளூரக் கணக்கெடுக்கலானான்.

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம் அம்மா. சென்னையில் ஏஜன்சியில் சொல்லி சமையலுக்கு ஆள் அனுப்பச் சொல்லி விட்டேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்கள்'' என்று மகன் கூறவும் சரளா, முன்னிலும் அதிகமாகப் பிரமித்துப் போனாள்.

''நம் வீட்டில் வெளி ஆள் சமைப்பதா? அடுப்படியில் அடுத்தவர்களை விடக்கூடாது என்பது இங்கே எழுதாத சட்டமாயிற்றேடா! காய்ச்சல், தலைவலி என்றால்கூட, ஒரு ரசம் சாதம், துவையலாவது செய்து வைக்காமல் படுக்க முடியாதே! அப்பா எப்படியடா சம்மதித்தார்?''

''உடைக்கப் படுவதற்காகவே சட்டங்கள் செய்யப்படுகின்றன என்று பழமொழியே இருக்கிறதம்மா'' என்ற மகனிடம் ''வேற்று ஆளை உள்ளேவிட அப்பா எப்படி ஒத்துக் கொண்டார்? உன்னைத் திட்டவில்லையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் அன்னை.

''எங்கேம்மா. அதற்குள்தான் அப்பாவுக்குப் பயங்கரமாய் ஐஸ் வைத்து விட்டேனே! 'அப்பா, நீங்கள் ஒரு துறவி மாதிரி, பசிக்காகச் சாப்பிடுபவர்கள், எங்களைப் போல ருசிக்காக உள்ளே தள்ளுகிறவர்கள் அல்ல. ஒரு தயிர் சாதம், இரண்டே இரண்டு இட்டிலியில் வாழக் கூடியவர்தான். நான் அப்படியில்லை அப்பா. வகை வகையாக இல்லாமல் ஒரு பிடி இறங்காது!'' என்றேனா, சமையல் ஆளுக்குச் சரி என்று விட்டார்.''



சட்டென மகனோடு சேர்ந்து நகைத்துவிட்டு, ''சே! அப்பாவைக் கிண்டல் செய்து பேசுகிறாய்; கூடச் சேர்ந்து சிரிக்கிறேன் பார்'' என்று உடனேயே வாயைப் பொத்திக் கொண்டாள் சரளா.

சற்றுப் பொறுத்து, அந்த வீட்டுச் சமையலுக்கு என்று வந்த பெண்மணியைக் காணவும் சரளாவின் எளிய மனது உருகிப் போயிற்று.

சாந்தம்மாவுக்குக் குறைந்தபட்சமாய் வயது அறுபது இருக்க வேண்டும். உழைத்துப் பழகிய உடம்பு என்பது நன்றாகவே தெரிந்தது. கண்களில் ஒரு சிறு சோகம் எப்போதும் இருந்தது.

''உங்கள் குடும்பத்து சமையல் எனக்குத் தெரியும், அம்மா. உப்பு, புளி, காரம் மட்டும் திட்டம் சொல்லி விட்டீர்கள் என்றால் செய்து விடுவேன்'' என்றாள்.

அன்றையக் காலை உணவின் சாம்பார், சட்டினியை ருசி பார்த்துவிட்டு, மதிய உணவுக்காக அவள் கூட்டி வைத்திருந்த மசாலா, உப்பு சரிபார்த்த சரளாவுக்கு அப்பாடா என்றிருந்தது. கணவருக்கும், மகனுக்கும், முக்கியமாகக் கணவருக்கு விருப்பமான உணவு வகைகள், அவைகளை எவ்வப்போது எப்படி சாப்பிடப் பிடிக்கும் என்பதை எடுத்துச் சொன்னாள். முக்கியமாகச் சூடு சமாசாரம்! சுற்று வேலைக்கு ஒரு சிறு பெண்ணை அமர்த்திக் கொடுத்தாள்.

சரளா சொல்லச் சொல்ல சாந்தம்மா அதை எழுதி வைத்துக் கொள்வதைப் பார்த்ததும் நிம்மதியுற்ற மனதோடு, சென்னைப் பயணத்தை எதிர் நோக்கலானாள் சரளா.

வேறு எந்தவிதமான தட்டுத்தடங்கலும் இல்லாத படி, தனஞ்சயன் நீங்கலாக உலகநாதனுடைய குடும்பம் சென்னைப் பயணத்தைத் தொடங்கியது.

வீட்டை விட்டுக் கிளம்புமுன், தனஞ்சயன் மனைவியை அழைத்து, நூறு ரூபாய் நோட்டுக் கட்டு ஒன்றைக் கொடுத்தான். ''வெளியே செல்லும்போது ஏதாவது வாங்குவதற்குப் பயன்படுத்து'' என்று கூறி, நோட்டுக் கட்டை அவளது கைப்பையில் வைத்து மூடினான்.

அதற்குமேல் அங்கே ஒரு சிறு அமைதி நிலவியது.

''அவ்வளவுதானே!'' என்பது போல, அபரஞ்சி வெளியே செல்லத் திரும்பியபோது, ''ரஞ்சி'' என்று ஒரு மாதிரிக் குரலில் தனஞ்சயன் அவளைக் கூப்பிட்டான்.

பேசாமல் நின்றவளின் அருகே வந்தவன் சட்டென அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

சில வினாடிகளில் அவனாகவே அவளை விடுவித்தான். ''இது... இது கடைசி முறையாக என்று...'' என்று தெளிவற்ற குரலில் முணுமுணுத்தவன் அதற்குமேல் அங்கே நில்லாமல் சென்றுவிட்டான்.

தனஞ்சயன் சொன்னது போலவே, சென்னையில் மகாலிங்கபுரத்தில் அமைந்திருந்த அவர்களது வீட்டில் மனைவி, மகள், மருமகள் மூவரையும் உலகநாதன் குடிவைத்தார்.

குடும்பம் சென்னை வந்து சேர்ந்தபோது, பழங்காட்டூரில் இருந்த கார்களில் ஒன்றும் சென்னை வந்து சேர்ந்தது.

ஆறுமுகம், முத்தம்மா தம்பதி ஏற்கெனவே அந்த வீட்டின் 'அவுட் ஹவுசி'ல் இருந்தபடி வீட்டைப் பராமரித்து வந்தவர்கள்தான். வேலை நிமித்தமாக உலக



நாதன் சென்னைக்கு வரும் போதெல்லாம், காரை மட்டும் வாடகைக்கு எடுத்துக் கொண்டு, ஆறுமுகத்தைத் தான் காரை ஓட்டச் சொல்வது வழக்கம். இப்போது வீட்டுக் காரையே ஓட்டக் கொண்டு வந்தார்கள்.

பாங்கில் கணக்குத் தொடங்கிவிட்டு, அபரஞ்சியுடைய பெரியப்பா, மாமா, சித்தி வீடுகளுக்கு, மருமகள் பிரசவத்துக்காக சென்னை வந்திருக்கும் சேதியைச் சொல்லி, அவ்வப்போது வந்து கவனித்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு, அவர்களிடமே ஆலோசனை கேட்டு, ஓரளவு அருகிலேயே இருந்த ஒரு நல்ல மருத்துவமனைக்கு உலகநாதன் மருமகளை செக்கப்புக்கு அழைத்துச் சென்றார்.

எல்லாம் நல்லவிதமாக இருப்பதாக டாக்டரம்மா கூறவும், அங்கேயே பிரசவத்துக்கு அறை 'புக்' செய்துவிட்டு, வீட்டுக்குத் தேவையானவற்றை எல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டு, கவனத்தோடு இருக்கும்படி பல முறை ஒவ்வொருவரிடமும் எச்சரித்துவிட்டு, உலகநாதன் மீண்டும் ஊருக்குக் கிளம்பிச் சென்றார்.

அபரஞ்சி வந்திருக்கும் சேதி தெரிந்ததும், அவளுடைய உறவினர் எல்லோரும், பெரியவர்களோடு தொத்திக் கொண்டு அவளுடைய தலைமுறைப் பிள்ளைகளும் சேர்ந்து அவளைப் பார்க்க வந்தனர்.

பெரியவர்கள், அபரஞ்சியின் உடல்நலம் பற்றிய கேள்விகளைக் கேட்டு, கிடைத்த பதிலில் திருப்தியுற்றவர்களாய், சரளாவுடன் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

ஏற்கனவே சில தினங்கள் முன்பாகத்தான் வளைகாப்பின்போது சந்தித்திருந்ததால், கலைவாணியால் கூச்சமின்றி எல்லோருடனும் பேசிப் பழக முடிந்தது.

சுற்றிலும் தன் வயதை ஒட்டிய உறவினர்களின் கலகலப்பான பேச்சில் அபரஞ்சியின் கடந்த காலமும், அதன் இறுக்கமும், அவளைவிட்டு அகன்று, மறைந்து போயின.

பேச்சுக்குப் பேச்சு அடுத்தவர் காலை வாருவதும், கேலியும், சிரிப்புமாக, இடைப்பட்ட பல மாதங்கள் மறைந்துவிட, அபரஞ்சி உற்சாக வானில் சிறகடிக்கலானாள்.

கலீர் கலீர் என்று அவளது சிரிப்புச் சத்தம் செவிகளில் அலைமோத மோத, சரளாவின் முகம் மாறலாயிற்று.

## 11

**ச**ரளாவின் முகமாற்றத்தை முதலில் கண்டு கொண்டவள் அவளுடைய அருமை மகள் கலைவாணிதான்.

விடுமுறைக் காலம் என்பதால் அபரஞ்சியுடைய பெரியப்பாவுடைய வாரிசுகள் அடையாறிலிருந்தும், மாமா மக்கள் கீழ்ப்பாக்கத்திலிருந்தும், இன்னமும் அருகில் இருந்த மாம்பலத்திலிருந்து சித்தி பிள்ளைகளுமாக, அபரஞ்சியைப் பார்த்துப் போக என்று அடிக்கடி யாராவது வீட்டுக்கு வந்து போயினர்.

சரளாவின் விருந்தோம்பலும், சுவையான உணவும் கூடுதல் ஈர்ப்பாகி விட, அவர்கள் வருவதும், தங்கியிருந்து அரட்டை அடிப்பதும், சேர்ந்து உண்பதும், ஸ்க்ராபிள், கேரம், செஸ் என்று விளையாடுவதும், எங்கேனும் போய் வருவதும் வழமையாயிற்று.

தன் உறவினர் என்று பிரிக்காமல், அபரஞ்சி எப்போதும் கலைவாணியை உடன் சேர்த்துக் கொள்ளுவாள்.



நாத்தனாரிடம் அவளுக்குக் கூடப்பிறந்த சகோதரி போலப் பாசம் இருந்ததோடு, தான் பெரும்பாலும் தனியே பங்களூரில் வளர்ந்ததுபோலப் பழங்காட்டூரில் தனியே வளர்ந்தவள் பாவம் என்ற நெகிழ்வும் இருக்கவே இந்த இளைஞர் வட்டத்துக்குள் கலைவாணியையும் சேர்த்து விட்டாள்.

அவர்களுள், அபரஞ்சியுடைய சித்தி பெண் காமினி கலைவாணிக்கு உயிர்த்தோழியாகி விட்டாள்.

கட்டவிழ்ந்த கன்றுகள் போன்ற நிலைமை. ஊரில் போலக் கடமைகள், கட்டுப்பாடு, கண்காணிப்பு எதுவும் இல்லாததால், காலையில் நினைத்த நேரம் கண் விழித்தார்கள். சரளா, முத்துவின் உதவியோடு, ருசிகரமாய் ஏதாவது செய்து வைப்பதை உண்டார்கள்; நடப்பது அபரஞ்சிக்கு நல்லது என்று டாக்டர் சொல்லியிருந்ததால், நடையோடு நடையாக அந்தப் பகுதியில் இருந்த ஐயப்பன் கோயில், பிள்ளையார் கோயிலுக்குப் போய் வந்தார்கள்.

ஷாப்பிங், சினிமா, பீச் என்று அவர்கள் கூட்டத்தில் யார் அழைத்தாலும் இவர்களும் சென்று சேர்ந்து கொண்டார்கள்; இவர்களும் அவர்களில் 'செட்'டில் மற்றவர்களை அழைத்துச் சென்றார்கள்.

கர்ப்பிணிப் பெண்; உடல் அலண்டுவிடும் என்று சரளா முதலில் அஞ்சினாள். மகள் மருமகளிடம் எச்சரித்ததோடு, தடுப்பூசி போடச் சென்றபோது தன் கவலையை டாக்டரிடமும் தெரிவித்தாள்.

அபரஞ்சியின் அன்றாட வாழ்க்கை முறையைப் பற்றிக் கேட்டறிந்த அந்த லேடி டாக்டர் புன்னகை பூத்தார். 'மிகவும் அலுப்பு, களைப்பு என்று ஆகாதவரை, கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் விருப்பம்போல் இருப்பது

தான் நல்லது' என்றார் அவர். 'விருப்பங்களை அடக்கும் போது, உடலின் தசைக் கோளங்கள் இறுகிவிடும். முக்கியமாக வயிற்றுத்தசை இப்படி இறுக்கமடைவதால், பிள்ளை வலி எடுக்கும்போது உரியபடி தளர்ந்து கொடுக்காமல், பிரசவம் ஆவதே தாமதமாகி விடுகிறது. சில சமயங்களில் பெரும் சிக்கலாகி ஆயுதக் கேஸ், சிசேரியன் என்று செய்யும்படி நேர்ந்து விடுகிறது' என்றார் அவர்.

அத்தோடு, 'இப்படி அங்கே இங்கே என்று சென்று வரும்போது நடப்பதே உடலுக்கும் பயிற்சிதான்; செய்யட்டும்' என்று டாக்டர் கூறிவிடவும் சரளாவின் கவலை அகன்றது.

எந்நேரமும் அபரஞ்சியிடம் அவனது கவனம் இருக்க வேண்டும் என்று டிரைவர் ஆறுமுகத்தை எச்சரித்து வைத்ததோடு, இந்தப் பிள்ளைகளோடு கூடக்கூடச் செல்வதை சரளா நிறுத்திக் கொண்டாள்.

அன்னையின் முகத்தில் முதலில் கவலைக் குறிகளைக் கண்டபோது, அண்ணியின் உடல் நிலைபற்றிய கவலை என்றே கலைவாணி எண்ணியிருந்தாள்.

ஆனால், மருத்துவரைப் பார்த்து வந்த பிறகும், அதே கவலைக் குறியைக் கண்டபோது அவளுக்கு வேறு நினைத்துக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. அம்மாவின் பழைய வேதனைகள் ஏதேனும் நினைவு வந்திருக்கும். பாவம் என்று பரிதாபப்பட்டாள்.

ஆனால் பிறகு கொஞ்சம் நெருடல் உண்டாயிற்று.

அன்று, திருமணம் நிச்சயமான தன் பெரியப்பா மகனிடம், ''அவளிடம் சொல்லி வை, அண்ணா, நான் ஒரு நல்...ல நாத்தனார் என்று!'' என்று அபரஞ்சி கேலி பேசிச் சிரித்துப் பேசியபோது, அவளது ஒவ்வொரு



சிரிப்புச் சத்தத்துக்கும் சரளாவின் முகம் வேதனையைக் காட்டவும், கலைவாணி நேரடியாகத் தாயாரிடம் விவரம் கேட்டாள்.

''என்னம்மா, இது? அங்கானால் அண்ணியின் சிரிப்பு குறைந்து மறைந்தே போய்விட்டதே என்று வருத்தப்பட்டீர்கள். இங்கே அவர்கள் சிரிப்பதைப் பார்த்தே வருத்தப்படுகிறீர்களே, என்ன விஷயம்? மருமகள் சிரித்தால் தாங்காத சாதாரண மாமியார் நீங்கள் அல்ல என்பது எனக்கு நன்றாகவே தெரியும்! வேறு என்னம்மா?'' என்று நேரடியாகக் காரணம் விசாரித்தாள்.

வருத்தமாகப் பெருமூச்செறிந்தாள், தாயார்.

''உன் அண்ணனோடு அபரஞ்சி இப்படிச் சிரித்து வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டேன், கண்ணு. ஆனால் அங்கே உன் அண்ணனோடு மட்டுமின்றித் தனியாக உன் அண்ணி சிரிப்பதுகூடக் குறைந்து, குறைந்து நின்றே போய்விட்டது. இங்கானால் எப்படிச் சிரிக்கிறாள், பார்! தனத்துக்கும் அபிக்கும் இடையே உள்ள மனவேறுபாடு, நான் எண்ணியதைக் காட்டிலும் மிகப் பெரிதோ என்று மனதுக்கு ரொம்பவும் கலக்கமாய் இருக்கிறது, வாணி!'' என்று, சிறுபெண் என்பதையும் மறந்து, தன் கவலைகளை மகளிடம் சொல்லிப் புலம்பினாள்.

''அதெல்லாம் இராதம்மா'' என்றாள் கலைவாணி அன்னைக்கு ஆறுதலாக.

''இருக்கிறதம்மா. யோசித்துப் பார். நம்மை இங்கே கொணர்ந்து விடக் கூட அப்பாதானே வந்தார்? சும்மா என்றால் அண்ணன் இந்தப் பொறுப்பை உன் அப்பாவிடம் விடுவானா? அப்பாவின் முன்கோபம் நம்மில்

யார் மீதும் பாய்ந்து விடாமல் தடுப்பதற்காக அவரை ஊரில் இருத்திவிட்டு, அண்ணன் தானே. இங்கே நம் மோடு வந்திருப்பான்? பிறகும் பார். இன்னமும் அவன் இங்கே நம்மைப் பார்க்க வரவே இல்லை'' என்று தன் கவலைக்கான காரணத்தை அன்னை விளக்கினாள்.

கன்னிப் பெண்ணான மகளிடம் வெளிப்படை யாகக் கூற முடியாத இன்னுமொரு காரணமும் சரளா வுக்கு இருந்தது.

தலைப் பிரசவத்துக்கு மனைவியை அனுப்பும் போது கண்ணீர் விடாத ஆண்கள் அபூர்வம்! குறைந்தபட் சமாய் கண் கலக்கமேனும் நிச்சயம் இருக்கும். பிள்ளைப் பேறு பற்றிய அச்சம் ஒருபுறம், மாதக்கணக்கில் மனைவி யைப் பிரிந்திருக்க வேண்டிய ஆற்றாமை ஒருபுறமாக மனிதன் தவித்து விடுவான். அவள் கிளம்பும் வரை அவளைக் கட்டிக் கொண்டோ, முடிந்த அளவு மனை வியை ஒட்டிக் கொண்டோ திரிவான். பிறகும் இம்மென் றால் மனைவியைப் பார்க்க ஓடிவிடுவான்.

ஆனால், தனஞ்சயன் வேறுவிதமாய் இருந்தான். மனைவியைப் பிரியாமல் இருக்க வாய்ப்பு இருந்த போதும், அதைவிடுத்து, மனைவியின் பிரசவத்திற்காக, வீட்டின் மூன்று பெண்களையும் வெளியூருக்கு அனுப்பி வைத்தான். அத்தோடு, அவர்கள் இருக்கும் பக்கம் எட்டிப் பார்ப்பதையும் தவிர்த்தான். ஒருதரம் கூட இங்கே அவன் வரவே இல்லை.

மருமகளானால், மற்றவர்களோடு சேர்ந்து பேசிச் சிரிக்கிறாளே தவிரக் கணவனைத் தேடவே காணோம்!

ஏன்?

தந்தை வழியில் சென்றாலும், தனஞ்சயனுக்கு மனைவியிடம் மிகுந்த அக்கறை இருப்பதாகவே சரளா



எண்ணினாள். எத்தனையோ சிரமங்களைச் சகித்துக் கொண்டு அவனது கம்ப்யூட்டர், ஃபேக்ஸ் வேலைக்கே அபரஞ்சி மிகவும் அவனுக்கு அவசியம். அப்போதும், சிறந்த மருத்துவ வசதி கிடைக்கும் என்கிற ஒரு காரணத் துக்காக, மனைவியைத் தாய், தங்கை துணையோடு இங்கே அனுப்பி வைத்திருப்பதே அதற்குத் தகுந்த ருசு.

மருமகள், கணவனுக்காக எவ்வளவு செய்தாள் என்பது சரளா அறியாதது இல்லை.

பின்னே, இருவருக்கும் இடையே ஏன் இந்தப் பாரா முகம்?

ஏதோ சிறு பிணக்கில் தொடங்கி, வேரோடி, அது ஒரு பெரிய நச்சுமரமாய் வளர்ந்து விட்டது என்றே சரளா கவலைப்பட்டாள்.

பெற்றவளின் கவலையைத் தீர்ப்பதற்காகவே வந்ததுபோல, விரைவிலேயே தனஞ்சயன் அங்கே, அவர்களைப் பார்க்க வந்து சேர்ந்தான்.

மனைவியின் உணர்ச்சி துடைத்த பார்வையைச் சந்தித்தவன், கிடைத்த முதல் தனிமையில், ''சற்றுப் பொறுத்துக் கொள் அபரஞ்சி. உனக்கு முகம் காட்டாமல் ஒதுங்கி விடத்தான் முயன்றேன். ஆனால் நீ இந்த மாதிரி நிலைமையில் இருக்கும்போது, நான் வந்து பாராமலே இருந்தால் நன்றாயிராது. இப்போதே அப்பா, ''என் னடா, ஒரு மாதம் ஆகப் போகிறது. அபரஞ்சியைப் பார்க்கப் போகாமல் இங்கேயே உட்கார்ந்து இருக் கிறாயே'' என்று விரட்டத் தொடங்கி விட்டார். அதனால் தான்...'' என்று தான் வந்ததன் காரணம் சொன்னான். ''இரண்டே இரண்டு நாட்கள் கொஞ்சம் சகித்துக் கொள் - அபரஞ்சி.''

மனைவி பதிலே சொல்லாமல் விலகிப் போவதைக் கண்டு உள்ளூர வருந்தியபடி, தாயாரிடம் சென்றான்.

''உன் அத்தை வந்தார்களா?'' என்று தன் கவலையைக் கேட்டாள் அன்னை.

''விடுவார்களா? அதுவும் சமையல்காரம்மா வைத்திருக்கிறோம் என்று தெரிந்தபிறகு...?''

''சாப்பாடு எல்லாம் சாந்தம்மா, நன்றாகச் செய்கிறார்களா? அப்பா குறைப்படாமல் சாப்பிடுகிறார்களா?'' என்று சரளா அவசரமாய் விசாரித்தாள்.

''ம். உப்பு, காரம் எல்லாம் நீங்கள் காட்டிக் கொடுத்தது போலவே செய்வதால் சுவை சரியாகவே இருக்கிறது. அப்பா குறை கூறவில்லை... நானும், சாந்தம்மாவை விட்டால் இப்போது நமக்குச் சாப்பாட்டுக்கு வழி கிடையாது என்று அவ்வப்போது சொல்லி வைப்பதால், ஏதாவது ஏறத்தாழ இருந்தாலும் அப்பா கத்துவது இல்லை!''

''ஓகோ! வேலைக்கு ஆள் இருக்கிறது என்று தெரிந்து உன் அத்தை வந்து உட்கார்ந்தார்களாக்கும்!'' என்று தன் கவலையிலேயே சரளா உழன்றாள்.

''அதே ஐடியாவில்தான் இரண்டு முறை அவர்கள் வந்ததும். ஆனால் அம்மா செய்த மாதிரி 'கந்தரப்பம்' செய்யுங்கள். முறுக்கு பிழியுங்கள். அப்பாவுக்குப் பிடிக்கும் என்று பக்கத்திலேயே இருந்து வேலை செய்ய வைத்தேனா... யாருக்கும் தெரியாமல் சமையல்காரம்மாவைச் செய்யவைத்து ஏதேனும் திரிசமன் செய்யவும் வழியில்லாமல் போயிற்று. உங்கள் மாதிரி நன்றாகச் செய்ய வராமல் அது வேறு அப்பாவிடம் திட்டு வாங்கிக் கட்டும்படி ஆயிற்றா? கிளம்பி விட்டார்கள். கோபமாக இருக்கும்போது அப்பாவிடம் ஒன்றும் கேட்க முடியா



தில்லையா? இரண்டு தடவையும் வெறும் கையோடு தான் திரும்பிப் போயிருககிறார்கள்'' என்று முறுவலித்தான் மகன்.

ஆனால் சரளாவுக்கு அதுவும் உவப்பாக இல்லை போலும். ''வீட்டுப் பெண்ணடா. வெறும் கையோடு அனுப்புவதே தப்பு. சாந்தம்மாவை ஏதாவது பலகாரம் செய்யச் சொல்லிக் கொடுத்திருக்கக் கூடாதா? வெற்றிலை பாக்கு பழத்தோடு ஒரு ரவிக்கைத் துண்டாவது வைத்துக் கொடுத்துத்தான் அனுப்ப வேண்டும். இனி அவர்கள் வந்தால் அப்படிச் செய்'' என்றாள் மகனிடம்.

''இதுவரை அவர்கள் சுருட்டி இருப்பதைக் கணக்குப் போட்டால் இன்னும் இரண்டு பிறவிக்கு நாத்தனார் சீர் செய்வதற்குச் சமமாக இருக்கும். விடுங்கள் அம்மா'' என்றான் தனஞ்சயன் விட்டேற்றியாக.

''அதில்லையடா. உன் அத்தையுடைய கணவர் வேறு அவ்வளவாகச் சரியில்லை என்று..''

''அப்படி அத்தைதானே அம்மா சொன்னார்கள். இதுவரை என்றைக்காவது அந்த மாமா நம் முன்னிலையில் குறை சொல்லும்படியாக நடந்து கொண்டது உண்டா? நம்மிடம் மாமாவைப் பற்றிச் சொன்ன மாதிரி, அந்த மாமாவிடம் நம்மைப் பற்றி என்னென்ன சொல்லி வைத்திருக்கிறார்களோ? யோசித்துப் பாருங்கள்! முன்பெல்லாம் அவ்வப்போது வருகிறவர், அது மெல்ல மெல்லக் குறைந்து இப்போது நம் வீட்டுக்கு வருவதே இல்லையே!''

''அதுதான். இப்போது அவர் ரொம்பவும் கெட்டுப் போய்விட்டதாக உன் அத்தை சொன்னார்களே! கொஞ்சம் மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்பதுதான் என் ஊகமும். அதனால்தான், பூரணி கல்யாணத்துக்கு உன்

அத்தை நினைக்கிறபடி முழுச் செலவும் செய்யாவிட்டா லும் பாதிக்குப் பாதியேனும் நாம் ஏற்றுக் கொள்வது நியாயம்தான் என்று...''

''பாதியும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். அந்த மாமா ஒழுங்காகத் தொழில் நடத்தி நல்லபடியாகத்தான் இருக்கிறார்!''

''என்னது?''

''ஆமாம். நீங்கள் மூவரும் இங்கே வந்தபிறகு, ஒருநாள் இரவு பலதும் யோசித்துக் கொண்டு படுத்திருந் தபோது, இப்படி ஒரு சந்தேகம் உண்டாயிற்று. சரிதான் என்று, மில்லுக்கு நெல் கொள்முதல் செய்கிற சாக்கில், அத்தை ஊருக்குப் போய் அவர்கள் அறியாமல் விசாரித் துப் பார்த்தேன். அத்தை கணவரை எல்லோரும் நல்லபடி யாகத்தான் பேசுகிறார்கள். கடையில் இருந்து அவர் வியாபாரம் செய்வதை நானே பார்த்தேன். இங்கே அவர்களைப் பற்றி அத்தை சொல்வது எல்லாம் வெறும் புளுகு! இங்கே நம் அளவுக்கு வராது. மற்றபடி, நல்ல நிலைமைதான். அதனால் அவர்களுக்கு நாம் ஒன்றும் தாங்கிச் செய்யத் தேவையில்லை! ஆனால் இதை எப்படி எடுத்துச் சொன்னாலும், அப்பா அதை ஒத்துக் கொள் ளவே மாட்டார். அதனால் நாமும் வேறு விதமாய் முயற்சி செய்து அத்தையின் சுரண்டலைத் தடுக்க வேண் டும். தடுப்பேன். கவலைப்படாதீர்கள்'' என்றான் தனஞ் சயன்.

சரளா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். ''அண்ணி அதிகம் சுரண்டுகிறார்கள் என்று ஆத்திரப்பட்ட போதும், பாவம், புருஷன் சரியில்லா விட்டால் அவர்கள்தான் வேறு எங்கே போவார்கள்? இவர்கள் சுரண்டலைப் பார்த்து ஆத்திரப்படுவதும், அதைத் தடுக்க முயற்சிப்



பதும், தவறோ என்று மனம் உறுத்திக் கொண்டே இருக்கும். அந்த உறுத்தல் அவசியம் இல்லை என்று தெரிகிறது. ஆனால், அங்கே நல்ல வாழ்வு வாழ்ந்து கொண்டே ஒரே மகள் திருமணத்தைக் கூட முழுக்க முழுக்க அண்ணன் செலவில் முடிக்கப் பார்க்கிறார்களே, என்ன கெட்ட புத்தி! சொன்னால் உன் அப்பா கேட்கவும் மாட்டார்தான்! கேட்பதென்ன? இப்படிச் சொன்னேன் என்றால் ருத்ரதாண்டவமே ஆடிவிடுவார்! மகள் திரு மணத்திற்காக நகைக்காக மட்டும் உன் அத்தை போட்டி ருக்கும் பட்ஜெட் என்ன தெரியுமா? குறைந்தபட்சமாய்ப் பதினைந்து லட்சம்! வைரசெட் வேண்டுமாம்! அப்புறம் நம் கலைக்கு என்ன மிஞ்சும்?'' என்று குமைந்தாள்.

''ஷ். அம்மா, விடுங்கள்! கவலைப்படாதீர்கள் என்று சொன்னேன் இல்லையா? அப்படியெல்லாம் செய்வதற்கு நான் விட்டுவிட மாட்டேன். தைரியமாய் இருங்கள். இங்கே இருக்கும் நாளாவது நிம்மதியோடு இருங்களேன்! சொல்லுங்கள். ஒவ்வொரு நாளும் எப்ப டிக் கழிக்கிறீர்கள்? வெளியே எல்லாம் போகிறீர்களா? பணம் மீதி இருக்கிறதா? மிச்சப்படுத்த வேண்டும் என்று பாராதீர்கள். இங்கிருக்கும் நாட்களை விடுமுறைக் காலம் மாதிரி மகிழ்ச்சியோடு கழியுங்கள். சொல்லுங்கள். எங் கெல்லாம் போனீர்கள்?''

தோட்டத்துப் பக்கமாய் சென்று கொண்டிருந்த அபரஞ்சியைப் பார்த்தபடி, கேள்விமேல் கேள்வி கேட்ட மகன் தாயின் முகம் மாறியதைக் கவனிக்கவில்லை.

சரளாவுக்குச் சந்தேகம் உறுதிப்பட்டுப் போயிற்று.

இந்தக் கேள்விகளைத் தனஞ்சயன் தன் மனைவி யிடம் அல்லவோ கேட்டிருக்க வேண்டும்? அவளை இன்னமும் அவன் பார்க்கவே இல்லை என்றும் இல்லை.

வந்ததும், கணவனும் மனைவியும் இரண்டு வார்த்தை தனியாகப் பேசட்டும் என்று மகளை அழைத்துக் கொண்டு சரளா விலகிப் போனாளே! அப்போது அவளி டம் கேட்டு அறிந்திருக்க வேண்டிய விவரங்களை, இப்போது அன்னையிடம் கேட்கிறான் என்றால்?

வெறும் சம்பிரதாயத்துக்காக, அறிந்த விஷயத் தையே ஒவ்வொருவரிடமாய்த் திரும்பத் திரும்பக் கேட் கும் வழக்கம் உடையவனும் அல்ல, தனஞ்சயன்.

மனம் மேலும் கலங்க, இவர்கள் இருவரையும் இணைக்கும் வழி என்ன என்று சரளா சிந்திக்கலானாள்.

ஆனால், அதிகப் பேச்சுக்குக்கூட வழியின்றி, காலை உணவு முடிந்ததுமே, வேறு வேலையையும் பார்க்க வேண்டியிருப்பதாகச் சொல்லித் தனஞ்சயன் கிளம்பிவிட்டான்.

''நிறைய ஆட்களைச் சந்தித்துப் பேச வேண்டி இருப்பதால், வீடு திரும்ப மிகவும் தாமதமாகி விடும்; எனக்காகக் காத்திராமல் இரவுகூடச் சாப்பிட்டு விடுங் கள்'' என்று சொல்லிச் சென்ற மகனை வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்த சரளா, ஒன்று தோன்றவும், சட்டெனத் திரும்பி மருமகளை நோக்கினாள்.

மருமகளின் உணர்ச்சியற்ற முகம், அவளது கவ லையை மேலும் அதிகமாக்கியது.

ஓரளவு வெளிப்படையாக மருமகளிடம் பேசிப் பழகியதால், மருமகளிடம் கேட்டுப் பார்த்தாள். ''தனா வுக்கும் உனக்கும் என்னம்மா?'' என்று இதமாகவே வினவினாள்.

சற்றுத் தயங்கிவிட்டு, ''புதியதாக என்ன, அத்தை?'' எப்போதும் உள்ளதுதான்.'' என்றாள் மரு மகள் சுருக்கமாக.



அபரஞ்சி, இதுபற்றிப் பேசப் பிரியப்படவில்லை என்று அறிந்தபிறகு தொடர்ந்து தொணதொணக்க சரளா வுக்கு மனமில்லை. ஆனால், சும்மா விடவும் மனம் வராமல் அவள் திண்டாடினாள்.

அன்றிரவு, தனஞ்சயன் வீடு திரும்ப பத்து மணிக்கு மேல் ஆகிவிட்டது.

கலைவாணியும், சரளாவும் படுக்கச் சென்றுவிட, அபரஞ்சி மட்டும் டி.வி. பார்த்துக் கொண்டு உட்கார்ந் திருந்தாள்.

பெரிய வயிற்றோடு அவள் வந்து கதவைத் திறக்க வும், ''காத்திருக்க வேண்டாம் என்று சொன்னேனே! என்னிடம்தான் இன்னொரு சாவி இருக்கிறதே!'' என் றான் தனஞ்சயன்.

கணவனை நிமிர்ந்தும் பாராமல், ''நான் பாட்டில் படுக்கப் போனால் அத்தை வருத்தப்படுவார்கள். அத னால்தான்'' என்றாள் அபரஞ்சி. மேலே பேச இடமின்றி உள்ளே சென்றவள், சற்று நேரத்தில் ஒரு கப் சூடான பாலுடன் திரும்பி வந்தாள்.

குளியலறையிலிருந்து வெளிவந்தவனிடம், ''பால்'' என்று, சிறு மேஜைமேல் இருந்த கப்பைக் காட்டினாள்.

சட்டெனக் கணவனின் பார்வை தன்மீது பாய்வதை உணர்ந்து ''அத்தை கொடுக்கச் சொன்னார்கள்'' என்று ரைத்துவிட்டு, கட்டிலை நோக்கித் திரும்பினாள்.

''ஒரு நிமிடம்'' என்றான் தனஞ்சயன், கையோடு வெளியே கொண்டு சென்ற சிறு பெட்டியைத் திறந்து, உள்ளிருந்து ஒரு பாக்கெட்டை எடுத்தான்.

அது ஒரு துணி பாக்கெட் என்பதை உணர்ந்து அபரஞ்சி பேசாமல் நிற்க, தனஞ்சயன் பாக்கெட்டைப்

பிரித்து ஓர் அழகிய 'லைலக்' கலர்ச் சேலையை எடுத்துக் கட்டிலில் வைத்தான்.

''உனக்கு இந்த நிறம் பிடிக்கும் என்று வாங்கி னேன்'' என்றான் சிறு தயக்கத்துடன்.

ஏனெனில் அவனுக்கும் அது நினைவு இருந்தது. ஒரு சிறுமியின் உடையைப் பார்த்துவிட்டு, அந்த 'லைலக்' கலர் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று அவள் சொன்னதும், அந்த நிறத்துச் சேலைக்கு அடி போடு கிறாள். இந்த மாதிரிக் கள்ளப் பேச்சும் பிடிக்காது; பேசுகிற ஆளையும் பிடிக்காது என்று தனஞ்சயன் முகத் தில் அடித்தாற்போலக் கூறினானே!

அவள் பேசாமல் பார்த்துக் கொண்டு நிற்கையில், அவன் ஒரு சிறு பாலிதீன் பையிலிருந்து, பூச்சரம் ஒன்றை எடுத்தான். கொண்டைச்சரமாக அடர்த்தியாகக் கட்டிய மல்லிகைப்பூ!

அபரஞ்சியின் முகம் மேலும் அதிகமாகக் கடினப் பட்டது.

'இந்த மாதிரிப் பூவையெல்லாம் வைத்துக் கொண்டு என்னை மயக்கி விடலாம் என்று நினைத்தாயா?' என்றானே! அதைவிடக் கேவலமாக, இதற்கெல்லாம் நீ வேறு ஆள் பிடித்திருக்க வேண்டும் என்றானே! என்ன கொடுமையான வார்த்தைகள்! இன்று இவைகளைக் கொடுத்து அவளைத் தனஞ்சயன் மயக்க முயற்சிக் கிறானா? பைத்தியக்காரத்தனம்!

பூவையும் சேலை அருகே வைத்துவிட்டு, ''அன் றையப் பேச்சுக்காக நீ என்னை மன்னிக்க வேண்டும், ரஞ்சி... இதையெல்லாம் கொடுத்து, மீண்டும் நம் உற வைப் புதுப்பிக்க முயற்சிக்கிறேன் என்று எண்ண வேண் டாம். செய்த தப்புகளுக்குப் பிராயசித்தம் என்று ஒன்று



உண்டல்லவா? அந்தப் பிராயச்சித்தமாக இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான் தனஞ்சயன்.

மெல்லச் சென்று, சேலையையும், பூவையும் கையில் எடுத்துப் பார்த்தாள் அபரஞ்சி.

குறை சொல்ல முடியாத சேலை, ஒரு காய் மொட்டோ, பூச்சி அரிப்போ இல்லாத பூக்களால் நெருக் கமாகக் கட்டிய பூச்சரம். தேர்ந்தெடுப்பதில் அதிக நேரம் செலவிட்டிருக்க வேண்டும்.

இந்த மாதிரிப் பொருட்களுக்கு ஒரு காலத்தில் ஆசைப்பட்டதும், ஆசைப்பட்டது கிடைக்கும்போது ஆனந்தமாகத் துள்ளியதும் அவளுக்கு நினைவு வந்தன. திருமணமான பிறகு அந்த ஆசைகள் அவலமானதும் கூட.

ஒரு பெருமூச்சுடன் கணவனைத் திரும்பிப் பார்த் தாள். ''ஒரு காலத்தில், இப்படி நீங்கள் வாங்கித் தந்திருந் தால் உற்சாகத்தில் துள்ளிக் குதித்திருப்பேன்... ஆனால் இன்று எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பட்டும் மாலையும் போட்டு அலங்கரித்தாலும் பிணம் அதை உணரப் போகிறதா என்ன? அதே போல எனக்கும்...''

அபரஞ்சி மேலும் பேசுமுன், ''ரஞ்சீ'' என்ற கூவ லுடன் ஓடிவந்து அவளை அணைத்து, அவள் வாயைப் பொத்தினான் தனஞ்சயன்.

''சொல்லாதே! மேலே சொல்லாதே! பாவீ! என்ன வார்த்தை சொல்லி விட்டாய்?! அய்யோ!'' என்று பதறித் துடித்தான் அவன். கண்களில் நீர்கூட நிரம்பி விட்டது.

வியப்புடன் கணவனை நோக்கினாள் அபரஞ்சி.

இந்த அளவு அன்பு இவனுக்கு இருக்கிறதா?

## 12

**த**னஞ்சயனின் பதட்டத்தைக் கண்டு அபரஞ்சி மனமிளகி நின்றது வெகுசில கணங்களே.

அதற்குள்ளாகவே, 'நான் இவர்மேல் எவ்வளவு அன்பு வைத்திருந்தேன்!' என்று தோன்றிவிட்டது. வெறு மனே அவனது படத்தைப் பார்த்தே பித்தாகி நின்றாளே! தந்தை, தோழியர், நகர வாழ்க்கை எல்லாவற்றையும் துறந்து, ஒரு கிராம வீட்டில் வாழப் போவது பற்றி ஒரு கணம்கூட அவள் கலங்கித் தயங்கவில்லையே!

அவனுக்காக உயிரைவிடவும் தயாராக இருந்த வளை எப்படி எப்படிக் கொத்திக் குதறினான்! குதறிக் குதறி அவளது அன்பைக் கொன்றே விட்டானே!

இன்று ஒரு சேலையையும், பூவையும் வாங்கி வந்து, பிராயச்சித்தம், மன்னிப்பு என்று தளுக்காக இரண்டு வார்த்தைகள் சொன்னால் அவன் அன்று சொன் னதெல்லாம் இல்லை என்று ஆகிவிடுமா? ஒரு சொட்டுக் கண்ணீரில் அவன் பேசியதெல்லாம் வெய்யில் கண்ட பனியாய்க் காய்ந்து மறைந்துவிடுமா?

அவள் எவ்வளவு கண்ணீர் வடித்திருப்பாள்?

இன்று அவளை மன்னித்துவிடச் சொல்லும் இவன் அன்று அவளை மன்னிக்கவா செய்தான்? மாறாக...

நிதானமாக, ஆனால் உறுதியோடு கணவனின் பிடியிலிருந்து அபரஞ்சி விலகிக் கொண்டாள்.

''நெருப்பு என்றால் வாய் வெந்துவிடுமா? பிணம் என்றதாலேயே நான் செத்துவிடப் போகிறேனா?'' என்று மிடுக்காகப் பேசி அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள்.



''தயவு செய்து இந்தப் பேச்சு வேண்டாம், அப ரஞ்சி'' என்று கம்மிய குரலில் அவன் வேண்டவும், தலையைச் சிலுப்பிக் கொண்ட போதும் அவள் அதற்கு மேல் அப்படிப் பேசவும் இல்லை.

அதன்பின் அங்கே நிலவிய சிறு மவுனத்தை உடைத்து அவளே பேசினாள். ''பாருங்கள். நான் பழை யனவற்றை எல்லாம் முயன்று மறந்து, இப்போது கொஞ் சம் நிம்மதியாக இருக்கிறேன். இப்போது வந்து பிராயச் சித்தம், மண்ணாங்கட்டி என்று சொல்லிக் கொண்டு நான் சிரமப்பட்டு மறந்ததை எல்லாம் நினைவு மூட்டாதீர்கள். எனக்கு இதெல்லாம் தேவையில்லை. ஏன், உங்களிட மிருந்து எதுவுமே எனக்குத் தேவையில்லை. பணம்கூட அப்படித்தான். விஷயத்தைச் சொல்லி நான் கேட்டால், எவ்வளவு பணம் என்றாலும் என் தந்தை தரத்தான் செய்வார். ஆனால் அவசியமற்று இப்போதே அவர் மனதைப் புண்படுத்துவானேன் என்றுதான் உங்கள் பணத்தைச் செலவு செய்து கொண்டு இருக்கிறேன். அத்தை மனதை நோகடிக்க நான் விரும்பவில்லை என்பதும் கூட அதற்கும் ஒரு காரணம்தான். ஆனால் இதுபோல் எதையும் தயவு செய்து வாங்கி வராதீர்கள்'' என்றாள் சற்று அழுத்தமான குரலில்.

ஒரு நாய்க்குட்டி மாதிரி சுற்றிச் சுற்றி வந்து பேசிச் சிரித்து அபரஞ்சி தன்னை மகிழ்விக்க முயன்றதும், தான் அவளை ஒதுக்கி நோகடித்ததும் நினைவு வர, தனஞ்சய னுக்கு உள்ளூர மிகவும் வலித்தது.

மனைவி தன் பிழைகளை மறந்து விடமாட்டாளா, மன்னித்து விடமாட்டாளா என்று இன்று ஏங்குகிறானே!

அன்று அவளை மன்னிக்க அவனுக்கு மனம் வரவில்லையே! அதுவும் அவள் தப்பே செய்யாதபோது அவளுக்கு எப்படி இருந்திருக்கும்!

''இனி இல்லை; அபரஞ்சி, நடந்த தவறுகளை எண்ணி நானும் வருத்தப்படுகிறேன் என்று காட்டவே...''

''தேவையில்லை'' என்றாள் அவன் மனைவி கறாராக.

''முன்பு நடந்தவை பற்றி நீங்கள் வருத்தப்பட்டாலும் படாவிட்டாலும் அதுபற்றி எனக்கு ஒன்றும் இல்லை. என்னைப் பொறுத்தவரை இனி என் வாழ்வுக்கு என் குழந்தை மட்டும் போதும். வேறு எதுவும் தேவையில்லை.''

அத்தோடு, பேச்சு முடிந்தது என்பது போல ஒரு தலையணை போர்வையை எடுத்துப் போட்டுக் கொண்டு அபரஞ்சி படுத்துவிட, வேறு வழியின்றி, தனஞ்சயனும் படுத்தான்.

இன்னமும் சில விஷயங்கள் பேச வேண்டும் அபரஞ்சி என்று, அவளை எழுப்பி வைத்துப் பேசலாம் தான். ஆனால், தனஞ்சயனின் குற்றமுள்ள நெஞ்சு அதற்கு இடம் தரவில்லை. எத்தனை முறை அவள் பேசும்போது இடையில் எழுந்து சென்றிருக்கிறான்? எத்தனை முறை அவளைக் கவனியாதது போல் அலட்சியப்படுத்தியிருக்கிறான்? இப்போது எந்த உரிமையோடு அவளை எழுப்பிப் பேசுவது?

மறு நாளையும், முதல் நாளைப் போலவே கழித்து விட்டு அதற்கு அடுத்த நாள், செங்கல்பட்டில் உரம் வாங்கப் போகிறேன் என்று காலையிலேயே கிளம்பி விடவேண்டும் என்பது தனஞ்சயனின் திட்டம்.



ஆனால், அவனுடைய தாயார் வேறு திட்டம் போட்டிருந்தாள்.

காலை உணவின்போது, ''தனா, இன்று மாலை நீ அபியை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போய் அங்கே கொஞ்சம் ஆசுவாசமாய் இருந்து விட்டு மெல்ல வீட்டுக்கு வாருங்கள். நானும் வாணியும் வடபழனி கோயில் வரை போய்விட்டு வருகிறோம். பக்கத்து வீட்டு அம்மாவோடு சேர்ந்து போய் வந்து விடுவோம்...'' என்றாள்.

சரளாவின் கருத்து, கணவன் மனைவி இருவருக்குமே புரிந்தது.

ஆனால், மனைவி விரும்பாத தனிமையை அவள் மேல் சுமத்த மனமின்றி, அதே சமயம் தாயிடம் நேரடியாக மறுக்கவும் முடியாமல், ''அது... அபரஞ்சிக்கு உடம்பு முடிகிறதா என்று பார்த்துக் கொண்டு நன்றாயிருந்தால் போகிறோம் அம்மா'' என்று கூறி தப்பித்துக் கொள்ள மனைவிக்கு ஒரு வழியைக் காட்டினான் தனஞ்சயன்.

''உடம்புக்கு என்ன? ஒன்றும் இல்லையே? அபி, வெளியே, கடற்கரையெல்லாம் நீ அவ்வப்போது போகிறதுதானே?'' என்று சரளா மருமகளை நேராக நோக்கிக் கேட்டாள்.

அதற்குமேல் சும்மா இருக்க மாட்டாமல், ''எனக்கு என்ன, வந்தது, அத்தை? சும்மா, உங்கள் மகனுக்கு ஏதோ பயம்! அவ்வளவுதான். என்னவோ, ஏதோ என்று நீங்கள் வேறு பயந்து விடாதீர்கள். கடற்கரையில் காற்றில் கொஞ்ச நேரம் இருந்து விட்டு வந்தால் நன்றாயிருக்கும் என்று நானே நினைத்துக் கொண்டிருந்தேன்'' என்றாள் அபரஞ்சி.

''சரிம்மா. அதற்குள் நான், செகரட்டேரியட்டில் ஒரு வேலை முடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்றான் தனஞ்சயன்.

''என்ன வேலை? நேற்றும் போனாயே? நாள் முழுவதும் இருந்தும் போன வேலை முடியவில் லையா?'' என்று ஐயம் காட்டித் துருவினாள் சரளா.

பழக்கமற்ற இந்தத் துருவலில் லேசாக வியப்புற்று, ''அரசாங்கத்துக்கு நெல் அரைத்துக் கொடுத்த கூலிப் பணம் அம்மா. அரசாங்க வேலை என்றால் ஆமை வேகம்தானே? டேபிளுக்கு டேபிள் தள்ளுமுன் ஒரு நாளின் வேலை நேரம் முடிந்து போகிறது. இன்று, இலாகா செகரட்டரியைப் பார்த்து கொஞ்சம் சீக்கிரம் தரும்படி சொல்லப் போகிறேன்'' என்று அன்றைய வேலையை அன்னையிடம் தனஞ்சயன் விவரித்தான்.

முழுச் சமாதானம் அடையாமலே, ''எப்படியும் சாயங்காலம் ஐந்து ஐந்தரைக்குள் வந்துவிடு. ஆறு மணிக்காவது கிளம்பினால்தான் கடற்கரையில் ஓர் இரண்டு மணி நேரமாவது உட்கார்ந்திருக்க முடியும்'' என்றாள் தாய் சற்று அதிகாரக் குரலில்...

கணவன் - மனைவி இருவருமாக இரண்டு மணி நேரம் தனியாக உட்கார்ந்திருக்கும் போது பேசாமலே இருந்துவிட முடியாது. தனிமையும், பொன் மணலும், சிலு சிலு காற்றும், இவர்களின் பிணக்கை நீக்கி நல்லபடி யாக இணைத்துவிடாதா என்பது சரளாவுக்கு.

வேறுவழியில்லை; சாரி! என்பது போல அபரஞ்சி யைப் பார்த்துவிட்டு, தன் வேலையைக் கவனிக்கத் தனஞ்சயன் கிளம்பிச் சென்றான்.

மாலையில் கணவனும், மனைவியும் விடை பெற்ற போது, ''அம்மா எங்களுக்கு இரவுச் சாப்பாடு எதுவும்



செய்ய வேண்டாம். வெளியிலேயே சாப்பிட்டு விட்டு வந்து விடுகிறோம். நீங்களும், வாணியும் எங்களுக் காகக் காத்திராமல் சாப்பிட்டு விடுங்கள்'' என்று மகன் சொன்னபோது சரளாவுக்கு அப்பாடி என்றிருந்தது.

இனி, மகனுக்கும், மருமகளுக்கும் இடையே எல் லாம் சரியாகி விடும் என்ற நம்பிக்கையோடு மகளை அழைத்துக் கொண்டு கோயிலுக்குக் கிளம்பினாள் அவள்.

கடற்கரையை அடையும் வரையும் கணவன் மனைவி யிடையே பேச்சு எதுவும் இருக்கவில்லை. இருக்க வழியும் இல்லை. இந்த மாமியார், சும்மா தன் வேலை யைப் பார்த்துக் கொண்டு போகக் கூடாதா என்று உள்ளூரச் சிறு எரிச்சலில் அபரஞ்சி வெளியே பார்த்தபடி வந்தாள். எதைப் பேசினால் அவள் மனம் எப்படி நொந்து விடுமோ என்று தயக்கத்தில் தனஞ்சயனும் வாய் திறக்கவில்லை.

காரை அவன் பூட்டும் வரை அருகில் நின்றபடி பார்வையைத் தன்போக்கில் சுழல விட்ட அபரஞ்சி சற்றுத் தொலைவில் நின்ற காரைப் பார்த்ததும் நிமிர்ந் தாள்.

மனைவியின் பார்வை சுற்றிலும் உள்ள மனிதர் களை, அந்த அரை இருளில் சலித்தெடுப்பதைக் கவ னித்து, ''அதோ, அங்கே உன் மாமா வீட்டுக் காருக்கு நேராகவே, உட்புறமாக உட்கார்ந்திருக்கிறார்கள் பார்'' என்று சுட்டிக் காட்டினான் தனஞ்சயன்.

சிறு வியப்புடன் நோக்கியவளுக்குப் பதிலாக, ''குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் பீச்சில் இருந்து விட்டு வரும்படி அம்மாவின் உத்திரவு. கிட்டத்தட்ட, அம்மாவின் முதல் கட்டளை என்றே சொல்லலாம்.

அதை மீற எனக்கு மனம் இல்லை. ஆனால், அவ்வளவு நேரம் என்னோடு தனித்திருக்கவோ, என் முகம் பார்த்துப் பேசவோ உனக்குப் பிடிக்காது என்பதால், உன் 'செட்'டுக்குப் ஃபோன் செய்து வரச் சொன்னேன்.... நமக்காகத்தான் காத்திருக்கிறார்கள். வா... போகலாம்...'' என்று தனஞ்சயன் கூறவும் அபரஞ்சிக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

நெருக்கத்தில் இவர்களைக் கண்டதும் 'ஓ' என்று ஆர்ப்பரித்த அந்தக் கும்பலில் மனைவியை விட்டு விட்டு, ''பேசிக் கொண்டிருங்கள். நான் போய்ச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்து விட்டு வருகிறேன்'' என்று திரும்பினான் தனஞ்சயன்.

''ஓகோ! என்று ஓர் ஆரவாரத்தை அடுத்து, ''நெல்லுக்கிறைத்த நீர் கொஞ்சம் புல்லுக்கும் பொசியுமாம். அதுபோலப் பொண்டாட்டிக்கு மட்டுமாய் வாங்கிக் கொடுத்தால் நன்றாயிராது என்று அத்தான் எங்களுக்கும் வாங்குகிறீர்களாக்கும்!'' என்றது ஒரு குரல் துடிப்போடு.

மீண்டும் எழுந்த 'ஹோய்' கூச்சலும் சிரிப்பும் அடங்கும்வரை காத்திருந்து, ''தப்பு!'' என்றான் அவன்.

''பின்னே எல்லாமே - இந்த பீச் கூட்டம், சாப்பாடு எல்லாமே. எங்களுக்காகத்தான் என்று சொல்லுங்கள்!'' என்று ஒரு கேலிக் குரல் கேட்கவும், ''இதுவும் தப்பு'' என்றான் தனஞ்சயன் இலகுவாக.

''பின்னே?'' என்று கோரஸ் கேட்டது.

''பிரமாதமாய் ஒன்றுமில்லை. உங்களோடு சேர்ந்து உண்டால், என் மனைவி கூடுதலாக நாலு வாய் சாப்பிடுவாள். அதற்காகத்தான்!'' என்று தனஞ்சயன் கூறி முடிக்கவும் ''ஓய்!'' என்று மீண்டும் பேரொலி எழும்பியது.



உணவுக்கு ஆர்டர் கொடுக்கவென்று தனஞ்சயன் செல்வதைப் பார்த்தபடி, ''அபி, உனக்குப் பிரசவத்தில் எதுவும் சிக்கல் கிக்கல் ஒன்றும் இல்லையேப்பா?'' என்று அவளுடைய மாமா பெண் அனுபமா வினவினாள்.

''இல்லையே, ஏன்?!''

''இல்லை. சாதாரணப் பிரசவம் என்றால் அங்கேயே பார்த்திருக்கலாமே. வீட்டில் கார் இருக்கிறது; தஞ்சை, திருச்சி இரண்டு நகரங்களும் பக்கம்தானே; இதற்காகச் சென்னைக்கு வருவானேன் என்று நினைத்தேன்'' என்றாள் கேள்வி கேட்டவள்.

இந்தக் கோணத்தில் இந்த விஷயத்தை அப்போதுதான் சிந்திப்பதுபோல, மேலும் ஒன்றிரண்டு குரல்கள், ''ஆமாம்; அதுதானே? இதைப் பற்றி யோசிக்கவே இல்லாமல், நாங்களும், உன்னை அங்கே இங்கே என்று இழுத்துப் போய் அலைய வைத்துக் கொண்டு இருக்கிறோமே!'' என்று கவலை தொனிக்கக் கேட்டன.

உறவினரின் கரிசனம் அபரஞ்சிக்கு உள்ளூர இதம் தர, ''இப்போதைக்கு குழந்தை, நான், எங்கள் உடல் நிலை எல்லாம் நூற்றுக்கு நூறு சரியாக, ஆரோக்கியமாகவே இருக்கின்றன. டாக்டர் உத்திரவாதம் கொடுத்திருக்கிறார்கள்'' என்றவள் தான் வந்ததன் உண்மைக் காரணத்தை மட்டும் சொல்லமாட்டாமல், ''எனக்கு... எனக்கு முன்பு லீவுக்கு வரும்போது சுற்றுவேனே, அதுபோல உங்களோடெல்லாம் ஜாலியாகச் சுற்ற ஆசையாக இருந்தது. அதற்காகத்தான் அவர் இந்த ஏற்பாடு செய்தார்'' என்று ஒருமாதிரிக் கோவையாகச் சொல்லி முடித்தாள்.

எப்படியும், அன்றைய மாலையை அவர்களோடு கழிப்பதற்கு ஏற்பாடு செய்தவன் தனஞ்சயன்தானே?

''அடேயப்பா!'' என்று ஆச்சரியப்பட்டனர் எல்லோரும்.

''அபி, நீ ரொம்ப லக்கிப்பா!'' என்றாள் முதலில் இதுபற்றித் தொடங்கிய அனுபமா. ''எங்கள் பெரியம்மா மகளைப் பேறு காலத்துக்கு என்று ஒன்பதாம் மாதக் கடைசியில்தான் அனுப்பி வைத்தார்கள். அதுவரையில் மாமியார் வீட்டில் வேலை வேலை என்று தேய்ந்து, ரொம்பவும் பலவீனமாக வந்தாளா, இவர்களுக்கு மகள் உடம்பைத் தேற்றக் கூட அவகாசம் இல்லாமல்... கடைசியில் சிசேரியன் பண்ணும்படி ஆயிற்று. மகளின் வாய்க்கு ருசியாக சாப்பிட ஏதேனும் செய்து கொடுக்கக் கூட முடியாமல் போயிற்றே என்று பெரியம்மா அழுவார்கள்.

''ஆனால் உன் வீட்டில் பார்! உன் ஆசைக்காகப் பாதி வீட்டையே கிளப்பிக் கொண்டு வந்து இங்கே ஒரு குடித்தனம் வைத்து, ஆசைக்குப் பொங்கிப் போட அம்மா இல்லாத குறை தீர உன் அத்தையும் கூட வந்து உட்கார்ந்து வகை வகையாகப் பண்ணிப் போட்டுக் கொண்டு - சும்மா சொல்லக் கூடாதுப்பா! அவர்கள் சமையல் வேறு ரொம்பவும் சுவையாக இருக்கிறது... அதுபோக விருப்பம் போலச் சுற்று என்று நல்ல டிரைவரோடு அருமையான ஒரு காரையும் தந்திருக்கிறார்களே! மெய்யாகவே நீ ரொம்பவும் கொடுத்து வைத்தவள் தான்'' என்று அவள் முடிக்க, ''ஆமாம் ஆமாம். அனு சொல்வது 'கரெக்ட்'' என்று எல்லோரும் ஒத்துப் பாடினர்.

அபரஞ்சியுடைய சித்தி மகள் காமினி - அவ்வளவு நேரம் கலைவாணி வரவில்லையே என்று முகம் வாடி இருந்தவள் இன்னொரு விதமாய் யோசித்தாள். ''எங்களுக்கெல்லாம் வீட்டில் இரண்டு நாட்கள் அம்மா இல்லா



விட்டால் மண்டையே வெடித்து விடும் போல ரொம்பவும் திண்டாடிப் போவோம். உன் வீட்டில் உன் அத்தை, நீ இரண்டு பேரும் இல்லாமல் மாமாவுக்கும் அத்தானுக்கும் எவ்வளவு சிரமமாக இருக்கும்? சாப்பாடுகூட ஓட்டலில் பார்த்துக் கொள்ளலாம்... ஓட்டல் இல்லாவிட்டால் யாராவது ஆள் போட்டுக் கொள்ளலாம்... மற்றது? துவைத்த துணி எடுத்துக் கொடுப்பது, படுக்கை தட்டி விரிப்பது, தேவைக்கு ஒரு மோர், காபி என்று தருவது... யாரேனும் வருகிறவர்களுக்குப் பதில் சொல்வது... இப்படி எத்தனை? இதையெல்லாம் உன் ஓர் ஆசையை நிறைவேற்றுவதற்காகச் சகித்துக் கொள்கிறார்கள் என்றால், அபி, உன் புகுந்த வீட்டார் மெய்யாகவே ரொம்பவும் 'கிரேட்'தான் அக்கா'' என்று வியந்தாள்.

''ஆமாப்பா!'' என்று மீண்டும் கோரஸ் ஒலித்தது.

அதைத் தொடர்ந்து, ''அபி, நீ வீட்டுக்குப் போனதும், உன் மாமியாரிடம் உனக்குச் சுற்றிப் போடச் சொல்லுப்பா. எங்கள் கண்ணே பட்டுவிடப் போகிறது! யப்பா, எதற்கும் எல்லோரும் 'டச்வுட்' சொல்லி, அவரவர் மரமண்டையைக் கொஞ்சம் தொட்டுக் கொள்ளுங்கப்பா!'' என்றாள் அனுபமா.

''என் தலை நல்ல மூளை உள்ள தலை. எதற்கும் உன் தலையையே தொட்டுக் கொள்கிறேன். பலன் சரியாக இருக்கும்!'' என்று கேலி பேசினாலும் எல்லோருமே அனு சொன்னதைச் செய்தனர்.

டைட் ஜீன்ஸ் அணியும் அனுபமா, கண்ணேறு விழாமல் சுற்றிப் போடச் சொல்லுவதும், எல்லோருமே 'டச்வுட்' சொல்லித் தலையைத் தொட்டுக் கொண்டதும், இந்தச் சொல்லும் செயலும் காட்டும் அக்கறையும் அபரஞ்சிக்கு நெகிழ்வோடு ஆச்சரியத்தையும் அளித்தன.

அதைவிடவும் கணவனை நினைத்து ரொம்பவும் பிரமிப்பாக இருந்தது.

திருமணமாகி இவ்வளவு நாட்களில், கணவன் வீட்டில் அவள் தெள்ளத் தெளிவாக, சர்வநிச்சயமாக அறிந்த ஒன்று, அவளுடைய மாமனார், தன் சுகத்துக்கு ஒரு சிறு குறை நேர்ந்தாலும் அதைக் கொஞ்சமும் சகித்துக் கொள்ளமாட்டார்; ஆடு ஆடென்று ஆடி விடுவார் என்பதுதான்.

தினம் தினம் அவரை எப்படிச் சமாளிக்கிறான்?

பழங்காட்டூர் வீட்டில், மாமனாருக்கு அவள் செய்த பணிவிடைகளை எண்ணிப் பார்த்தாள். கூடவே கலைவாணி, இருவர் செய்ததையும் இப்போது தனஞ்சயன் தான் வீட்டில் செய்து கொண்டு இருக்க வேண்டும்! கூடவே தன் வேலைகளையும் பார்த்துக் கொண்டு! அவனும் ஒன்றும் வேலைவெட்டி இல்லாமல் சும்மா வீட்டில் சோம்பிக் கிடப்பவன் அல்லவே!

'என்னடி பெரிய ஆசை' என்று மனைவியை அவன் அலட்சியப்படுத்தி விட்டிருக்கலாம். சுற்றிச் சுற்றிப் பார்க்கும்போது, பெரும்பான்மையான ஆண்கள் அப்படித்தான் நடப்பதாக அவளுக்குத் தோன்றியது. ஆனால், அவளது ஆசையை நிறைவேற்றுவதற்காகத் தனஞ்சயன் இவ்வளவு துன்பங்களைச் சகிக்கிறானே!

கோபம் வந்து விட்டால், எதிராளியை நோகப் பேசுவதில் உலகநாதனுக்கு நிகர் கிடையாது. என்னென்ன வாங்கிக் கட்டிக் கொண்டு இருக்கிறானோ, பாவம்!

முதலில், சென்னைக்கு கிளம்புவது பற்றிப் பேசும் மகனிடம் கூட ஏதோ சொன்னாரே! பதில் கூறுமுன் தன்னைச் சமாளிக்க அவனுக்குக் கொஞ்ச நேரம் தேவைப்பட்டதே! அன்றுபோல எத்தனை நடக்கிறதோ? தாயாரிடம் கூட அதுபற்றி ஒரு வார்த்தை சொல்லவில்லையே! தனக்குள்ளேயே வைத்து மறுகுகிறானே?



ஒருவேளை, அதையும் தன் பிராயச்சித்தமாகவே ஏற்றுக் கொள்கிறானோ? ஆனால், முதலில் அவன் செய்த அநியாயம்? அதை அவன் செய்திராவிட்டால், இந்தத் துன்பங்கள் அனுபவிக்கும் அவசியமே ஏற்பட்டிராதே! அபரஞ்சியின் சிந்தனை பலவாறு அலைந்தது.

## 13

திருமணம் ஆனதிலிருந்து, சென்னை வரும் வரையிலான ஓர் ஆண்டுக்குச் சற்றே மேற்பட்ட காலத்தை அடியோடு ஒதுக்கித் தள்ளி விட்டு, இந்த ஒரு மாதமாக ஒவ்வொரு நாளையும் அபரஞ்சி வெகு ஆனந்தமாகக் கழித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், தனஞ்சயன் வந்து சென்றதிலிருந்து அது முடியவில்லை.

என்னதான், கணவனின் பழைய பிழைகளை ஒவ்வொன்றாகப் பிடிவாதமாக முயன்று நினைவுப்படுத்திக் கொண்டபோதும், அவள் மனம் தனஞ்சயன்பால் இளகத்தான் செய்தது. ஒரு தவறான அபிப்பிராயத்தால் செய்துவிட்ட தவறுகளுக்காக யாரும் இவ்வளவு துன்பங்களை இழுத்துப் போட்டுக் கொண்டு கஷ்டப்பட மாட்டார்கள் என்று அபரஞ்சியின் மனதின் ஒரு பகுதி அவளுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டே இருந்தது. மனம் நெகிழும் போதெல்லாம், ஒரு பிழையும் செய்யாமலே தான் பட்ட துன்பங்களை விடாப்பிடியாக ஞாபகப்படுத்திக் கொண்டு, அதன் காரணமான கணவன் மீதான

கோபத்தை வளர்த்துக் கொள்ள அவள் முயற்சிப்பாள். அதுவும், அப்படி ஒன்றும் கடினமாகவும் இல்லை. ஏனெனில், சுற்றும்முற்றும் கண்ணில் படுகிற எந்தக் கணவனும், தனஞ்சயன் முன்பு பேசியதுபோலக் குரூர மாகப் பேசியும் அவள் காணவில்லை. அதிலும், மனைவியிடம் பாசம் பரிவாகப் பழகும் கணவர்களைக் காணும்போது, தனஞ்சயன் இப்படி நடந்து கொண்டது இல்லையே என்ற கொதிப்பும் தோன்றவே செய்தது.

இப்படி உள்ளூர அபரஞ்சியின் மனதில் ஒரு போராட்டம் நடந்து கொண்டே இருந்தது.

இதனிடையே, தனக்குள் ஏதோ கணக்கிட்டு, சரளா தன் மகனைப் பற்றி அடிக்கடி மருமகளிடம் பேசலானாள்.

ஒருவேளை, மகனுடைய மகவைத் தாங்கி நின்ற மருமகளைப் பார்க்கையில், அந்த மகனைத் தான் தாங்கி நின்றதும், அவன் பிறந்து வளர்ந்ததுமான நினைவுகள் அவளுக்கு அதிகம் தோன்றினவோ, என்னவோ? அவள் அடிக்கடி மகன் புராணமே படித்தாள்.

அவன் பிறந்தது, முகம் பார்த்துச் சிரித்தது, குப்புற விழுந்து, தவழ்ந்து ஓர் ஆண்டுக்குள் ஓடி விளையாடியது எல்லாம் சொன்னாள்.

''என் மாமியாருக்கு அவன் மிகவும் செல்லம், அபி. அப்போதெல்லாம், இவனைப் பெற்றதால்தான் என்னை இந்த வீட்டில் இருக்க அனுமதித்திருக்கிறார்கள் என்றுகூட நான் நினைத்ததுண்டு... ஆனால், தனா வந்து, அம்மா என்று கட்டிப்பிடித்தால், எனக்கு மற்ற துன்பம் எல்லாம் அடியோடு மறந்து போகும்...'' என்று பழைய நினைவுகளில் அவள் லயித்துப் போவாள். அவனா லேயே எனக்குப் பாதிக் கொடுமை குறைந்தது என்று



சொல்லலாம். யாராவது என்னைத் திட்டினால், அவர் களிடம் எதிர்த்துப் பேசினான் என்று சொல்ல முடியாது அபி. ஆனால், கையைக் கட்டிக் கொண்டு என் அருகி லேயே நிற்பான். எப்படியோ திட்டு நின்று விடும்...

''படிப்பு, விளையாட்டு எல்லாவற்றிலும் தனாதான் முதல். திருச்சியில் செயின்ட் ஜோஸஃப்-ல்தான் படித் தான். முதலில் இருந்தே கம்ப்யூட்டர் என்றால் ஒரு மோகம். கம்ப்யூட்டர் இப்படி, கம்ப்யூட்டர் அப்படி என்று நிறையச் சொல்லுவான். எனக்கு ஒன்றும் புரி யாது... ஆனால், அவன் ஒரே ஒரு தப்பு அடி எடுத்து வைத்தது இந்தக் கம்ப்யூட்டர் மயக்கத்தினால்தான்....

என்ன வரப்போகிறது என்று அபரஞ்சிக்குப் புரிந்து விட்டது. 'இதை இன்னும் ஒரு தரம் கேட்க வேண்டுமா' என்று எழ நினைத்தவளுக்கு உடனேயே மனம் மாறி விட்டது. மாமியார் வெகுளி; பொய்மை அறியாதவள். இவள் வாய்மொழியாகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள லாமே என்று தோன்றி அசையாமல் உட்கார்ந்து விட் டாள்.

ஆனால், தனஞ்சயன் கூறியது முழு உண்மையா கவே இருந்தாலும் கூட, அவன் தன்னிடம் நடந்து கொண்ட முறை மன்னிக்கப்படக் கூடியது அல்ல என்ப தில் மட்டும் அவள் உறுதியாகவே இருந்தாள்.

ஆயினும், ''என்ன தப்பு அடி வைத்தார், அத்தை?'' என்று தெரியாதவள் போல மாமியாருக்கும் எடுத்துக் கொடுத்தாள்.

''உன்னிடம் தனா சொல்ல... அவன் எங்கே சொல்லி யிருப்பான்? அவன்தான் அவன் அப்பாவைப் பின் பற்றிப் போய்க் கொண்டு இருந்தானே! சொல்லியிருக்க வாய்ப்பில்லைதான். நான் சொல்லுகிறேன் அபி. அபி,

தனஞ்சயனின் கம்ப்யூட்டர் மோகம் பற்றிச் சொன்னேன் இல்லையா? கம்ப்யூட்டர் தொட்டுப் பழகிய பிறகு, அவனுக்கு இந்த அரிசி மில் தூசியும், வயலின் சேறும் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இதில், அதிக லாபம் வரவில்லை என்பதும் ஒரு காரணம். தொழில்தான் செய்வேன் என்று ஒரே அடம் பிடித்தான். கலையிடம் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டாலும் கூடத் தனஞ் சயன் தன் ஆண் வாரிசு என்று உன் மாமா அவனிடம் சற்று இணக்கமாகத்தான் நடந்து கொள்ளுவார். எனவே, கடைசியாக அவனது பிடிவாதத்துக்குப் பணிந்து, அவ னிடம் ஐந்து லட்ச ரூபாயைக் கொடுத்தார். ஆனால், ஒரு நிபந்தனையும் விதித்தார். மகனுக்கு ஒரே ஓர் ஆண்டுதான் அவகாசம். அந்த ஓர் ஆண்டின் முடிவுக் குள் இந்தப் பணத்திற்கு மேல் கொஞ்சமேனும் லாபம் காணவேண்டும்; அல்லாது அதற்கு மேல் மறுப்பாய் ஒரு வார்த்தை சொல்லாமல் அரிசி மில்லுக்கு வந்துவிட வேண்டும் என்றார்.

''தனத்துக்குத் தன் முடிவின் மேல் மிகுந்த நம் பிக்கை... இதற்கு மேல்தான் எனக்குக் கொஞ்சம் குழப் பம் அபி. அந்தப் பணத்தை எடுத்துப் போனவன், புது நிறுவனத்தில், பணம் முழுவதையும் போட்டு கம்பெனி யில் ஒரு டைரக்டர் ஆகிவிட்டானாம். ஆறு மாதம் கழித்து உற்பத்தி தொடங்கி விட்டால், முதல் ஆண்டி லேயே குறைந்தது ஒரு லட்சம் கிடைக்கும்; பிறகு இரு மடங்கு ஆகும், அது இது என்று ரொம்பவும் சொல்லு வான். பிறகு பார்த்தால் அது ஏதோ மோசடி நிறுவன மாம். பிறகு ஓர் ஆறு மாதம் அலையாய் அலைந்து, இரண்டு லட்சத்தைத் தோற்று விட்டு வந்தபோது அவன் முகத்தைப் பார்க்க வேண்டும்! உன் மாமா இரண்டு நாள் இடைவிடாமல் லெக்சர் அடித்தார். அவர் குணத்துக்கு



இன்னும் எவ்வளவோ சொல்லியிருப்பார். மகன் என்ற தால் அத்தோடு விட்டார் என்று நினைக்கிறேன்.''

''பிறகு, மாமா அவரிடம் அதுபற்றி ஒன்றும் குத்திக் காட்டுவது இல்லையா, அத்தை?'' என்று தெரியாதவள் போல அபரஞ்சி மேலும் விசாரித்தாள்.

''ம்ம்... நன்றாகக் கேட்டாயே! அவராவது சும்மா விடுவதாவது? அவனை யாராவது புகழ்ந்தால் அன் றைக்கு ஒரு குத்து விழும். அவருக்குப் பிடிக்காதது எதையாவது தனா செய்தான், அன்றும் வாங்கிக் கட்டு வது நிச்சயம். சென்னைக்குக் கிளம்பும் போதுகூட, என்ன சொன்னார், நினைவில்லை, பிள்ளைக்கு மீண்டும் பேச்சு வரவே வெகுநேரம் ஆகிவிட்டதே! நெஞ்சிலே ஒரு முள் என்று வரதராசனார் புத்தகம் ஒன்று உண்டு. அதேபோல, என் மகன் மனதை என்றைக்கும் உறுத்தும் நெருஞ்சி முள் ஆகிவிட்டது, அந்தத் தொழில் தோல்வி'' என்று முடித்தாள் சரளா.

உண்மைதானோ? அப்படிக் குத்தி ரணமாக்கிக் கொண்டே இருந்ததால் தான் அவனால் மறக்க, மன் னிக்க முடியாமல் போயிற்றோ? ஆனாலும் மனைவி என்று ஏற்ற பிறகு, கட்டிப் போட்டு அடிப்பதுபோல அவன் நடந்து கொண்டதை எப்படி நியாயப்படுத்த முடியும்?

கடைசித் தடுப்பு ஊசியைப் போடப் போனபோது 'செக்கப்' பண்ணி விட்டு, ஊசியைப் போட்ட டாக்டர் கேலியாக அபரஞ்சியை நோக்கினார். ''இப்போதெல் லாம், பழங்காட்டூரிலிருந்து எனக்குத் தினமும் ஒரு 'டிரங்கால்' வருகிறதே!'' என்று, கண் சிமிட்டிச் சிரித்தார்.

திகைப்பும், தன்னைமீறிய ஆர்வமுமாக, அபரஞ்சி நோக்கவும், ''எல்லாம் உன்னைப்பற்றிய விசாரணை

தான். டெலிஃபோனில் 'டைம் கால்' போட்டு அபரஞ்சி எப்படி இருக்கிறாள்? என்று தினமும் கேட்டுக் கொண்டே இருக்கிறார். வாரம் ஒரு தரம்தான் செக்கப். கடைசி 'செக்கப்' முடிந்து நாலு நாட்கள்தான் ஆகின்றன. இன்னமும் மூன்று நாட்கள் கழித்து டெலிஃபோன் பண்ணுங்கள் என்றதற்கு என்ன பதில் வந்தது தெரியுமா?'' என்று ஒரு கணம் நிறுத்தி, அபரஞ்சியின் ஆவலைக் கிளறி விட்டு, ''இடையில் வலி என்று உங்களிடம் வந்துவிட்டிருந்தால்? என்று கேட்கிறார். சரி, உங்கள் வீட்டாருடனையே பேசித் தெரிந்து கொள்ளுங்களேன் என்றால், அதற்கு ஏதோ கொஞ்சம் காலாற வெளியே போகக் கூடும். என் டெலிஃபோனுக்காக எல்லோரும் வீட்டிலேயே கிடங்கள் என்று சொல்லக் கூடாதில்லையா? என்று கேட்கிறார்! என்ன உருக்கம், பாருங்கள்! உங்கள் சிறுசிறு விருப்பங்கள் கூட அவரால் தடைப்பட்டு விடக் கூடாதாம்!'' என்று மேலும் நகைக்க, அபரஞ்சியின் கன்னங்கள் பெருமையும் கூடவே சிறு குன்றலுமாகச் சிவந்து போயின.

அவளுக்காக இப்போது தனஞ்சயன் உருகுவது உண்மைதான். அவளுக்காக, அவளது நிம்மதிக்காக, அவளது மகிழ்ச்சிக்காக எதைச் செய்யவும் இப்போது தனஞ்சயன் தயாராகத்தான் இருந்தான் என்பதை அவள் அறிந்தே இருந்ததால், அவனது தினசரி விசாரிப்பு பற்றி டாக்டர் குறிப்பிட்டபோது அவளுக்கு மெய்யாகவே பெருமையாகத்தான் இருந்தது.

ஆனால், வீட்டுக்கு டெலிஃபோன் செய்வது பற்றி அவன் சொன்ன காரணம் பொய்! மனைவிக்குத் தன்னோடு பேசப் பிடிக்காதே என்று, அதற்காகவே அவன் அவர்களது வீட்டில் தொடர்பு கொண்டு பேசவில்லை என்பதை உணர்ந்திருந்ததால் அவளுக்கு உள்ளூர மனம்



உறுத்தியது. இந்த டாக்டர் பாராட்டுவது போல் அவர்கள் லட்சியத் தம்பதிகள் அல்லவே என்கிற எண்ணம் அவளைக் குறுகச் செய்தது. அவர்களது பிரிவை என்றேனும் அறிய நேரும் போது இந்த டாக்டர் யார் மீது குற்றம் காணக்கூடும்?

அபரஞ்சியின் ஃபைலை ஒரு தரம் நோட்டம் விட்டு விட்டு, அன்றையப் பரிசோதனை மற்றும் தடுப்பூசி விவரங்களை எழுதியபடியே, ''இவ்வளவு அலட்டிக் கொள்ளும் உங்கள் கணவர், இங்கேயே இருந்திருக்கலாமே! வலியெடுத்த உடனேயே தெரிவித்தால்கூட அவரால் மறுநாள்தானே, இங்கே வந்து சேர முடியும்?'' என்றார் டாக்டர் பேச்சுவாக்கில், ''அங்கே பணம் எண்ணிப் பெட்டியில் வைப்பது தடைப்பட்டு விடுமோ?'' என்றார் கிண்டலாக.

பழங்காட்டூர் என்ற பெயரையும், மாமனார், மாமியாரின் லேசான கிராமப்புறத் தோற்றத்தையும் வைத்து, தனஞ்சயனை இந்தப் பெண் டாக்டர் ஒரு பட்டிக்காட்டுப் பண்ணையாராக மதிப்பிடுகிறார் என்பது அபரஞ்சிக்குப் புரிந்தது. ஒருவேளை, இன்றைய அர்ஜுன் அஸ்வின் என்ற பெயர்களின் நடுவில் இந்தத் தனஞ்சயன் என்ற பெயர்கூட அவருக்கு பழங்காலமாகத் தோன்றியிருக்கலாம்.

ஆனால், உள்ளூரக் கணவன் மீது சற்றுப் பரிதாபப் பட்டுக் கொண்டிருந்த அபரஞ்சிக்குச் சுள்ளென்று கோபம் வந்து விட்டது. ''வெறுமனே வீட்டுக்காக மட்டும் பணம் எண்ணுவது என்றால், போட்டு விட்டு வந்து உட்கார்ந்து விடலாம், டாக்டர்! ஆனால், என் கணவன் எண்ணுவது நாட்டுக்காகவும்; அவரது ஏற்றுமதியால், நம் நாட்டுக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணி

என்ன ஆகும்? ரொம்பப் பெரிய அளவில் என்று இல்லாவிட்டாலும், சிறுதுளிதானே டாக்டர், பெரு வெள்ளம்? நம் நாடு இருக்கும் நிலையில், ஒரு சிறு அளவு அன்னியச் செலாவணியைக் கூட வீணாக்கி விடக் கூடாது என்றுதான், என் கணவர் ஊரிலேயே இருக்கிறார்!'' என்று படபடத்தாள்.

ஃபைலை மூடி, சரளாவிடம் கொடுத்த டாக்டர் மேலும் சிரித்தார். ''உங்கள் மருமகள், உங்கள் மகனுக் காக என்னமாய் வக்காலத்து வாங்குகிறார், பாருங்கள்'' என்று புருவம் தூக்கி வியந்து காட்டவும், அபரஞ்சி திகைத்துப் போனாள்.

அவளா, தனஞ்சயனுக்காகப் பரிந்து பேசினாள்!

அவளை நோக்கி முறுவலித்து விட்டு, ''இன்னும் இரு வாரங்களில் குழந்தை பிறந்து விடும் என்று நினைக்கிறேன். வலி பற்றி நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதல்லவா? எதற்கும் இனிமேல் அதிகம் வெளியே போகவேண்டாம். இடையில் ஏதாவது என் றால், இரவு பகல் எந்த நேரமானாலும் என்னோடு தொடர்பு கொள்ளத் தயங்க வேண்டாம்'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

வீட்டில் ஆவலுடன் காத்திருந்த கலைவாணி, விவ ரம் அறிந்ததும் ''ஹையா, இன்னும் இரண்டு வாரத்திற் குள் வீட்டில் பாப்பா பிறந்து விடும்!'' என்று குதித்து விட்டு, காமினிக்கு அதைச் சொல்வதற்காக ஓடிச்சென்று டெலிஃபோனை எடுத்தாள்.

சரளாவுக்கும் டாக்டரிடம் சென்று வந்தபிறகு உள் ளூர நிம்மதிதான். மகனின் விசாரிப்புகளும், மருமகள் மகனைத் தாங்கிப் பேசியதும் அவளது கவலையைப் பெரிதும் அகற்றி விட்டிருந்தன.



மன உளைச்சலோடு படுக்கப் போனவள் அபரஞ்சி மட்டும்தான்.

இந்தப் பிரிவை விரும்பியவள் அவள்தான். இன் னும் நிரந்தரப் பிரிவே வேண்டும் என்று கணவனிடமே கேட்டவளும் அவள்தான்.

ஆனால், இந்த இடைக்காலப் பிரிவை ஏற்படுத்திக் கொடுத்த தனஞ்சயன், நிரந்தரப் பிரிவுக்கும் வழி வகுத்து தந்தான் என்றால் அதை, அவளால் இப்போது ஏற்க முடியுமா? பிரிவு வேண்டும் என்று சொல்லி விட்டு, இனி அதை அவளே மாற்றுவது கேவலம் அல்லவா?

மான அவமானப் பிரச்சனையை ஒதுக்கி விட்டா லும், பிரிவு வேண்டாம் என்று தனஞ்சயனிடம் சொல்வ தும் எளிது அல்ல. அந்த வார்த்தைகளின் பின்னே பெரிய பொறுப்பு இருக்கிறது. பிரிவு வேண்டாம் என் றால், சேர்ந்து வாழ்ந்தாக வேண்டும். ஆனால், இந்த ஓர் ஆண்டு வேதனைகளை மறந்து, தனஞ்சயனோடு ஒன்றுபட்டு அவளால் வாழ முடியுமா? முடியாதே!

அவள் ஏற்பது ஒருபுறம் இருக்க, இந்தக் குழந்தை? அதன் கதி என்ன ஆகும்? பெற்றோருக்கிடையே உள்ள பிரச்சினைகளைப் பற்றி எதுவும் தெரியாமல், அன்னை வயிற்றினுள் பாதுகாப்பாய் 'குளுக் குளுக்'கென்று இங் கும் அங்கும் அளைந்து விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையின் எதிர்காலத்தை நினைக்கையில் அபரஞ்சி யின் மனம் கலங்கியது.

ஒரு பாவமும் அறியாத இந்தக் குழந்தை தந்தை அல்லது தாயைப் பிரிந்துதான் வளர வேண்டும் என்றால் அது பாவம் அல்லவா?

குழந்தை பிறந்த பிறகும் இப்படியே, இங்கேயே உட்கார்ந்து கொண்டு இருக்க முடியாது!

ஏதோ ஒரு முடிவு செய்தாக வேண்டிய நேரம் நெருங்கி வந்து விட்டபோதும் எந்த முடிவுக்கும் வரமுடியாமல் அபரஞ்சி மிகவும் திண்டாடினாள்.

இந்த நிலையில், இரண்டு நாட்கள் செல்ல, மூன்றாம் நாள், அபரஞ்சியுடைய பெரியப்பா பிள்ளைகளுள் மூத்தவனான மதுசூதனன், தன் பெட்டியோடு அங்கே வந்து சேர்ந்தான்.

''அபி, ஒரு நாலைந்து நாள் நான் இங்கே உன் வீட்டில் தங்கிக் கொள்ளலாமா? உன் மாமியாரிடம் சொல்லி, அனுமதி வாங்கித் தருகிறாயா? ப்ளீஸ், அபி!'' என்று அவன் கண்கலங்கக் கேட்கவும் அபரஞ்சி திகைத்துப் போனாள்.

''என்ன மது அண்ணா, என்ன விஷயம்?'' என்று கவலையுடன் விசாரித்தாள்.

''சொல்லுகிறேன். ஆனால் முதலில் நான் இங்கே தங்கலாமா என்று அத்தையிடம் கேட்டுச் சொல்லு!''

''அங்கே அடையாறில் உன் வீட்டில்...''

''என் வீடு இல்லை அது. அது என் அப்பாவின் வீடு. அங்கே போய்த் தங்குவதை விடத் தற்கொலை செய்து கொண்டு செத்து விடுவேன். அல்லது கொலை செய்து விட்டு ஜெயிலுக்குப் போவேன்'' என்று மதுசூதனன் ஆத்திரத்தோடு கூறவும், அபரஞ்சி பயந்து விட்டாள்.

இவன் பேச்சைக் கேட்டபடியே வந்து, தானும் திகைத்து நின்ற மாமியாரிடம் கண்ணாலேயே சம்மதம் பெற்று, ''என்ன பேச்சுப் பேசுகிறாய், அண்ணா. அப்படியெல்லாம் மிரட்டாமலேயே நீ எங்கள் வீட்டில் எத்தனை நாள் வேண்டுமானாலும் தங்கலாம். முதலில், இப்போது



நீ என்ன சாப்பிடுகிறாய் சொல்லு. உனக்குப் பிடித்த ரவைப் புட்டும், முந்திரிப் பக்கோடாவும் தான் இன்று மாலை டிஃபன். கூடக் காஃபி வேண்டுமா? அன்னாசி ஜூஸ் குடிக்கிறாயா?'' என்று பிரியமாய் உபசரிக்கவும் மதுசூதனன் ஒருவாறு அமைதியுற்றான்.

''இதுதான் அபி, உன் 'ஸ்பெஷல்'! மனது எப்படி அலை பாய்ந்தாலும், எப்படியோ அமைதியாக்கி விடுவாய். அம்மாகூட அன்றைக்கு அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். உன் மாதிரி இருக்கப் படிக்கும்படி, மனுவைத் திட்டிக் கொண்டு இருந்தார்கள்... அப்போது தான் எனக்கே, இங்கு வந்து நாலு நாள் இருக்கலாமே என்று தோன்றியது...''

''நீ இங்கு வருவது பெரியப்பா, பெரியம்மாவுக்குத் தெரியுமா, அண்ணா? காணோமே என்று அனாவசியமாகக் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கப் போகிறார்கள்...''

''அதெல்லாம் மாட்டார்கள். சனி தொலைந்தது என்று சந்தோஷப் படுவார்கள்.''

''சேச்சே! நீ கோபத்தில் பேசுகிறாய். கோபம் தீர்ந்ததும் எல்லாமே சரியாகி விடும்''.

புட்டும் பக்கோடாவும் காலியான வேகத்தைப் பார்த்து, இவன் அன்று முழுவதுமே சரியாக உண்ணவில்லை என்பதை உணர்ந்து, மாமியாரும், மருமகளுமாக இரண்டு தோசைகளையும், மிளகாய்ப் பொடி வைத்துக் கொடுக்க அதையும் உண்டு முடித்து, ஒரு பெரிய கண்ணாடித் தம்ளர் நிறைய கெட்டியான அன்னாசிப் பழச் சாறையும் குடித்து முடித்த பிறகே, மதுசூதனன் 'அப்பாடி' என்று பெருமூச்சு விட்டான்.

சற்று நேரம் சோபாவில், அரைப் படுக்கையாய்ச் சாய்ந்து கிடந்தவன், கையில் ஒரு பழச்சாறு தம்ளரோடு வந்து அமர்ந்த அபரஞ்சியைக் கண்டதும், ''என்னவோ வித்தியாசமாகத் தெரிகிறதே, அபி. இங்கே நாய்க்குட்டி, பூனைக்குட்டி என்று கிடையாதில்லையா? பின்னே... ஓகோ, உன் நாத்தனார்! உன்னையே வால் பிடித்துக் கொண்டு உன் பின்னாலேயே அலைவாள் அல்லவா? அவளைக் காணவில்லை என்பதால் வித்தியாசமாகத் தோன்றியிருக்கிறது! அவள் எங்கே, அபி? ஊருக்குப் போய் விட்டாளா?'' என்று வினவினான்.

''இல்லை, மது அண்ணா, காமினியோடு சினிமாவுக்குப் போயிருக்கிறாள்'' என்று பதிலிறுத்தவள், ஒன்று விட்ட அண்ணன் சாதாரணமான பேச்சுக்குத் தயாராகி விட்டதை உணர்ந்து, ''என்ன அண்ணா நடந்தது?'' என்று விசாரித்தாள்.

மீண்டும் முகம் சுருங்கிய போதும், மதுசூதனன் தங்கையின் கேள்விக்கு மறைக்காமல் பதில் உரைத்தான்.

''அபி, என் நண்பன் மோகனை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா... இல்லையா?''

''பார்த்தது இல்லை. ஆனால் தொழில் கூட்டாளி, என்று ஒருதரம் சொல்லியிருக்கிறீர்கள்.''

''ஆமாம். அண்ணா சாலையில் எங்கள் அலுவலகம். அங்கேயே சுற்றிலுமாக ஓர் இருபத்தைந்து பெரிய கம்பெனிகளுக்கு 'டேட்டா புராசஸிங்'' செய்து கொடுக்கிறோம். செய்து கொடுத்தோம். நல்ல வருமானம். எல்லா செலவும் போகக் கையில் ஆளுக்கு மாதம் ஐம்பதினாயிரம் வரை வந்து கொண்டு இருந்தது''.

''அவ்வளவு வந்ததா, அண்ணா? பிரம்மாதமாகத் தான் நடத்திக் கொண்டு இருக்கிறாய்.''



ஒரு பெருமூச்சு விட்டு, ''நடத்தினேன் என்று கடந்த காலத்தில் சொல்லு'' என்றான் அண்ணன்.

''அப்படி என்றால்?''

''இப்போது அதில் எனக்கு ஒன்றும் இல்லை என்று அர்த்தம்!'' என்றவன், அபரஞ்சியின் திகைப்பைக் கண்டு விவரம் உரைத்தான். ''நாலு மாதம் முன்பு நான் சிங்கப்பூர், மலேஷியா, பாங்காக், ஹாங்காங் என்று ஜப்பான் வரை ஜாலியாகச் சுற்றி விட்டு வந்தேன். ஒரு மாதப் பயணம். அப்போது இங்கே நிர்வாகத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் இருப்பதற்காக, நிறுவனத்தை நடத்த முழு அதிகாரத்தையும் அவனுக்கு எழுதிக் கொடுத்து விட்டுப் போனேன். நண்பன், இரண்டு ஆண்டுகளாக கூட்டாகத் தொழில் நடத்தினோம் என்பதால், அவனை நம்பி, அவன் கேட்ட மாதிரிப் 'பவர் ஆஃப் அட்டார்னி' யாகவே எழுதிக் கொடுத்து விட்டேன். திரும்பி வந்த பிறகு அதை ரத்துப் பண்ணவும் நான் அவசரப்படவில்லை... பிறகு பார்த்தால் மோகன் அதைப் பயன் படுத்திக் கொண்டு, நிறுவனத்தையே விற்று விட்டுப் பணத்தோடு எங்கோ போய் விட்டான்!''

''அய்யோண்ணா! விஷயம் தெரிந்தபோது உனக்கு எப்படி இருந்திருக்கும், பாவம்!'' என்று அனுதாபப் பட்டாள் அபரஞ்சி.

''நீ எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று யோசிக்கிறாய்! அப்பா அம்மாவோ பணம் பறிபோனதைத்தான் பெரிதாக நினைக்கிறார்கள்... இது வெளியே தெரியும் போது அதிலும் என் வருங்கால மாமனார் வீட்டுக்குத் தெரிய வரும்போது அவர்களுக்கு அவமானமாக இருக்குமே என்று பதறுகிறார்கள். அந்த அவமானம் எனக்கு இராதா, அபி?

''நினைக்க நினைக்க, அந்த மோகனைத் தேடிப் பிடித்துக் கொன்று விடவேண்டும் என்றுமனம் .கொதிக் கிறது. இதைப் பிரீதி வீட்டார் எப்படி எடுத்துக் கொள்ளக் கூடும்! திருமணத்தையே நிறுத்தி விட்டால்?''

''சேச்சே! அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள். உங்களுக்கு இது ஒன்றுதான் தொழில் என்று இல்லையே!''

''எனக்கு என்று இருந்தது இதுதானே? நானாக ஆசைப்பட்டு,திட்டமிட்டு... சே! பாவி! என்னை ஏமாற்ற, அவனுக்கு எப்படி மனம் வந்தது? அய்யோ! எவ்வளவு தவிப்பாக இருக்கிறது, தெரியுமா, அபி? இருக்கட்டும்! என்றாவது ஒரு நாள் மோகன் என் கையில சிக்காமல் போகமாட்டான்! மகனே! உன்னை அன்றைக்குப் பார்த்துக் கொள்கிறேனடா!'' என்று பொருமிக் கருவினான் மதுசூதனன்.

அபரஞ்சி பதில் ஏதும் சொல்லவில்லை. ஏனெனில், அதற்குள் பழங்காட்டூருக்குப் போய் விட்டிருந்தது அவளது மனது.

தனஞ்சயனுக்கும் இப்படித்தான் இருந்ததா? அவள் மட்டும் கையில், அகப்பட்டால் அடித்தே கொன்று விடவேண்டும் போல வெறி இருந்ததா? அவளை, அவன் அடித்து, உதைத்து சித்திரவதை செய்வதையே இப்போது பெரிதாக தனஞ்சயனின் பெருந்தன்மையாக எடுத்துக் கொள்ள வேண்டுமா? ஆனால், அடித்து உதைப்பதுதானா கொடுமை? அவன் பேச்சு, அதை விடப் பெரும் கொடுமை அல்லவா?

''நானே இப்படித் தவித்துக் கொண்டு இருக்கிறேன். இதில் அப்பாவும், அம்மாவும் வேறு குதறி எடுக்



கிறார்கள்!'' என்று அண்ணன் உரைத்தது அரைகுறை யாக அவளது காதில் விழுந்தது.

அவனுடைய தந்தை குத்தி குத்திப் பேசும்போது தனஞ்சயனுக்கும் இப்படித்தானே இருந்திருக்கும்? அதைத்தான் அவ்வப்போது அவள் மேல் திருப்பினானா?

பிரசவ வேதனையின் தொடக்க வலியை, அபரஞ்சி அப்போது திடுமென உணர்ந்தாள்.

''அம்மா, அப்பா, நட்பு, சுற்றம் எல்லாம் ஒரு மனிதனுக்கு எதற்காக இருப்பது, அபி? நன்றாயிருக் கும்போது, கூடச் சேர்ந்து குதித்து, கூத்தாட மட்டும் தானா? துன்பம் வரும் நேரத்தில் தோள் கொடுப்பதற் காக அல்லவா? தோள் கொடுக்காவிட்டாலும், பரி வோடு இரண்டு வார்த்தை பேசலாம் அல்லவா? இப் போது பார், மனம் நொந்து இங்கே உன் வீட்டுக்கு வந்தேன். இரு அண்ணா; என்று வயிறு நிறையச் சாப்பிட வைத்தாய்! 'என்ன ஆயிற்று' என்று ஓர் அக்கறையோடு நீ கேட்கும்போது எவ்வளவு இத மாக...'' என்றபடி தங்கையை நோக்கிய மதுசூதனன் அவளது திகைத்த முகத்தைப் பார்த்து மிரண்டு எழுந் தான்.

''ஏய்... அபி, என்ன? என்ன செய்கிறது? ஏன் இப்படி விழிக்கிறாய்? ஏய், என்னடி? வாயைத் திறந்து சொல்லேன்...'' என்று அவன் பதறும்போதே, இடுக்கிப் பிடிபோல இடுப்பில் அந்த வலி தோன்றியதே பொய்யோ எனும் வண்ணம், அபரஞ்சிக்கு அது அடி யோடு மறைந்து போயிற்று.

மதுசூதனனின் பதட்டத்தைப் பார்த்து, ''ஒன்று மில்லை அண்ணா'' என்று சற்று நேரம் சாதாரணமாகப்

பேசிக் கொண்டு இருந்தபோது அவளுக்கு அடுத்த வலி வந்தது.

அப்புறம், அடுத்து, அடுத்து, அடுத்து... ஒரு வலிக்கும், அடுத்த வலிக்கும் நடுவில் இருந்த இடைவெளி குறுகிக் கொண்டே வர, வலி அதிகப்பட்டுக் கொண்டே வர, அபரஞ்சி வலியில் தவிக்கத் தொடங்கினாள்.

மருமகளுக்குக் கஷாயம் வைத்துக் கொடுத்து விட்டு, இது பொய் வலியல்ல; பிள்ளை வலிதான் என்று உறுதிப்படுத்திக் கொண்ட சரளா, மருத்துவமனைக்கு என்று தேவையான சாமான்களை அவசரமாக அவள் எடுத்து வைக்கும் போதே, மதுசூதனன் அபரஞ்சியிடம் டெலிஃபோன் நம்பர் கேட்டு, டாக்டருக்கும், மருத்துவ மனைக்கும் டெலிஃபோன் செய்தான்.

காரைத் தயாராக 'ஷெட்'டிலிருந்து எடுத்து வாயில் படியை ஒட்டி நிறுத்தும்படிச் சொல்வதற்காக டிரைவரைத் தேடினால் அவனைக் காணவில்லை. 'அவுட் ஹவு'சில் அவன் மனைவியையும் தேடிவிட்டு, இருவரும் இல்லை யென்று சரளாவிடம் வந்து சொன்னான்.

ஆறுமுகத்தைக் காணோம் என்று மதுசூதனன் வந்து சொன்னபிறகு தான், பிரசவத்துக்கு இன்னும் பத்துப் பதினைந்து நாள் ஆகும் என்று டாக்டர் சொன்னதை நம்பி இருவரையும் அவர்களுடைய உறவில் ஒரு பெண்ணின் சடங்கு வைபவத்துக்கு அனுப்பியது சரளா வுக்கு நினைவு வந்தது.

''மழை பெய்வதும், மங்கை பூப்பதும், மக்கள் பிறப்பதும் மகேசன் தீர்ப்பு என்று சொல்வார்களே! அது தெரிந்தும் மடச்சியைப் போல, டிரைவரை அனுப்பி னேனே! இப்போது என்ன செய்வது?'' என்று அவள் புலம்பத் தொடங்கி விட்டாள்.



அபரஞ்சியின் தவிப்பில், அவளும் கலங்கி விட்டி ருப்பது புரிந்து, மதுசூதனன் முன் வந்து பொறுப் பேற்றான்.

சரளாவின் கையைப் பற்றித் தட்டிக் கொடுத்து, ''அத்தை, அமைதியாய் இருங்கள். இப்போது ஆறுமுகம் எதற்கு? மருத்துவமனைக்குக் கார் ஓட்டத்தானே? அவ ருக்குப் பதில் நான் உங்களை அழைத்துச் செல்கிறேன், வாருங்கள். என்னென்ன வேண்டும் என்று சொல்லுங் கள். நான் காரில் முன் பக்கமாய் எடுத்து வைக்கிறேன். நீங்களும், அபியும் வசதியாய்ப் பின்புறம் உட்காருங் கள்'' என்று திடமான குரலில், ஆதரவாய்ப் பேசினான்.

சரளாவும், படபடப்பும் பரபரப்பும் குறைந்து, எடுத்து வைக்க வேண்டியதைக் காட்டி விட்டு, மருமக ளுக்கு இதமாய் அருகிலிருந்து இடுப்பை நீவி விட்டாள்.

சாமான்களைக் காரில் கொண்டு வைத்து விட்டு, அபரஞ்சியும் சரளாவும் காரில் ஏறியதும், வீட்டைப் பூட்டியவன், ஒன்று தோன்ற, சரளாவிடம் விசாரித்து விட்டு, அடுத்த வீட்டுப் பெண்மணியை அழைத்து, விவரம் சொல்லிச் சாவியைக் கொடுத்தான். ''கலை வாணி வந்ததும் அவளிடம் எல்லாம் சொல்லி சாவியைக் கொடுத்து விடுங்கள் ஆன்ட்டி. தாங்க்யூ, ஆன்ட்டி'' என்று சொல்லி விட்டு ஓடிவந்து காரைக் கிளப்பினான்.

கவனத்துடன் காரை ஓட்டிச் சென்று, அபரஞ்சியை மருத்துவமனையில் சேர்த்து விட்டு, மீண்டும் ஒரு தரம் சரளாவுக்கும், அபரஞ்சிக்கும் திடமூட்டினான்.

ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி, அவனுடைய தாயார், அபரஞ்சியுடைய சித்தி, மாமா, மனைவி ஆகி யோருக்கு டெலிஃபோன் செய்து, அபரஞ்சிக்கு வலி யெடுத்து விட்ட விவரத்தை அறிவித்தான்.

ஓடிச் சென்று பார்த்தான்.

மருத்துவமனை மேட்ரனின் பரிசோதனை முடிந்து அபரஞ்சி வெளியே வந்து கொண்டிருந்தாள். மது **சூதனனைக்** கண்டதும் அருகே அழைத்தாள்.

முகமெல்லாம் வியர்த்துக் கொட்ட நின்றவளைக் கண்டு கவலையுற்றவன், அதைக் காட்டாமல் மறைத்துக் கொண்டு, ''எல்லாம் சரியாக நடக்கும், அபி. அத்தான்... சரிசரி... அதை நான் அத்தையிடம் கேட்டுக் கொள் கிறேன். நீ உட்கார்...'' என்றான், கரிசனமாக.

''அதற்காகத்தான் அண்ணா நானும் அழைத்தேன். வீட்டு டெலிஃபோன் எண் குறித்துக் கொள். அங்கே இல்லாவிட்டால் மில்லில் இருப்பார். அந்த நம்பரும்...'' என்று இரு டெலிஃபோன் எண்களையும் அவள் கொடுத் துக் கொண்டிருந்தபோதே, சக்கர நாற்காலியுடன் அட் டெண்டர் பெண் வந்து விட்டாள்.

தங்கையின் கையைப் பற்றி அழுத்தி விட்டு, ஓடிப் போய்த் தனஞ்சயனோடு தொடர்பு கொண்டான் மது சூதனன்.

அவன் உடனே கிளம்பி வருவதாகச் சொல்ல, இங்கே ஓடிவந்து, பிரசவ அறையில் இருந்த அபரஞ் சிக்கு ஒரு நர்ஸ் மூலம் சொல்லி அனுப்பினான்.

பிறகு, சரளாவின் அருகில் அமர்ந்து, அவளது கலக்கத்தைப் போக்கத் தான் அறிந்தவரை முயன்றான்.

விரைவாகவே தாய்மார்கள் மூவரும் வந்துவிட, மதுசூதனனுக்கு அந்தப் பணியில் இருந்து விடுதலை கிடைத்தது.

டாக்டர் வந்து பார்த்து விட்டு, ''முதல் குழந்தை, இன்னமும் பல மணி நேரம் ஆகும். நர்சிடம் சொல்லி



யிருக்கிறேன். தேவைப்படும்போது பெரிய வலி தொடங் குமுன், வருவேன். அதுவரை, வலிகளுக்கு நடுவே, முடிந்தவரை நட அபரஞ்சி'' என்று கூறிவிட்டுப் போனார்.

பெண்கள் நால்வரும், அபரஞ்சிக்குத் தெம்பூட்டும் விதமாகப் பேசுவதும், வலி வரும்போது, விலாவை, இடுப்பை வருடிக் கொடுப்பதுமாக இருந்தனர்.

அவர்களுக்கு அவ்வப்போது காபி, டீ என்று வாங்கிக் கொடுப்பதும், நர்ஸ் கேட்ட சில மருந்துகளை வாங்கித் தருவதுமாக மதுசூதனன் ஆண் துணையாக நின்றான்.

இடையே, வீட்டில் தனியாய் இருந்த கலை வாணியை அழைத்துச் சென்று, அபரஞ்சியுடைய சித்தி வீட்டில் கொண்டு விட்டுவிட்டு வந்தான்.

யார் யார் என்னென்ன வகையில் உதவ முயன்றா லும், அவரவர் பிள்ளையை அவரவர்தானே வலித்துப் பெற்றாக வேண்டும்?

நேரம் ஆக ஆக, வலிகள் சீக்கிரம் சீக்கிரமாகவும், அதிகத் தீவிரமாகவும் வரத் தொடங்க, அபரஞ்சி தவிப் பதை ஒன்றும் செய்ய முடியாமல், சும்மா பார்த்துக் கொண்டுதான் இருக்க நேர்ந்தது!

காரில் பறந்தோடி வந்து சேர்ந்த தனஞ்சயனும் அப்படித்தான் செயலற்று சும்மா நிற்க வேண்டியதாயிற்று.

இப்படி எல்லோரையும் அவரவர் தன்மைக்கேற்பத் தவிக்க வைத்து விட்டு, அபரஞ்சியுடைய செல்வன், அந்தக் கண்ணனைப்போல நள்ளிரவில் பிறந்து, எல் லோர் மனதையும் குளிரச் செய்தான்!

தாய், தந்தை, தாத்தா, பாட்டி என முதல் சுற்று உறவை அடுத்து, மற்றவர்களில் மதுசூதனன் சற்று அதிகப்படியாக ஆனந்தப்பட்டான்.

அதிலும், தனஞ்சயன் அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு, ''மனமார்ந்த நன்றி, மதுசூதனன். நீங்கள் இல்லாவிட்டால் ஒன்றுமே முடிந்திராது என்று அம்மா சொன்னார்கள்!'' என்று நன்றி தெரிவிக்கவும் அவனுக்கு உச்சி குளிர்ந்து போயிற்று.

பிறந்தது பேரன் என்றதும், உலகநாதனுக்கு நெஞ்சு கொள்ளாத பெருமை. உடனே கிளம்பி வந்து நிறைய, விலை உயர்ந்த, சாக்லேட் வாங்கி, மருத்துவமனையில் உள்ளவர்கள், போவோர், வருவோர் அத்தனை பேருக்கும் வினியோகித்தார். வெறும், மருத்துவச் செலவு மட்டுமின்றி, பிரசவம் பார்த்த டாக்டருக்குப் பட்டுச் சேலை, பழங்கள் வைத்துக் கொடுத்து மரியாதை செய்தார்.

சுகப்பிரசவம் என்றதால், மூன்றாம் நாளே அபரஞ்சி, குழந்தையோடு வீடு திரும்பி விட்டாள்.

அதில்கூட உலகநாதனுக்கு ஒரு பெருமைதான். எங்கள் குடும்பமே ஆரோக்கியமானது. அதனால்தான் பேரன் நல்ல படியாகப் பிறந்து, மருமகளும் ஆரோக்கியமாக இருக்கிறாள்'' என்று சொல்லிக் கொண்டார்.

அரசிடம் பணம் வசூல் பண்ணுவதோடு, குழந்தைக்குத் தேவையான தொட்டில் முதலான பொருட்களையும் வாங்குவதற்காகத் தனஞ்சயன் சென்னையிலேயே தங்கி விட, உலகநாதன் மட்டுமாகத் தொழிலைப் பார்க்க வென்று பழங்காட்டூருக்குக் கிளம்பிச் சென்றார்.

பேரனைப் பிரிந்து செல்ல மனமின்றியே கிளம்பியவர் எண்ணி நாலே நாளில் திரும்பி வந்து சேர்ந்தார்.



அவர் மட்டுமாக வந்திருந்தால், எல்லோருக்கும் நன்றாகவே இருந்திருக்கக்கூடும். ஆனால், அவர் வரும் போது, அவருடைய தங்கை வசந்தாவையும் தன் பேரனைக் காட்டவென்று அழைத்து வந்திருந்தார்.

அவள், தன் வழக்கம் போல, இது சொத்தை, அது சொள்ளை என்று குறைப்பட்டுக் கொண்டே இருக்கவும், உள் விஷமங்கள் அறியாத உலகநாதன் தவிர, வீட்டில் எல்லோருமே உள்ளூரப் பொங்கிய ஆத்திரத்தை, முடிந்த வரையில் மறைத்தபடியே நடமாடினர்.

அதிலும், அன்று கலைவாணி வந்து, ''பாருங்கள் அண்ணி! நான் என்ன வேண்டும் என்றா கல்லூரிக்குப் போகாமல் இங்கே உட்கார்ந்து கொண்டே இருக்கிறேன்? இதுதான் சாக்கு என்று மட்டம் போட்டு விட்டேனாம்! எருமை மாட்டுக்கு ஆகிற மாதிரி வயதாகிறதாம். வீட்டில் இருந்து, தகப்பனுக்கும், தமையனுக்கும் பொங்கிப் போடாமல் இங்கே ஊர் சுற்றுகிறேனாம். பதினேழு வயதுப் பெண், பெரிய குடும்பத்தையே தாங்கலாமாம். இந்த மாதிரிப் பதினேழு வயதுப் பெண்ணை உட்கார வைத்து ஊட்டுவதும், அங்கே சமையல்காரி என்று ஒரு கொள்ளைக்காரியை நியமித்து காசைக் கரியாக்குவதும் இந்த வீட்டில் மட்டும்தான் நடக்குமாம்... அண்ணி, அப்பா அப்போது பார்த்த பார்வை எனக்கு வயிற்றைக் கலக்குகிறது. என்னை ஊருக்கு வரச் சொன்னால் என்ன செய்வது? நீங்கள், அம்மா இல்லாமல் அங்கே நான் எப்படி இருப்பேன்?'' என்று புலம்பித் தீர்க்கவும், அபரஞ்சிக்கு வசந்தா மீது ரொம்பவும் கோபம் ஏற்பட்டது.

அவளுக்கு எப்படியாவது ஒரு 'நொட்டு' கொடுக்க வேண்டும் என்று உள்ளூரத் தீர்மானித்தவள், நாத்தனாருக்கு ஆறுதலாக, ''அப்படி உன்னை அழைத்துப் போக

நான் விட்டுவிடுவேனா, வாணி? எனக்குப் பிள்ளையைப் பார்த்துக் கொள்ளக் கலைவாணி இல்லாமல் முடியாது என்று சொல்லி விடமாட்டேனா? கவலைப் படாதே'' என்று கூறவும், கலைவாணி சற்றே நிம்மதியடைந்தாள்.

தமையன் முன்னிலையில், தான் யாரை என்ன சொன்னாலும், அவர்கள் அதைப் பொறுத்துத்தான் ஆக வேண்டும் என்கிற எண்ணம் வசந்தாவுக்கு. அதிலும் வாயில்லாப் பூச்சியான சரளாவை சீண்டி, மட்டம் தட்டியே அவளுக்குப் பழக்கம். ஏன் வீண்வம்பு என்று பொறுத்துப் போய்விடுவதே வீட்டினரின் வழக்கமும் கூட.

அன்று பேரனைக் குளிப்பாட்டி எடுத்து வந்த சரளா, குழந்தையை மடியில் இட்டு, பவுடர் போட்டு உடை அணிவித்துக் கொண்டிருந்தாள்.

அண்ணன் அதை ரசித்துப் பார்க்க, வாய்ப்பை விடாதவளாக அண்ணிக்காரி குழந்தையைப் பற்றி ஏதோ சொல்லிச் சிரிக்க, அதைப் பார்த்த வசந்தாவுக்கு வயிறு எரிந்தது.

பிள்ளைகளைக் காட்டிக் கணவனை வளைத்துப் போடத் தெரியாத அண்ணி, இப்போது பேரனைக் காட்டி புருஷனை வளைத்துப் பிடித்து விடுவாளா?

''அய்யோ! குழந்தை தூக்கத்திலேயே சிரிக்கிறதே! கடவுள் தாமரைப்பூ காட்டுகிறார், அண்ணா!'' என்று பிள்ளையைக் கொஞ்சுவதில் இணைந்து கொண்டவள், ''அச்சச்சோ, அண்ணி! நீ இப்படிக் காலைநீட்டி உட்கார்ந்திருக்கும் போது பார்த்தால் அசல் பாட்டியம்மாளேதான்! அந்தக் கூன்முதுகும், நரைமுடியும்... உங்கள் மனைவி



கிழவியாகி விட்டாள் அண்ணா!'' என்று கிண்டல் போல விஷம் கக்கி வெகுளிபோலக் கைகொட்டிச் சிரித்தாள்.

கலைவாணியின் முகம் வாடிவிட்டது.

முகத்தில் இருந்த சிரிப்பு மாறித் தோன்றி விடாமல் இருப்பதற்காகச் சிரமப்பட்டு உதடுகளை இழுத்துப் பிடித்தபோதும், மாமியாரின் கண்களில் வேதனை, அபரஞ்சிக்கு ஆத்திரமூட்டியது.

வழக்கம்போலத் தங்கையோடு சேர்ந்து ஏதோ சொல்வதற்காகத் தொண்டையக் கனைத்த உலகநாதனை முந்திக் கொண்டு அபரஞ்சி பேசினாள். ''எல்லோருக்கும்தான் வயதாகிறது! பிள்ளைகள் வளர்ந்து திருமண வயதடைந்து ''உங்களுக்குப் பேரன் பேத்தி பெற்று தருகிற காலத்தில், அதற்கேற்ப உங்கள் தலைமுறையில் எல்லோருக்குமே வயதாகித்தானே, ஆகவேண்டும், பெரியம்மா?'' என்று. வசந்தாவுக்குப் 'பெரியம்மா' என்று விளித்தால் பிடிக்காது என்று தெரிந்திருந்தும், வேண்டுமென்றே 'பெரியம்மா' என்று முடித்தாள்.

மீண்டும் அவளே பேச்சைத் தொடங்கினாள். ''நரை, கூன் இவற்றின் அளவில், எந்த அளவு மூப்பு என்பது வெளிப்படுகிறது. இப்போது... அத்தைக்குக் கொஞ்சம் நரை; மாமாவுக்குக் கம்பீரமாய்ச் சற்றே கூடுதல்; உங்களுக்கு எல்லோரையும் விட அதிகம்!...'' என்று அவள் கூறவும், கலைவாணி கைதட்டினாள்.

''பிரமாதம், அண்ணி!'' என்றாள் அவள். ''ஹைக்கூ கவிதை மாதிரி மூன்றே வரியில் முழு விவரத்தையும் சொல்லிவிட்டீர்களே! இன்னாருக்கு இன்ன வயது என்று சொல்லாமலே படம் போட்ட மாதிரி தெளிவாக எடுத்துக் காட்டி விட்டீர்களே!'' என்று பாராட்டினாள்.

வசந்தாவுக்குப் பற்றிக்கொண்டு வர, ''பாருங்கள், அண்ணா! நான் உங்களைவிட வயதானவள் என்கிறாள், உங்கள் மகள்!'' என்று குறை கூறினாள்.

மருமகள் தன் கம்பீரத் தோற்றத்தைப் பாராட்டிய பெருமை உலகநாதனுக்கு. எனவே, ''என்ன செய்வது? நீ பார்வைக்கு அப்படித்தானே தெரிகிறாய்! நிறையப் பேர் என்னிடமே உங்கள் அக்கா என்றுதான் உன்னைக் குறிப்பிடுகிறார்கள்'' என்றார் குரலில் கர்வம் தொனிக்க.

''பின்னே? என்று அபரஞ்சி, ஒத்துப் பாடினாள். ''உங்கள் வயதைவிட நீங்கள் எப்போதுமே பத்து வயது கம்மியாகத்தானே மாமா தோன்றுகிறீர்கள்! அத்தையும் கொஞ்சம் அப்படித்தான். அத்தைகூட என்னிடம், 'உன் மாமா பார்க்க இளமையாகத் தெரிவதால், நாங்கள் இரண்டு பேரும் ஒரே வயது. மாதிரித் தோன்றி விடு கிறது' என்று பலமுறை சொல்லியிருக்கிறார்களே!'' என்று கூசாமல் ஐஸ் வைத்தாள்.

அத்தோடும் விட மனமின்றி, ''நீங்கள் இரண்டு பேருமே கூன் கூடப் போடுவதில்லை. பெரியம்மா தான்...'' என்று இழுத்தாள்.

''ஆமாம். நேற்று டி.வி. பார்த்தபோது நான்கூடக் கவனித்தேன்... அத்தையின் முதுகு வாழைப்பழம் மாதிரி இருந்தது!'' என்றான், தங்கை பேசியபோது அங்கு வந்து சேர்ந்த தனஞ்சயன்.

''ஆ...மாம்! நீ இவ்வளவு பெரிய கூன் போட்டுக் கொண்டு சரளாவைச் சொல்லுகிறாயே! சாப்பாடு, பழக்க வழக்கங்களில் ஓர் ஒழுங்கு வேண்டும், வசந்தா! உன் னைப் போல கண்டபடித் தின்று, கண்டபடி சுற்றினால் உடம்பு ஊதிக் கிழடு தட்டாமல் என்ன செய்யும். இனியாவது சாப்பாட்டு விஷயத்தில் உன் அண்ணியைப்



பின்பற்று!'' என்று தங்கையிடம் சற்று கண்டிப்பான குரலில் கூறிய உலகநாதன், மனைவியிடம் திரும்பி, ''குழந்தை தூங்கிவிட்டான் போல இருக்கிறதே! எவ்வ ளவு நேரம் இப்படியே உட்கார்ந்திருப்பாய்? கால் மரத் துப்போகும். எழுந்து, பேரனைத் தொட்டிலில் கிடத்து, சரளா!'' என்று குழைவான குரலில் உரைத்தார்.

'எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு என்னை மட்டம் தட்டுகிறீர்களா? இருக்கட்டும்! உங்கள் அத்தனை பேருக்கும் வேட்டு வைக்கிறேன். அதிலும், அடியே அபரஞ்சி, அபரஞ்சி! உன்னை இந்த வீட்டை விட்டு ஓட ஓட விரட்டாவிட்டால் நான் வசந்தா அல்லடி' என்று உள்ளூரக் கறுவினாள் வசந்தா!

## 14

குழந்தையைத் தொட்டிலில் இட்டுப் பெயர் சூட்டும் விழாவைச் சென்னையில் நடத்தும்படி, அபரஞ்சி யுடைய உறவினர்கள் விரும்பிக் கேட்கவும், உலகநாத னும் அதற்குச் சம்மதித்தார்.

பதினாறாம் நாள், அபரஞ்சி வீடு தொடும் அன்றே விழாவை நடத்திவிட்டு, மருமகளையும் பேரனையும் வீட்டுக்கு அழைத்துப் போய்விட வேண்டும் என்பது அவருக்கு.

ஆனால், ஒருமாதம் வரையிலேனும் இங்கேயே ஓய்வாக இருக்கட்டும் பிறகு பயணம் செய்யலாம் என்று டாக்டர் சொல்லிவிடவே, குழந்தை பிறந்து முப்பதாம் நாள் அந்த விழா நடத்துவது என்று முடிவு செய்யப் பட்டது.

பேரன் பிறந்ததும் விமானத்தில் வந்து பார்த்து விட்டுப் போன ஜெய பாண்டியன், வேலைகளை ஒதுக்கிக் கொண்டு மீண்டும் விரைவிலேயே வந்தார்.

பிள்ளை பெற்ற மகளுக்கும், பேரனுக்கும் என்னென்ன சீர் வகைகள் செய்ய வேண்டும் என்பதைத் தன் வழி உறவினரிடம் கேட்டறிந்து செய்துவிட்டு இரண்டு நாள் மகள், பேரனுடன் தங்கியிருந்துவிட்டு மீண்டும் விழாவுக்கு முதல் நாளன்று வருவதாகக் கூறிச் சென்றார்.

விழாவுக்கு ஒருவாரம் முன்னதாகச் சென்னைக்கு வந்த உலகநாதன், தனஞ்சயனோடு வசந்தாவும் ஒட்டிக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

சென்ற முறை வந்தபோதே, நெல் அரைத்த கூலிப் பணம், அரசாங்கத்திடமிருந்து சில லட்சங்கள் உலகநாதனுக்கு வரவேண்டியிருப்பதையும், விரைவில் அது வசூலாகிவிடும் என்பதையும், அங்கங்கே, ஒட்டுக் கேட்டதில் வசந்தா அறிந்திருந்தாள். சமயம் பார்த்து மகளின் திருமணத்திற்கு நகை செய்ய வென்று, இந்தப் பணத்தை அமுக்கிவிட வேண்டும் என்று எண்ணி அங்கே வந்திருந்தாள் அவள்.

ஆனால், வசூல் ஆன நாலு லட்சம் ரூபாய்க்கும், தன் மகனுக்கும் மனைவிக்குமாக நகை வாங்கி வந்து விட்டதாகத் தனஞ்சயன் கூறக் கேட்கவும், அவளுக்குச் சற்றுநேரம் மூச்சே நின்று போய்விட்டது!

முக்கியமான எந்த விஷயத்தையும் தான் இருக்கும் போது தனஞ்சயன் பேசுவதில்லை என்பதைக் கண்டு கொண்டதால், அவன் தன் தாயிடம் பேசும் போது வசந்தா எப்படியாவது ஒட்டுக் கேட்க முயற்சிப்பாள்.



அப்படிக் கேட்டபோது தான், தன் மகளுக்கென்று ஒதுக்க நினைத்த பணம், விள்ளாமல் விரியாமல் பறிபோய்விட்ட விவரம் அவளுக்குத் தெரிய வந்தது.

நெஞ்சு எரிய நின்றவள், மேலும் அதிர்ச்சியடையும் வண்ணம் தனஞ்சயன் மேலே பேசினான்.

''அத்தை இந்தப் பணத்தை அடித்துப் போகத்தான் அம்மா, எங்களோடு கூடவே வந்தார்கள். வரும்போதே, அப்பாவிடம் அதற்காக அடிப்போட்டும் வைத்தார்கள். என்னவோ, பூரணியைக் கேட்டு யாரோ வரப்போகிறார்களாம். கழுத்தில் கையில் நகையில்லாமல் அவளை எப்படிக் காட்டுவது என்று மாப்பிள்ளை வீட்டாரைக் கொஞ்சம் தாமதமாக வரச் சொல்லி விட்டார்களாம்! எப்போது வரச் சொல்வது என்று நீங்கள்தான் அண்ணா சொல்ல வேண்டும் என்று குழையடித்தார்கள் அத்தை.

''சுற்றி வளைத்தார்களாக்கும்? உன் அப்பாவுக்கு, இந்த ஜாடை மாடையெல்லாம் புரியாதே, தனா. அவருக்கு எதையும் நேரடியாகச் சொல்ல வேண்டும்'' என்றாள் சரளா மகனிடம்.

''ஆனால், அதில் ஒரு சிரமம் இருக்கிறதே, அத்தை! மாமா ஏதாவது நினைத்துக் கொண்டு, சட்டென்று இல்லை, முடியாது என்று சொல்லி விட்டால் பிறகு அவரை அசைக்க முடியாதே! அதனால், மெல்ல மாமா மனதை அந்தப் பெரியம்மா தயார்ப்படுத்தியிருக்கிறார்கள். பூரணிக்குக் கல்யாணம் பண்ணவேண்டும்... பூரணியைப் பார்க்க வருகிறார்கள். பூரணிக்குக் கல்யாணத்துக்கு நகை வேண்டும்... என்று... உழுது, விதைவிதைத்து, வளர்த்து அறுவடை செய்கிற மாதிரி, மாமா மனதில் விஷயத்தை அழுந்தப் பதிய வைப்பதாக ஐடியா, அத்தை. பயிர் முற்றியதும் அறுவடை செய்கிற மாதிரி

பணம் வந்ததும் நகைக்குப் பணம் கேட்டால் கொடுப்பது இயல்பாக நடந்துவிடும் என்று எண்ணித் தொடங்கி யிருக்கிறார்கள்'' என்று அவளது மனதின் உள்ளே புகுந்து பார்த்தது போல அபரஞ்சி கூறவும், அந்தப் பெண்ணின் தலையைப் பிடித்து உலுக்க வேண்டும் போல, வசந்தாவுக்குப் பொங்கிக் கொண்டு வந்தது.

''ஓகோ!'' என்று வாயைப் பிளந்துவிட்டு, ''அண்ணி, அவ்வளவு திட்டம் போட்டு வேலை செய்த பிறகு நீ எப்படியடா சமாளித்தாய்?'' என்று சரளா அதிசயமும் ஆர்வமுமாகக் கேட்டாள்.

அதைவிட அதிக ஆர்வத்தோடு வசந்தாவும் உன் னிப்பாகக் கவனிக்க, தனஞ்சயன் இலகுவாகச் சொன் னான்.

''என்னம்மா பெரிய விஷயம்? இந்தக் குட்டிப் பையன் பெயரைச் சொன்னால் அப்பாவிடம் எதை வேண்டுமானாலும் சாதித்து விடலாம். அவர்கள் வீட்டில் நிறையச் செய்வார்கள் போல இருக்கிறது; நாமும் நிறை யச் செய்ய வேண்டும். அப்பா என்றேன். புலி நகம் மாதிரி வைரப் பதக்கத்தோடு ஒரு சங்கிலி, இடுப்புச் சங்கிலி, கைக்கு வாட்ச் செயின், யானைமுடிக் காப்பு.. எல்லாம் சேர்த்தும் இரண்டு லட்சம்தான் ஆயிற்று. பிறகு, 'இந்தப் பேரனைப் பெற்றுத் தந்த உங்கள் மருமகளுக்கு வேண்டாமா, அப்பா' என்றேன். முதலில் பத்து சவரனில் ஒரு செட் பார்த்தார்கள். வைரத்தைப் பெற்றுத் தந்த வளுக்கு வைரம் வேண்டாமா என்றேனா, ஒன்றே முக்கால் லட்சத்தில், 'பாம்பே கட்டிங்'கில் ஒரு நெக்லஸ் இருந்தது. வாங்கி விட்டார்கள். மீதி, விழாச் செலவுக்கு என்று முடித்து விட்டேன்'' என்று முறுவலித்தான்.



''எனக்கு மட்டுமாக இவ்வளவு செலவு செய்ததற் குப் பதிலாக, வாணியும் நானும் ஒரே மாதிரி அணிந்து கொண்டு நின்றால், மகளையும் மருமகளையும் ஒரே மாதிரி நடத்துகிறார் என்று எல்லோரும் பெருமையாகப் பேசுவார்கள் என்று சொல்லி, இருவருக்குமாக வாங்கி யிருக்கலாமே? திருமணம் ஆக வேண்டிய பெண். நாலு நகை நல்லதாக வேண்டாமா?'' என்று முடித்தாள் அபரஞ்சி.

அபரஞ்சியின் பேச்சைக் கேட்கவும், வசந்தாவுக்கு வயிறு பகீர், பகீரென்றது. கலைவாணிக்கு வாங்க வேண் டும் என்று தூண்டுகிறாளே! கலைவாணி வீட்டுப்பெண். அவளுக்கு வாங்கத் தொடங்கிவிட்டால், அப்புறம், பூரணிக்குச் செய்வதற்கு உலகநாதனுக்குமேதான் எப்படி மனம் வரும்?

இந்தச் சனியன், இந்த அபரஞ்சியை எப்படியாவது விரட்டி அடிக்காவிட்டால் லட்சக்கணக்கில் இழப்பாகி விடும் போல இருக்கிறதே!

''அதுதானடா எனக்கும் எப்போதும் கவலையாக இருக்கிறது!'' என்றாள் சரளா.

மருமகள் எடுத்துக் கொடுக்க, மாமியார் பிடித்துக் கொள்கிறாளாக்கும்! என்று ஆத்திரமாக எண்ணினாள் வசந்தா.

''கலையைப் பற்றிய கவலை உங்களுக்குக் கொஞ் சம்கூட வேண்டாம் அம்மா. அத்தை அடித்துப் போக வந்ததை, இப்போது எப்படி மாற்றினேன், பாருங்கள்! அதுபோல இனிவரும் பெரும் தொகைகளைக் கலைவா ணிக்கு மாற்றி விடுவேன். அத்தை பாணியில், கலை விஷயமாக இரண்டு மாப்பிள்ளை வீட்டார் என்னிடம் கேட்டார்கள், கொஞ்சம் நல்லதாக நகை செய்து காதில் கழுத்தில் மாட்டி வைக்க வேண்டும் அப்பா!'' என்று தொடங்கினால் ஆயிற்று. இதற்குப்போய் கவலைப்

பட்டுக் கொண்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்... அப்புறம், வேறு எதுவும் தேவை என்றால் சொல்லுங்கள் வாங்கி வருகிறேன்'' என்று எழுந்தான் தனஞ்சயன்.

''அந்த விவரம் எல்லாம் நீ அபியிடம் கேட்டுக் கொள்ளடா. நேற்று, அவள் பெரியம்மா வந்து என்னென்ன, எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். இரண்டு பேரும் பேசிக் கொண்டு இருங்கள். நான் மாலைச் சிற்றுண்டி வேலையைப் பார்க்கிறேன்'' என்று கணவன், மனைவியைத் தனியே விட்டுவிட்டு, சரளா வெளியே கிளம்பினாள்.

இதற்குமேல் இங்கே நின்றால் ஆபத்து என்று அவசர அவசரமாகச் சாவித் துவாரத்திலிருந்து காதை விலக்கிக் கொண்டு, ஓசையின்றி வேகமாக ஒதுங்கிச் சென்றாள் வசந்தா.

சரளா சென்றபிறகு சற்றுநேரம் அந்த அறையில் அமைதி நிலவியது.

ஒரு சிறு நெடுமூச்சுடன் நிமிர்ந்து, ''மன்னித்துக் கொள், அபரஞ்சி. கணவன் மனைவிக்குத் தனிமை தருகிற நல்ல எண்ணத்துடன்தான் அம்மா சென்றது. என் முகத்தைப் பார்த்துப் பேச உனக்குப் பிடிக்காது என்று தெரிந்திருப்பதால், ஏதாவது சாக்குபோக்குச் சொல்லி விட்டு நானும் அம்மாவைத் தொடர்ந்து சென்றிருக்க வேண்டும். ஆனால், எனக்கு உன்னிடம் சில விஷயம் பேச வேண்டும். அதனாலேயே பின் தங்கினேன்'' என்று தொடங்கினான்.

''அபரஞ்சி, சில மாதங்களுக்கு முன்பாக நான் உனக்கு ஒரு வாக்குறுதி கொடுத்தேன். அதன் முதல் கட்டத்தை நிறைவேற்றுவது ஓரளவு எளிதாக இருந்தது. எளிது என்றால், பிரிவுக்கு ஏற்பாடு செய்ததைச் சொன்னேனே தவிர, பிரிவை அல்ல'' என்று தெளிவுபடுத்தி விட்டு மேலே தொடர்ந்தான். ''ஆனால், இந்த இரண்டாவது கட்டத்தை நிறைவேற்றுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன.



''நான் முதலில் நினைத்தது, இங்கே குழந்தை பிறந்த பிறகு, உன் உடல் தேறவென்று உன் தந்தை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, அதை அப்படியே நிரந்தரம் ஆக்கிவிடுவது என்று. அல்லது ஏற்றுமதியைக் கவனிப்பதற்கென்று, அரபு நாடுகளில் ஓர் அலுவலகம் திறந்து, அங்கேயே தங்கிவிடலாம் என்பது. அடுத்த ஐடியா! ஆனால், இவை இரண்டுமே இப்போது சரிவரும் போலத் தோன்றவில்லை!''

ஏன் என்று மனைவி கேட்பதற்கு இடமளித்து ஓர் இடைவெளி விட்டுப் பேச்சைச் சற்று நிறுத்தினான். ஆனால் மனைவி பேசாமலே இருக்கவும், ஒரு நெடு மூச்சு விட்டு விட்டு மேலே தொடர்ந்தான்.

''பங்களூர் ஐடியா. அவ்வளவாகச் சரிவருவதாக இப்போது தோன்றவில்லை'' என்றவன் அது என்ன என்று சொன்னான்.

விவரிக்க இயலாத மென்மையுடன், குழந்தையை லேசாக வருடிவிட்டு, ''இவனைப் பிரிந்து நாலுநாள் தொடர்ந்து பழங்காட்டூரில் அப்பாவுக்கோ எனக்கோ இருக்க முடியவில்லை. இவனைப் பாராமல் பிரிந்து வாடும் வேதனையை, என் கடந்த காலப் பிழைகளுக்கு உரிய தண்டனையாக நான் ஏற்றுக் கொள்ளலாம். ஏற்பது நியாயமும்கூட. ஆனால் அப்பா? அம்மா, கலைவாணி எல்லோரும் இவன்மீது உயிரையே வைத்திருக்கிறார்களே! என் குற்றத்துக்காக இவர்கள் எல்லோருமே

தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றால் அது நியாயம் ஆகாதே! அத்தோடு, இவ்வளவு பக்கத்திலேயே பங்களூரில் உன்னையும், இந்தக் குட்டிக் கண்ணனையும் விட்டுவிட்டு அப்பா நெடுநாள் சும்மா இருக்க மாட்டார். நீயும் பிள்ளையும் வீடு வந்து சேரும் வரை உன் தந்தையைப் பிடுங்கி எடுத்து விடுவார்!'' என்றான்.

மீண்டும் ஒரு சிறு தாமதத்தின் பின், ''அரபு நாடு ஐடியாவும்கூட அவ்வளவு சரிவரும் என்று எனக்குத் தோன்றவில்லை. விமானப் போக்குவரத்து மிகவும் எளிதாகி விட்ட விஞ்ஞான யுகம் இது. அமெரிக்காவே அடுத்த வீடாகி விட்ட நிலைமை! அரபு நாடுகள் என்ன அடுத்த கிரகத்திலா இருக்கின்றன? இங்கே தனியாகப் பரஞ்சோதியால் சமாளிக்க முடியாது என்பது ஒருபுறம் இருக்க, இடையிடையே வந்து போகாமல் நான் அதிக நாட்கள் அங்கேயே தங்குவதும் இயலாத காரியம். என்னைப் பிடித்து இழுத்துக் கொண்டு வர அப்பாவே அங்கே வந்துவிடுவார்! எனவே, எப்போதாவது ஒரு முறை இங்கே நான் வந்து போவது பரவாயில்லையா? அல்லது...'' என்றவன், மடியில் கோத்திருந்த கைகளைப் பார்த்தபடி அசையாமல் வீற்றிருந்த மனைவியை வெறித்து நோக்கினான்.

குரல் கடினமுற, ''எத்தனையோ மாதங்களாக நீ என்னுடன் நேரடியாகப் பேசுவதைத் தவிர்த்து வந்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும், அபரஞ்சி. அசோக வனத்தில் இருந்தபோது, சீதாபிராட்டி ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டு, அதனுடன் பேசுவது போல ராவணனுடன் பேசியதாகப் படித்திருக்கிறேன். அதுபோலப் பொதுப்படையாகத்தான் நீயும் பேசி வருகிறாய்! ஆனால், இப்போது நேரடியாகத் தெளிவாக நீ எனக்குப் பதில் சொல்ல வேண்டும். இப்படி இடைபிடையே வந்து



போனால் உன்னால் அதை சகிக்க முடியுமா?... அல்லது, மாற்ற முடியாத முடிவு எதையும் எடுக்க வேண்டுமா? எதுவானாலும், இறுதி முடிவு செய்யும் உரிமை உன்னுடையது. நீ என்ன சொன்னாலும் அதைச் செய்கிறேன்'' என்று உரைத்தவன். அந்த அளவுக்குள் மூச்சுமுட்டுவதாய் உணர்ந்தவன்போல, ஜன்னல் அருகே சென்று வெளியே பார்த்துக் கொண்டு நின்றான்.

அவனது 'மாற்ற முடியாத முடிவு' என்ற வார்த்தை அபரஞ்சியின் மனதை மிகவும் உறுத்தியது. அப்படி என்றால் என்ன அர்த்தம் என்று கேட்க வாயைத் திறந்தவள், அதைக் கேளாமலே வாயைமூடிக் கொண்டாள் தனஞ்சயன், சும்மா மிரட்டவென்று எதையும் சொலகிறவன் அல்ல. அவள் ஊகிப்பது போல ஏதாவது சொல்லிவிட்டான் என்றால்... பதில் கூறுவது ரொம்பவும் சங்கடமாகி விடும்! முடியாததாகவே ஆகிவிடும்! வேறு வழிகள் அடைபட்டே போய்விடும்!

தனஞ்சயனின் இறுகிய தோற்றம் அவளுக்கு அதைத்தான் உணர்த்தியது.

கணவனின் பரந்த முதுகைப் பார்த்தபடி, ''முடிவு செய்ய வேண்டிய பொறுப்பை என்னிடம் தள்ளுகிறீர்கள்!'' என்றாள் அவள் ஒருமாதிரிக் குரலில்.

''இல்லை'' என்றான் தனஞ்சயன். முடிவு செய்யும் உரிமையை உனக்குக் கொடுக்கிறேன்'' என்று தெளிவு படுத்தினான்.

ஒரு சிறு அமைதியின்பின், ''கண்ணனின் தொட்டில் போடும் விழாவுக்கு இன்னும் சில தினங்களே இருக்கின்றன. இந்த விழா, நம் இருவருடைய குடும்பங்களும் சேர்ந்து, ஆசையாக நடத்துவது. கண்ணனுடைய பெற்றோராய் நாம் இருவரும் இந்த விழாவில் பங்கேற்

பது அவசியம். எனவே, இப்போதைக்கு, மற்றதை எல்லாம் ஒதுக்கி, விழாவை நல்லபடியாக நடத்து வோம். பிறகு, நம் பிரச்னை பற்றி யோசிக்கலாம்'' என்று முடித்தாள், அபரஞ்சி.

குழந்தை கண்ணனின தொட்டிலில் இடும் வைபவம் வெகு விமரிசையாக நடந்தேறியது.

குழந்தைக்குப் பெயர் சூட்டும் விஷயத்தில் சிறு சல சலப்பு நேர்ந்தது.

அபரஞ்சியுடைய உறவினர்களில் சின்ன 'செட்' எல்லோரும் குழந்தைக்கு 'அபிநந்தன்' என்று பெயர் சூட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டனர்.

அபரஞ்சி பெற்ற பிள்ளையாம்.

தனக்கு ஆட்சேபனை இல்லை என்று தனஞ்சயன் கூறவும் அந்த வாதம் வலுப் பெறலாயிற்று.

ஆனால் உலகநாதன் அதை ஆட்சேபித்தார். ''குழந்தை அபிக்கு மட்டும் நந்தன் இல்லையே; எங்கள் தனஞ்சயனுக்கும் நந்தன் தானே?'' என்று அவர் கூறி யதை யாராலும் மறுக்க இயலவில்லை.

இது, அது என்று பலப்பல பெயர்களை யோசித்து விட்டு, இப்போதைக்குச் சும்மா கூப்பிடத் தொடங்கிய கண்ணன் என்கிற பெயரே நன்றாக இருக்கிறது; அதுவே இருக்கட்டும் என்று தீர்மானித்தார்கள்.

குழந்தையின் காதில், பெயரை மூன்று முறை சொல்லிக் கூப்பிட தாய் மாமாவாய் மதுசூதனனைத் தனஞ்சயனும், அபரஞ்சியும் அழைக்கவும் அவனுக்கு ஒரே ஆனந்தம், ஆச்சரியம்!

''இவன் பிறந்த அன்று, கடவுளாய்ப் பார்த்துக் கொண்டுவந்து நிறுத்திய மாதிரி, மச்சான் மட்டும் இல்லை என்றால் அம்மாவும், அபியும் பெரும்பாடு பட்டுப் போயிருப்பார்களாமே! அபி வலியிலும், அம்மா கவலையிலும் இருந்தபோது, சற்றும் கலங்காமல் அவர்களையும் தேற்றி, மருத்துவமனையில் சேர்த்து... செய்ய வேண்டிய அனைத்தையும் ஒற்றை ஆளாய் நின்று செய்தீர்களாமே! அபி, அம்மா இருவருமே சொன்னார்கள். ரொம்பவும் நன்றி, மச்சான்!'' என்று கூறி, அவனுக்குப் பான்ட், ஷர்ட் துணி அடங்கிய ஒரு பையைத் தனஞ்சயன் பரிசளிக்க, எல்லோரும் கைதட்ட மதுசூதனனுக்கு உச்சி குளிர்ந்து விட்டது.



அவனுடைய பெற்றோருக்கும்தான்.

இருவரும் அவசரமாக அருகில் வந்து, ''தாய்மாமா வின் சீராகப் பிள்ளை சாப்பிட வெள்ளித்தட்டு கொடும்மா,'' என்று தாங்கள் வாங்கி வைத்திருந்த பரிசை மகன் கையில் தந்து, கொடுக்கச் சொன்னார்கள்.

ஜெயபாண்டியனும், அண்ணன் மனைவியோடு கலந்து, ஆலோசித்து, மகளுக்கும் பேரனுக்குமாக ஏதேதோ வாங்கி வந்திருந்தார்.

ஆங்காங்கே நின்று, அவர் கண்ணைத் துடைத்துக் கொள்வதைப் பார்த்து எல்லோருமே கண்டு உருகிய போதும், கவனியாதது போலக் காட்டிக் கொண்டு அவரையும் தங்கள் கொண்டாட்டத்தில் இழுத்துச் சேர்த் துக் கொண்டனர்.

விழா முடிந்து, விருந்தாக வந்தவர்கள் எல்லோரும் அவரவர் வீடு சென்று விட, இங்கேயும் ஊர் திரும்புவது பற்றிய பேச்சு எழுந்தது.

''கண்ணனுக்கு அடுத்த தடுப்பூசி போடும் வரை, அபரஞ்சி இங்கேயே இருக்கட்டும், அப்பா. அதற்குள் அவனுக்கும், பயணத்தைத் தாங்கும் அளவு உடலில்

பலம் வந்துவிடும்'' என்று குழந்தையைக் காரணமாகக் காட்டி, அபரஞ்சி பழங்காட்டூர் திரும்புவதை, அப்போதைக்குத் தனஞ்சயன் தள்ளிப் போட்டான்.

மற்றவர்கள் ஊர் திரும்புவதையும், அவனுடைய அத்தை வசந்தா சில நாட்கள் தள்ளிப் போட்டாள்.

வல்லக்கோட்டை முருகன் கோவிலில் நடக்க இருந்த திருமணத்திற்கான அழைப்பிதழ் ஒன்றைக் காட்டி, அதற்குக் குடும்ப முழுமையும் சென்றே ஆக வேண்டும் என்றாள்.

''அப்படி என்ன பெரிய ஆள்? விடு வசந்தா!'' என்று உலகநாதன் கூறவும் அவள் அழவே தொடங்கி விட்டாள்.

''நம் அம்மா வழி உறவு, அண்ணா. நம் தாயார், அந்த தெய்வம், 'அண்ணா' என்று பாசமாய்க் கூப்பிட்டுப் பழகியது இந்தக் கல்யாணப் பையனுடைய தாத்தா வைத்தான். அவர்கள் வீட்டுத் திருமணத்துக்குப் போகா விட்டால் நம் அம்மா மனம் நோகாதா? இருந்தவரையில் அம்மாவை அவ்வளவு மரியாதையாய் வைத்திருந்தீர்கள்; இறந்தபிறகு நம் தெய்வத்தாயை நீங்கள் அலட்சியப் படுத்துவீர்கள்?'' என்று அவள் கண்ணைக் கசக்கவும் உலகநாதனுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

''சரிசரி. இதற்காக அழுவானேன்? நாம் இருவருமாய்...''

''அய்யோ, அண்ணா! அப்படி மட்டும் சொல்லாதீர்கள். இந்தப் பெண்ணுடைய வீட்டார் பூரணி அப்பாவுக்குச் சொந்தம். எல்லோருமாகப் போய் வாருங்கள் என்று கண்டிப்பாகச் சொல்லி அனுப்பினார். எல்லோரும் போகாவிட்டால் என்னை அடித்தே கொன்று விடுவார்... அபரஞ்சி வேண்டுமானால் வீட்டில் இருக்கட்டும். அவளுக்கு முத்து துணையிருப்பதால் கவலையில்லாமல். நாம் எல்லோருமாய்ப் போய் வந்து விடலாம். அண்ணா, உங்களைப் போலப் பெரிய மனிதர், குடும்பத்தோடு தன் வீட்டுத் திருமணத்துக்கு வந்தார் என்பதில் அவர்களுக்கும் ரொம்பவும் பெருமையாக இருக்கும்!'' என்று கெஞ்சிக் கூத்தாடி, கூடவே ஓர் ஐசும் வைத்துவிடவே, உலகநாதன் தலையாட்டி விட்டார்.



மற்ற மூவருக்குமே இதில் சிறிதும் விருப்பம் இல்லை என்றாலும், உலகநாதன் ஒன்று சொன்னபிறகு மாற்றுவது முடியாது என்பது உணர்ந்து, வேண்டா வெறுப்பாக ஒத்துக்கொண்டனர்.

தனஞ்சயன் காரை ஓட்டிச் செல்ல முன்வந்தபோது, 'அங்கெல்லாம் டிரைவர் கார்க் கதவைத் திறந்துவிட, பந்தாவாக இறங்கிச் சென்றால்தான் மதிப்பாக இருக்கும்'' என்று ஆறுமுகத்தையே கார் ஓட்ட வைத்தாள்.

''முடிந்த அளவு, முதல் பந்தியில் அமர்ந்து, உடனேயே கிளம்பி விடுவோம், அபி. எதையாவது செய்து அலுப்புப் படுத்திக் கொள்ளாமல், ஓய்வாக இரு'' என்றாள் சரளா மருமகளிடம்.

''கண்ணன் பிறந்து ஒரு மாதம் ஆகப்போகிறது. என்ன பிரமாத அலுப்பு ஏற்பட்டு விடும், அத்தை?'' என்று அபரஞ்சி இலகுவாக முறுவலிக்க, சரளாவின் முகமும் லேசாகத் தெளிந்தது.

''பாரேன்! யாரோ, பெயர்கூடத் தெரியாது; குடும்பத்தோடு போக வேண்டும் என்று விரட்டியடிக்கிறார்களே! வீட்டில் நிம்மதியாகக் கண்ணனைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தால் எவ்வளவு சுகமாக இருக்கும்! கொடுத்து வைக்கவில்லையே!'' என்ற மாமியாரைப் பார்க்கப் பாவமாக இருந்தாலும், அபரஞ்சிக்குச் சிரிப்பும் வந்தது.

''என்ன அத்தை பெரிதாக வருத்தப்படுகிறீர்கள்? கொஞ்ச நேரம்தானே? கல்யாணத்துக்குப் போகிறீர்கள். சிரித்துக் கொண்டே போக வேண்டாமா? திருமணம் பார்ப்பதோடு, வல்லக்கோட்டை முருகனையும் தரிசித்து விட்டு வரலாமில்லையா? நல்லதைப் பாருங்கள். மற்றதை விட்டுவிட்டு, ஜாலியாகப் போய் வாருங்கள்'' என்று உரிமையோடு கூறி வழியனுப்பினாள்.

கலைவாணியிடமும் அப்படித்தான், ''நீ திரும்பி வந்ததும், குட்டிப் பையன் சும்மா இருந்தால் நாம் இருவரும் 'ஸ்க்ராபிள்' விளையாடலாம்'' என்று ஆசை காட்டி அனுப்பி வைத்தாள்.

கார் கிளம்பிச் சென்றதும், அவளைச் சூழ்ந்த பழக்க மற்ற - குறைந்தபட்சமாய்த் திருமணம் ஆனதிலிருந்து அறிந்திராத அமைதி அவளைச் சூழ்ந்து கொண்டது.

கொஞ்ச நாட்களாகவே ஓரமாய் ஒதுக்கி வைத்திருந்த பிரச்னை, மீண்டும் பூதாகாரமாய் உருவெடுத்து அபரஞ்சியை மிரட்டியது.

உள்ளூரக் கவலையும் பயமுமாக வேலைக்காரியைத் தேடிச் சென்றாள்.

மூட்டைத் துணிகளைச் சேர்த்து வைத்துத் துவைத்துக் கொண்டிருந்தாள் முத்து.

அவளது வேலையைக் கெடுக்கக்கூடாது என்று திரும்பிய அபரஞ்சி, தனித்திருக்கத் தயங்கியவளாய் மகன் அருகே சென்று அமர்ந்தாள்.

குழந்தையும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கவே, மனது மீண்டும் தறிகெட்டு ஓடலாயிற்று.

குழந்தையின் விழா முடிந்தபிறகு, அவர்களது பிரச்னை பற்றி யோசிக்கலாம் என்று சொன்னவள் அவள்தான். அபரஞ்சியேதான்!



ஆனால், தனஞ்சயன்தான் அதுபற்றி முதலில் யோசிக்கத் தொடங்கி விட்டான் என்று அவளுக்குத் தோன்றியது.

அடுத்த தடுப்பு ஊசி போடும்வரை சென்னையில் இருக்கட்டும் என்று அவன் சொன்னது, அவளுக்காகத்தான்.

இந்த ஒரு மாதத்திற்குள்ளாக அவள் முடிவு எடுத்தே ஆகவேண்டும்! என்ன முடிவு?

தனஞ்சயன், மனைவியின் மகிழ்ச்சியை முக்கியமாகக் கருதி, அதற்கு ஏற்ப நடந்து கொள்ளத் தொடங்கிய பிறகு, அதிலும் கண்ணன் பிறந்த பிறகு, அவன்பால் தன் உணர்ச்சிகளில் ஒரு மாற்றம் நிகழந்திருப்பது அவளுக்கே புரிந்தது.

முன்பு போலத் தனஞ்சயனைப் பார்த்ததும் ஏற்படும் செய்கையற்ற ஆத்திரமும், வெறுப்பும் இப்போது அவளுக்குத் தோன்றுவது இல்லை.

அதிலும் அவன் அன்று சீதை, துரும்பு, ராவணன் என்று எடுத்துக்காட்டிய பிறகு, அவனோடு நேரடியாகப் பேசத் தொடங்கியவளுக்கு, அது இலகுவாகவே இருப்பதைக் கண்டு உள்ளூர ஆச்சரியமும்கூட.

நிறைய விஷயங்களை - மதுசூதனனைப் பற்றி, கண்ணனைப் பற்றியெல்லாம் தனஞ்சயனோடு பேசும் போது, அவளுக்கு நன்றாகக்கூட இருந்தது.

ஆனால், திருமணம் ஆகி, அவனை முன்னிட்டு அந்த வீட்டுக்குள் வந்த மனைவியை அவன் நடத்திய விதம்? எப்படி மறப்பது? ஒரு நல்ல மாமியாரும், நாத்தனாரும் அவளுக்குக் கிடைத்ததினால் அபரஞ்சி இன்னமும் இருக்கிறாள்! மற்றபடி அவளைப் புதைத்த

இடம் புல் மேடிட்டுப் போயிருக்குமே! எத்தனை முறை தற்கொலை பற்றி அவள் எண்ணிப் பார்த்திருக்கிறாள்!

அவ்வளவு தூரம் அவளை நோகடித்தவனை - மறக்க முயன்ற சில சம்பவங்கள் நினைவு வரவும் தன்னையறியாமல் அபரஞ்சியின் கண்களில் நீர் வடிந் தது - நியாயமாய்ப் பார்த்தால் பழிவாங்க வேண்டும். கொடுமையும் கோபமும் அறியாமல் வளர்ந்த பாவம், அந்த மாதிரிப் பழி வெறி ஏதும் அவளுக்குத் தோன்ற வில்லை; அவ்வளவே!

ஆனால் பழிவெறி தோன்றாத காரணத்தினா லேயே, அபரஞ்சி ஒரு முதுகெலும்பு இல்லாத புழு; அவளை என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டு, பழைய கண்ணகி, நளாயினி மாதிரிக் கணவன் செய்தது அத்தனையும் மறந்து, அவன் காலடியிலேயே கிடப்பாள் என்பது நிச்சயமாக இல்லை. ஒரு காலத்தில், தன் உடல் பொருள் ஆவி என்பார்களே - அதுபோலத்தான் அத்த னையையும் கணவன் காலடியில் வைத்தாள். என்ன நடந்தது?

அவளைத் தவறாக எண்ணியதால் அப்படி நடந்து கொண்டதாகத் தனஞ்சயன் காரணம் காட்டலாம். காட்டு கிறான்! அந்தக் காரணம் சரி தவறு என்பது ஒரு புறம் இருக்கட்டும். ஆனால், எப்படிப்பட்ட காரணம் இருந் தாலும் ஒரு கொலை நியாயமாகிவிடுமா?

உயிரைக் கொன்றால்தான் கொலையா? மனதை, அன்பைக் கொல்வதும் அப்படித்தானே?

அடுத்த பெண்களிடம் போவேன் என்று மிரட்டி யது; ஆடு, மாடுகளோடு அவள் கருவுற்றதை ஒப்பிட்டுப் பேசியது... ஊஹும். இதையெல்லாம் மறந்து கணவன் முகத்தைப் பார்த்துப் பேசிப் பழகுவது சாத்தியமே இல்லை!



பலவாறு யோசித்தபின், பிரிவுதான் மேல் என்கிற முடிவுக்கு அபரஞ்சி வந்தாள்.

அப்போதும், தனஞ்சயன் சொன்ன 'மாற்ற முடியாத முடிவு' என்ற வார்த்தைகள் உள்ளூர அவளைக் கலக்கின.

ஆனால் மாற்ற முடியாத முடிவு தற்கொலையாகத் தான் இருக்க வேண்டுமா? விவாகரத்தாகக்கூட இருக்க லாம்!

அந்த வார்த்தையும் - விவாகரத்து என்ற வார்த்தை யும்கூட அபரஞ்சிக்கு முதலில் திக்கென்றுதான் இருந்தது.

ஆனால், மற்றவர்களுக்காகக் கணவன் மனைவி என்ற போர்வைக்குள் போலியாக வாழ்ந்து கொண்டு, அவ்வப்போது ஒப்புக்காகச் சந்தித்துக் கொண்டு, அந்தச் சந்திப்புகளினால் சலனமும் சங்கடமும் பட்டுக் கொண்டு... எதற்கு?

இப்போதைக்குக் கடினமாக இருந்தாலும், பிரிந்து விடுவது தான் மேல். அவளைப் பொறுத்தவரை, இனி அவளுடைய பிள்ளை மட்டும் போதும். அவனை ஆதாரமாகக் கொண்டே இறைவன் விதித்த காலம் முழுவதையும் கழித்து விடலாம்.

தூக்கத்தில் சிரித்த குழந்தையின் முகத்தைப் பார்த்த போது அந்த எண்ணம் உறுதிப்பட்டது.

இவனைத் தவிர, அவளுக்கு வேறு என்ன வேண் டும்?

குழந்தையை அள்ளி எடுத்து அணைத்துக் கொள்ள வேண்டும்போல அபரஞ்சிக்கு உடல் பரபரத்தது.

மார்பில் தோன்றிய விறுவிறுப்பு, குழந்தை பசியாற வேண்டிய வேளை என்பதை நினைவுபடுத்தியது.

விசிறி வடிவாய்ச் சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தை எட்டிப் பார்த்தாள்.

கிட்டத்தட்ட நேரம்தான். ஒரு மாதக் குழந்தையின் உணவுப் பழக்கத்துக்கு நிமிடக் கணக்கு பார்க்க முடியாது. அயர்ந்து தூங்கும் மகனை எழுப்ப மனம் வராமல், இன்னமும் ஒரு பத்து பதினைந்து நிமிடங்கள் பொறுத்திருந்து அவனாக விழிக்கிறானா என்று பார்க்கலாம் என்று அவள் எண்ணமிட்டபோது, ஹாலில் டெலி ஃபோன் மணி அடித்தது.

பெரியப்பா, மாமா, சித்தி வீட்டிலிருந்து யாராவது பேசுவார்கள்; பத்து நிமிடம் அரட்டை அடித்து விட்டு வந்தால் குழந்தை விழித்து எழச் சரியாக இருக்கும் என்று எண்ணியபடியே ஹாலுக்குள் விரைந்தாள் அவள்.

ஆனால், அத்தான், அண்ணன் என்று தனஞ்சயனிடம் உயிரை விடுகிறார்களே, இவர்கள் எல்லோரும் இந்த விவாகரத்தை எப்படி ஏற்பார்கள்? நமக்கே இந்த வார்த்தை வயிற்றைக் கலக்குகிறதே என்று நினைத்தபடியே அபரஞ்சி ரிசீவரைக் கையில் எடுத்தாள்.

''யார் பேசுவது? திருமதி தனஞ்சயனா?'' என்று கேட்டது ஒரு கம்மல் குரல்.

அவள் அதை ஒத்துக்கொண்டதும், ''பார் பொண்ணு இங்கே நாங்கள் உன் புருஷனைப் பிடித்து வைத்திருக்கிறோம். அவன் உயிரோடு முழுசாக உன்னிடம் வந்து சேரவேண்டும் என்றால், ஐந்து லட்சம் ரூபாய் உடனே நான் சொல்லுகிற இடத்துக்குக் கொண்டு வரவேணும். அப்படிக் கொண்டு வராமல் போலீசு கீலீசு என்று போனே, அப்புறம் உன் புருஷனைத் துண்டு துண்டாய்த் தான் பார்ப்பாய்!'' என்றது அந்தக் கம்மல் குரல்.



நெஞ்சு படீர் படீர் என்று அடிக்க, குப்பென்று வியர்வை ஊற்றாய்ப் பெருக, கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது அபரஞ்சிக்கு.

மனிதர்களைக் கடத்திக் கொண்டு போய்ப் பிணைக் கைதிகளாக அவர்களை வைத்துக் கொண்டு, இவ்வளவு பணம் கொடு, அப்படியானால்தான் விடுவிப்போம் என்று மிரட்டுவது மிகவும் கீழ்த்தரமான செயல் என்று அபரஞ்சி, தன் உறவு, நட்பினரோடு பேசும் போது கூறியது உண்டு.

திருடுகிறவன்கூட அவர்களைவிட மேல் என்பாள். கள்வர்கள் பொருளை அபகரிப்பதோடு விஷயம் முடிந்து விடும். ஆனால், ஆட்களை பிடித்துப் போய் அடைத்து வைத்து, அவர்களது உயிருக்குப் பேரம் பேசுகிறவர்கள், மனித இனத்துக்கே உரிய பாசத்தை அவமதிக்கிறார்கள்; அந்தப் பாசத்துக்கு விலை போட்டு அதில் லாபம் காணுகிறார்கள்; அதனால் இவர்கள், கொலைகாரர்கள், திருடர்களை விடவும் மோசமான சமூகத் துரோகிகள் என்பாள்.

இந்தக் கடத்தல் கலாச்சாரம் அழிய வேண்டுமானால், பாதிக்கப்படுகிறவர்கள், தங்கள் மனதை இரும்பாக்கிக் கொண்டு, கடத்தல்காரர்களின் கட்டளைகளை அலட்சியப்படுத்திவிட வேண்டும்; எல்லோரும் ஒரே பிடிவாதமாக இப்படிச் செய்தால், இப்போது பெருகி வரும் கடத்தல் கலாச்சாரம் அடியோடு அழிந்து விடும் என்றுகூட இளைய தலைமுறையினர் எல்லோருமாய்ச் சேர்ந்து பேசியது உண்டு.

ஆனால், இப்போது தனஞ்சயனைப் பிடித்துக் கொண்டு போய் வைத்திருப்பதாகவும், அவனது உயிரின் விலை ஐந்து லட்சம் என்றும், அதைத் தராவிட்

டால், அவனை... அவனைத் துண்டாடி விடுவோம் என்றும் ஒரு மிரட்டல் டெலிஃபோனில் வரவும், அபரஞ்சிக்கு இவையெல்லாம் மறந்து போயின.

ஐம்புலன்களும் செயலிழந்து துவண்டு கை, கால்கள் வலுவிழந்து சரியும் அந்த வினாடியில், தனஞ்சயன் ஆபத்தில் இருக்கிறான்; இந்த நேரத்தில் அவளால்தான் கணவனைக் காப்பாற்ற முடியும்; அவள் பாட்டில் மயக்கம் போட்டு விழுந்தால் அவன் கதி அதோகதி ஆகிவிடும் என்பதெல்லாம் மின்னல் வேகமாய் ஊடுருவ, பெருமுயற்சியுடன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, அருகிலிருந்த நாற்காலியில் தடுமாறியபடி அமர்ந்தாள்.

அதற்குள்ளாக, ''அலோ அலோ'' என்று அவசரப்பட்ட டெலிஃபோனின் கம்மல் குரல் ''என்னம்மா, உசுரோடத்தான் இருக்குறியா?'' என்றதற்குப் பதிலாகப் பலவீனமான குரலில் 'ஹலோ' என்றாள் அவள்.

''அதானே பார்த்தேன்! நான் சொன்னது எல்லாம் புரிஞ்சதா? ஐந்து லட்சம் ரூபாய், இன்னும் அரை 'அவர்'லே கொண்டு வரவேணும்'' என்று அதிகாரம் செய்தான் அந்தக் கம்மல் குரல்காரன்.

அரைமணி நேரத்தில் ஐந்து லட்சமா? எப்படி முடியும் என்று கவலையுடன் யோசிக்கத் தொடங்கிய மூளை, ஒருவாறு சுரணை பெற்று சிந்தித்தது.

முதலாவது இந்தக் கம்மல் குரல் உண்மையானது அல்ல. டெலிஃபோன் ரிசீவர் மேல் துணியைப் போட்டு மூடிக் கொண்டு பேசுகிறான்! குரல் அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக அப்படிச் செய்கிறான் என்பது புரிந்தது.

இந்தக் குரல் பொய்யன் கூறுவது எந்த அளவுக்கு மெய்யாக இருக்க முடியும்?



தனஞ்சயன் ஒன்றும் முட்டாள் அல்ல, எவனோ வந்து இலகுவாகக் கடத்திப் போவதற்கு!

''என்ன பொண்ணு, சத்தத்தையே காணும்? அப்படியானால் உன் புருஷனைக் கசாப்பு பண்ணிடலாமா?'' என்றதில் மீண்டும் பதறியவள், தன் கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாதிருக்கப் பெரிதும் முயன்றவளாய், ''நீ...நீ பொய் சொல்லுகிறாய். அவரை அப்படி ஒன்றும் இலகுவாகப் பிடிக்க முடியாது'' என்றாள் முடிந்த அளவு உறுதியான குரலில்.

''முடியாதா? ஹாஹாஹா!'' என்று வில்லன் சிரிப்பு சிரித்தான் அந்த வில்லன். ''இதைக் கேளு, பொண்ணு. உன் புருஷனுக்கு தான் ரொம்ப உசத்தி என்று ரொம்பக் கருவம்! வல்லக்கோட்டைக் கல்யாணப் பார்ட்டி வாழ்ந்துகெட்ட குடும்பம். இவனுக்கு, கோயில் கல்யாணத்திலே சமக்காளத்து மேலே உட்கார மனசு இல்லை. ஐயா, வெளியே சுத்தப் போயிட்டான். அந்தத் திமிருக்குத்தான் இந்தத் தண்டனை? கோயில் குளத்தைச் சுத்தி அவன் நடந்து கொண்டு இருந்தப்போ, நாங்க ரெண்டு பேருமாப் பின்னாலே போய் மண்டையிலே ஒரு தட்டு தட்டினோம். பேச்சு மூச்சு இல்லாமல் விழுந்திட்டான். காரிலே போட்டுக் கொண்டாந்துட்டோம். அவன் அப்பன்காரன் தேடப்படாது இல்லியா? ஒரு பொடியன்கிட்டே காசு கொடுத்து, 'ஒரு சினேகிதனைப் பார்த்தேன்; அவன் கூடப் போகிறேன். 'நீங்க கல்யாணம் முடிந்து வீட்டுக்குப் போங்க'ன்னு அவன் சொல்லச் சொன்னதாச் சொல்ல வைச்சோம். உன் ஆளை எங்க இடத்துக்குக் கொண்டாந்து விட்டோம். புரிஞ்சுதா பொண்ணு, எப்படி அவனைப் பிடித்தோமின்னு?'' என்று மீண்டும் எக்காளமாய் நகைத்தான் அவன்.

வல்லக்கோட்டை கல்யாணம் என்றதுமே அப ரஞ்சிக்கு இடி விழுந்தது போல ஆயிற்று. தனஞ்சயன் வல்லக்கோட்டைத் திருமணத்துக்குச் சென்றது இவ னுக்கு எப்படித் தெரிய முடியும்? இவன் சொல்வது உண்மைதான் போல் இருக்கிறதே என்று பெரிதும் கலங்கிப் போனாள்.

சொல்வது அறியாது அவள் திகைக்கையில், ''இப்பவேனும் நம்பிக்கை வந்துதா? சரி. நான் சொல் கிற மாதிரி ஐந்து லட்சம் ரூபாயை ஒரு தோல் பையிலே போட்டு எடுத்துகிட்டு...'' என்று அந்தக் குரல் தொடர்கையில் அவள் குறுக்கிட்டாள்.

''முடியாது. நம்ப முடியாது. அவரே சொன்னால் ஒழிய, அவர் உன்வசம் இருக்கிறார் என்று நான் நம்ப மாட்டேன்'' என்றாள் உரக்க.

உள்ளூர அவளுக்கு, அவளுடைய கணவன் இந்தக் கொடியவர்களிடம் மாட்டிக் கொண்டுதான் இருக்கிறானோ என்று ரொம்பவும் தோன்றத் தொடங்கி விட்டது.

தனஞ்சயன் கெட்டிக்காரன். எப்படியோ இசகு பிசகாக இவர்களிடம் மாட்டிக் கொண்டிருந்தாலும் கூடவும்தான். பின்னிருந்து தலையில் அடிக்கிறார் களோ என்று பார்த்துக் கொண்டேயா ஒருவன் இயற் கைக் காட்சியை ரசிக்க முடியும்? தாமரை பூத்த கோயில் குளமும், தெளிந்த நீரில் துள்ளும் மீன் கூட்டமும், மரங்களும், வயல்களும் வல்லக்கோட்டை யில் அவளும் பார்த்து ரசித்தவைதானே? கலைவாணி யும் அவளும், அந்தக் குளத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார் களே! அண்ணியோடு கூட வந்து ரசித்த கலைவாணி, அண்ணனோடும் சென்றிருந்தால் இந்தத் துன்பம்



நேர்ந்திராதே என்று அபரஞ்சியின் மனம் பேதலித்துத் தவித்தது.

பெரிய பெரிய மூச்சுகளை எடுத்து அபரஞ்சி தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள முயன்றாள்.

இது கலங்குவதற்குரிய நேரம் அல்ல. கவனத் துடன் செயல்பட வேண்டிய நேரம்!

தனஞ்சயன் இவர்களிடம் மாட்டிக் கொண்டிருக் கக் கூடும் என்பதிலேயே ஐயம் சிறிதளவே ஆயினும் சந்தேகம் இருந்தது. அவனது குரலைக் கேட்டால் ஒழிய அது தீராது.

அத்தோடு, சாமர்த்தியசாலியான தனஞ்சயன், அப்படிப் பேசும்போதே, ஏதாவது குறிப்புக் காட்டக் கூடும்!

இந்த இரு காரணங்களுக்காகவுமே, அபரஞ்சி, டெலிஃபோனில் கணவன் குரலைக் கேட்டால் ஒழிய இந்தக் கடத்தல்காரனின் பேச்சை நம்பவே முடியாது என்று, அவனிடம் சொன்னாள்.

சிறு அமைதியின்பின், ''ஏய், அந்த ஆளை இழுத்து வாங்கடா!'' என்றது அந்தக் கம்மல் குரல்.

சுளீர் சுளீர் என்று அடிக்கிற சத்தமும், 'ஆ' என்ற முனகலும் - இது தனஞ்சயனின் வேதனைக் குரலா? அவன் வலியில் முனகி அபரஞ்சி கேட்டதே இல் லையே? - தொடர்ந்து, 'முடியாது' நான் பேச மாட்டேன். எனக்காகப் பணம் தரும்படி சொல்ல மாட்டேன்!'' என்று அடிகள், வேதனையை மறைக்க முயன்று முடியாமல் வெளிவந்த முக்கல்கள்...

அபரஞ்சி கதிகலங்கிப் போனாள்.

''அடிக்காதே? அடிக்காதே?'' என்று தன்னை மீறிக் கதறினாள்.

உள்ளூர எண்ணம் ஓடியது - அது தனஞ்சயன் தானா? அவன் குரல் கம்பீரமாய் இருக்குமே! இது கொஞ்சம் கட்டைக்குரலாய் கனத்துத் தெரிந்ததே! ஒருவேளை, அடித்து உதைத்திருப்பார்களோ? பின்னிருந்து கழுத்தில் அடித்ததில் குரல் கட்டியிருக்குமோ? அல்லது பணம் கேட்கச் சொல்லி ரொம்பவும் இம்சை பண்ணி விட்டார்களோ?

இன்னொரு தரம் பேசினால்... ''பணம் கேட்க மாட்டேன்; பேச மாட்டேன்' என்பவனை இன்னும் ஒருதரம் பேசவே என்று எப்படிக் கேட்பது... என்று எண்ணும்போதே, அபரஞ்சிக்கு இன்னும் ஒன்று உறைத்தது.

பேசியது, அந்தக் கம்மல் குரல்காரனுடைய கூட்டாளி என்றால் 'பணம் கேட்க மாட்டேன்' என்று எப்படிச் சொல்லுவான்? 'பணம் கொடுத்து என்னைக் காப்பாற்று' என்றல்லவோ கூறியிருப்பான்!

தனஞ்சயன் மாட்டிக் கொண்டுதான் இருக்கிறான் என்கிற எண்ணம் உறுதிப்பட்டுவிட, ''இதோபார், அவரை ஒன்றும் செய்யாதே. ஆனால், நீ நினைக்கிற மாதிரி என்னிடம் பணம் எதுவும் கிடையாது. மிஞ்சி மிஞ்சி ஒரு பத்தாயிரமோ பதினையாயிரமோ தான் இருக்கும். இருப்பதைத் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு தயவுசெய்து அவரை விடுவித்து விடு!'' என்றாள் கெஞ்சுதலாக.

மீண்டும் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் அந்த வில்லன் ''என்னம்மா பொண்ணு, என்னையே ஏமாத்தப் பார்க்கிறாயா? பணமா உன்னிடம் அதிகம் இருக்காது என்று எனக்குத் தெரியும். ஆனால் உன் நகைகள் இருக்குமே! அன்றைக்கு விசேஷத்திலே நீ, உன்



பிள்ளை, உன் மாமியார் எல்லோரும் அணிந்திருந்த நகைகள் எல்லாவற்றையும் அள்ளிக் கொண்டு வா. அதுபோதும் எனக்கு'' என்றான்.

'வீட்டு விசேஷம்' எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறானே, பாவி என்று எண்ணினாள் அபரஞ்சி. அப்படியானால், வீட்டில் பழகிய ஆளாகத்தான் இருக்க வேண்டும். யார்? யார்? என்று அவசரமாக ஒருபுறம் எண்ணம் ஓட, இவனைக் கொஞ்சம் இழுத்து அடித்தால், அதற்குள் இவனைக் கண்டுபிடிக்க ஏதாவது வழி கிடைக்காதா என்று மற்றொரு புறம், யோசனை சென்றது.

''பாரப்பா, இந்த நகைகள் எல்லாம் ஒரு விசேஷத்திற்காகத் தரப்பட்டவை. அத்தோடு மாமியார், அவர்களது நகைகளை ஒரு திருமணத்துக்காக அணிந்து...' எனும்போதே, ''அது கொஞ்சம் இல்லாத வீட்டுக் கல்யாணம். நீ வைரமும் ஜரிகையுமாகப் பகட்டாக வந்து நின்றால் நன்றாயிராது. சும்மா ஒரு செயின் போதும்' என்று வசந்தா கூற, அதன்படி சரளாவும், கலைவாணியும் ஓரிரு நகைகள் மட்டுமே அணிந்து சென்றது அவளுக்கு நினைவு வரப் பேச்சு நின்றது.

உடனேயே சமாளித்து அபரஞ்சி தொடருமுன், ''ஏய், பொண்ணு சும்மா கதை விடாதே. அவங்க என்ன என்ன மாட்டிகிட்டு போனாங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும். மரியாதையா எல்லாத்தையும் அள்ளிகிட்டு இருக்கிற பணத்தையும் எடுத்துகிட்டு வா. ஐந்து லட்சத்துக்குப் பணம் அல்லது நகை எனக்கு வந்தாகணும். இல்லையானா...'' என்று அவன் மிரட்டும்போதே அபரஞ்சிக்கு ஓர் ஐடியா தோன்றியது.

''கொஞ்சம் பொறு. கொஞ்சம் பொறு'' என்றவள், வேகமாக யோசித்து, ''இங்கே வீட்டில் இருப்பது எவ்வளவு என்று எனக்குத் தெரியாதில்லையா? அதனால் இப்போது ஃபோனை வைத்துவிட்டுக் கொஞ்ச நேரம்... ஓர் அரை மணி நேரம் கழித்து திரும்பவும் ஃபோன் செய். அதற்குள்ளாக, நான் நகையும் பணமுமாக என்னென்ன எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து வைக்கிறேன். அப்புறம், நீ சொல்லுகிற இடத்துக்கு அனுப்புகிறேன்..'' என்றாள்.

ஆனால், அவளது எண்ணத்தை அப்படியே படித்தவன் போல, அவன் மீண்டும் அட்டகாசமாய்ச் சிரித்து விட்டு, ''நான் திரும்பப் பேசுவதற்கு முன்னால், நீ போலீசுக்குச் சொல்லிவிட, அவர்கள் நான் எங்கேருந்து பேசுகிறேன் என்று கண்டுபிடித்து என்னையும் கைது பண்ணி, உன் புருஷனையும் மீட்டு விடுவார்கள்; அப்படித்தானே உன் ஐடியா?'' என்று கேட்கவும் அபரஞ்சி மிகவும் மனம் ஓய்ந்து போனாள்.

என்னவோ, இனி எதுவுமே செய்வதற்கு இல்லை போல, யோசிக்கக்கூட இயலாதது போலப் பெரும் சோர்வு அவளைப் பீடித்தது. ரிசீவர் கைநழுவி விழுந்துவிடாமல் இறுகப் பற்றியபடி அவள் உடல் தளர்ந்து உட்கார்ந்திருக்க, அந்தக் கம்மல் குரலான் தொடர்ந்து பேசினான்.

''நாங்கள் எத்தனை பேரை இப்படிக் கடத்திப் பணம் பண்ணியிருப்போம்! எங்களையே மொத்தப் பார்க்கிறியே? நடக்குமா? இந்த மாதிரி முட்டாள்தனமான யோசனைகளையெல்லாம் மூட்டை கட்டிப் போட்டுவிட்டு, நான் சொல்கிறதை நல்லாக் கேட்டுக்கிட்டு, அதன்படி அச்சுபிசகாமல் செய். உன் வீட்டிலே என்னென்ன நகைகள் இருக்கும் என்று எனக்குத் தெரியும். அத்தனையையும் ஒன்றுவிடாமல் எடுத்துக் கொண்டு வா... கூடவே நீ சொன்ன பத்தோ பதினைந்தோவையும் கொண்டு வா... அப்புறம்... சில வினாடிகள் அவனது பேச்சுக்குப் பதிலாக ஏதோ காகிதத்தின் சலசலப்பு போல ஏதோ அபரஞ்சிக்குக் கேட்டது.



காற்றில் ஏதாவது காகிதம் பறந்திருக்கும் என்று அவள் அலுப்புடன் எண்ணமிடும்போதே, அந்தக் கடத்தல்காரன் மீண்டும் தொடர்ந்தான்.

''...அதோட, உன் மாமன் வீட்டுச் செலவு, அவசரச் செலவுக்கு என்று வைத்திருக்கிற பணம் அது ஒரு இருபது இருபத்தைஞ்சு தேறுமில்லை? அதையும் எடுத்துக்கிட்டு வா. பெட்டி வேணாம். சின்ன தோள் பை மாதிரி எதுலேயாச்சும் அள்ளிப் போட்டுக் கொண்டு வா. நடுவிலே வேறே யார்கிட்டவும் நீ பேசப்படாது. டெலிஃபோன் கம்பத்திலே, வெளியிலே எல்லாம் ஆள் வைத்திருக்கேன். உன்னைப் பார்த்துக்கிட்டே இருப்போம். உன் வேலைக்காரி கூட வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது. புரியுதா?''

''உம்'' என்றாள் அவள் களைத்துப் போய்.

''பையோட ஆட்டோ பிடித்து அடையாறுக்குப் போ. அங்கேருந்து இந்திரா நகர். அங்கே வெங்கடரத்தினம் காலனிக்குப் பின்னாடி இறங்கி ஆட்டோவை அனுப்பி விடு. நேரே நடந்து சோத்துக் கைப்பக்கம் திரும்பு. நேரே போய் முதல் பீச்சாங்கைப் பக்கம் திரும்பு. திரும்பவும் நேரே போ. முதல் சோத்துக்கைப் பக்க ரோடிலே நேரே போய் கடைசிலே ஒரு பெரிய மஞ்சப்பூ மரம் இருக்கும். அதன் அடியிலே நில்லு. அங்கே உன்கிட்டே இருந்து பையை வாங்க ஆள் அனுப்பறேன்...''

''அவர்? என் கணவர் தனஞ்சயன்?'' என்று கலக்கத்துடன் வினவினாள் அபரஞ்சி.

''வருவான். சொன்னபடி நீ எல்லாம் கொண்டு வந்து விட்டியா என்று நான் சரிபார்த்ததும் அவனை அனுப்புவேன்.''

''முடியாது. அவரைப் பார்க்காமல் நான் எதை யும் தர மாட்டேன்'' என்றாள் அபரஞ்சி அவசரமாக. ''நீ இதை வாங்கிக் கொண்டு, திரும்பவும் ஏதாவது கேட்க மாட்டாய் என்று எப்படி நம்புவது? தனஞ்சயன் வந்தால் தவிர, நான் பையைத் தரமாட்டேன்'' என் றாள் குரலில் அழுத்தத்தைக் கொண்டு வந்து.

ஒரு சிறு அமைதியின் பின், ''சரி அதுவும் நியாயம்தானே?'' என்றான் அவன். ''நீ பையோட வந்து நில்லு. நாங்க உன் புருஷனைக் கூட்டி வர் றோம். ஆனால் ஒன்று பொண்ணு. உன்னைக் கவ னிக்க நான் அங்கங்கே ஆள் வைத்து இருக்கேன். அதனாலே நீ வேறே ஏதேனும் முயற்சி பண்ணினே... அப்புறம் உன் புருஷன் பணால்! எள்ளும் தண்ணியும் தான் இறைக்க வேணும்!''

வெறும் மிரட்டல்! அப்படியெல்லாம் ஓர் உயிரை அழித்துவிட மாட்டார்கள் என்று உள்ளூர எவ்வ ளவோ சொல்லிக் கொண்டபோதும், அபரஞ்சியின் நெஞ்சுக்குள் பந்தயக் குதிரை ஓடியது.

''...அப்புறம், நீ மரத்தடியிலே நிற்கிறபோதும், எங்கள் அத்தனை பேருக்கும், நீ சொன்னபடி நடந்து கொண்டிருக்கிறே என்கிற திருப்தி ஏற்பட்ட பிறகு தான், அங்கே இருந்து இரண்டு பேர் கிளம்பி, உன் புருஷனை அடைத்து வைத்திருக்கிற இடத்துக்குப் போய், அவனை இங்கே கூட்டி வருவோம். அத னாலே, இவ்வளவு நேரம் நின்னாச்சுது, ஆளைக் காணோமே என்று திரும்பிப் போய் விடாதே! வரு வதுக்கு ரொம்ப லேட்டும் ஆக்கிவிடாதே. ஆனால் ஒன்று மட்டும் நினைவு வைத்துக்கோ. நீ மட்டும் இசகுபிசகாக ஏதாவது செய்தியோ, அப்புறம், உன் புருஷனைக் கூட்டிக்கொண்டு போகிறதுக்குப் பதிலா, அவனை நீ நாலு ஆளுங்களைக் கொண்டு தூக்கிக் கிட்டுப் போகும் படியாகத்தான் ஆகிவிடும்'' என்று கடைசியாகவும் பயங்கரமான ஒரு மிரட்டலுடன் ரிசீ வரை வைத்தான் அந்தக் கடத்தல்காரப் பாவி!



ரிசீவருக்கு வலித்து விடுமோ என்று அஞ்சியவள் போல, மெதுவாக, அதைத் தாங்கியில் வைத்துவிட்டு எழுந்த அபரஞ்சியின் கால்கள், அவளைத் தாங்க மாட்டாதவை போன்று வெடவெடவென்று நடுங்கின.

கைகளும்தான்.

தன்னிச்சையாய் அசைந்த உடல் உறுப்புகளைப் பெருமுயற்சி செய்து, அபரஞ்சி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாள்.

அவசர அவசரமாக, அவன் சொன்னதுபோல நகை, பணம் எல்லாவற்றையும் ஒரு தோள் பையினுள் எடுத்துப் போட்டாள்.

பையின் 'ஜிப்'பை இழுத்து மூடி எடுத்துக் கொண்டு, கிளம்பியவள் சற்றே நிதானித்து, கைப்பை யையும் எடுத்துக் கொண்டாள்.

தோள் பை, கைப்பை சகிதம், பிள்ளையை விட்டுவிட்டுக் கிளம்பிய சின்ன எஜமானியை ஆச்சரி யத்துடன் நோக்கி, ''என்னம்மா, இந்த வெயில் நேரத் திலே தனியாகக் கிளம்புறீங்களே! நானும்கூட வரட் டுமா?'' என்று முத்து கேட்கவும், அபரஞ்சி அதிர்ந்து போனாள்.

''வே... வேண்டாம்!'' என்றாள் குரல் நடுங்க.

''பக்கத்திலேயாம்மா? பிள்ளையை விட்டுவிட்டுப் போறீங்களே. பிள்ளை விழிச்சு அழுதாக்க என்ன கொடுக்கம்மா?'' என்று அவள் மேலும் கேட்டாள்.

இவள் என்ன பேசுகிறாள் என்று எதுவும் புரியாமல் திகைத்தாள் அபரஞ்சி. ''என்ன பிள்ளை...'' என்று தொடங்கிவிட்டு, பிறகு புரிந்தபோதும் நிற்க மனமின்றி, ''நீயே ஏதாவது பார்த்துக் கொடு. ஆனால்... ஆனால் கதவைப் பூட்டிக்கொள். வேறே யார் கூப்பிட்டாலும் திறக்காதே... அப்புறம், வெளியே போகாதே...'' என்றவள் அதற்குமேல் நில்லாமல் கிளம்பி விட்டாள்.

சுமார் மூன்று மணி அளவில் அலுத்துக் களைத்து, போரடித்துப் போய் வீடு திரும்பிய உலகநாதனுடைய குடும்பம், ''வீர் வீர்' என்று கதறிய குழந்தையையும், அதைச் சமாதானம் செய்ய முயன்று தோற்றுக் கொண்டிருந்த வேலைக்காரி முத்துவையும் கண்டு திகைத்தது! அங்கே இருந்து, குழந்தையின் பசி தீர்த்து, அதைச் சமாதானப்படுத்தியிருக்க வேண்டிய அபரஞ்சியைக் காணாமலும்தான்.

## 15

**தோ**ள் பையை நெஞ்சோடு இறுகப் பற்றியபடி, தெருவில் இறங்கி வேகமாக நடந்த அபரஞ்சிக்கு, அவளது உடம்பெல்லாம் ஏதோ குத்துவது போல இருந்தது.

அந்தக் கடத்தல்காரனின் ஆட்கள் எங்கெங்கு இருந்து அவளைக் கண்காணித்துக் கொண்டு இருக்கிறார்கள்?



அந்த வீட்டு வராந்தாவில் அமர்ந்து பத்திரிகை படிக்கிறாரே, அவர் பத்திரிகையைப் படிக்கத்தான் செய்கிறாரா அல்லது அவளை உளவு பார்த்துக் கொண்டு இருக்கிறாரா?

அதோ அங்கே பீடி குடிப்பவன் நிச்சயமாய் அந்தக் கடத்தல்காரனின் ஆளாகத்தான் இருக்கும்! அவன் கையில் அது என்ன நீண்ட சதுரமாய், கறுப்பாய் அது என்ன?

சட்டெனத் தெரிந்துவிட்டது அவளுக்கு. அது செல்லுலர் போன்!

இந்த ஆள் கடத்தலையே, பெரிய அளவில் செய்து போலீசாருடன் மோதலில் இறந்துபோன ஆசைத்தம்பி, கபிலன் போன்றவர்களைப் பற்றிப் படித்தது அபரஞ்சிக்கு ஞாபகம் வந்தது. செல்லுலார் ஃபோன், சீயல்லோ கார்... அந்தச் சிவப்பு நிற சீயல்லோவின் உள்ளே இருப்பவன் நிச்சயமாய் அந்தக் கம்மல் குரல்காரனின் ஆளேதான். ஐயம் திரிபு அற அவளுக்குத் தெரிந்து போயிற்று!

ஒற்றறியவென்று வழியெல்லாம் இப்படி எத்தனை பேரை வைத்திருப்பானோ தெரியவில்லையே!

ஆட்டோவுக்காகத் தேடி நின்றபோது, ''மணி என்ன மேடம்? என்று கேட்டபடி ஒரு பெண் அருகில் வர, அபரஞ்சி அவசரமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இந்தப் பெண்ணோடு பேசுவதைக் கூட அந்த வில்லனுடைய ஆட்கள் என்னவென்று சொல்லி விடப் போகிறார்களோ?

இந்தக் கைக்கடிகாரத்தைக் கட்டாமலே இருந்திருக்கலாமே என்று அபரஞ்சிக்குத் தோன்றியது. யாரும் மணி என்ன என்று கேட்க வர மாட்டார்கள் அல்லவா?

இப்போதுகூட, ஏதோ காரணத்துக்காகத்தான் வளையலைக் கழற்றி விட்டு இந்த 'வாட்சை'க் கட்டிக் கொண்டிருந்தாள்.. எதற்காக?

ஏன் அப்படி கைக்கடிகாரத்தை அபரஞ்சி அணிந்தாள்? ஏதோ குழந்தைக்காக! குழந்தைக்கு நேரப்படி உடம்பு கழுவ, பசியாறல் எல்லாம் செய்வதற்காக என்பது அரைகுறையாக அவளுக்கு நினைவு வந்த போது ஓர் ஆட்டோ வந்து நிற்க, அவசரமாக அதில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

சொன்ன இடத்தில் ஆட்டோவை நிறுத்திய அதன் டிரைவர் பயணத்தின் கட்டணத்தை வாங்கிக் கொண்ட பிறகும், செல்லாமல் நின்றான். ''அம்மா இந்தப் பக்கமெல்லாம், கொஞ்சம் ஒரு மாதிரிப்பட்ட இடம், அம்மா. அதனால் வாருங்கள்! உங்களைச் செல்ல வேண்டிய வீட்டுக்கே கொண்டு விடுகிறேன் அல்லது கொஞ்ச நேரம் துணையாக நிற்கட்டுமா?'' என்று பரிவாகக் கேட்டான்.

அபரஞ்சிக்குக் கண்ணைக் கரித்தது. இவனிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாமா என்றுகூட அவளுக்குத் தோன்றிவிட்டது!

ஆனால் எங்கெங்கே இருந்து ஆள் மூலம் பார்த்து கொண்டிருக்கிறானோ, பாவி! இவன் நின்று பேசுவதைக் கூட தப்பாகவும் எண்ணிக் கொண்டுவிடக் கூடாதே! தப்பாக எண்ணி, ஏதேனும் கொடுமை செய்துவிடக் கூடாதே என்று அவள் மனம் பதைத்தது. இவனை உடனே இங்கிருந்து விரட்டியாக வேண்டுமே!

''சொன்ன இடத்தில் கொண்டு வந்துவிட்டு விட்டுப் பணத்தையும் வாங்கிக் கொண்டாயிற்று அல்லவா? அத்தோடு உங்கள் வேலை முடிந்தது. நீங்கள் போகலாம்!''



என்று முகத்தில் அடித்தாற்போலக் கூற முயன்றவள், அந்த வார்த்தைகளுக்கேற்ற கடுமையும் மிடுக்கும் கை வராமல், வெறுமனே முணுமுணுத்தாள்.

ஆட்டோ ஓட்டி வியப்பாய் நோக்கவும் பதறிப் போய்.. ''ப்ளீஸ் தயவு செய்து போய்விடுங்கள். நீங்கள் இங்கே நிற்பது எனக்கு நல்லதில்லை... உ..உடனே போய்விடுங்கள்.'' என்று கெஞ்சலானாள்.

அவளது குரலில் இருந்த தீவிரம் புரிந்தோ என்னவோ, அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே போய், ஆட்டோவைக் கிளப்பிச் சென்றான் டிரைவர்.

நல்ல உச்சிவேளை. பெரிதாக மஞ்சப்பூ மரம் என்றானே, அவன். அந்த மரத்தில் இரண்டே இரண்டு கிளைகளில் வெறும் பூ மட்டுமாய் சில கொத்துகள் தொங்கினவே தவிர, நிழலுக்கு வழியில்லை. அடி மரத்தை ஒட்டி நிற்கலாம் என்றால், அந்த வில்லன் எந்தத் திசையிலிருந்து பார்க்கிறானோ, அவனுக்கும் அவளுக்கும் இடையே மரம் இருந்து அவளை மறைத்து விடக் கூடாதே, அவள் வரவில்லை என்று எண்ணி தனஞ்சயனை அந்தப் பாவி ஏதேனும் செய்துவிடக் கூடாதே என்ற பயத்தில் அந்த அடிமரத்தை ஒட்டிய நிழலைக் கூட விடுத்து வெய்யிலிலேயே அபரஞ்சி நின்றாள்.

பிள்ளை பிறந்து ஏறத்தாழ முப்பது நாட்களே ஆன பச்சை உடம்பு. நின்றுநின்று அபரஞ்சியின் கால்கள் கடுத்திருக்க வேண்டும். சுடுமணலில் பாதம் பொத்துப் போவதையும் உணராமல், மூன்று மணி நேரத்துக்கும் மேலாகக் கால் மாற்றி மாற்றி அவள் அங்கேயே நின்றாள்.

''வீடுகளும், குடிசைகளுமாக இருந்த அந்தப் பகுதியில் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கவில்லை. கிட்டத்தட்ட இல்லை என்றுகூடச் சொல்லலாம்.

அதிகாலையில் கிளம்பிச் சென்று, வயிற்றுப் பாட்டுக்கு உழைத்துவிட்டு பின் மாலையில் திரும்பி வரும் தொழிலாளர்கள் வசிக்கும் இடமாக இது இருக்கக் கூடும் என்று அபரஞ்சிக்குத் தோன்றியது. ஒன்றிரண்டு நாய்கள் அலைந்தன. ஏதாவது வீட்டுமுன் அல்லது மரத்தடியில் அரைத் தூக்கமாய்ச் சில முதியவர்கள். மற்றபடி ஆள் நடமாட்டமே இல்லை.

இந்த இடத்தில், ஆறேழு லட்சம் பெறுமானமுள்ள நகைகளையும், சுமார் நாற்பதாயிரம் ரூபாயையும் வைத்துக் கொண்டு எவ்வளவு நேரம் அவள் தனியே நிற்க முடியும்?

திரும்பிப் போகவும் அவளுக்குப் பயமாக இருந்தது. நிபந்தனைப்படி அவள் தனியே வந்திருப்பது குறித்து திருப்தி ஏற்பட்ட பிறகு. தனஞ்சயனை அடைத்து வைத்திருக்கும் இடத்துக்குப் போய், அவனை இங்கே கூட்டிவர வேண்டும் என்றானே! வர நேரமாகும் என்றும் சொன்னான்தான்...

ஆனாலும் இவ்வளவு நேரமா என்று, நிமிடத்தை யுகமாகக் கழித்த அபரஞ்சி தவித்தாள்.

ஒருவேளை, இந்த ஆள் கடத்தல்காரர்களுக்குப் பணியாததால் தனஞ்சயனை இவர்கள் ரொம்பவும் அடித்திருப்பார்களோ? அடி எங்கேனும் படாத இடத்தில் பட்டு அவனுக்கு ஏதேனும் ஆகிவிட்டதோ? அல்லது வரும் வழியில் ஏதேனும் விபத்தில் மாட்டிக் கொண்டானோ? தனஞ்சயன் இப்போது நல்லபடியாக இல்லையோ? ஏன், இல்லவே இல்லையோ என்றெல்லாம் அபரஞ்சியின் மனம் கலங்கித் துடித்தது.

ஆனால் உடனேயே, அப்படியெல்லாம் இராது. கணவனுக்கு ஒன்றும் நேராமல் கடவுள் காப்பாற்றுவார்



என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டு, ஏதாவது சுவாமி பெயரை உருப்போடுவாள்.

சில நிமிடங்கள் அமைதியுறும் மனம், கடவுளிடமிருந்து விலகி மீண்டும் கலங்கும்.

இந்தக் கலக்கமும், உச்சிமீது தீயாய் எரிந்த வெய்யிலும், காலை உணவுக்குப் பிறகு பச்சைத் தண்ணீர் கூட இறங்காமல் காய்ந்த காலி வயிறுமாக அவ்வப்போது அபரஞ்சிக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

ஆனால், கணவனைக் கண்ணாரக் காணும் வரை இப்படியேதான் நின்றாக வேண்டும் என்ற மனதின் உறுதியினாலேயே அவள் தாக்குப்பிடித்தாள் எனலாம்.

மதியம் இரண்டு மணிக்கு மேலாக, அந்தத் தெரு மெல்ல மெல்ல உயிர் பெற்றது. ஆங்காங்கே யார் யாரோ வருவது போவது போலத் தோன்றிய போதும், யாரிடமும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளக் கூடாது என்கிற பிடிவாதத்தோடு முகத்தைக் கடுமையாக வைத்து எங்கோ பார்த்தபடி அபரஞ்சி நின்றாள்.

சாதாரணமான 'என்ன வேண்டும், யார் வேண்டும்' என்ற கேள்வியைக் கூட எங்கிருந்தோ கவனிக்கும் அந்த வில்லன் கும்பல் தவறாக எண்ணிவிடக்கூடும் அல்லவா?

ஆனால், திடுமென, "அட அபிப்பொண்ணு, இங்கே எங்கேம்மா வந்தே? ஏம்மா இந்த நட்டார வெய்யில்லே நின்னா மண்டை வெடிச்சுப் போவாது? ஏம்மா?'' என்று குரல் கேட்கவும் பதறித் திரும்பினாள்.

வள்ளிம்மா! பெரியப்பா வீட்டில் வேலை செய்கிறவள்! இரண்டு மூன்று பெரிய வீடுகளில் வேலை செய்யும் அவள், காலையில் தூத்து தெளித்து கோலம் போடுவதில் இருந்து, மதியச் சாப்பாட்டுப் பத்துப் பாத்திரம் வரை

தேய்த்துக் கழுவி வைத்துவிட்டு சாவகாசமாக வீடு செல்கிறவள். பெரியப்பா வீடு அடையாறு! இவளது வீடு இங்கே போலும். பெரியப்பா வீட்டில் வேலை முடித்துத் திரும்பியிருக்கிறாள்!

ஒரு கணம் அபரஞ்சிக்குக் கதிகலங்கிப் போயிற்று. இவளை எப்படி இங்கிருந்து விலகிச் செல்ல வைப்பது?

வள்ளியம்மா நல்லவள் நம்பிக்கையானவள். பெரியப்பா இங்கே வீடு கட்டி வந்ததில் இருந்து, பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அங்கேயே வேலை செய்த உரிமையோடு பேசுவாள். அன்பாக இருப்பாள். பெரியப்பா வீட்டில், அபரஞ்சி இருந்த காலத்தில்கூட, இவள் அபரஞ்சியிடம் தனிப்பரிவுடன் நடந்து கொண்டாள்... அதை மறவாமல் அபரஞ்சியும் தன் திருமணத்துக்கென்று, வள்ளியம்மா ஆயாவுக்கு நல்லதாகவே சேலை வாங்கிக் கொடுத்தாள். பெரியப்பா வீட்டுக்குச் சும்மா போகும்போதும் ஏதாவது பணம் கொடுப்பாள். ஆயாவும், தொட்டில் போட்ட அன்றுகூடப் பெரியப்பா குடும்பத்துடன் வந்து, குழந்தையைப் பார்த்துவிட்டு ஐந்து ரூபாய்ப் பணத்தைக் குழந்தை கையில் வைத்து விட்டுப் போனாள்.

இப்படிப்பட்டவளை எப்படி இங்கிருந்து அகற்றுவது?

அதுவும் வெய்யிலில் நிற்கிறாளே என்று, கரிசனமும் பிரியமுமாய் விசாரிப்பவளை விரட்டுவது எப்படி?

முயன்று வேகவேகமாக யோசித்துப் பார்த்து விட்டு, சரிவர சிந்திக்கக் கூட முடியாமல் மூளை மரத்துவிட்ட இந்த நேரத்தில் இவளிடம் உண்மை சொல்வதென்று முடிவு செய்து, ''ஆயா, நான் எதையும் திரும்பிச் சொல்ல இயலாது. அதனால் கவனமாகக் கேள். என் கணவரை யாரோ கடத்திக் கொண்டு போய்விட்டார்கள்... வேண்டாம், என்ன எப்படி என்றெல்லாம் இப்போது கேளாதே. விவரிக்க நேரம் இல்லை. பணமும் நகையும் வைத்துக் கொண்டு இந்த இடத்தில் நின்றால் அவரைக் கூட்டி வந்து, பணத்தை வாங்கிக் கொண்டு அவரை விட்டுவிட்டுப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு உதவி செய்வதாக நினைத்துப் போலீசுக்குப் போய்விடாதே; ஆளும் கூட்டி வராதே. அது... அவர் உயிருக்கு ஆபத்தாகி விடும். யாரேனும் கூட நின்றால், யாரோடும் நான் பேசி, அவர்கள் பார்த்தால், அவருக்கு ஆபத்துதான். அதனால் தயவுபண்ணி ஏதுவும் பேசாமல் உடனே போய்விடு. சீக்கிரம்!'' என்று அவள் மூச்சுவிடக் கூட அவகாசம் விடாமல் அபரஞ்சி வேகமாகக் கூறவும், கவலையான பார்வையோடு வள்ளிம்மா விலகிப் போனாள்.



சென்று, அந்த லைன் வீடுகளுள் ஒன்றினுள் மறைந்தாள்.

அவள் வீடுபோலும் என்று நினைத்ததோடு, அவளைப் பற்றிய சிந்தனையை விடுத்து அபரஞ்சி தன் தவத்தைத் தொடர்ந்தாள்.

மேலும் ஒரு பத்துப் பதினைந்து நிமிடங்கள் சென்றிருக்கும். தெருவோடு, கம்பூன்றிச் சென்று கொண்டிருந்தவனின் இரு கால்கள் தன்னை நோக்கி வருவதை உணர்ந்து அபரஞ்சி திரும்பிப் பார்த்தாள்.

தாடி மீசையுடன் இருந்த அந்த ஆள், சட்டென வேகமாக அவளை நெருங்கிக் கையிலிருந்த கம்பை அவள் புறமாக ஓங்கினான்.

அனிச்சை செயலாகத் தன்னைக் காத்துக் கொள்ள அபரஞ்சி கையை உயர்த்தியபோது, கம்பை விட்டுவிட்

டுச் சட்டென அவளிடமிருந்த தோள் பையைப் பிடுங்கினான்.

ஆனால், அந்தப்பை அவளது உயிரை மீட்டுத் தருவது அல்லவா? தன் அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு, அபரஞ்சி பையை மீண்டும் பற்றி இழுத்தபடி, ''யார் நீ?... அவர் எங்கே? என் பை...விடு!'' என்று போராடினாள்.

ஆனால், மிகவும் களைத்துப் போயிருந்த அவளது போராட்டம் மிஞ்சிமிஞ்சி ஓரிரு நிமிடங்களே நீடித்தது. அதற்குள், அவளைப் பிடித்துத் தள்ளிவிட்டு, பையையும் பிடுங்கிக் கொண்டு, அந்தத் தாடி மீசைக்காரன் வந்த திசையிலேயே திரும்பி ஓடி முனைத் திருப்பத்தில் மறைந்தும் போனான்.

அவன் தள்ளிய வேகத்தில், மரத்தின் மீது மோதி சமாளித்துக் கொண்டு நின்ற அபரஞ்சி ஐயோம்மா என்று கதறினாள்.

தனஞ்சயனும் வரவில்லை. நகை, பணமும் போய் விட்டது!

நகைப்பை போனதைவிடத் தனஞ்சயன் வராதது அவளை மிகவும் பாதித்தது.

நகைப்பையைப் பிடுங்கிச் சென்றவன்.. இந்தக் கடத்தல் கும்பலைச் சாராத வேற்று ஆளாக இருந்தால் இப்போது தனஞ்சயன் கதி என்ன ஆகும் என்று அவள் பெரிதும் கலங்கிப் போனாள்.

இந்தத் திருடன் அந்தக் கும்பலைச் சேர்ந்தவனாக இருந்து, தனஞ்சயனைத் திருப்பி அனுப்ப இன்னும் எதையேனும் கேட்டால் கூடப் பரவாயில்லையே என்றிருந்தது அவளுக்கு. குறைந்தபட்சமாய்த் தனஞ்சயன் இருக்கிறான் என்றாவது இருக்குமே!



இப்போது என்ன, ஏது என்று அறிந்து கொள்ளக் கூட வழி இல்லை எனும் போதே அவளுக்குத் தீப்பிடித் தாற்போல வயிறு காந்தியது.

அய்யோ அய்யோவென்று அழுதபடியே, அந்தத் திருடன் சென்ற திசை நோக்கி ஓட முயன்று, தடுமாறி விழுந்து, அவள் மீண்டும் எழுமுன் வள்ளிம்மாவும் இன்னும் சிலரும் ஓடி வந்தனர்.

மற்றவர்கள் சென்றுவிட, வள்ளிம்மா நின்று, அபரஞ்சியைத் தூக்கி விட்டாள்.

''இன்னாம்மா, அபி, அவன் என்னா சொன்னான்?'' என்று கேட்டவளுக்குப் பதில் சொல்ல மாட்டாமல் அபரஞ்சிக்கு முசுமுசுவென்று அழுகை பொங்கியது.

அபரஞ்சியின் நிலைமை உணர்ந்து, அருகில் இருந்த ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்று, ஒரு பெட்டி மீது அவளை உட்கார வைத்து விட்டு யாரையோ அழைத்து, ஒரு சோடா வாங்கி வருமாறு வள்ளிம்மா சொன்னபோது, அபரஞ்சி அவளைத் தடுத்தாள்.

எழும்பாத குரலில், ''வே...வேண்டாம், வள்ளிம்மா... நான் வீட்டுக்குப் போக வேண்டும்... அங்கே மா...மாமா வந்திருப்பார்... அவரிடம் சொல்லித் தனாவைத் தே...தேடச் சொல்ல வே...வேண்டும்.... உடனே நான் வீட்டுக்குப் போக வேண்டும்...'' என்று மூச்சிரைக்கக் கூறினாள்.

சற்று வற்புறுத்திப் பார்த்த வள்ளிம்மா, அபரஞ்சி பிடிவாதமாய் இருப்பதைப் பார்த்ததும், ஓர் ஆட்டோவை வரவழைத்து, அபரஞ்சியை அதில் ஏற்றி விட்டு, ''நீ போய்க்கினே இரும்மா. ஒரு சின்ன ஜோலி முடிச்சிட்டு நானும் வந்திர்றேன்'' என்று அனுப்பி வைத்தாள்.

களைப்பும் சோர்வும் அதையெல்லாம் மீறிய கவலையும் பயமும் கூடவே என்ன செய்வது என்று புரியாத திகைப்புமாக, பயணம் முழுவதும் தவித்து விட்டு, வீடு நெருங்கும்போதே ஒரு முழு நோட்டை வைத்திருந்து, வீட்டின்முன் ஆட்டோ நின்றதும் நிற்காததுமாக அவசரமாக இறங்கி, பணத்தைக் கொடுத்து விட்டு, சில்லறைகூட வாங்காமல் வேகமாக கேட்டைத் திறந்து உள்ளே சென்றவள், திகைத்து நின்றாள்.

ஏனெனில், ஆட்டோ வந்து நின்ற சத்தத்தைக் கேட்டு, யார் என்னவென்று பார்க்க வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தவன் தனஞ்சயன்!

இமைதட்ட மறந்தாற்போலக் கணவனையே பார்த்துக் கொண்டு நின்றவளின் காதுகளில் குழந்தையின் அழுகுரல் விழவும், சற்றே திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

கிட்டத்தட்ட ஆறுமணி நேரமாகக் குழந்தை பசியாறவில்லை!

முன்புறச் சேலை நனைவதை உணர்ந்து, அவசர அவசரமாக வீட்டினுள் செல்லத் தொடங்கியவளை ''நில். அங்கேயே!'' என்று முழங்கித் தடுத்தார். அவளுடைய மாமனார் உலகநாதன். ''இவ்வளவு நேரம் எங்கே போய்ச் சுற்றித் திரிந்துவிட்டு வருகிறாய்? நகை எல்லாம் எங்கே? அதை யாரிடம்...'' என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கியவரைத் தனஞ்சயன் இடைமறித்தான்.

''அப்பா, குழந்தை அழுவது கேட்கவில்லையா? முதலில் அபரஞ்சி உள்ளே சென்று, கண்ணனைக் கவனிக்கட்டும். பிறகு உங்கள் கேள்விகளைக் கேட்கலாம்'' என்று அவன் சற்று அழுத்தமான குரலில் உரைக்க, உலகநாதன் மனமின்றியே, மருமகளுக்கு வழிவிட்டார்.

ஓட்டமும் நடையுமாக மகனிடம் அபரஞ்சி விரைந்தாள்.



மடியில் வைத்து சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்த பாட்டியை மீறி அழுத பிள்ளையைத் தூக்கக் கைநீட்டியவள், சற்று நிதானித்து, ''இதோ வருகிறேன்'' என்று உள்ளே ஓடிச் சென்று, மின்னல் விரைவுடன் கைகால் கழுவி, உடை மாற்றிக் கொண்டு வந்து மகனைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

நகை, பணத்துடன் வீட்டை விட்டு வெளியே சென்ற அபரஞ்சி, அவைகளை இழந்து வீடு திரும்பி வருமுன், வீட்டில் நிறைய நடந்திருந்தது.

கல்யாண வீட்டில் உலகநாதன் குடும்பத்துக்கு வியப்பு கலந்த மரியாதை கிடைத்தது என்றாலும், சற்றே தகராறான திருமணம் என்பதால் அதற்குமேல் இவர்களைப் பெரிதாகச் சீந்துவார் இல்லை.

அந்தத் தகராறையே கவனித்துக் கொண்டு இருந்ததால், வந்த விருந்தினரைக் கவனிக்க அங்கே ஆளில்லை.

வந்தவர்களை விருந்துண்ண அழைக்க ஆளில்லை உண்ணாது திரும்பிவிட வசந்தா விடவில்லை. அவள் கணவர் திட்டுவாராம்.

கடைசியாக, ஒருவழியாக உண்டேன் என்று பெயர் சொல்லிவிட்டு, எல்லோரும் கிளம்பித் திரும்பி வந்த போது, உலகநாதன் தங்கையிடமே சற்று எரிந்து விழுந்தார்.

''ஊருக்கு அழைக்க வந்தபோது அவ்வளவு குழைந்தார்கள், அண்ணா! கடைசியாக என்ன மாதிரி நடந்து கொண்டார்கள். பாருங்களேன்! இவர்களை நம்பவே கூடாது போல இருக்கிறதே!'' என்று அவளும் சேர்ந்து ஒத்து ஊதவும் தான் அவளது நிலைமை சரியாயிற்று.

எல்லோரும் அலுப்பும், எரிச்சலுமாகத் திரும்பி வந்தால், குழந்தை தன் முழுத் தொண்டையின் பலத்தை யும் காட்டிக் கொண்டு இருந்தது.

''பிள்ளையை இப்படி அழவிட்டு விட்டு இந்த அபரஞ்சி என்ன செய்கிறாள்?' என்று வசந்தா எரிச்ச லாய் மொழிய, ''ஆமாம்! முதலில் அவளை என்ன வென்று கேள்!'' என்றபடி உலகநாதன் இறங்க, எல்லோ ருமாக வீட்டினுள் செல்ல, குழந்தையின் கத்தலை மீறிக் கதவைத் திறக்குமாறு குரல் கொடுக்க வேண்டியிருந்தது.

மின்சாரம் நின்று விட்டிருந்தது.

அழைப்பு மணி வேலை செய்யாததால், கத்திக் கூப்பிட்டு, அதன்பின், அழும் குழந்தையோடு முத்து வந்து கதவைத் திறக்கும் வரை, வெளியே காத்திருக்க நேர்ந்ததால் வந்த சினத்தோடு, அனலாய்க் காய்ந்த வெயிலினால் வந்த புழுக்கமும், வியர்வையும், வேறு உலகநாதனின் கோபத்துக்கு உரமூட்டின.

குழந்தையின் அழுகுரல், பற்றவைக்கும் தீக்குச்சி யாகிவிட, வேலைக்காரியிடமிருந்து பேரனை வாங்கிச் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்த மனைவி மீது பாய்ந்தார்.

''சை! ஒரு குழந்தையை அழாமல் பார்த்துக் கொள் ளத் துப்பு கிடையாது! எங்கே உன் மருமகள்? மகன் இந்தக் கதறல் கதறுகிறான் - அம்மணி, என்ன தூங்கு கிறாளா? கூப்பிடு அவளை!'' என்று அதட்டினார்.

அபரஞ்சி வீட்டிலேயே இல்லை என்று அறியவும் எல்லோருமே சற்றுத் திகைத்துப் போயினர்.

''வீட்டிலே இல்லையா? என்னாடி இது அதிசயம்? பச்சைப் பிள்ளைக்காரி என்று, கல்யாணத்துக்குக் கூடக் கூட்டிப் போகாமல் ஓய்வாய் இருக்கட்டும் என்று வீட்



டில் விட்டுவிட்டுப் போனால், அவள் அதற்குள் எங்கே விட்டாள் சவாரி?'' என்று வசந்தா அதிசயப்பட்டாள்.

அவள் எங்கே போகிறேன் என்று சொல்லவும் இல்லை. எழுதி வைக்கவும் இல்லை என்று தெளிவாக வும் எல்லோருமே மீண்டும் திகைத்தனர்.

அவள் எப்படிப் போனாள், என்ன எடுத்துப் போனாள் என்று வேலைக்காரியிடம் விசாரித்த வசந்தா, தமையனிடம் திரும்பி, ''அண்ணா, நாம் மோசம் போனோம் போல இருக்கிறதே! நான் முன்பே சொன் னேன், நீங்கள் காது கொடுத்துக் கேளாமல் இருந்து விட்டீர்களே! இப்போது என்ன ஆயிற்று பாருங்கள்!'' என்று கூப்பாடு போட்டாள்.

''அத்தை, கொஞ்சம் மெள்ளப் பேசுங்கள்! இப் போது என்ன நடந்து விட்டது என்று இந்தக் கத்து கத்துகிறீர்கள்?'' என்று தனஞ்சயன் அவளை அதட்டி னான்.

''ஆமாணடா அப்பா, நீ என்னை அதட்டு! அண்ணா. இப்போதாவது நான் சொல்வதைக் கேளுங் கள். பீரோவில் வைத்த நகை, பணம் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பாருங்கள்!'' என்றாள் வசந்தா தமையனிடம்.

''அத்தை ஜாக்கிரதை! நீங்கள் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள் என்று புரிந்துதான் பேசுகிறீர் களா? அபரஞ்சி ஒன்றும் அப்படிப்பட்ட பெண் அல்ல'' என்றான் தனஞ்சயன் கோபமாக.

''சொல்ல மாட்டாயா பின்னே? உனக்குச் சரியான தலையணை மந்திரமில்ல வேலை செய்கிறது! அண்ணா, அவள் எப்படி ஆள் என்று நான் முன்னமே உங்களிடம் சொல்லியிருக்கிறேன் எதற்கு வீண் வாதம்? பணம், நகையைச் சரிபாருங்களேன்? பிறகு தானாகத் தெரிந்து

விட்டுப் போகிறது?'' என்று விடாமல் வசந்தா வற்புறுத்தினாள்.

அதற்குள், குழந்தை பசியினால் அழுகிறது என்று உணர்ந்து, பசும்பாலில் கொஞ்சம் நீர் விட்டுக் கலந்து குழந்தைக்கு ஊட்ட சரளா முயற்சித்தாள்.

அந்தப் பிடிவாதக்காரக் குழந்தை, அதை அவ்வளவும் துப்பிவிட்டு அழவே, நாலு ஸ்பூன் பாலை அதற்குக் கட்டாயமாகப் பாட்டி புகட்டிவிட அழுதுகொண்டே குழந்தை உறங்கிப் போயிற்று.

தங்கை திரும்பத் திரும்பச் சொல்லவும் மனமின்றியே எழுந்து சென்று அலமாரியைத் திறந்து பார்த்த உலகநாதன் ஒரேயடியாகத் திகைத்துப் போனார். நகைகள் மட்டுமின்றி, கைச்செலவுக்கு என்று அவர் வைத்திருந்த பணம் ஒரு நூறு ரூபாய் கூட இல்லாமல் ஒட்டுமொத்தமாகத் துடைக்கப்பட்டிருந்ததைக் காணவும் அவருக்குத் தன் தங்கையின் பேச்சில் நம்பிக்கை உண்டாகத் தொடங்கியது.

ஆனால், தனஞ்சயன் அதை ஒத்துக்கொள்ள மறுத்தான். ''அதற்கும் ஏதாவது சரியான விளக்கம் இருக்கும் அப்பா. முதலில் அவளுடைய மாமா, பெரியப்பா, சித்தி வீடுகளுக்கு போன் செய்து கேட்கிறேன்'' என்று ரிசீவரைக் கையில் எடுத்தான்.

''என்னடா கேட்கப் போகிறாய்? என் பெண்டாட்டி நகை, பணத்தோடு எங்கே ஓடிப்போனாள் என்றா?'' என்ற தகப்பனாரை ஆத்திரமாக முறைத்து விட்டு, பட்டன்களைத் தட்டத் தொடங்கினான்.

அபரஞ்சி அங்கே இருக்கிறாளா என்று அவன் யாரிடமும் கேட்கவில்லை. விரைவிலேயே ஊருக்குப் போக வேண்டியிருக்கும் என்பதால் நேரம் கிடைத்த



போது சும்மா ஒரு வார்த்தை பேச நினைத்ததாகக் கூறிப் பொதுப்படையாகவே பேசினான்.

அவர்களும் அதை நம்பி உரையாடிவிட்டு, 'அபி எப்படி இருக்கிறாள், குழந்தை நன்றாக இருக்கிறானா, அபியைக் கூப்பிடுகிறீர்களா, அவளிடம் ஒன்று கேட்க வேண்டும்' என்று இதுபோலப் பேசவும், அந்த மூன்று இடங்களுக்கும் அபரஞ்சி செல்லவில்லை என்பது உறுதியாயிற்று.

மீண்டும் தனஞ்சயன் வேலைக்காரி முத்துவைக் குடைந்து எடுத்தான். 'டெலிஃபோன் மணி அடித்தது. அம்மா எடுத்துப் பேசினார்கள். பிறகு பீரோ திறக்கிற சத்தம் கேட்டது. பையோட அம்மா அறையை விட்டு வெளியே வந்தாங்க'' என்றவள், அதன்பின்தான் அபரஞ்சியிடம் கேட்டதையும் அவள் சொன்ன பதிலையும் திரும்பவும் எடுத்துரைத்தாள்.

''நான்தான் சொல்லுகிறேனே! அவள் நகை பணத்தோடு கம்பி நீட்டி விட்டாள். அவன் நகையையும் பணத்தையும் பிடுங்கிக்கொண்டு இவளை விரட்டினால், வெறும் கையோடு திரும்பி வருவாள் அல்லது வரவே மாட்டாள்'' என்று பெரிதாக வசந்தா அறிவித்தாள்.

''அத்தை! உங்களை அத்தை என்று அழைக்கவே எனக்கு நாக்கூசுகிறது... தயவு பண்ணி உங்கள் திருவாயை மூடிக் கொண்டு இருங்கள். இன்னொரு தடவை அபரஞ்சியைப் பற்றி இப்படிப் பேசினால் நான் பொல்லாதவனாகி விடுவேன்'' என்று உறுமினான் தனஞ்சயன்.

''என்னம்மா. இந்த அத்தை அண்ணியைப் பற்றிக் கண்டபடி, மோசமாய்ப் பேசுகிறார்கள்? நானும் போய் அவர்களைத் திட்டப் போகிறேன். சும்மாவே, அண்ணியைக் காணோமே என்று கவலையாக இருக்கிறது. இது

வேறு!'' என்று அழுகையும் ஆத்திரமுமாகக் கிளம்பி னாள் கலைவாணி.

மகளைப் பிடித்து நிறுத்தி, ''அதெல்லாம் அண்ணன் பார்த்துக் கொள்வான், வாணி. இப்போது நாம் இரு வரும் வாயைத் திறந்தாலே அப்பா நம் மீதுதான் பாய்வார். சும்மா இரு'' என்றாள் சரளா.

அதற்குள்ளாகச் சற்றே கண்ணயர்ந்த பேரக் குழந்தை, மீண்டும் விழித்துக் கொண்டு அழவும், உலக நாதனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''பெரிதாக அவளை அதட்டுகிறாயே! அவ்வளவு கெட்டிக்காரன், உன் பெண்டாட்டி எங்கே போனாள் என்று கண்டுபிடித்துக் கூட்டி வாயேன்!'' என்று கத்தி னார்.

பதில் சொல்ல மாட்டாமல் தனஞ்சயன் திணறிய போது, முனை வீட்டுக்காரர் ரங்கநாதன், இங்கே மின் சாரம் இருக்கிறதா என்று விசாரிக்க வந்தார்.

இங்கும் இல்லை என்று அறிந்தவர். குழந்தையின் அழுகுரல் கேட்டதும், ''நம்மைவிடப் பிள்ளைகள் தான் தாங்க மாட்டேன் என்கிறார்கள்! இது தெரியாமல் அப் பப்போ மெயினை ஆஃப் பண்ணிவிட்டுப் போய்விடு கிறார்கள்'' என்று விமரிசித்தார். திடுமென, ''உங்கள் மனைவி வந்து விட்டார்களா சார்?'' என்று வினவினார்.

''எ..ஏன் கேட்கிறீர்கள்?

''இல்லை... காலையில், அதாவது மணி பதி னொன்று பதினொன்றரை இருக்கும்.... வெளியே போய்க் கொண்டு இருந்தேன். உங்கள் மனைவி, தோள் பை, கைப்பையோடு அவசரமாக எங்கேயோ போனார் கள். முகம் கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தது. காலில் செருப்புகூட இல்லாமல், ரொம்ப அவசரமாகப் போனார்



கள். லிஃப்ட் கொடுப்போமா என்று நான் யோசிக்குமுன் ஆட்டோவில் ஏறிப் போய்விட்டார்கள்'' என்றவர், மற்ற வர்களின் முக இறுக்கத்தைக் கவனித்து, ''நான் கிளம்பு கிறேன், சார்'' என்று நாகரிகமாய் விலகிக் கொண்டார்.

''இப்போது என்னடா சொல்கிறாய்? உன் அரு மைப் பெண்டாட்டி, எங்கே? எங்கேடா?'' என்று உலக நாதன் மகனை அதட்டிக் கொண்டு இருந்த போதுதான், வாயிலில் ஆட்டோ வந்து நிற்கும் ஓசை கேட்டுத் தனஞ்சயன் எழுந்து வெளியே வந்தான்.

வீட்டினுள் சென்று, குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அபரஞ்சி உள்ளே செல்லவும், வசந்தாவுக்குப் பொத்துக் கொண்டு வந்தது.

''அண்ணா, நான் சொல்லிக் கொண்டே இருக் கிறேன். நீங்களும் இவன் பேச்சில் ஏமாந்து சோளக் கொல்லை பொம்மை மாதிரி சும்மா இருக்கிறீர்களே? இவனுக்குத்தான் பெண்டாட்டி மோகத்தில் சுரணை இல்லை. உங்களுக்குமா மானம் மரியாதை மறந்து விடும்? அவளைக் கூப்பிட்டு, நகை பணத்தைக் கீழே வைக்கச் சொல்லுங்கள். இல்லையென்றால் வீட்டை விட்டு விரட்டுங்கள்! இது, கற்புக்கரசியான நம் அம்மா வுடைய குடும்பம் அண்ணா. இந்த வீட்டுச் செல்வத்தை வேறு எவனிடமோ கொடுத்துவிட்டு வந்து நிற்கும் இந்த ஓடுகாலி நாயை உள்ளே சேர்க்காதீர்கள்'' என்று தன் அண்ணனுக்கு மந்திரோபதேசம் செய்தாள்.

''ஆமாண்டா. முதலில் அந்த நகைகளைக் கொண்டு வரச் சொல்லு. அல்லது நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. ஆனால் ஒன்று, குணம் கெட்டவர் களுக்கு இந்த வீட்டில் இடம் கிடையாது.''

மடியில் குழந்தையோடு அறையினுள் இருந்த அப ரஞ்சியின் காதுகளில் எல்லாமே தெளிவாக விழுந்தது. நடந்தது இப்போது அவளுக்கு நன்றாகப் புரிந்தது.

வீட்டில் மற்றவர்கள் எல்லோரும் வெளியே சென்று விட்டதை அறிந்த யாரோ சதி செய்திருக்கிறார்கள். திட்டமிட்டு அவளை ஏமாற்றி விட்டார்கள். எங்கே சுண்டினால் எங்கே வலிக்கும் என்று அறிந்தவர்கள். கணவனுக்கு ஆபத்து என்று அவளைக் கலங்கவைத்து, அவள் கையாலேயே நகை, பணம் எல்லாவற்றையும் எடுத்து வரும்படிச் செய்து, அவளிடமிருந்து பிறர் அறியாமல் பறித்தும் போய்விட்டார்கள்.

ஆனால், நடந்ததைச் சொன்னால் இப்போது யார் அதை நம்புவார்கள். இன்னொருவர் இப்படிச் சொன் னால், அவளே நம்ப மாட்டாளே?

சும்மாவே வசந்தாவுக்கு அபரஞ்சியைப் பிடிக்காது. அவள் போடுகிற தாளத்துக்கு ஆடுகிறவர் உலகநாதன் - இந்த வீட்டுத் தலைவர்! இவர்கள் இருவருமாகச் சேர்ந்து அவளுக்கு என்ன பெயர் சூட்டப் போகிறார் கள்? அதுதான் சூட்டியே விட்டார்களே!

இதைத் தனஞ்சயனும் நம்புவானா?

நம்பாமல் வேறு என்ன செய்ய முடியும்? அவனு டைய அத்தை சொல்வது பொய் என்று நிரூபிக்க அவளிடம் எந்த ருசுவும் இல்லையே.

வீட்டில் ஒருவரும் இல்லாத வேளையில் விலை உயர்ந்த நகைகளையும் பணத்தையும் எடுத்திருக்கிறாள். பிள்ளையைக்கூட விட்டுவிட்டு, அவளாகவே வீட்டை விட்டு வெளியேறிச் சென்றிருக்கிறாள். கத்தி முனை யிலோ துப்பாக்கி கொண்டோ யாரும் அவளை மிரட்டி அழைத்துச் செல்லவில்லை; அவளாகத்தான் சென்றாள்



என்பதற்கு முத்து சாட்சி! பல மணி நேரம் கழித்து அந்த நகை, பணம் எதுவும் இல்லாமல் வெறும் கையோடு வீடு திரும்பியிருக்கிறாள்.

இந்தப் பணத்தையும் நகைகளையும் அவளாக வேறு யாருக்கும் தாரை வார்க்கவில்லை, அவளை ஏமாற்றிப் பறித்துப் போனார்கள் என்றால் யார் நம்புவார் கள்?

செய்யாத தப்புக்குக் குற்றவாளியாகித் தண்டனை ஏற்பதே அவளது தலைவிதியா?

## 16

முன்பு பெரியப்பா! இப்போது முகம் தெரியாத யாரோ திருடன்!

இருவரின் குற்றங்களும் அவளையே பாதிக்கின்ற னவே? அதிலும் இந்தத் திருடனின் வேலை. அவளது வாழ்வை அடியோடு அழித்து சர்வநாசம் செய்துவிடும் போல இருக்கிறதே என்று கலங்கியவளுக்கு, இந்த வாழ்வும் கணவனும், வேண்டாம் என்று விலகிச் செல்ல நினைத்தது ஞாபகமே வரவில்லை. நடத்தை கெட்டவள் என்று எண்ணித் தனஞ்சயன் தன்னை வெறுத்து விடு வானோ என்று எண்ணிக் கலங்கிப் போனாள்.

கண்மூடித் திறக்குமுன்பு உலகையே சுற்றிவந்துவிட மனது ஏதேதோ எண்ணிப் பயமுறுத்த, அபரஞ்சி உள்ளே, உள்ளம் கலங்கிக் கொண்டு இருந்தபோது, தனஞ்சயனின் குரல் ஓங்கி ஒலித்தது.

''நிறுத்துங்கள், அப்பா!'' என்றான் அவன் ஆத்திரத் துடன். ''உங்களை எதிர்த்துப் பேசக்கூடாது என்று நான் எவ்வளவோ முயற்சித்தாலும் நீங்கள் விடுவதாக

இல்லை. கேளுங்கள் அப்பா நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்! இந்த அத்தையின் பேச்சைக் கேட்டு நீங்கள் அம்மாவின் மனதை நோகடித்தீர்கள்; பெருமளவு அம்மாவின் வாழ்வையே பாழ்படுத்தியும் வந்திருக்கிறீர்கள். ஆனால், நான் உங்கள் மாதிரி இல்லை; என் மனைவியைப் பற்றிய அவதூறை அதை யார் சொன்னாலும் - நான் நம்ப மாட்டேன். அபரஞ்சி, உத்தமி. நல்லவள். அவள் என்ன செய்திருந்தாலும், அதற்குச் சரியான, உண்மையான காரணம் இருக்கும். இது நிச்சயம்'' என்றான், அழுத்தம் திருத்தமாக.

தனஞ்சயன் அவளை நம்புகிறான்! அவளைக் குற்றவாளியாக்க அத்தனை ருசுக்கள் இருந்தும் அவளை நம்புகிறான்! அன்று அவளை நம்பாத தனஞ்சயன் இன்று, அவளுக்கு எதிராக இத்தனை ருசுக்கள் இருந்து நம்புகிறான்.

உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த அபரஞ்சியின் விழிகளிலிருந்து கலகலவென்று கண்ணீர் மழை பொழிந்தது. முயன்றும் அவளால் அதை நிறுத்த முடியவில்லை.

தூங்கிவிட்ட குழந்தையை வருடியபடி அமர்ந்திருந்தவள், கலைவாணியை அழைத்தாள்.

''என்னண்ணீ?'' என்று ஆதரவாய் அவள் ஓடி வரவும்; அதிலும் அபரஞ்சிக்கு குரல் தழுதழுத்தது.

சமாளித்துக் கொண்டு ''கண்ணனை எடுத்துப் போய்த் தொட்டிலில் கிடத்திவிட்டு, உன் அண்ணனைக் கொஞ்சம் நான் அழைத்ததாகச் சொல்லம்மா'' என்றாள் மெதுவாக.

தங்கை வந்து சேதி சொல்லவும், தனஞ்சயன் எழுந்து உள்ளே சென்றான்.

கண்ணைக் காட்டி, ''தலையணை மந்திரம் அண்ணா. அவன் வந்து என்ன சொன்னாலும் ஒத்துக் கொள்ளாதீர்கள்'' என்று தன் அண்ணனுக்கு வசந்தா உபதேசித்தாள்.



துடைக்கத் துடைக்கப் பெருகும் கண்ணீருடன் மனைவியைக் காணவும் தனஞ்சயனுக்கு உள்ளூர வலித்தது ''மன்னித்துக் கொள், கண்மணி. என்னைப் பார்த்துப் பார்த்து சகிக்கும் வேதனையோடு, இன்னும் இப்படிக் கண்ட பேச்செல்லாம் கேட்கும்படி ஆகிவிட்டது. விரைவில் இவர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு ஊருக்குப் போய்விடுவேன். அதுவரை பொறுத்துக் கொள்ளம்மா'' என்று, இதமான குரலில் இயம்பினான்.

விழிநீர் அதுபாட்டில் வடியக் கண்ணை உயர்த்திக் கணவனை நேராகப் பார்த்தாள் அபரஞ்சி. ''நான் எங்கே போனேன் தெரியுமா?'' என்று மெல்லிய குரலில் தொடங்கினாள்.

''தெரியாது'' என்று தலையசைத்துவிட்டு, ''ஆனால், அதை நீ சொல்லித்தான் ஆகவேண்டும் என்பது இல்லை, அபரஞ்சி. நீ எந்தவிதத் தப்பும் செய்திருக்க மாட்டாய் என்பது எனக்கு நிச்சயம்'' என்றான் தனஞ்சயன் அமர்ந்த குரலில்.

ஒரு பெருமூச்சுடன் அபரஞ்சி சொன்னாள். ''உங்களைக் கடத்திப்போய் வைத்திருப்பதாகவும், பணம் அல்லது நகையாக ஐந்து லட்ச ரூபாய் உடனே கொண்டு வந்து தராவிட்டால் உங்களைக் கொ...கொன்று விடுவோம் என்றார்கள்... சும்மா என்றால் அவ்வளவாக நம்பியிருக்க மாட்டேன். ஆனால் வல்லக்கோட்டை முருகன் கோயில், குளக்கரையில், கோயிலுக்கு எதிர்ப்புறத்தில் உங்களைப் பிடித்ததாகச் சொல்லவும் மெய்தானோ என்று தோன்றிவிட்டது. 'உன்னைக் கண்காணிக்க அங்கங்கே ஆள் வைத்திருக்கிறோம். டெலிஃபோன் கம்பத்தில் கூட. போலீசுக்குச் சொன்னாலும்,

வேறு யாரிடமும் நீ பேசினாலும், பிறகு உன் புருஷனைத் தூக்கிக் கொண்டுதான் போக நேரும்' என்று அவன் மிரட்டவும் பயந்து விட்டேன். வீட்டில் இருந்த பணம் முழுவதும், அத்தை நகை, என் நகை - தாலி தவிர எல்லாவற்றையும் எடுத்துப்போய் அவன் சொன்ன இடத்தில் இவ்வளவு நேரம் காத்து நின்று கடைசியில் அதைப் பறிகொடுத்தும் விட்டேன். நம்ப முடியாத கதை போலத் தோன்றினாலும் இதுதான் நடந்தது, தனா... நிஜம்'' என்று ஒப்பித்து முடித்தாள்.

கவனமாக உணர்ச்சி துடைத்த முகத்துடன் மனைவியைப் பா[illegible]ல் கூர்மையுடன் நோக்கினான் தனஞ்சயன். ''ந[illegible]டியாத கதை என்று வேறு யாரேனும் சொன்னாலும்கூட, உன் வாய்மொழியாக வெளிவந்தது என்பதாலேயே இதை ஒரு வார்த்தைகூட விடாமல் நான் அப்படியே நம்புவேன். அபரஞ்சி ஆனால்....'' என்று நிறுத்தி இமை தட்டாமல் அவளைப் பார்த்தான்.

''ஆனால்?'' கணவனின் பார்வையும், குரலும், அபரஞ்சிக்கு உள்ளூரப் பரபரப்பையும் படபடப்பையும் ஏற்படுத்தியது. அவற்றை அடக்க முயன்றவாறு, அவனது கேள்வியையே திருப்பிப் படித்தாள் அவள்.

அவள் புறமாய் நீளத் தொடங்கிய கைகளைச் சட்டென நிறுத்திப் பின்புறமாய் கட்டிக்கொண்டு, ''நீ என்ன சொல்கிறாய் என்று உனக்குப் புரிகிறதா? அர்த்தம் புரிந்துதான் சொல்கிறாயா?'' என்று திரும்பத் திரும்ப வினவினான்.

அவனது கண்களின் பளபளப்பும், உடம்பின் பரபரப்பும், குரலின் தீவிரமும் அபரஞ்சியின் பார்வைக்குத் தப்பவில்லை.



விழிகளில் நீரும், இதழ்களில் விரியத் தொடங்கிய புன்னகையுமாக மணிப்புறாவாய் மெல்லத் தலைசரிந்து, ''எனக்குப் புரியாமல் என்ன? உங்களுக்குப் புரிந்தால் சரி!'' சிறு குறும்புடன் உரைத்தவள், மறுகணம் தனஞ்சயனின் அணைப்பில் இருந்தாள்.

**''எ**ன்னை மன்னித்து விட்டாயா, என் கண்மணி?'' என்று மனைவியை இறுக அணைத்து வினவிய தனஞ்சயன், சட்டென அவளை விலக்கி நிறுத்தி, ''உன் உடம்பு ஏன் இவ்வளவு சூடாக இருக்கிறது? காய்ச்சலா?'' என்று வினவி, அவளது நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

''ஜுரம் இல்லை'' என்றாள் அபரஞ்சி. ''வெய்யிலில் நெடுநேரம் நின்றதால் இருக்கும்!''

''வெய்யிலில்... வெய்யிலில் நின்றாயா? கடவுளே! நீ காலில் செருப்பு அணியவில்லை என்றாரே! உட்கார், பார்ப்போம்!'' என்று அவளைத் தூக்கிக் கட்டிலில் அமரவைத்து, கால்களையும் கட்டிலிலேயே நீட்ட வைத்துப் பாதங்களைப் பரிசோதித்தவனின் விழிகளில் நீர் அரும்பியது.

''அசையாமல் உட்கார்ந்திரு. இதோ வருகிறேன்'' என்று வெளியே சென்றான்.

''அண்ணா, அண்ணா'' என்று தங்கை உசுப்பிவிட, ''தனா'' என்று அழைத்த தந்தையிடம், ''சற்றுப் பொறுங்கள் அப்பா!'' என்று உரைத்துவிட்டு, மருந்துகள் வைக்கும் அலமாரியைத் திறந்து 'சில்வர் சல்ஃபாடயாசின்' கிரீமை எடுத்துக் கொண்டு மீண்டும் அறைக்குள் சென்றான்.

மனைவியின், கன்றிச் சிவந்து, அங்கங்கே பொத்துப் புண்ணாகி விட்டிருந்த பாதங்களில் மருந்தை மிருது

வாகத் தடவிவிட்டான். ''என்னடா, இப்படி?'' என்றான் வருத்தத்துடன்.

அதற்குள் தன் கால்களைப் பார்த்துவிட்டிருந்த அபரஞ்சிக்கு ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. ஒன்று தோன்ற, ''செருப்புக்கூடப் போடவில்லை என்று யாரோ சொன்னார் என்றீர்களே, யார்?'' என்று வினவினாள்.

மேலும் மேலும் கிரீமைத் தடவி வருடியபடி, தனஞ்சயன் சொன்னான். ''முனைவீட்டு ரங்கநாதன். அவர் காரில் கிளம்பியிருந்தாராம். நீ செருப்புகூடப் போடாமல் அவசரமாகப் போவதைப் பார்த்து உனக்கு 'லிஃப்ட்' கொடுக்கலாம் என்று நினைத்தாராம். நீ அதற்குள்ளாக ஆட்டோவில் ஏறிவிட்டாய் என்றார். ஆனால்...'' என்றவனை இடைமறித்து, ''அவரது கார்... அது சிவப்பு நிற சியல்லோவா?'' என்று மீண்டும் குடைந்தாள் அபரஞ்சி.

''ஆமாம்'' என்று தனஞ்சயன் கூறவும், அவளுக்கு அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்தது.

முகத்தில் இளமுறுவல் அரும்ப, ''என்னவென்று சொல்லி விட்டுச் சிரித்தால், நானும் சேர்ந்து கொள்வேன் அல்லவா?'' என்றான் தனஞ்சயன்.

''அதுவா... வழியெல்லாம் என்னைக் கண்காணிக்க ஆள் வைத்திருப்பதாக அவன் - அந்தத் திருடன் சொல்லியிருந்தானா? ஆள் கடத்துகிறவர்கள் என்று, முன்பு கபிலன், ஆசைத்தம்பி பற்றிப் பத்திரிகைகளில் படித்தது அந்த நேரத்தில் நினைவு வரவும். இந்தச் சிவப்பு நிற 'சீயல்லோ'வில் இருந்தது கடத்தல்காரனின் ஆள் என்றே நினைத்துவிட்டேன். அதேமாதிரி, இன்னோர் ஆள், கையில் 'செல்லுலார் ஃபோன்' வைத்துக்



கொண்டு நின்றதாகவும் அப்போது நினைத்தேன் இப்போது யோசித்துப் பார்த்தால், அது சாக்கலேட் க்ரீம் வைத்த பிஸ்கட் பாக்கெட் என்று தோன்றுகிறது. சும்மா, அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்கிற மாதிரி அசட்டுத்தனமாய் என்னவெல்லாம் கற்பனை செய்திருக்கிறேன், பாருங்கள்!'' என்று மீண்டும் நகைத்தாள் அபரஞ்சி.

சிரிப்பில் சேர்ந்து கொள்வேன் என்றவன் மெல்லத் தலை அசைத்தான். ''அப்போதெல்லாம் என்ன பயம் பயந்திருப்பாய். கண்ணம்மா!'' என்று உருகினான்.

சிறு மவுனத்தின்பின், ''பைத்தியக்காரத்தனமாய்ப் பயந்து, எதை எல்லாம் விட்டுவிட்டேன், பாருங்கள்! நீங்கள் எனக்கு முதல் முதலாக வாங்கித்தந்த பதக்கம், குழந்தையின் நகைகள், அதைவிட மேலாக அத்தையின் ராசியான நகைகள்! என் முட்டாள்தனத்தால் எல்லாம் பறிபோய்விட்டதே!'' என்று வருந்தி முகம் வாடினாள் அபரஞ்சி.

''ஆனால், திரும்பக் கிடைத்திருப்பதற்கு விலை மதிப்பே கிடையாதே. கண்ணம்மா!'' என்று தனஞ்சயன் உருகியபோது, பூஜை வேளைக் கரடியாகக் கதவை ஓசைப்படத் திறந்து கொண்டு உலகநாதன் அறையினுள் வந்தார்.

உள்ளே கண்ட காட்சி அவரது கோபத்தைப் பன்மடங்கு பெருக்கிவிட, ''என்னடா மடையா! அவள் பாட்டில் எல்லா நகைகளையும் எடுத்துப்போய், எவனுக்கோ தாரை வார்த்துவிட்டு வந்து நிற்கிறாள்! நீயானால் அவள் காலைப் பிடித்து, வருடிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறாயே! ஆண் பிள்ளைதானா நீ?

வெட்கமில்லை? அறிவுகெட்ட முட்டாள்! மடையா! மடையா!'' என்று சரமாரியாய்த் திட்டத் தொடங்கி விட்டார்

''அப்பா, நடந்தது தெரியாமல் பேசாதீர்கள். என்ன நடந்தது தெரியுமா... என்னைக் கொஞ்சம் பேசவிடுங் கள, அப்பா...'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த் தும், அவர் காதிலேயே வாங்காமல் கத்தவும், ''அப்பா!'' என்று ஓங்கி ஓர் அதட்டல் போட்டான் தனஞ்சயன்.

திகைப்புற்று, உலகநாதன் பேச்சை நிறுத்த, அங்கே அமைதி நிலவியது.

சில கணங்கள்தான்.

அதற்குள்ளாக, ''இதோ, இந்த வீடுதான். அல்லா ரும் உள்ளார வாங்கப்பா'' என்ற பல குரல்களும், பலர் சேர்ந்து கேட்டைத் திறந்து உள்ளே வரும் சத்தமும் கேட்டது.

''ஏ....ஏய் யாருப்பா, நில்லுங்கப்பா. நான் போய் அய்யாவைக் கூட்டி வாரேன்!'' என்று ஆறுமுகம் அவர் களைத் தடுத்து நிறுத்தும்போதே தந்தையும் மகனும் வாயில் புறம் சென்று விட்டனர்.

தனஞ்சயனைக் கண்டதும், வள்ளியம்மா முன் வந்து, ''தம்பி, என்னைத் தெரியுதாய்யா? நாந்தான் வள்ளீம்மா! அபிக்கண்ணுவோட பெரியப்பா ஆட்டிலே வேலை செய்யுறவ. அபி, குளந்தை விசேசத்துக்குக்கூட வந்து அஞ்சு ரூபாய் மொய் எழுதினேனே!'' என்று தன் விவரம் தெரிவித்தாள்.

''ஓ! தெரியுமே! என்ன விஷயம் வள்ளிம்மா? இவ்வளவு பேரோடு வந்திருக்கிறாயே!'' என்று தனஞ் சயன் அவளிடம் விசாரிக்கத் தொடங்கினான்.



அதற்குள், வள்ளிம்மாவின் குரலைக் கேட்டதும் எழுந்து, விந்தியவாறே மெல்ல நடந்து அபரஞ்சியும் அங்கே வந்து சேர்ந்தாள்.

மனைவியைப் பார்த்ததும், ''உன்னை நடக்க வேண் டாம் என்றேனில்லையா?'' என்று கடிந்தவாறே அவ ளைத் தூக்கிச் சென்று ஒரு நாற்காலியில் அமர வைத் தான் தனஞ்சயன்.

''ஏன்? உன் பெண்டாட்டி காலுக்கு என்ன கேடு வந்ததாம்?'' என்றார் உலகநாதன் ஏளனமாக.

''அய்யோ, அய்யோ, அய்யோ! அபிக்கண்ணு, காலு பொத்து போச்சாங்காட்டியும்? நெனச்சேன். இந்த வெட்டார வெயில்ல, கால்ல செருப்புகூட இல்லாம இம்மாம் நேரம் நிக்கிதேன்னு அப்பவே நெனச்சேன். நீதான் பக்கத்தில வந்தாக்கவே புருசன் உசிருக்குக் கஸ்டமின்னு சொல்லிட்டியே. அதாங்கண்ணு, ஆட்டுக் குள்ள நின்னு பாத்துகிட்டே இருந்தேன்'' என்று அபரஞ்சி யின் அருகே வந்து அமர்ந்து அவள் காலைப் பிடித்து வருடி விட்டாள் வள்ளிம்மா.

அவள் திருப்பிப் பார்த்துத் தடவிவிட்ட விதத்தில், அபரஞ்சியின் பாதங்கள் கொப்புளித்திருந்ததைப் பார்க்க நேர்ந்த உலகநாதனும் குழப்பமுற்றார்.

''என்ன விஷயம்? என்ன நடந்தது என்று யாராவது சரியாகச் சொல்லுங்களேன்?'' என்று அவர் அதட்டிக் கேட்டபோது அவரது குரலில் கோபம் பெரிதும் தணிந்து விட்டிருக்கவே, சரளா சற்றுத் துணிந்து, ஃபிரிஜ்ஜில் இருந்த பழச்சாறு கொஞ்சம் ஊற்றிவந்து, மருமகளிடம் கொடுத்தாள், ''குடிம்மா, முகமெல்லாம் வாடித் தெரி கிறது'' என்றாள் பரிவுடன்.

''பின்ன இன்னாம்மா? மூணு நாலு 'அவுர்' உச்சி வெய்யில்ல, பச்சத்தண்ணிகூட இல்லாம நின்னாக்க, பச்ச ஒடம்புக்காரி, மூஞ்சி வாடாம இன்னா பண்ணும்? ஒரு ஜோடாக்குடி கண்ணுன்னாகூட முடியாது, ஒடனே மாம னார்கிட்ட போயி சொல்லி, புருசனைக் காப்பாத்த ஏதாச்சும் செய்யோணுமின்னு ஓடி வந்திச்சு.''

''புருஷன் உயிருக்குக் கஷ்டம், புருஷனைக் காப் பாற்ற என்ன இதெல்லாம்? தனா, உனக்கு என்ன வந்தது? கடவுள் புண்ணியத்தில் நன்றாய்த்தானே இருக் கிறாய்? என்னடா விஷயம்?'' என்று குழப்பத்துடன் விசாரித்த உலகநாதனின் குரல் முன்னை விடவும் இறங்கியிருந்தது.

''அப்பா, நாம் வல்லக்கோட்டைத் திருமணத்துக்குச் சென்றிருந்த சமயம், என்னைப் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்திருப்பதாகவும், பணம், நகை கொண்டு வந்து தராவிட்டால் என்னைக் கொன்றுவிடப் போவதாக வும் அபியை யாரோ மிரட்டி...'' என்று சுருக்கமாக விளக்கம் தந்த தனஞ்சயனை வள்ளிம்மா இடைமறித்துப் பேசினாள்.

''யாரோவா, யாரு என்னாங்கிறதை இப்ப நிமிட்லே நாஞ்சொல்றேன். ஏன்யா, பெரிய மனுசா, உனுக்கு ஒரு தங்காச்சி உண்டே, அந்தம்மா எங்கேய் யா?'' என்று வக்கணையாகக் கேட்டாள்.

குழப்பத்துடன் உலகநாதன் திரும்ப, ''அண்ணி, உள்ளே, சமையல் கட்டை அடுத்த சின்ன சாப்பாட்டு அறையில் இருக்கிறார்கள். அங்கே சாப்பாடு நன்றா யில்லை என்று, இங்கே முத்துவை நெய்த் தோசை சுட்டுப் போடச் சொல்லிச் சூடாகச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்'' என்றாள் சரளா.



''தின்னுவதற்கு நல்ல நேரம் பார்த்தாள்!'' என்று முணுமுணுத்துவிட்டு, ''அவளுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று நாற்காலியில் அமர்ந்த உலகநாதன் கேட்டார்.

எல்லோருக்குமே சற்று திகைப்புதான்.

''வள்ளிம்மா, நீ எதற்கு வசந்தாப் பெரியம்மாவைப் பற்றிக் கேட்கிறாய்?'' என்று அபரஞ்சி குழம்பவும், அவளிடம் திரும்பி, ''என் கண்ணு, எல்லாமே சொல் றேம்மா!'' என்று தொடங்கினாள் வள்ளிம்மா.

ஒரு பெரிய நாடக மேடையின் சூத்ரதாரி போல, ''எலேய், கன்னீப்பா. அந்தாளை இட்டா!'' என்று கம்பீர மாய் உத்திரவிட்டாள்.

வந்திருந்த ஏழெட்டு ஆண்களில், பின்னே நின்ற இருவர் ஒருவனை முன்புறம் இழுத்து வந்தனர்.

''இந்தாளை நீங்க யாரும் பார்த்ததுண்டா... ஆங், அபிம்மா நீ வாயத் தொறக்கப்படாது! உனக்கு ஒரு கொறையும் இல்ல. ஆனா, நீ இப்ப பேசப்படாது!'' என்று, திகைப்புடன் ஏதோ சொல்ல முயன்ற அபரஞ்சிக் கும் கட்டளை இட்டாள்.

''தெரியாது!'' என்றனர் மற்ற எல்லோருமே.

''இப்ப சொல்லு!'' என்று சட்டென அவனது தாடி மீசைகளை அவள் பிடுங்கி எடுக்கவும், ''ராமையா!'' என்றார் உலகநாதன்.

''என் தங்கையின் ஊர்க்காரன் என்னடா, இது தாடி மீசையெல்லாம்?'' என்று கேட்கவும் அவன் அவர் காலில் விழுந்து விட்டான்.

அவ்வளவுதான். எல்லாம் மளமளவென்று வெளியே வந்துவிட்டது.

அபரஞ்சியை எப்படியாவது வீட்டை விட்டு விரட்டி விட வேண்டும் என்பது வசந்தாவின் நோக்கம். ஊர்க் காரர்கள் திருமணம் என்று வீட்டில் எல்லோரையும் வீட்டைவிட்டு அப்புறப்படுத்தி விடுவதாகவும், அந்த நேரத்தில் அபரஞ்சிக்கு இந்தமாதிரி 'அவள் கணவனைக் கொன்று விடுவோம்' என்று மிரட்டி டெலிஃபோன் செய்து, பணம் நகையுடன் வீட்டைவிட்டு வெளியே வெகுதூரம் கொண்டு போய், அங்கே வெகுநேரம் தாமதிக்க வைத்துவிட வேண்டும். கடைசியாக, வேறு யாரோ போலச் சமயம் பார்த்து, நகைப் பையையும் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட வேண்டும். நகைகள் இல்லா மல் திரும்பி வருகிறவளை வீட்டைவிட்டு விரட்ட வசந்தா ஏற்பாடு செய்வாள். கிடைக்கும் பணமும், நகைகளில் ஒரு பாகமும் ராமையாவுக்குக் கூலி.

''தாடி மீசையோடு தான் என் கையிலிருந்த நகைப் பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடினார்'' என்றாள் அபரஞ்சி.

''வசந்தா சித்திதான், மீசை தாடியோட இருந்தா அடையாளம் தெரியாது என்று சொன்னாள். அந்தப் பொண்ணு லங்கிணி, புருஷனோடு பேசாமல் ஒன்றும் தரமாட்டேன் என்பாள். அதற்காக, தனா பேசமாட் டேன்னு சொல்கிற மாதிரியும், அதற்காக அவனை அடிக்கிற மாதிரியும் ஒரு 'செட்டப் செய்து கொள்' என்றுகூடச் சொல்லித் தந்தாள்.''

''அத்தை!'' என்று வெறியுடன் கிளம்பிய கண வனைக் கையைப் பிடித்துத் தடுத்தாள் அபரஞ்சி.

''ப்ளீஸ், பொறுங்கள். இதில் மாமாவே முடிவு எடுக்கட்டும். அப்போது தான் அத்தைக்கு இனியேனும் விடிவுகாலம் வரும்'' என்றாள், அவனுக்கு மட்டும் கேட்கும்படி மெல்லிய குரலில்.



அப்போது, ஏ...வ் என்று ஏப்பமிட்டபடி, ''அங்கே தான் சாப்பாடு சரியில்லையே! அண்ணனுக்கு இரண்டு நெய்தோசை சுட்டுக் கொடுக்கக் கூடாது? இது கூட நான்தான் சொல்லணுமா இந்த வீட்டில்...'' என்று எடுப் பாகக் கூறியபடி, மேலும் வத்தி வைப்பதற்காகத் தன் அண்ணனைத் தேடி வந்த வசந்தா, அண்ணனின் எதிரே நின்ற ராமையாவைப் பார்த்ததும் முகம் வெளுத்துப் போனாள்.

உள்ளே ஓடப் போனவள் வேகமாக யோசித்து, மீண்டும் திரும்பி, ராமையாவுக்கும் கண்ணால் ஜாடை காட்டியபடி, ''இ...இவன் இங்கே எங்கே வந்தான்? ஏதாவது தகராறில் மாட்டிக் கொண்டாயாடா? எப் போதும் அடுத்தவன் செய்த தப்பை எல்லாம் தன் தலையில் வாங்கிக் கொள்வதே இவனுக்கு வழக்கம். போ. போடா. இங்கே வந்து என் மானத்தை வாங்காதே. போய் ஓடிப்போ'' என்று ராமையாவை விரட்டினாள்.

''ஏன்? அந்தாளு ஓடிப்போயிட்டா உன் வண்ட வாளம் தண்டவாளம் ஏறாம தப்பிக்குமின்னு பார்த் தியா? ஒண்ணும் நடக்காது, கண்ணு. இங்கே எல்லாருக் கும் அல்லாம் தெரியும்!'' என்றாள் வள்ளிம்மா நக்கலாக.

வசந்தா ராமையாவை நோக்க, ''ஆமாம் சித்தி. உன் அண்ணன் மருமகளிடமிருந்து நகைப்பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறபோது, இதோ, அந்த ஆயா வுடைய ஆட்கள் என்னை விரட்டிப் பிடிச்சிட்டாங்க. ஒன்றுமே ஆபத்து கிடையாது என்று சொன்னியே! பார் எப்படி அடிச்சிட்டாங்க!'' என்று அழுதான் ராமையா.

கணத்தில் மாறி, ''அய்யய்யோ! சதி! அண்ணா, நீங்கள் என்னிடம் பிரியமாய் இருப்பது பொறுக்காமல்,

அண்ணி ஏதோ சதி செய்து, இப்படி எல்லாம் சொல்லும் படி இவனை 'செட்டப்' செய்திருக்கிறாள். இவன் சொல்வது எல்லாம் பொய்!'' என்று வசந்தா, குற்றத்தை அப்படியே சரளா மேல் சுமத்த முயன்றாள்.

''என்னது? நான் சொல்றது பொய்யா? வீட்டிலே என்னென்ன நகை இருக்குது, என்னென்ன பணம் இருக்குதுன்னு நீ எழுதிக் கொடுத்த பட்டியல் இதோ இருக்குது. பாருங்க மாமா!'' என்று பையினுள் இருந்த காகிதத்தை எடுத்து உலகநாதனிடம் ராமையா கொடுத்தான்.

''அப்பிடி வா'' என்று திருப்தியுடன் கூறினாள வள்ளிம்மா. ''தே அந்தப் பையக் குடு'' என்று அருகில் நின்ற அவளுடைய கணவனின் கையிலிருந்த சாக்குப் பையை வாங்கினாள்.

அந்தச் சாக்குப் பையினுள் இருந்த, நகைகள் அடங்கிய தோள் பையை எடுத்து, அபரஞ்சியிடம் கொடுத்து, ''அந்தப் பட்டியல்படி அல்லாம் சரியா இருக்கான்னு பாரு தங்கம்'' என்றாள்.

பிரமிப்புடன் நோக்கி, ''வள்ளியம்மா, எல்லாம் உன் வேலைதானா? எனக்காக எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறாய்!'' என்று அபரஞ்சி, அவளை மனமாரப் பாராட்டினாள்.

''ஆங்... பின்னே இன்னா கண்ணு? பச்சப்பிள்ளை நீ. ஒரு கஸ்டத்திலே இருக்கப்ப, நீ போன்னாக்க நான் சொம்மா போயிருவேனா? போறா மாறி பராக்கு காட்டி, மின்னாடி போய் என் புருசன் கிட்ட சொல்ல ஆள் தயார் பண்ணி வச்சிட்டம். பாத்துகிட்டே இருந்தமா? பையப் பிடுங்கினதுமே இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமா ஓடிப் போய்ப் பிடிச்சிக்கிட்டாங்க'' என்றாள் அவள் பெருமையோடு.



''ரொம்பவும் அருமையான வேலை செய்தாய், வள்ளிம்மா!'' என்று தானும் பாராட்டிவிட்டு, ''என்னப்பா?'' என்று தந்தையிடம் ஒப்புதல் கேட்டான் தனஞ்சயன்.

''ஆ...ஆமாம்!'' என்று ஒரு நெடுங்கனவிலிருந்து விழித்தவர்போல உடம்பை உலுக்கி விட்டுக் கொண்டு உலகநாதன் எழுந்தார்.

''மெய்யாகவே வள்ளிம்மா, நீயும், உன் கணவரும் உன்னைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேருமே ஒரு பெரிய அரிய காரியத்தைத்தான் சாதித்திருக்கிறீர்கள், உங்களுக்கெல்லாம் எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. பணம், நகையைக் காபாற்றித் தந்ததை விடவும். எங்கள் குடும்பம் சிதையாமல் காப்பாற்றியது தான் பெரிய விஷயம். அதற்குத்தான் நான் எவ்வளவோ நன்றி தெரிவித்தாக வேண்டும்...'' என்று கரகரத்த குரலில் கூறியவர், ''ஆறுமுகம்'' என்று டிரைவரை அழைத்தார்.

''அய்யா'' என்று ஓடிவந்தவனிடம், ''சின்னய்யாவிடம் பணம் வாங்கிக்கொள். இவர்கள் எல்லாரையும் நம் காரில் அழைத்துப் போய், நல்ல மிலிடரி ஓட்டலில், பிரியாணி, வறுவல், குருமா என்று அவர்களுக்கு வேண்டியது கேட்டு வாங்கிக் கொடு. பிறகு, நல்ல துணிக் கடைக்குப் போய் ஆளுக்கு ஆயிரம் ரூபாய்க்குத் துணிமணி வாங்கிக் கொடு. பிறகு, ஆளுக்கு ஆயிரம் ரூபாய் கையில் கொடுத்து, அவரவர் வீட்டில் விட்டு வா'' என்று அவர் கூறவும் எல்லோரும் மகிழ்ச்சியோடு எழுந்தனர்.

உள்ளே சென்று தனஞ்சயனிடம் பணம் வாங்கிக் கொண்டு எல்லோரும் நகர்ந்தனர்.

''நல்லாயிரு, அபிக்கண்ணு குளந்த தூங்குதா?'' என்று உள்ளே சென்று பார்த்துவிட்டுத் திரும்பிய வள்ளிம்மாவிடம், ''இரண்டு நாள் கழித்து, ஒருதரம் இங்கே வந்துவிட்டுப் போ, வள்ளிம்மா. அபரஞ்சி உனக்காக ஏதோ வாங்கி வைக்கப் போகிறாளாம்'' என்று கூறி அனுப்பினார்.

வாயெல்லாம் பல்லாக அவள் சென்றதும், ''மெய் யாகவே நல்லதாக ஏதாவது அவளுக்கு வாங்கிக் கொடு, அம்மா'' என்றவர், சிறு தயக்கத்தின்பின், ''சொல்வார் சொன்னால், கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று என் பார்கள். மதிகெட்டுப் போய் உன்னைக் கொஞ்சம்... கொஞ்சமென்ன, அதிகமாகவே தப்பாகப் பேசிவிட்டே னம்மா. பெரிதாக எடுத்துக் கொள்ளாதே!'' என்று, சரியான வார்த்தைகளைத் தேடி அவர் திக்கித் திணறவும் அபரஞ்சிக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

''நீங்கள் இதைப் பெரிதாக நினைக்கத் தேவை இல்லை மாமா. நீங்கள் எனக்கு அப்பா மாதிரி. ஆத்திரத் தில் ஒரு வார்த்தை சொல்ல உங்களுக்கு உரிமை இல்லையா, என்ன?'' என்று இதமாக அவள் பேசவும் அவர் முகம் மலர்ந்தது.

''உரிமை இருந்தாலும் இந்த மாதிரி வார்த்தை களைப் பேசக்கூடாது தான்'' என்று எளிமையாக ஒத்துக் கொண்டவர், ''நல்ல பெண் என்பதற்குத் தகுதியான வார்த்தைகளைப் பேசினாய்'' என்று அவளையும் தடை யற்றுப் பாராட்டினார்.

புன்னகையோடு கண்சிமிட்டிய கணவனைப் பார்த்து அபரஞ்சி சிரித்தாள்.



சரளா, கலைவாணி, எல்லோருக்குமே மகிழ்ச்சி தான். புன்னகை விரிய எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அப்போது, ''மாமா... நான் உத்திரவு வாங்கிக் கொள்ளட்டுமா?'' என்று மிகமிகப் பணிவாக ஒரு குரல் கேட்கவும் உலகநாதன் திடுக்கிட்டுத் திரும்பினார்.

''நீ இன்னுமா இங்கே இருக்கிறாய், ராஸ்கல்... ஓடு...'' என்று அதட்டியவர், உடனே முகம் மாறித் தலையசைத்தார். ''சற்றுப் பொறு. நான் சொன்னபிறகு போகலாம்'' என்று உட்புறம் திரும்பினார்.

அங்கே, நடுங்கி, முகம் வெளுத்து, சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு நின்ற தங்கை வசந்தாவைப் பார்த்ததும் அவர் முகத்தில் கொலை வெறி தாண்டவ மாடிற்று.

கையை ஓங்கிக் கொண்டு அவளை நோக்கிச் சென்றார்.

**கை**களை ஓங்கிக் கொண்டு உலகநாதன் சென்ற விதத்தைக் கண்டு எல்லோருக்குமே நடுக்கம் உண்டா யிற்று.

''அப்பா, வேண்டாம்!'' என்றாள் கலைவாணி அச்சத்துடன்.

''மாமா, வேண்டாம். விட்டுவிடுங்கள்!'' என்ற அபரஞ்சி, கையைக் கட்டிக் கொண்டு சும்மா நின்ற கணவனிடம், ''மாமாவைத் தடுத்து நிறுத்துங்கள், தனா!'' என்று பதறினாள்.

சில வினாடி நேரம், பேசாமல் பார்த்துக் கொண்டு நின்ற தனஞ்சயன் கூடக் கடைசியில் மனம் இளகி, ''வேண்டாம், அப்பா! அவர்களை அடித்து, உங்கள் கையை ஏன் அழுக்காக்கிக் கொள்கிறீர்கள்?'' என்றபடி முன்னே பாய்ந்தான்.

எதையும் அவர் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. இவளைக் காயப்படுத்தியே ஆகவேண்டும் என்ற ஒரே நோக்கமாய் முன்னேறியவர். ''என்ன இருந்தாலும், அவர்கள் இந்த வீட்டுப் பெண், அடிக்க வேண்டாம். விட்டு விடுங்கள்'' என்று மனைவி குறுக்கே வந்து மறிக்கவும் அப்படியே நின்று விட்டார்.

மனைவியைத் தாண்டி, தங்கையைப் பார்த்து முறைத்தவர், ''பார் கொஞ்சமாவது கண்ணுக்கும் கருத்துக்கும் தொடர்பு இருந்தால் நன்றாகப் பார்த்து, பார்ப்பதைத் தெளிவாகப் புரிந்துகொள். இவளுக்கும் எனக்கும் இடையே எத்தனை முறை கலகமூட்டி இருப்பாய்? உன் பேச்சைக் கேட்டு, இவளை எத்தனை முறை நான் சிறுமைப்படுத்தியிருப்பேன்; திட்டியிருப்பேன்; அழவைத்திருப்பேன்; உன் உடம்பில் ஓர் அடி விழுவது இவளுக்குப் பொறுக்க வில்லை! வீட்டுப் பெண்ணாம்! வீட்டுக்கு வாழவந்த பெண் என்று என்றைக்காவது நீ இவளை எண்ணிப் பார்த்ததுண்டா? சை! யோசித்துப் பார்த்தால், இந்த இரண்டு பிள்ளை தந்தது தவிர சரளாவுக்கு நான் செய்ததெல்லாமே கொடுமை மட்டும்தான் என்பது போலல்லவா தோன்றுகிறது! தங்கை நம் மேல் பாசம் உள்ளவள்; நல்லது சொல்வாள் என்று நினைத்து, நீ ஆட்டி வைத்தபடியெல்லாம் ஆடினேன்! நீ இப்படிப் பட்ட ஒரு சுயநலப் பிண்டம்; ரத்தக் காட்டேறி என்று சிறு சந்தேகம் கொள்ளக்கூடத் தெரியாத முட்டாளாக இருந்து விட்டேனே!'' என்று வருந்தினார்.

''ம...மன்னித்து விடுங்கள் அண்ணா! பூரணிக்காக என்று ஏதேதோ செய்து விட்டேன். எனக்கு மட்டும் கணவர் நல்லபடியாக வாய்த்திருந்தால்...''

''அந்தக் கதை இனிமேல் வேண்டாம். அத்தை... நான் உங்கள் ஊருக்கே வந்து, மாமா வியாபாரம் செய்கிற விதமெல்லாம் நேரிலேயே பார்த்துவிட்டேன். அவரைப் பற்றி ஊரில் விசாரித்தும் அறிந்து கொண்டேன். அநியாயமாக மாமாவைப் பற்றித் தப்பாகப் பேசாதீர்கள்'' என்றான் தனஞ்சயன் இடையிலே புகுந்து.



''ஆக, அதுவும் பொய்தானா, மாபாதகி! உன்னை... போ. போ. போய்விடு. நீ இங்கே கண்முன்னால் நின்று கொண்டே இருந்தால், உன்னை ஏதேனும் செய்தாலும் செய்து விடுவேன். அதோ, ராமையாவை நிறுத்தி வைத்திருக்கிறேன். அவனோடு ஊருக்குப் போய் விடு. இனி இந்தப் பக்கம் வரவே வராதே!'' என்று உலகநாதன் உறுமினார்.

''மாமா, நான் ஒன்று சொல்லலாமா?'' என்று மருமகள் வினயமாகக் கேட்கவும், ''சொல்லேன், அம்மா! இந்த வீட்டில் உனக்கில்லாத உரிமையா?'' என்று தாராளமாக அனுமதி கொடுத்தார்.

''பெரியம்மா, ஒரேயடியாக ஒன்றுமில்லாமல் போயிற்று என்று நீங்கள் மனம் உடைய வேண்டாம். நீங்கள் கொண்டு போனதில் என் அத்தையின் சாமான்களை எல்லாம் திருப்பித் தந்தால், அவைகளின் மதிப்புக்கு இருமடங்கு போட்டு, புதிதாகப் பூரணிக்கு வாங்கித் தரச் சொல்கிறேன். மேலும் தாய்மாமன் சீரையும் தரச் சொல்கிறேன். ஆனால், நினைவிருக்கட்டும்; அத்தையின் பொருட்கள் எல்லாமே வந்தாக வேண்டும்!'' என்று வசந்தாவுக்கு ஆசை காட்டினாள்.

கண்களில் ஆசைமின்ன, ''கொண்டு வருகிறேன், கண்ணு. எல்லாவற்றையும் எடுத்து வந்து தருகிறேன். நீ மட்டும் கட்டாயமாய், மறக்காமல் சொன்னபடி செய்ய வேண்டும்'' என்று குழையடிக்கவும், உலகநாதனுக்கு ஒரேயடியாக சையென்றாகி விட்டது.

வசந்தாவும், ராமையாவும் சென்றபிறகு, ''இது வேறு கடனா எனக்கு? அவள் எடுத்துப் போனதெல்லாம் உன் சாமான் என்று ஏன் சொல்லவில்லை?'' என்று மனைவியை அதட்டினார்.

ஆனால், உடனே அவரே தணிந்து, சொல்லவிட்டால் தானே, சொல்லுவதற்கு? சரி. எப்படியோ, மருமகள் சாமர்த்தியத்தில், உன் சாமானெல்லாம் உனக்கே திரும்பி வந்து சேரப் போகிறது. அதிகப்படி விலை என் தப்புக்குத் தண்டனையாக அதுவும் நியாயம்தான். நியாயம் பற்றிப் பேசும்போது, நியாயமான முறையில் உன்னிடம் மன்னிப்பும் கேட்டு விடுகிறேன். உனக்கு நான் செய்த அநியாயத்தை எல்லாம் தயவு செய்து மன்னித்து விடு, சரளா!'' என்று கேட்கவும் அவருடைய மனைவிக்கு ஒரு மாதிரியாகி விட்டது.

''என்ன நீங்கள்? நான் என்ன பெரிய ஆள்? என்னிடம் போய் நீங்கள் மன்னிப்புக் கேட்கிறீர்களே!'' அவள் கூச்சமும் வருத்தமுமாய் கூறவும் உலகநாதன் இறுக்கம் அகன்று சிரித்தார்.

''ஏய், பின்னே, உனக்குச் செய்த அநியாயத்துக்கு நான் வேறு யாரிடமடி மன்னிப்புக் கேட்பது?'' என்று அவர் கேலி பேசவும் எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

சிரிப்பும் கேலியுமாக எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டு, சேர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர்.

அப்போது, மகனைப் பார்த்து, ''என்னடா தனா, நான்தான் கிராமத்து ஆள். நீ படித்திருக்கிறாய். பல நாடு போய் வந்திருக்கிறாய்! நீயும் இந்த அடிவாழை மாதிரி என்னைப் போலவேதானே அபரஞ்சியிடம் தப்புத் தப்பாய்ப் பேசி வந்தாய்? போகட்டும். அதே அடிவாழைப் புத்தியோடு, நான் உன் அம்மாவிடம் மன்னிப்புக் கேட்ட



மாதிரி, நீயும் அபரஞ்சியிடம் மன்னிப்புக் கேட்டுவிடு!'' என்றார்.

''அப்பா... தப்பு. இந்த விஷயத்தில் நான்தான் தலைவாழை. நீங்கள்தான் அடிவாழை. ஏனென்றால் நான் ஏற்கனவே அபியிடம் சரணாகதி அடைந்தாயிற்று'' என்றான் தனஞ்சயன்.

சிரிப்பினூடே, ''அதுதான் அப்போதே பார்த்தேனே! அபிக்குக் கால் பிடித்து விட்டுக் கொண்டு இருந்தாயே!'' என்று உலகநாதன் கிண்டல் செய்யவும், எல்லோரும் மீண்டும் நகைத்தனர்.

''முன்னோடியோ, பின்னோடியோ? அப்பாவும் பிள்ளையும் ஒரே தினுசு என்பதில் மட்டும் சந்தேகமே இல்லை'' என்றவாறு எழுந்து, ''சொல்லுங்கள், யார் யாருக்கு என்னென்ன வேண்டும்? பால், காம்ப்ளான், மைலோ...? எது வேண்டும்?'' என்று கேட்டாள் சரளா.

இந்த கணீர்க் குரல் தன்னதுதானா என்று அவளுக்கே சந்தேகம் வந்தது.

''எதற்கு? ஆளாளுக்கு ஒவ்வொன்றாய்த் தூக்கி வந்து கொண்டு? மொத்தமாய் ஏதாவது ஒன்றைக் கொண்டு வா. சேர்ந்து குடிக்கலாம்'' என்று மனைவியிடம் பகர்ந்தவர், மீண்டும் மகனைப் பிடித்தார்.

''எப்படியும் நான்தாண்டா, தாய்வாழை. நீ அடிவாழைதான். நான் இன்றைக்கு என் மனைவிக்குப் பட்டுச் சேலை வாங்கப் போகிறேன். ஜரிகை போட்ட பட்...டுச் சேலை. என்னைப் பின்பற்றி நீயும் அபிக்கு வாங்கிக் கொடு!'' என்று ஒரு போடு போட்டார்.

''அப்பா, என் பொண்டாட்டிக்கு, நான் ஏற்கனவே பட்டுச் சேலை - ஜரிகை போட்ட பட்...டுச் சேலை வாங்கிக் கொடுத்தாயிற்று தெரியுமோ?'' என்று

மகன் பெருமையடிக்கவும், வெற்றிகரமாய்ப் பின்னடைந் தார்.

''சரிதானடா. தகப்பன் சாமி! உன் விருப்பம்போல வைத்துக் கொள். உனக்கு அப்போதே முருகன் பெயர் வைக்க வேண்டும் என்று நினைத்தேன். பெயர் வைக்கா விட்டாலும், குணம் அப்படியே ஆகிவிட்டது! போ. போய் உன் மனைவியிடம், இன்றேனும் இரண்டு நல்ல வார்த்தை பேசு. பிள்ளை முகம் வாடிக் கிடக்கிறது!'' தோற்றாற்போலக் காட்டி, அவர் மகன் காலை வார, எல்லோரும் மீண்டும் சிரிப்பில் கலகலத்தனர்.

திருமணம் ஆனதிலிருந்து, முதன் முதலாக தனஞ் சயனுக்கும் அபரஞ்சிக்கும் முழுமையான ஆனந்தமான இரவாய், அன்றிரவு அமைந்தது.

அன்றுவரை அறிந்திராத விதமாக இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டனர்.

''அத்தைக்கு ஏன் அவ்வளவு விட்டுக் கொடுத்தாய், அபி? அவர்கள் எடுத்துப் போனதற்கு இரு மடங்கு என்றால் எவ்வளவு ஆகும் தெரியுமா?'' என்று தனஞ் சயன் கேட்டான்.

கணவனின் தாடை எலும்பின் மீது விரலை வைத் துத் தொடக்கம் முதல் கடைசி வரை அளந்தபடி, ''ஆகட்டுமே!'' நம்மால் முடியாததா, என்ன?'' என்று இலகுவாகக் கேட்டாள் அபரஞ்சி. அத்தை சொல்கிற மாதிரி இருந்தாலும் வசந்தாப் பெரியம்மாவும் நம் வீட்டுப் பெண்தானே?'' என்றாள் தொடர்ந்து.

''என்ன, 'வசந்தாப் பெரியம்மா மேல்' அப்படிப் பாசம் பொங்குகிறது?'' என்று கேலியாகக் கேட்டவன், உடனே முகம் கடினமுற, ''எனக்கு அவர்கள் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டும்போல இருந்தது. நீ மட்டும் தடுத்திராவிட்டால்... குறைந்தபட்சமாய் அத்தையின் கழுத்தைப் பிடித்து வீட்டுக்கு வெளியேயாவது தள்ளி யிருப்பேன்'' என்றான் அவன்.



மையலுடன் கணவன் முகத்தைப் பார்த்து விட்டு, ''உங்களிடம் ஒன்று சொல்லட்டுமா, தனா?'' என்று குழைந்தாள் அபரஞ்சி.

''ஒன்றா என்றான்?''

முறுவலித்து, ''ஊகூம்!'' என்று ஜிமிக்கி ஆடத் தலையசைத்தாள் அவள். ''ஒரு விஷயம் நமக்கு மிகவும் முக்கியமான ஒன்று.''

''சொல்லுடா'' என்று அவனும் குழைந்தான்.

ஒரு பெருமூச்சுடன் அபரஞ்சி சொல்லத் தொடங் கினாள். ''பாருங்கள் தனா, சில பழைய பிழைகளையே பெரிதாக நினைத்து, அவற்றுக்காக நீங்கள் வருத்தம் தெரிவித்த பிறகும்கூட, நாம் பிரிந்து வாழ்வதுதான் நல்லது என்று நான் எண்ணியிருந்தேன்...''

''நீ பட்ட வேதனையும் பெரிதுதானே, கண்மணி!'' என்றான் தனஞ்சயன். அதன் காரணம் தான்தான் என்ற வருத்தத்துடன்.

''இருக்கலாம். ஆனால், மனதில் அன்பு இருந்தால், மன்னிக்க முடியாதது என்று ஒன்றுமே கிடையாது என்று, எனக்கு அப்போது தெரியாது, தனா. பழசிலேயே உழன்று கொண்டிருந்த எனக்கு, என்னிடம் அந்த அன்பு இருக்கிறதா, இல்லையா என்பதுகூடத் தெரியாது.

''இனி, என் வாழ்வுக்குக் குழந்தை மட்டும் போதும் என்று நினைத்தேன்; அதையே உங்களிடமும் சொன் னேன். மெய்யென்று நம்பித்தான் சொன்னேன்.

''ஆனால் தனா, உங்களுக்கு ஓர் ஆபத்து என்று கேட்ட பிறகு, குழந்தையைப் பற்றிய எண்ணமே எனக்கு இல்லாது போயிற்று!

''அந்த மிரட்டல் ஃபோன் கால் வந்த சமயம், எனக்குப் பால் பெருகி லேசாகத் தினவெடுத்துக் கொண்டு இருந்தது. இன்னும் பத்து நிமிடத்தில் கண்ணன் தானாக விழிக்காவிட்டால் எழுப்பி விடவேண்டும் என்று கூட நினைத்திருந்தேன்.

''அந்த மிரட்டலைக் கேட்ட பிறகு அந்த நினைப்பே மறந்து போய் விட்டது. அதற்கப்புறம் ஒரு நாலரை மணி நேரம்! மொத்தம் ஆறரை மணி நேரம். நிச்சயமாய் எனக்கு மார்பு வலித்திருக்க வேண்டும். அது தெரிய வில்லை. சும்மாவே, இன்னேரம் குழந்தை விழித்து எழுந்து விட்டிருக்குமே! அதற்குப் பசித்திருக்குமே என்றெல்லாம் எனக்குத் தோன்றியிருக்க வேண்டும்? ஆனால் என்ன நடந்தது?

''வீட்டுக்கு வந்து, உங்களைப் பார்த்த பிறகுதான், குழந்தையின் அழுகுரல் காதில் விழுந்தது; நெஞ்சு வலித்தது, சேலை நனைந்து நீங்கள் பத்திரமாய் இருக்கிறீர்கள் என்று தெரிந்த பிறகுதானே இதை எல்லாம் என்னால் உணரக் கூட முடிந்தது!

''அடுத்து இந்தப் பாதம் பொத்துப் போகும் சூட்டில் அதையும் உணராமல்தான் நின்றேன்.

''இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? உங்களை விட எனக்கு ஒன்றுமே பெரிதில்லை என்பதுதானே? நீங்கள் இல்லாமல் எனக்கு எதுவுமே இல்லை என்பதுதானே?

''உள்ளூர உங்கள் மீது இவ்வளவு அன்பு இருந் திருந்த போதும், அதைப் புரிந்து கொள்ளாமல் நம் இருவர் வாழ்வையும் பாழடிக்க இருந்தேனே.



''அதிலிருந்து என்னை மீட்டது இந்தப் புரளி தானே? அதைக் கிளப்பி விட்டது யாராக இருந்தாலும் நாம் அவர்களுக்கு நன்றிதானே தெரிவித்தாக வேண்டும்?!''

அவளை இழுத்து அணைத்து, சற்று நேரம் பேசாமல் இருந்து விட்டு, ''நீ சொல்வது சரிதான். ஆனால் இது அத்தைக்குத் தெரியும்படி விட்டு விடாதே. அது தான் சாக்கென்று வந்து உட்கார்ந்து பழைய வேலைகளைத் தொடங்கி விடுவார்கள். ஆனால், பழைய நினைவு என்று தொடங்கியதால் நானும் சிலது சொல்லி விடுகிறேன். அபி'' என்ற தனஞ்சயன், அவள் முகம் வாடவும் ''இந்த ஒரே ஒரு முறை கேட்டு விடு கண்ணம்மா'' என்றான் கெஞ்சுதலாக.

''அபி, நீ தன்னிலை விளக்கத்துக்கு உனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று என்மேல் குற்றம் சாட்டினாயே, அது அவ்வளவாக சரியில்லை. முதல் இரவன்று என்னைப் பார்த்திருக்கிறாயா என்று உன்னிடம் நான் கேட்டது, அந்த மோசடி நிறுவனத்தில் பார்த்திருக்கிறாயா என்றுதான்... ஆனால் நீ, வேறு மாதிரிக் கவிதை சொன்னபோது, நீ உண்மையாக உணர்ந்ததைச் சொன்னாய் என்று எண்ணவில்லை; மாறாக, உண்மையை மறைக்க மாய்மாலம் செய்கிறாய் என்று எண்ணி விட்டேன்'' என்றான் அவன்.

அந்த நிறுவனத் தலைவியாக அவள் இருந்தபோது, அவளது உண்மை நிலை அறியாத நிலையில் அவன் அன்று கொடுத்த வாய்ப்பு, போதுமானதாகவே இருக்கலாம்தான்! ஆனால், தண்டனை என்று அவன் எந்த அளவுக்குப் போனான்?

அபரஞ்சி பேசாமலே இருக்கவும், ''நிறையவே உன்னை நான் வதைத்தேன் என்றாலும், ரொம்பவும் மனதை உறுத்தும் சிலது பற்றி மட்டும் பேச, அனுமதி கொடு, ரஞ்சி. இந்த ஒரே ஒரு தரம்! என் மகாமட்டமான செயல், வேறு பெண்ணிடம் போவேன் என்று மிரட்டி உன்னைப் பணிய வைத்தது. உன்னை விட்டு விலக முடியாமல், உன்னை மடக்க அப்படிப் பேசி விட்டுப் பிறகு எவ்வளவு அருவருத்துப் போனேன் தெரியுமா? பல நாட்கள் தூங்கவே முடியாது போயிற்று!'' என்றான் அவன்.

நள்ளிரவுக்கு மேல், சிகரெட்டைப் புகைத்தபடி, தனஞ்சயன் நடைபோட்டது அபரஞ்சிக்கு நினைவு வந்தது. வெற்றிப் பெருமிதம் என்று மேலும் வெறுப்படைந்தாளே! கடைசியில் அவனுக்கும் வேதனைதான் போலும்!

''அடுத்தது, ஆடு மாடு போல என்றது! அது ஓர் அசிங்கமான குதறல். நீ ஆடுமாடு போல என்றால் நான் மட்டும் யார்? அந்த அறிவே இல்லாமல் பேசினேன்! இதை எண்ணி எண்ணி, பிறகு எத்தனை நாள் மனம் குன்றியிருக்கிறேன், தெரியுமா? அன்றைக்கு, அந்த கம்ப்யூட்டரைக் கண்டதும் எனக்கு வெறி பிடித்திருக்க வேண்டும் என்று பிறகு தோன்றியது. அதில்தானே, நான் ஏமாந்ததும், நீ என்னை ஏமாற்றியதாக நான் எண்ணியதும்?... பேசுவதை எல்லாம் பேசிவிட்டு அப்பா போல நமக்கும் மனைவியோடு நல்லபடியாக வாழும் ராசி இல்லை; இது தலைமுறை ராசி! என்று என்னை நானே சமாதானமும் செய்து கொள்ளுவேன்!

''ஆனால், அன்றைய உன் மனநிலை தெரிந்ததிலிருந்து நான் என்னமாய் நொந்து விட்டேன் தெரியுமா? முதலில் கூட ரொம்ப வேதனைப்பட்டேன் என்று சொல்ல முடியாது. ஆனால் கழிவிரக்கம் இருந்தது. அடடா! நல்ல மனைவியைப் போய் நோகடித்து விட்டோமே என்று வருத்தம்! கூடவே, நாம் கடுமையாக நடந்து கொண்டதன் காரணத்தை விளக்கினால், புரிந்து கொள்வாள்; அதன்பின் அவளை ராணி மாதிரி வைத்துக் கொண்டால் போதும் என்ற நினைப்புதான்.



''ஆனால், அன்று நீ என் முகம் பார்க்க நேராத நிலை வேண்டும் என்றாயா? பொடிப் பொடியாக உடைந்து விட்டேன். ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்து, உன் மனம் எப்படி நொந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து, கையில் கிடைத்த வைரத்தை உடைத்தெறிந்து விட்டேனே, அய்யோ... அய்யோ... என்று நான் பட்ட வேதனையை வார்த்தைகளால் சொல்லி விளங்க வைக்க முடியாது, அபி!

'நீ பட்ட துன்பத்துக்கு நான் பட்டதும் சமம் ஆகுமோ என்னவோ, தெரியாது. ஆனால் ரொம்...பவும் அடிபட்டுப் போனேன், கண்ணம்மா. அதனால்... அதனால்... ஒரு முட்டாள்தனமான முடிவினால் செய்த பிழை, அத்தனையும் மன்னித்து, மறப்பாயா, கண்மணி!'' என்று மீண்டும் மன்னிப்பு வேண்டினான் அவன்.

பிழை செய்த மனம், இப்போது அவளது அன்பில் மட்டுமாக சமாதானம் பெற மறுப்பது அபரஞ்சிக்குப் புரிந்தது. ஆனால், தன் அன்பைப் பற்றி இவ்வளவு விளக்கிய பிறகு, இன்னும் வேறு என்ன செய்வது?

சற்று நேரம், பேசாதிருந்து விட்டு, ''நாம் இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள லாமா?'' என்று கேட்டாள். ''இந்தப் பழைய காலம் பற்றி - இன்று மாலை வரை நேர்ந்த துன்பங்கள் பற்றி நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை என்று ஓர் உடன்பாடு?''

சில வினாடி மனைவியின் முகம் பார்த்தவனுக்கு அவள் மனம் புரிந்து போயிற்று. பழசைக் கிளறி இன்றைய மகிழ்ச்சியைக் கெடுக்க இவளுக்கு மனமில்லை. எதிர்காலத்தில் பழைய இருளின் சாயல்கூடக் கூடாது என்கிறாள்.

சற்றே சிந்தித்தவனின் கண்களில் குறும்பு மலர்ந்தது.

''பழைய கதை, வேண்டாத கதையெல்லாம் மறக்கடிப்பதுக்கும் வித்தை எனக்குத் தெரியும்! கற்றுத் தரட்டுமா?'', என்று வினவினான்.

''ஓ! செய்யுங்களேன்! தனா, நான் ஒரு கெட்டிக்கார மாணவியாக்கும்! ஒரு தரம் கற்றுக் கொடுத்தாலும் அப்படியே பிடித்துக் கொள்கிறாள் என்று என் ஆசிரியைகள் சொல்வார்கள்! அதைப் பரிசோதித்துப் பார்க்கலாமா!'' என்று அப்பாவியாய் விழிகளை விரித்தாள் அவள்.

மவுனச் சிரிப்பில் உடல் குலுங்க, ''தாராளமாய்! இதோ, முதல் பாடம்!'' என்று மனைவியின் மலர்ந்த முகத்தை நோக்கிக் குனிந்தான் தனஞ்சயன்.

# அடிவாழை

ரமணிசந்திரன்

